

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்குழு

மதுரை

ஜனவரி 8,9,10

2008

19வது மாநில மாநாடு



அரசியல் - ஸ்தாபன அறிக்கை



பி.ராமமூர்த்தி



அனில் பிஸ்வாஸ்



சித்தப்ரத மஜும்தார்



கொரட்டாலா சத்தியநாராயணா



கே. ரமணி



கே.பி. ஜானகி அம்மாள்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்குழு

19வது மாநில மாநாடு

ஜனவரி 8 - 10, 2008, மதுரை

அரசியல் - ஸ்தாபன அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்குழு

19வது மாநில மாநாடு

அரசியல் – ஸ்தாபன அறிக்கை

அன்பான தோழர்களே!

நமது இயக்கத்தின் மகத்தான தலைவர் தோழர் பி. ராமமூர்த்தியின் நூற்றாண்டு விழா ஆண்டில், அவரது நெடிய அரசியல் பயணத்தில் ஒரு முக்கியப் போராட்டக் களமாகத் திகழ்ந்த மதுரையில் கூடுவதில் நாம் மிகுந்த பெருமிதம் கொள்கிறோம்.

நமது கட்சியின் அகில இந்திய 19வது மாநாட்டை, தமிழ்நாட்டில் கோவை நகரில் எதிர்வரும் மார்ச் - ஏப்ரலில் நடத்துகிற வாய்ப்பை கட்சித் தலைமை தமிழ்நாடு மாநிலக்குழுவிற்கு அளித்துள்ளது. அதற்கு முன்னோடியாகக் கட்சியின் மாநில 19வது மாநாட்டில் இங்கு கூடியுள்ளோம்.

மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம்.

2005 பிப்ரவரி 3-6 தேதிகளில் நாகர்கோவிலில் நடைபெற்ற மாநில 18வது மாநாட்டுக்குப் பின்னர் கடந்த 35 மாத காலத்தில் நம்மை விட்டுப் பிரிந்த நமது தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், இடதுசாரி - ஜனநாயக இயக்க முன்னோடிகள், மக்கள் இயக்கங்களைக் கண்ட போராட்ட வீரர்கள், அரசியல் - கலை - இலக்கியத் துறைகளைச் சார்ந்த வல்லுநர்களுக்கும் அஞ்சலி செலுத்துவோம்!

மக்களின் உரிமைப் போராட்டங்களில் களப்பலியான போராட்ட வீரர்களின் நினைவைப் போற்றுவோம்!

கடந்த மூன்று ஆண்டுகள், சர்வதேச - தேசிய - மாநில அரசியலில் வேகமான நிகழ்வுகளைக் கண்ட காலமாகும்.

தமிழ்நாட்டின் அரசியல் - ஸ்தாபனப் பணிகளைப் பரிசீலிக்கும் போது, அதன் பின்னணியாக உள்ள சர்வதேச - தேசீய அரசியல் நிலைமைகளைப் பற்றி சுருக்கமாக இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

1. சர்வதேச நிலை

1.1 ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளையும், ஆதிக்க முயற்சிகளையும் எதிர்த்துப் போராடுவதன் அவசியத்தை, நமது அகில இந்திய மாநாடுகள் வலியுறுத்திக் கூறியுள்ளன.

1.2 அந்த ஆதிக்க முயற்சிகள் - அரசியல், பொருளாதார, இராணுவ மற்றும் பண்பாட்டு ரீதியான முயற்சிகள் - தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1.3 18-வது அகில இந்திய மாநாட்டுக்குப் பிந்திய இந்த மூன்று ஆண்டுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க முயற்சிகள் தொடர்வதைக் கண்டோம். ஏகாதிபத்திய உலகமயமாக்குதல் மூலமான நவீன தாராளமயக்கொள்கைகளைத் திணிப்பது, பொருளாதாரத் தடைகளை அறிவித்து நிர்ப்பந்தங்களை உருவாக்குவது மற்றும் நேரடியாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் இந்த ஆதிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1.4 இராக் மீது படைஎடுத்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் 6,50,000 பேர் - பெரும்பாலும் சாதாரண மக்கள் - கொல்லப்பட்டுள்ளனர். போலியானதோர் விசாரணை நடத்தி அதிபர் சதாம் உசேன் கொல்லப்பட்டார். இராக்கை மூன்றாகப் பிரித்து, தங்களது ஆதிக்கத்தையும் கொள்ளையையும் தொடரும் முயற்சியில் அமெரிக்கா உள்ளது.

1.5 ஆப்கானிஸ்தானிலும் ஏகாதிபத்தியப் படைகளின் ஆதிக்கமே நிலவுகிறது. அப்பாவி மக்கள் படுகொலைகள் தொடர்கின்றன.

1.6 அடுத்த இலக்காகக் குறிவைக்கப்பட்ட இரான் அணுகுண்டுகளைத் தயாரிப்பதாகக் கூறி, அமெரிக்க ஏகாதிபத்தியம் போருக்கு தயாரானது. மூன்றாவது உலகப்போர் என அச்சுறுத்தும் நிலைக்கே சென்றது. ஆனால், அமெரிக்காவின் உளவு அமைப்புகளின் கூட்டு அறிக்கையோ, 2003ம் ஆண்டிலேயே இரான் அணு ஆயுத முயற்சிகளைக் கைவிட்டதாக உறுதிபடக் கூறிவிட்டது. இது 'புஷ்' அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது.

1.7 பாலஸ்தீனத்திலும், லெபனானிலும் பிரித்தாளும் சூழ்ச்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இருநாடுகளிலும் அமெரிக்க-இஸ்ரேல் ஆதரவு அரசுகளை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதே தவிர, பிரச்சனைகளின் தீர்வுக்கு அல்ல.

1.8 இவ்வாறான ஆதிக்க முயற்சிகளை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களும் தொடர்கின்றன.

1.9 இராக் போர், அமெரிக்க புஷ் அரசாங்கத்தை சொந்த நாட்டு மக்களிடமிருந்தும் தனிமைப்படுத்திவிட்டது. இராக் படையெடுப்புக்குத் துணை நின்ற நாடுகள் ஒவ்வொன்றாக தங்களது படைகளைத் திரும்பப்பெறுகின்றன. இங்கிலாந்தின் டோனி பிளேயர் பதவி விலக வேண்டியதாயிற்று. புஷ் ஆதரவாளர்களான ஸ்பெயின், இத்தாலி, ஜப்பான், ஆஸ்திரேலியத் தலைவர்கள் தேர்தலில் தோல்வி கண்டனர்.

1.10 ஈரானைத் தனிமைப்படுத்தித் தாக்கும் முயற்சிக்கு ரஷ்யா, சீனா மட்டுமல்லாது ஐரோப்பாவிலுள்ள அமெரிக்கக் கூட்டாளிகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

உலகப் பொருளாதார நிலை

1.11 2004-06ம் ஆண்டுகளில் 3 முதல் 4 சதவித அளவிற்கு வருடாந்திர வளர்ச்சி கண்ட உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் குறையும் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்காவில், தற்போது எற்பட்டுள்ள நெருக்கடியானது - குறிப்பாக ரியல் எஸ்டேட் கடன் குளறுபடிகளையொட்டி உருவான நெருக்கடி - உலகப் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

1.12 டாலர் நாணய மதிப்பு வீழ்ச்சியானது, நிதிநிலையில், கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். டாலருடன் இணைந்து நிற்கும் உலக வர்த்தகத்தில் எற்படும் பாதிப்புகள், ஐரோப்பா, ஜப்பான், சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பாதக விளைவுகளை உருவாக்கும். மூன்றாவது உலக நாடுகளின் பொருளாதார இறையாண்மை மீது மேலும் நிர்ப்பந்தங்கள் உருவாகும் நிலை உள்ளது.

1.13 உலகின் வசதி படைத்த மற்றும் ஏழை நாடுகளுக்கு இடையிலான இடைவெளி பெருகிக்கொண்டே இருக்கிறது. கடன், வட்டி, லாபம், முதலீடு என வளரும்நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்படும் தொகைகளின் அளவு அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. வளரும் நாடுகளில் செய்யப்படும் முதலீடுகளை விட இது பெருமளவில் கூடுதலாக உள்ளது. உலகமயக் கொள்கையின் அமலாக்கம், நாடுகளுக்கு உள்ளேயும் இடைவெளியை அதிகப்படுத்தியுள்ளது. நாள் ஒன்றுக்கு 2 டாலருக்கும் (ரூ.80) குறைவாகப் பெற்று வாழும் 40 சதவித உலக மக்கள் உலக வருவாயின் ஐந்து சதவிகிதத்திற்கே உரியவர்கள்; வசதி படைத்த 20 சதவிகிதத்தினரோ உலக வருவாயின் 75 சதத்திற்கு உரியவர்களாக உள்ளனர், என ஐ.நா.வின் மனித வளர்ச்சி அறிக்கை 2007 கூறுகிறது. இதே காலத்தில் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் வலுப்பெற்றுள்ளன. இராக்கிய மக்களின் ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள், புஷ் அரசின் இராக்கிய திட்டங்களுக்கு மட்டுமல்லாது, மேற்காசியத் திட்டங்களுக்கே பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன.

1.14 இந்தக் காலகட்டத்தில், தென் அமெரிக்க நாடுகளில் உறுதி மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெறுவதும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க முயற்சிகளுக்கு எதிரான குரல் வலுப்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். சோஷலிச கியூபாவை தனிமைப்படுத்தி, தாக்கி அழித்திடும் முயற்சியில் ஈடுபட்டு வந்த அமெரிக்காவிற்கு சமீப காலத்திய தென் அமெரிக்க நிகழ்வுகள் வலுவான பதிலடியாக உள்ளன. இருப்பினும், ஏகாதிபத்திய வலிமையை எவ்வகையிலும் குறைத்து நாம் மதிப்பிடலாகாது.

1.15 கியூபாவை எதிர்த்து துவங்கப்பட்ட ஏகாதிபத்திய சீர்குலைவு நடவடிக்கைகள் இதர தென் அமெரிக்க நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த சீர்குலைவுகளைக் கூட்டாக எதிர் கொள்ளும் முறையில் தென் அமெரிக்க நாடுகளிடையே ஒருமைப்பாட்டையும், ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் முயற்சியில் கியூபா - வெனிசுலா அரசாங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

1.16 வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் தொடர்கின்றன, இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, போர்ச்சுகல், கிரீஸ் எனப் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பெரும் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. ஜி-8 மாநாடுகளின்போதும், இராக்கிய போருக்கும், தாராளமயக் கொள்கைகளுக்கும் எதிராகப் பெரும் பேரணிகள் நடைபெற்றுள்ளன,

1.17 அமெரிக்காவின் ஒற்றை ஆதிக்க முயற்சிகளுக்கு எதிராக, ரஷ்யாவின் குரல் வலுத்துள்ளது. ரஷ்ய-சீனா உறவுகள் வலுப்பெற்றுள்ளன. ரஷ்யா, சீனா உள்ளிட்ட ஷாங்காய் கூட்டமைப்பின் சார்பாகக் கூட்டு இராணுவ ஒத்திகைகள் நடந்துள்ளன. அமெரிக்காவின் ஆதிக்கததிற்கு எதிரான உணர்வுகள் ஐரோப்பிய நாட்டு மக்களிடயே வலுவாக உள்ளன.

1.18 ஒற்றைத்துருவ உலகமெனும் அமெரிக்க ஏகாதிபத்திய முயற்சிக்கு எதிராக, பல துருவத்தன்மைகளுக்கு சாதகமான நிலைபாடுகள் வலுப்பெறுகின்றன. ஏகாதிபத்திய ஆதிக்க முயற்சிகளுக்கு எதிராக மக்களுக்கு உணர்வு ஊட்டி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை வலுப்படுத்த வேண்டுமென்ற கடமையை நினைவில் கொண்டு, தமிழகத்தில் நமது பணிகளை முன்னெடுத்துச்செல்வோம். டாலரின் மதிப்பு வீழ்ச்சி உள்ளிட்ட உலகப் பொருளாதார நிகழ்வுகள் தமிழகத்திலும் பின்னலாடைகள் உட்பட ஜவுளி, தோல் மற்றும் கணிணி மென்பொருள், தகவல் தொழில்நுட்ப துறைகளிலும் ஏற்படுத்தி வரும் விளைவுகளை உணர்ந்து, மக்களிடம் கொண்டு செல்லும் பணியையும் மேற்கொள்வோம்.

சோசலிச நாடுகளில்

1.19 மக்கள் சீனத்தின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியானது, இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் வேறு எந்த நாட்டிலும் நிகழாததாகும். அவர்களது செல்வாக்கு மண்டலமும் ஆசிய பசிபிக், தென் அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்கா என வளர்ச்சியடைந்துள்ளது. அதே நேரத்தில், வருமானம், பிரதேசம், நகரம், கிராமம் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் பெருகுவதையொட்டிய பிரச்சனைகளையும் சீனா சந்தித்து வருகிறது. சமீபத்தில் நடைபெற்று முடிந்த சீனக் கட்சியின் 17வது மாநாடு, இந்த பிரச்சனைகளைக் கணக்கிலெடுத்துத் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைத்துள்ளது.

1.20 வியத்நாமிலும் பொருளாதார வளர்ச்சியிலும், வறுமை ஒழிப்பிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் முற்றுகையை எதிர் கொண்டு கியூபா முன்னேற்றப்பாதையில் செல்கிறது. வடகொரியா, அமெரிக்காவின் 'தீய சக்தி' மிரட்டலை சமாளித்ததோடு, அணு ஆயுதப் பிரச்சனையிலும் அமெரிக்க அச்சுறுத்தலை வெற்றிகரமாக சந்தித்துள்ளது.

தெற்காசிய நாடுகளில்

1.21 இலங்கையில், அமைதிப் பேச்சு வார்த்தைகள் மூலம், அரசியல் தீர்வு ஏற்படும் என்ற எதிர்பார்ப்புக்கு 2006இல் பின்னடைவு ஏற்பட்டது. ராஜபக்ஷே அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அரசியல் தீர்வுக்கான முயற்சிகளைத் தொடருவதில் அரசுக்கு அக்கறை இல்லை. மறுபக்கத்தில், விடுதலைப்புலிகளின் அணுகுமுறையும் நிலைமையை மேலும் மோசமடையச் செய்கிறது. தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளும், துயரங்களும் தொடர்கின்றன.

1.22 தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு இராணுவ ரீதியாகத் தீர்வுகாண இயலாது. தமிழ் பேசும் மக்கள் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்குவதன் மூலமே, இலங்கையின் ஒற்றுமையும், அமைதியும் பாதுகாக்கப்படும் என்பதை இலங்கை அரசும், பிரதான சிங்களக் கட்சிகளும் உணர்ந்து செயல்பட வேண்டியுள்ளது. இந்தப் பார்வையோடு இந்திய அரசும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

1.23 பாகிஸ்தானில், ஜனநாயகத்திற்கான போராட்டங்கள் வலுப்பெற்று வந்து, தேர்தலை எதிர்நோக்கிய நிலையில், பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனசீர் பூட்டோவின் படுகொலை ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க ஆதரவோடு ஆட்சியில் தொடரும் முயற்சியில் ஜனாதிபதி முஷாரப் மறுபக்கத்தில் பயங்கரவாத இயக்கங்களின் முயற்சிகள் என நெருக்கடியான நிலை தொடருகிறது.

1.24 பங்களாதேஷில், தேர்தல் நடத்துவதற்காகப் பொறுப்பேற்ற இடைக்கால அரசு இராணுவத்தின் பிடியிலான அரசாகியுள்ளது. ஜனநாயக உரிமைகள் அனைத்தும் மறுக்கப்படுகின்றன. அங்கும் ஜனநாயகம் காப்பதே பிரதான கோஷமாகியுள்ளது.

1.25 மலேசியாவில், சமீபகால நிகழ்வுகள் கவலையளிப்பவையாக உள்ளன. இந்திய வம்சாவழியினர், இந்து உரிமை பாதுகாப்பு (இந்த்ராப்) என்ற அமைப்பின் தலைமையில் பாரபட்சங்களுக்கு எதிராக போராடத் துவங்கியுள்ளனர். இதையொட்டிய விபரங்களை நாம் கவனமாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

1.26 பர்மாவிலும், நீண்டகால இராணுவ எதேச்சதிகாரத்திற்கு எதிராக ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தி எழுச்சிகரமான போராட்டங்கள் உருவாகிறது. இந்தப் போராட்டங்கள் கொடூரமாக ஒடுக்கப்படுகின்றன. ஜனநாயக இயக்கத் தலைவர் ஆங்சான் சூகுயி வீட்டுக்காவலிலேயே உள்ளார்.

1.27 நேபாளத்தில், ஏற்பட்ட மாறுதல்கள் ஜனநாயக இயக்கங்களுக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்துள்ளன. நேபாளத்தைக் கூட்டாட்சி முறையிலான ஜனநாயகக் குடியரசாக அறிவிக்கவும், ஏப்ரல் மாதத்தில் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடத்திடவும் முடிவாகியுள்ளது. நேபாளத்தில் முடியாட்சி ஒழிப்பு மக்கள் இயக்கங்களுக்குக் கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க வெற்றியாகும். ஆளும் ஏழு கட்சி அணிக்கும், ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி வந்த மாவோயிஸ்ட்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக ஆட்சிப் பொறுப்புகளிலிருந்து விலகிய மாவோயிஸ்டுகள், மீண்டும் அமைச்சரவையில் சேர்ந்துள்ளனர்.

2. தேசிய நிலை

2.1 இடதுசாரிக் கட்சிகள் - குறிப்பாக நமது கட்சி - தேசிய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த தலையீடுகளைச் செய்த காலமிது.

2.2 ஐக்கிய முற்போக்கு அணி அரசின் கொள்கைகளுக்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நாம் நடத்திய இயக்கங்கள், தலையீடுகள், போராட்டங்கள் மூலம், பல்வேறு கொள்கைப் பிரச்சனைகளை முன்னுக்குக் கொண்டுவர முடிந்த காலமிது. கட்சியின் அந்தஸ்தை கணிசமாக உயர்த்துவதற்கு இந்தத் தலையீடுகள் பெரிதும் உதவியுள்ளன.

2.3 ஆட்சிப் பொறுப்புக்கு வந்த குறுகிய காலத்திலேயே, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அரசின் பொருளாதாரக் கொள்கைகள், அதன் வர்க்க நிலைக்கேற்ப பா.ஜ.க. தலைமையிலான அரசின் பாதையிலேயே செல்வதை 18வது கட்சி காங்கிரஸ் கீழ்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

> *"ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அதே தாராளமய, தனியார்மயக் கொள்கைகளை பின்பற்றி வருகிறது. ஒரு சில கொள்கை அறிவிப்புகள் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் ஏற்கப்பட்டாலும், அரசாங்கம் தனது நடைமுறையை மாற்றிக் கொள்ள தயாராக இல்லை. சுருக்காக சொல்லப் போனால் வாஜ்பாய் அரசு பின்பற்றி வந்த அதே கொள்கைகளைத்தான் இந்த அரசும் பின்பற்றி வருகிறது."*

2.4 கடந்த மூன்று ஆண்டுகளில், இதன் விளைவுகளை நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது.

2.5 வேளாண் தொழில் பெரும் நெருக்கடியில் தொடர்கிறது. கிராமப்புறங்கள் தற்கொலைக் களங்களாகத் தொடர்கின்றன. அரசின் துயர் துடைப்பு நடவடிக்கைகள் பெயரளவிலேயே உள்ளன.

2.6 கோதுமை கொள்முதல் குளறுபடிகள், கொள்ளை விலையில் இறக்குமதியும் அதையொட்டிய ஊழலும் தொடர்கின்றன. இந்த ஆண்டு கோதுமை குவின்டாலுக்கு ரூ. 1000/- என நிர்ணயித்த அரசு நெல்லுக்கு ரூ. 675/- மேலும் கூடுதல் தொகை ரூ. 50/- என நிர்ணயம் செய்துள்ளது. இதர பிரிவு விவசாயிகளும் நெருக்கடியிலேயே உள்ளனர்.

2..7 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சில்லறை வணிகம், ரியல் எஸ்டேட், கட்டுமானம் உட்பட தேவையற்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகள், வங்கி, காப்பீட்டுத்துறை உட்பட உள்ள நிதித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகள், தொழில் வளர்ச்சி வாய்ப்புகளையும், தொலைத் தொடர்புத்துறை, கனிமம், சுரங்கம் உட்பட உள்ள துறைகளில் தனியாரை ஊக்குவித்துப் பொதுத்துறையை அழிக்கும் முயற்சிகள் என அரசின் 'கொள்கை' நடவடிக்கைகள் தொடர்கிறது. இடதுசாரி கட்சிகளும் தொழிலாளர் ஊழியர் அமைப்புகளும் இதர பகுதி உழைப்பாளி மக்களும் அரசின் இந்தக் கொள்கைகளுக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. நாடு தழுவிய பல வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

2.8 விலைவாசி உயர்வு மக்களின் வாழ்க்கை நிலையைக் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாக்கியுள்ளது. பொது விநியோகத்துறை திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. புதிய வேலைவாய்ப்பு என்பது சேவைத்துறையிலும், முறைசாராத் தொழில்களிலும் மட்டுமே என்றாகி விட்டது. தினக்கூலி, ஒப்பந்தமுறை என மிகப்பெரும்பான்மையான தொழிலாளர் பகுதியினர் - ஆலைத் தொழிலாளர்கள் உட்பட - கொத்தடிமைகள் போன்ற நிலையில்தான் பணியாற்றுகின்றனர். குறைந்தபட்சத் திட்டத்தில் தொழிலாளர்கள் பற்றிய எவ்வித வாக்குறுதிகளையும் நிறைவேற்ற அரசு முயற்சிக்கவில்லை. முறைசாரா தொழிலாளர் சட்ட முன்வடிவு இந்த தவறான அணுகுமுறையின் வெளிப்பாடாகவே உள்ளது.

2.9 நாட்டு மக்களில் 77 சதவிகிதத்தினர் - அதாவது 83 கோடியே 60 லட்சம் பேர், தினசரி ரூ. 20க்கும் குறைவாகவே வருமானம் ஈட்டி வாழ்ந்து வருவதாக அர்ஜுன் சென் குப்தா கமிட்டியே கூறியுள்ளது. மறுபுறத்தில் டாலர் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையில் பெருமளவு உயர்வு இந்தியாவில்தான் என தம்பட்டமடிக்கும் நிலையும் உள்ளது.

2.10 மனித வளக் குறியீட்டு எண் அடிப்படையில், இந்தியா 177 நாடுகள் பட்டியலில் 126வது இடத்திலிருந்து 128க்குப் போயுள்ளது.

2.11 பொருளாதாரம், விவசாயம், தொழில், தொழிலாளர் கொள்கைகளில் மட்டுமல்லாது, வெளியுறவுக் கொள்கைப் பிரச்சனைகளிலும், முந்தைய அரசின் பாதையிலேயே ஐக்கிய முற்போக்கு அணி அரசு செல்கிறது. இந்திய - அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தமும், இராணுவ கூட்டு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களும், அதைத் தொடர்ந்த ஈரான் எரிவாயுக் குழாய் திட்டம் உட்பட பல்வேறு பிரச்சனைகளும் அரசின் சாய்மானத்தை வெளிப்படுத்தியது.

2.12 இடதுசாரிகளின் உறுதியான எதிர்ப்பு நிலை வெளியுறவுக் கொள்கைப் பிரச்சனையை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்துள்ளது. மக்கள் நலனுக்கு விரோதமானதுமான நிதித்துறை சீர்திருத்தங்கள் மத்திய அரசு மேற்கொள்ளவிடாமல் நாடாளுமன்றத்தில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

2.13 கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், மலைவாழ் மக்கள் சட்டத்தையும், தகவல் உரிமைச் சட்டத்தையும் நிறைவேற்ற இடதுசாரிகளின் நிர்ப்பந்தம் பிரதான காரணமாக அமைந்தது.

2.14 கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மாவட்டவாரியான ஒதுக்கீடு குறைக்கப்பட்ட நிலையில் 1.4.2008 முதல் அனைத்து மாவட்டங்களிலும் திட்ட அமலாக்கம் என்ற மத்திய அரசின் அறிவிப்பு பல கேள்விகளை எழுப்புகிறது. மலைவாழ் மக்களுக்கான சட்டத்திற்கு விதிகள் இயற்றப்படாமலும், சச்சார் கமிட்டி அறிக்கை மீது உருப்படியான தொடர் நடவடிக்கை இல்லாமலும் ஏட்டுச் சுரக்காய்களாக்கப்படுகின்றன. கடுமையான நிர்ப்பந்தங்களுக்குப் பிறகு மலைவாழ் மக்கள் சட்டம் 2008 ஜனவரி முதல் அமலாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

2.15 பா.ஜ.க. மீண்டும் இந்துத்துவா கொள்கைகளை பகிரங்கமாகக் கையிலெடுத்துள்ளது. குஜராத்தில் மீண்டும் வெற்றிபெற 'இந்துத்துவா' கோஷங்கள் உதவியுள்ளன.

2.16 மதவாத அபாயம் குறித்து 18வது மாநாட்டின் அரசியல் தீர்மானம் கீழ்வருமாறு கூறியது.

> *"கடந்த பதினைந்து ஆண்டுகளில் மதவாத சக்திகள் பெருமளவில் எழுச்சி பெற்றுள்ளன. மேலும் அவர்களது ஆறு ஆண்டுகால ஆட்சி சமூகத்தின் பல்வேறு பகுதிகளில் மதவாத தத்துவமும் அமைப்புகளும் வேர் விட்டு நிற்பதற்கு வகை செய்தது. அவர்களின் வெளித்தெரியாத பலத்தை குறைத்து மதிப்பிடுவது தவறாகவே இருக்கும்."*

2.17 இந்த வரையறைகள் இன்னமும் பொருத்தமானவையாகவே உள்ளன. ஐக்கிய முற்போக்கு அணி அரசின் பலவீனங்களைத் தங்களுக்கு மேலும் சாதகமாக ஆக்குவதற்கும் அவர்கள் முயற்சித்து வருகிறார்கள். குஜராத், இமாச்சல் தேர்தல்களில் காங்கிரசின் பலவீனங்களே பா.ஜ.க. வெற்றிக்கு பெரிதும் உதவின.

2.18 பெரும்பான்மை வகுப்புவாத சீர்குலைவு முயற்சிகள் ஒருபுறமிருக்க, சிறுபான்மை வகுப்புவாத சக்திகளும், வெளிநாட்டுத் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளும், அவர்கள் பங்கிற்கு பலவகை சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

2.19 மதவாத சக்திகளை எதிர்த்து நடத்தப்பட வேண்டிய போராட்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். அத்துடன், ஆட்சியாளர்களின் மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகவும் மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தும் நமது போராட்டங்களையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதன் ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகளை உள்ளடக்கிய ஒரு மூன்றாவது மாற்றுக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

3. தமிழக நிலைமைகள்

3.1 நாட்டின் வளர்ச்சிபெற்ற மாநிலங்களில் ஒன்றாகக் கருதப்படும் தமிழகம் தொடர் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறது. 11-வது ஐந்தாண்டு திட்டத்திற்கான அகில இந்திய அணுகுமுறை அறிக்கைகள் சமீபத்தில்தான் தேசிய வளர்ச்சிக்குழுவின் ஒப்புதல் பெற்றுள்ளது. மாநிலத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.) வளர்ச்சியானது, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1997-2002) 4.9 சதவிகிதம் ஆகவும் 10-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் 5.9 சதவிகிதம் ஆகவும் இருந்துள்ளது என மாநில திட்டக்குழு அறிக்கை கூறுகிறது. இதே காலத்தில் அனைத்திந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.) முறையே 5.5 சதவிகிதம், 7.0 சதவிகிதம் என இருந்ததாகவும் ஒப்பிட்டுப் பார்க்கையில் மாநிலத்தின் வளர்ச்சி விழுக்காடுகள் குறைந்து காணப்படுவதாகவும் மேற்கண்ட அறிக்கை கூறுகிறது.

3.2 வளர்ச்சி உயர்வு குறித்த மொத்த விபரங்கள் சராசரி விபரங்களாகவே அறிவிக்கப்படுகிறது. ஏற்றத்தாழ்வுகளை மூடிமறைப்பதாக இந்த விபரங்கள் இருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மாநிலத்தின் நபர்வாரி வருமானத்தில் விழுப்புரம் மாவட்டம் கடைசி இடத்தைப் பெறுகிறது. சென்னை நகரத்தின் சராசரி நபர்வாரி வருமானத்தின் 32 சதவிகிதம்தான் விழுப்புரம் மாவட்ட நபர்வாரி வருமானம் என்ற விபரமும், இந்த ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டுகிறது.

3.3 மாநிலத்தில், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக இருக்கும் வேளாண்துறை தொடர்ந்து பல ஆண்டுகள் நெருக்கடிகளைச் சந்தித்தது, மொத்த சாகுபடி நிலங்களின் பரப்பளவு குறைந்து வருகிறது. 1980-90 வரையில் சாகுபடி பரப்பளவு 56.2 லட்சம் ஹெக்டேர் ஆகும். இது 2000 முதல் 2005 வரையுள்ள ஆண்டுகளில் 50 லட்சம் ஹெக்டேராக குறைந்து விட்டது. மாநிலத்தில் நிலவும் நிச்சயமற்ற பருவ சூழ்நிலை பாசன உத்தரவாதமற்ற நிலைமை, நகர்ப்புற விஸ்தரிப்பு தொழிற்சாலைகள், ரியல் எஸ்டேட் வியாபாரம் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட விவசாயமில்லாத இதர பணிகளுக்கு விவசாய நிலங்கள் மாற்றப்படுவது, விவசாயம் லாபகரமாக இல்லாதது போன்றவற்றால் சாகுபடிப் பரப்பளவு குறைந்துள்ளது.

3.4 1976-80 காலத்தில், மாநிலத்தின் பரப்பளவில் 50 சதவிகிதம் அளவிற்குப் பயிரிட்டு வந்த நிலையிலிருந்து, 2001-2005இல் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு 44 சதவிகிதம் ஆக குறைந்துள்ளது.

3.5 மொத்த தரிசு நிலத்தின் அளவு 1976-80இல் 13.5 சதவிகிதம் என்பது 2001-05இல் 20.5 சதமாக உயர்ந்துள்ளதின் மூலம் 20 லட்சம் ஹெக்டேரை தாண்டியுள்ளது.

3.6 நகர்மயமாக்குதல், அதிகமாக நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாக உள்ள தமிழ்நாட்டில் 56 சதவிகிதம் மக்கள் ஊரகப்பகுதிகளில் வாழ்கின்றனர். ஆனால் இவர்களுக்கு மாநிலத்தின் மொத்த வருமானத்தில் 14 சதவிகிதம் மட்டுமே கிடைக்கிறது. வருவாய் ஏற்றத்தாழ்வை இந்த விபரங்கள் படம்பிடித்து காட்டுகின்றன. கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் 1999-2000, 2004-05க்கும் இடையே 2.5 சதவிகிதம் உயர்ந்துள்ளாக அரசு விபரங்களே கூறுகிறது.

3.7 விவசாய உற்பத்தி, பால், இறைச்சி உற்பத்தியும் கடந்த ஐந்து ஆண்டுகளில் சரிவு நிலையில் இருந்தது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் வேளாண்துறையின் பங்களிப்பு 25 சதம் ஆக இருந்த நிலை 2005-06-இல் 13.3 சதவிகிதம் ஆக சரிந்தது. வேளாண்துறையின் உற்பத்தி மதிப்பு 1993-94-இல் ரூ.12,873 கோடியாக இருந்தது. இது, 2005-06-இல் ரூ.13,060 கோடியாக (மிக குறைந்த உயர்வு) மட்டுமே இருந்தது. கிராமப்புற கடன் ஏற்பாடுகள் சுருங்கி வருகின்றன. வங்கிக் கடன் பெயரளவுக்கே உள்ளது. மொத்தத்தில் 25 சதமான விவசாயிகள் மட்டுமே நிறுவன கடன்களைப் பெறுகின்றனர். கந்து வட்டிக் கொடுமைகளிலிருந்து விவசாயிகள் மீளமுடியவில்லை.

3.8 தி.மு.க. அரசு பொறுப்பேற்ற அன்று அறிவிக்கப்பட்ட ரூ. 6866 கோடி கடன் வட்டி ரத்து, கூட்டுறவு கடன்களைப் பெற்ற ஏழை நடுத்தர விவசாயிகளுக்கு நிவாரணமளித்தது. அதே சமயம் வசதி படைத்தவர்கள் பெற்ற அனைத்துக் கடன்களையும் ரத்து செய்தது. ஆனால், இதற்கான நிதியைக் கூட்டுறவு அமைப்புகளுக்கு முழுமையாக அரசு வழங்கவில்லை. இது கூட்டுறவு அமைப்பின் கடன் ஏற்பாடுகளை நிலைகுலையச் செய்து விட்டது.

3.9 தொழில்துறையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தில் தொழில்துறையின் பங்களிப்பு குறைவாக உள்ளது. தமிழ்நாட்டிலும் அதே நிலைதான். நிறுவன மூடல்களினால் சிறுதொழில்களிலும் குடும்பம் சார்ந்த தொழில்களான கைத்தறி மற்றும் நெசவுத் தொழில்களிலும் பின்னடைவு ஏற்பட்டது.

3.10 கட்டுமானத்துறையில், இக்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியானது, கட்டுமானப் பொருட்களின் சமீபகால விலை உயர்வுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

3.11 மின்துறையில், தன்னிறைவு எனப் பேசிவந்த நிலைபோய், கோடை காலத்திற்கு முன்னதாகவே மின்வெட்டு என்றாகிவிட்டது. இது தொழில், விவசாயம், வர்த்தகம் மற்றும் சாதாரண மக்களையும் பெரிதும் பாதித்துள்ளது. மாநிலத்தின் தேவைக்கேற்ப மின் திட்டங்களை உருவாக்குவதில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவில்லை. தனியார் மின் உற்பத்தியை நம்பி நிற்பது நெருக்கடிகளை அதிகப்படுத்தும். குறைந்த கட்டணத்தில் மின்னுற்பத்தி வாய்ப்பை- புனல் மின்நிலையங்களுக்கான வாய்ப்புகளை - முழுமையாகப் பயன்படுத்தாத நிலையும் உள்ளது.

3.12 தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் (NSSO) புள்ளி விவரப்படி 1983 தொடங்கி 1993-94-ஆம் ஆண்டு வரையிலான சராசரி ஓராண்டு வேலைவாய்ப்பு வளர்ச்சி 1.74 விழுக்காடாக இருந்தது. இவ்வளர்ச்சி 1993-94 தொடங்கி 2004ஆம் ஆண்டு வரை 0.2 விழுக்காடாக குறைந்தது. பெண்களின் வேலைவாய்ப்பு 1993-94ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டு அதிக அளவில் குறைந்து விட்டது. உருவாகும் புதிய வேலைவாய்ப்புகளிலும் இருவகைப் பிரச்சனைகள் உள்ளன. ஆலைகள், அலுவலகங்களில் இருந்த ஓரளவு தரமான வேலை வாய்ப்புகள் குறைந்து ஒப்பந்தம் மற்றும் தினக்கூலி முறையிலான வாய்ப்புகளே கிடைக்கின்றன. இது தவிர உள்ள வேலைவாய்ப்புகள் அனைத்தும் முறைசாரா தொழில்களிலும், சேவைத் துறைகளிலுமே ஏற்படுகின்றன. குறைந்த கூலி, வேலைப் பாதுகாப்பின்மை, சமூகப் பாதுகாப்பின்மை, நலச்சட்ட அமலாக்கமின்மையே இந்த வேலைவாய்ப்புகளின் அடிப்படைகளாக உள்ளன.

3.13 மனித வளர்ச்சிக் குறியீடுகள் பற்றிய கடந்த கால விபரங்கள் தமிழகத்தின் முன்னேற்றத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டன. சத்துணவுத் திட்டம் உட்பட உள்ள பல திட்டங்கள் போஷாக்கின்மையில் மாற்றத்தை உருவாக்க உதவுகின்றன. ஆனால், "மனித வளர்ச்சி குறியீடுகளின் பயன்கள் மக்களைச் சென்றடைவதில் பல இடைவெளிகளும் பல வேறுபாடுகளும் உள்ளன", என மாநிலத் திட்டக்குழு அறிக்கையே கூறுகிறது.

3.14 குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கும், குறிப்பாகப் பெண் குழந்தை இறப்பைக் குறைப்பதற்கும், ஒரு சில மாவட்டங்களில் மகப்பேற்றின்போது தாய் இறக்கும் விகித்த்தைக்

குறைப்பதற்கும் கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் மாநில திட்டக்குழு வலியுறுத்தியுள்ளது. பெண் கருக்கொலை பல மாவட்டங்களில் முக்கிய சமூகப் பிரச்சனையாக உள்ளது.

3.15 நகர்மயமாக்குதலின் துயர விளைவுகளை தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. கிராமப்புறப் பொருளாதார அழிவுகள் நகர்ப்புறங்களை நோக்கிய இடம்பெயர்தலை அதிகப்படுத்துகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை 1991-2001இல் 34.7 சதவிகிதம் என்பது 2005ல் 44 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. பெருகி வரும் நகர்ப்புற ஏழ்மை, அடிப்படை வசதிகளான குடியிருப்பு, குடிநீர், கழிவறை, கழிவுநீர் வசதிகள் இல்லாமை மருத்துவ வசதிகளுக்குத் தனியார் அமைப்புகளையே பெரிதும் நம்பி நிற்கும் நிலை என பல்வகைப் பிரச்சனைகளை மாநிலம் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

3.16 தூய்மையான குடிநீர் என்பது இன்றும் மிகப்பெரிய பிரச்சனையாகவே உள்ளது. "தற்போது 152 நகராட்சிகளில் 41 நகராட்சிகள் மட்டுமே குறைந்தபட்ச அளவான ஒரு நாளைக்கு ஒருவருக்கு 90 லிட்டர் வரை குடிநீர் வழங்குகின்றன. 18 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமே பாதாள சாக்கடை அமைப்பினைப் பெற்றிருக்கின்றன", என மாநிலத் திட்டக்குழு கூறுகிறது.

3.17 கல்வித்துறையிலுள்ள பாகுபாடுகள் பெருகி வருவதும், மழலைக் கல்வி முதல் உயர் தொழில் நுட்பக் கல்வி வரையிலும் வியாபாரமயமாக்கப்பட்டுள்ளதும் முக்கிய பிரச்சனைகளாகத் தொடர்கின்றன. தாய்மொழிக் கல்வி, சமச்சீர் கல்விமுறை, சமூக நீதி உறுதிப்படுத்துதல், கல்வி நிறுவனங்களுக்கு சமூகக் கட்டுப்பாடு, அரசு நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவது எனப் பல்வகை நடவடிக்கைகள் இன்றைய அவசரத் தேவையாகிறது.

3.18 ஜாதீய ஒடுக்குமுறை, சமூகக் கொடுமைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், கொலை, கொள்ளைகள் அதிகரிப்பு, அரசியலில் வன்முறையாளர்கள் மற்றும் சமூக விரோதிகளின் நேரடித் தலையீடு போன்ற சமூக அரசியல் பிரச்சனைகளும் கவலைதரும் அளவில் தொடர்கின்றன.

3.19 உலகமய - தாராளமயக் கொள்கைகளின் அமலாக்கத்தால் ஏற்படும் பல்வகைப் பிரச்சனைகளோடு, மாநில அரசுகளுக்கான நிதி வருவாய் பாதிப்புகளும், கூட்டாட்சி முறைகளுக்கு பாதிப்பை அதிகப்படுத்தும் மத்திய - மாநில உறவுப் பிரச்சனைகளும் கவனத்தில் கொள்ள வேண்டியாகும்.

மாநில அரசியல் நிலைமை

3.20 18-வது மாநாடு நிறைவடைந்த பின், தமிழகத்தில் 16 மாதங்கள் அண்ணா திமுக ஆட்சி நீடித்தது.

> *"மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத, அடக்குமுறை அதிமுக அரசை அடுத்த தேர்தலில் தூக்கியெறிவதற்கு மக்கள் சக்தியை ஒன்றுபடுத்த வேண்டும்" என மாநில மாநாட்டு அரசியல் தீர்மானம் நமது கடமையை நிர்ணயம் செய்தது.*

3.21 2004ஆம் ஆண்டு மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்கு அணி அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்தும், குறைந்தபட்சத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் மக்களைத் திரட்டிப் போராட்டங்களை நடத்திக் கொண்டே அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான மக்கள் விரோத அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு மக்கள் சக்தியை ஒன்றுபடுத்துவது என்ற நோக்கோடு, அரசியல் கடமையாற்ற மாநாடு விடுத்த அறைகூவலை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

> *"தி.மு.க. தலைமையுடன் நட்பு நீடிக்கின்ற அதே நேரத்தில், நாம் ஏற்றுக் கொள்ளாத கருத்தில் நாம் வேறுபடுத்தி காட்ட வேண்டியுள்ளது. அதே நேரத்தில் வகுப்புவாதத்திற்கு எதிராகவும் அ.தி.மு.க. அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராகவும் நடவடிக்கைக்கும் செல்ல வேண்டியுள்ளது." என்ற 18வது மாநாட்டின் வழிகாட்டுதல்படியே நமது பணிகள் நடைபெற்றன.*

3.22 மாநில மாநாட்டிற்கும் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற காலத்திற்கும் இடையே நாம் தனியாகவும் கூட்டாகவும் மக்கள் பிரச்சனைகள் பலவற்றில் இயக்கங்களையும்,

போராட்டங்களையும் நடத்தினோம். அதே நேரத்தில் திமுக தலைமையிலான அணி - நாடாளுமன்றத் தேர்தலின் போது 2004ல் உருவான அணி - தொடர்கிறது என்ற தோற்றத்தை உருவாக்கவும் உறுதிப்படுத்தவும் தி.மு. கழகம் முயன்றதையும் மாநில மாநாட்டு வழிகாட்டுதலுக்கேற்ப எதிர்கொண்டோம்.

3.23 2006 மே மாதத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மாநில மாநாடு வகுத்த அரசியல் கடமையை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளை உருவாக்கினோம். திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தொகுதி உடன்பாடு கண்டோம். காங்கிரஸ், பா.ம.க., சி.பி.ஐ., யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய தேர்தல் உடன்பாடு, அ.இ.அ.தி.மு.க. அரசை ஆட்சியிலிருந்து அகற்ற உதவி செய்தது. ம.தி.மு.க. - அ.இ.அ.தி.மு.க.வுடன் இணைந்து கொண்டது. விடுதலை சிறுத்தைகளும் இந்த அணியிலேயே இருந்தது. பாஜக தனித்து போட்டியிட்டது. சட்டமன்றத் தேர்தலுக்குப் பின், விடுதலை சிறுத்தைகள் தி.மு.க. அணிக்கு மாறியது.

3.24 கடந்த கால நிலமைகளிலிருந்து மாறுபட்டு, இரண்டு ஏக்கர் நிலம், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகள் கடன் தள்ளுபடி, காலிப்பணியிடங்களை நிரப்புதல் என ஏழை - எளிய மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை முன்னிறுத்தும் முறையிலும், அ.இ.அ.தி.மு.க.வின் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம் என்ற வாக்குறுதியோடும் தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையை முன்வைத்தது.

3.25 கடந்த பல ஆண்டுகளாக, மத்திய - மாநில அரசுகளால் பின்பற்றப்பட்டு வரும் தாராளமயக் கொள்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அடித்தட்டு மக்களின் பிரச்சனைகளை முன்னிறுத்தி இந்தத் தேர்தல் நடைபெற்றது. 'ஜனநாயகமா? சர்வாதிகாரமா?' என்பதே இந்த தேர்தலின் அடிப்படையான பிரச்சனை என நாம் முன்வைத்த கோஷம், தி.மு.க. தலைமையில் ஏற்பட்ட தேர்தல் உடன்பாட்டின் அடிப்படைக் கோஷமாக மாறியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

3.26 தமிழக வரலாற்றில் முதன் முறையாக, சட்டமன்றத்தில் தனித்த பெரும்பான்மை இல்லாமல், வெளியிலிருந்து ஆதரிக்கும் கட்சிகள் உதவியுடன் மாநில அரசு அமையும் நிலை ஏற்பட்டது. சி.பி.ஐ.(எம்) உட்பட, தேர்தல் உடன்பாடு கண்ட கட்சிகளின் ஆதரவோடு, தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இந்த ஆட்சி 19 மாதங்களை நிறைவு செய்துள்ளது.

3.27 மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்ற அறிவிப்போடு, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகள் கூட்டுறவுக் கடன் ரத்து, சத்துணவில் வாரம் 3 முட்டை வழங்குவது என்ற திட்டங்களின் அமலாக்கத்தோடு, தி.மு.க. அரசு பணிகளைத் துவக்கியது.

நமது அணுகுமுறை

3.28 மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு மாநில அரசை வலியுறுத்துவது, மக்களைத் திரட்டி, இயக்கங்களை உருவாக்குவது; அரசு மேற்கொள்ளும் சரியான முடிவுகளுக்கு ஆதரவளிப்பது; தவறான முடிவுகளை எதிர்ப்பது; நமது அடிப்படை நிலைபாடுகளை வேறுபடுத்திக் காட்டுவது, என்ற முறையில், சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பணியாற்ற நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

3.29 அவசர அவசரமாக அறிவிக்கப்பட்ட உள்ளாட்சிமன்றத் தேர்தல்களை தி.மு.க. அரசு நடத்திய விதம் அதனுடைய ஜனநாயக விரோத அணுகுமுறையை அம்பலப்படுத்தியது. மாநிலத்தின் பல இடங்களில் பல்வேறு அத்துமீறல்கள் நடைபெற்ற போதிலும், சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற அராஜக, வன்முறை நடவடிக்கைகள் அனைத்து எல்லைகளையும் மீறியதாக அமைந்தன.

3.30 இது பற்றிய மாநிலக்குழுவின் பரிசீலனையில் நாம் கீழ்வருமாறு குறிப்பிட்டோம்.

> *"சென்னை மாநகர் மன்றத்திற்காக அக்டோபர் 13 அன்று நடைபெற்ற தேர்தலில் வன்முறைகளும், அத்துமீறல்களும் நிகழ்ந்தது அதிர்ச்சியளிக்கும் வரலாறு காணாத சம்பவங்களாகும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்ட 8 வார்டுகளிலும், வாக்குச் சாவடிகள் ஆயுதம் தாங்கிய தொழில்முறை வன்முறை கும்பலால் கைப்பற்றப்பட்டு, வாக்காளர்கள் விரட்டியடிக்கப்பட்டு*

மோசடியாக வாக்குப் பதிவுகள் நடைபெற்றன. கட்சியின் வேட்பாளர்களும், முன்னணித் தலைவர்களும், ஊழியர்களும் கொடூரமாகத் தாக்கப்பட்ட நிகழ்வுகள் ஜனநாயக நடைமுறைகளுக்கும், தேர்தல் விதிமுறைகளுக்கும் - மரபுகளுக்கும் எதிரான நடைமுறையாகும். தேர்தலை முறையாக நடத்தும் பொறுப்புள்ள தேர்தல் ஆணையமும், சென்னை நகரக் காவல்துறையும், சென்னை மாநகர நிர்வாகமும் நிகழ்ந்த மோசடிக்கு துணையாக நின்றன."

3.31 'ஜனநாயகமா? சர்வாதிகாரமா?', என்ற கேள்வியை எழுப்பி, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வாக்குறுதியோடு ஆட்சிப் பொறுப்பேற்ற திமுகவின் உள்ளாட்சிமன்ற தேர்தல் பற்றிய நடவடிக்கைகள் கடுமையான பல கேள்விகளை முன்னுக்கு கொண்டு வந்தன. காங்கிரஸ், பா.ம.க., சி.பி.ஐ., விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் திமுகவின் அராஜகங்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய நிலையில், அ.இ.அ.தி.மு.க. அணி தேர்தல் நாளன்று களத்திலிருந்து முற்றிலும் விலகி நின்றது. உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இந்த அராஜகங்களை எதிர்த்து நீதிமன்ற வழக்கு உட்பட நடவடிக்கைகளை நாமும் மேற்கொண்டோம்.

3.32 திமுக அரசின் நடவடிக்கைகள் குறித்த நமது பகிரங்க விமர்சனமும், நீதிமன்ற நடவடிக்கைகளும், வெளிவந்த தீர்ப்பின் தன்மையும் சென்னை மாநகராட்சியில் ஒரு பகுதித் தேர்தல்களை ரத்து செய்து மறு தேர்தல்கள் அறிவிக்க வேண்டிய கட்டாயத்தை அரசுக்கு ஏற்படுத்தியது.

3.33 ஆனால், உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ள மறுத்த திமுகவினர் அடுத்து நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தல்களில் மாநிலம் எங்கும் மோசடித் தேர்தலை நடத்த முற்பட்டு அம்பலப்பட்டு நின்றனர்.

3.34 இந்த நேரத்திலும், நாம் அரசை பகிரங்கமாக விமர்சித்தோம். மாநிலக்குழு தனது தீர்மானத்தில் கீழ்வருமாறு குறிப்பிட்டது:

"கூட்டுறவு சங்கத் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் போட்டியிடவும், உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கவும், வாக்கு எண்ணிக்கையை முறையாக நடத்தவும் உத்தரவாதம் செய்யப்பட வேண்டியது. ஜனநாயகப்பூர்வ தேர்தல் நடவடிக்கைளின் அடிப்படை அம்சங்கள். இதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்த நியதிகள் ஆளும் கட்சியினராலும், தேர்தல் பொறுப்பாளர்களான அதிகாரிகளாலும் மீறப்பட்டதாலேயே, ஒட்டுமொத்தத் தேர்தலையும் ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது."

3.35 மதுரை தினகரன் அலுவலகம் மீது தாக்குதல் மற்றும் உயிர் பறிப்பு நிகழ்ச்சிகள், ஆளும் கட்சி மீண்டுமொரு முறை சமூக விரோதிகளைத் திட்டமிட்டுப் பயன்படுத்தியதை அம்பலப்படுத்தியது. தி.மு.கழக அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று 14 மாதங்களுக்குள் நடைபெற்ற இந்த நிகழ்வுகள் மிகப் பெரும் அரசியல் விவாதங்களை எழுப்பின; அரசின் அந்தஸ்தும் கணிசமாகப் பாதிக்கப்பட்டது.

3.36 அதிமுகவின் ஊழல், ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு எதிரான மக்களின் கோபம் கடந்த தேர்தலில் பிரதிபலித்தது. ஆனால், இந்த நிலமைகளில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை.

3.37 அரசின் தவறான நடவடிக்கைகளை விமர்சிப்பது - எதிர்ப்பது, மக்கள் பிரச்சனைகளுக்கான இயக்கங்களை வலுப்படுத்துவது, மக்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண அரசுக்கு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவது ஆகிய நமது அணுகுமுறையைத் தொடர வேண்டுமென்பதே நமது முடிவாக இருந்தது.

3.38 மாநில அரசு பொறுப்பேற்று ஓர் ஆண்டு முடிந்த நிலையில், அரசின் செயல்பாடு குறித்த பரிசீலனையை மாநிலக்குழு மேற்கொண்டது. அந்தப் பரிசீலனையில் நாம் கீழ்வருமாறு குறிப்பிட்டோம்.

"திமுக அரசை ஆதரிக்கிற அதே நேரத்தில் அதனுடைய தவறான கொள்கைகளை எதிர்த்தும், ஜனநாயக உரிமை மீறலை எதிர்த்தும் கட்சி சார்பில் மக்களைத் திரட்டி இயக்கம் நடத்திட வேண்டும். மாநில அரசின் தவறான நடவடிக்கைகளிலிருந்து, நம்மை வேறுபடுத்திக் காட்டுவதோடு,

மக்கள் பிரச்சனைகளில் வலுவான இயக்கமும் நடத்தி, அரசின் மீது அதிருப்தியுறும் மக்களை நம் பக்கம் திரட்டிட வேண்டும்."

3.39 மாநில அரசு குறித்துள்ள நமது அணுகுமுறையின் அடிப்படையான அம்சம் இது தான்.

3.40 மத்திய கூட்டணி அரசில், முக்கியமான பல துறைகளுக்கான பொறுப்புகளுடன் பங்கேற்றுள்ள திமுகவின் மாநில அரசின் அடிப்படையான கொள்கைகள் அனைத்தும், மத்திய அரசு பின்பற்றும் அதே தாராளமயக் கொள்கைகள்தான்.

3.41 உலகமயக் கொள்கையின் பின்னணியில், மாநில அரசுகள் சந்திக்கும் பொருளாதார நெருக்கடிகள் ஒருபுறமிருக்க, மக்களுக்கு சில சலுகைகளைக் கொடுத்து, தங்களது ஆதரவுத் தளத்தை தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியையும் ஆட்சியாளர்கள் மேற்கொள்கிறார்கள்.

3.42 அதிமுக ஆட்சிக் காலத்தில், மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களைத் தனியார்மயமாக்கும் முயற்சி கடுமையான எதிர்ப்புகளைச் சந்தித்தது. இதையொட்டி மக்கள் இயக்கங்களையும், தொழிலாளர் போராட்டங்களையும் முன்னின்று நடத்தி, நீதிமன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தோம். திமுக அரசு அந்தத் தனியார்மய நடவடிக்கைகளைக் கைவிடுவதாக அறிவித்தது; மின்வாரியத்தைப் பிரிக்கும் முயற்சியையும் நிறுத்தி வைத்தது.

3.43 மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களின் தனியார்மயத்தையோ பங்கு விற்பனையையோ கடந்த காலங்களில் திமுக உறுதிபட எதிர்த்ததில்லை; பொதுவாக பொருளாதார சீர்திருத்தங்களை முழுமையாக ஆதரித்தே வருகிறது. ஆனால், தனது சக்தி வாய்ந்த தளமான நெய்வேலி லிக்னைட் நிறுவனத்தில் முதல்வரின் கருத்தையும் மீறி அதிகாரிகளும் ஊழியர்களும் உறுதியுடன் ஒன்றுபட்டு வேலைநிறுத்தம் தொடர்ந்தபோது, அதன் பங்கு விற்பனையைத் தடுத்து நிறுத்த, தனது அமைச்சர்களை ராஜினாமா செய்யச் சொல்வோம் எனக் கூறும் அளவிற்கும் திமுக சென்றது. சென்னை விமான நிலையத்தைப் பொதுத்துறையிலேயே விரிவாக்கம் செய்வதை ஏற்றுக் கொண்டது. சேது சமுத்திரப் பிரச்சனையில் பெருமளவிற்கு மக்களைத் திரட்டி, இயக்கத்தை நடத்த முன் வந்தது.

3.44 கடந்த கால நிலைமைகளிலிருந்து மாறுபட்டு, தனித்த பெரும்பான்மையின்றி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சூழ்நிலையினாலும் அரசியல் பலாபலனில் சாதகமான பெரும் மாற்றம் எதுவும் நிகழாத நிலையிலும், தமிழக ஆட்சியாளர்களுக்கு இந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

3.45 நில வினியோகம், மனைப்பட்டா உள்ளிட்ட அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வது; அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களை முழுமையாகவும் நேர்மையாகவும் அமலாக்கச் செய்வது; கல்வி, வேலைவாய்ப்பு, இட ஒதுக்கீடு பற்றிய நமது நிலையை வலியுறுத்துவது; தொழிற்சங்க, ஜனநாயக உரிமைகளின் அமலாக்கம் பற்றிய ஊசலாட்டமான அணுகுமுறைகளை மாற்றச் செய்வது; வளர்ந்து வரும் லஞ்ச ஊழல்களையும், அராஜக வன்முறைகளையும் தடுத்து நிறுத்த வலியுறுத்துவது; ஆகியவற்றுடன் வர்க்க வெகுஜன அமைப்புகளில் திரட்டப்பட்டுள்ள மக்கள் பகுதியினர், ஒடுக்கப்பட்ட மக்கள், சிறுபான்மையினர், பெண்கள் என பாதிக்கப்படும் பகுதியினரது கோரிக்கைகளையும், பிரச்சனைகளையும் முன்னிறுத்தி, மக்களைத் திரட்டிப் பிரச்சாரங்களையும், கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் நடத்தி மாநில அரசை நிர்ப்பந்தித்து நிறைவேற்றச் செய்வதே நமது அரசியல் அணுகுமுறையாகத் தொடருகிறது.

3.46 தேசிய அரசியலிலும், சில குறிப்பிட்ட பிரச்சனைகளில், தி.மு.க. எடுத்த நிலைபாடு நமது கட்சிக்கு உதவிகரமாக அமைந்தது. நமது அணுகுமுறைகளை உருவாக்குகையில் இதையும் கணக்கிலெடுத்துள்ளோம்.

3.47 மேற்குறிப்பிட்ட முறையில் தெளிவான பார்வையுடனும், பிரச்சனை அடிப்படையில் தனியான அணுகுமுறையுடனும் நாம் மேற்கொண்டுள்ள பணிகள் கட்சியின் பொதுவான அரசியல் அந்தஸ்தை உயர்த்தியுள்ளன.

3.48 அகில இந்திய ரீதியில், நாம் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான அணுகுமுறை, நமக்குப் பெரிதும் உதவியுள்ளது. 2006ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் மேற்குவங்கம், கேரள மாநிலங்களில் நாம் பெற்ற வெற்றியும், திரிபுரா அரசு தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதும் அரசியல் சூழ்நிலையில் சாதகமான அம்சங்களாகும்.

3.49 உழைப்பாளி மக்கள் - ஏழை, எளிய மக்களின் - பிரச்சனைகளைக் கையிலெடுத்து நாம் நடத்திய இயக்கங்கள், குறிப்பாக குடிமனை - நிலப்பட்டா இயக்கம், தலித் - அருந்ததியினர் - ஆதிஆந்திரா மக்கள் இயக்கங்கள், சிறுபான்மையினர் பிரச்சனைகளில் நமது முன்முயற்சிகள் நமது அரசியல் தள விஸ்தரிப்புக்கான வாய்ப்புகளைப் புலப்படுத்துகின்றன.

3.50 மதுரை விமான நிலையத்திற்கு பசும்பொன் தேவர் பெயரிடுதல், ஜாதீய மோதல் வழக்குகள் ரத்து போன்ற அரசின் நிலைபாடுகளிலும் நமது தனித்த நிலைபாடு குறிப்பிடத்தக்கதாகும். மொத்தத்தில் கட்சியின் செல்வாக்கு இந்தக் காலத்தில் பொதுவாக உயர்ந்துள்ளது.

ஊடகங்கள்

3.51 இதற்கிடையே திட்டமிட்ட முறையிலான கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பிரச்சாரம் நம் மீது குறிவைத்து நடத்தப்பட்டு வருவதையும் நாம் மிகுந்த கவனத்துடன் கணக்கிலெடுக்க வேண்டும். உலகளாவிய கம்யூனிஸ்ட் சித்தாந்த எதிர்ப்பு ஊடகங்களின் தாக்குதலோடு இணைந்து நின்று தமிழக ஊடகங்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளன. மேலும் கேரள மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளான முல்லைப் பெரியாறு, நெய்யாறு மற்றும் சேலம் ரயில்வே டிவிஷன் அமைத்தல் பிரச்சனைகளும் நமக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்தின. மேற்குவங்கத்தின் சிங்கூர், நந்திகிராம பிரச்சனைகளும் மார்க்சிஸ்ட் எதிர்ப்புப் பிரச்சாரகர்களின் வலுவான கருவிகளாக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பிரச்சனை போன்றவற்றிலும் நம்மைக் குறிவைத்து தாக்கும் நிலையைப் பல அமைப்புகள் மேற்கொள்கின்றன. பெருமளவு நேயர்கள் மற்றும் வாசகர்களைக் கொண்ட தொலைக்காட்சிகள், நாளேடுகள், வார இதழ்களின் திட்டமிட்ட அவதூறுப் பிரச்சாரத்திற்கு நமது கட்சி இலக்காகியுள்ளது. அணுசக்தி ஒப்பந்தத்தையும், ஏகாதிபத்திய ஆதிக்க முயற்சிகளையும் எதிர்ப்பது, உலகமய தாராளமயக் கொள்கைகளை உறுதிபட எதிர்ப்பது போன்ற காரணங்களே இந்த மார்க்சிஸ்ட் எதிர்ப்புக்கு அடிப்படை.

3.52 இவற்றை எதிர் கொள்வதும், மக்களுடன் இணைந்து நின்று, நமது தனித்துவம் வாய்ந்த அரசியல் நிலைபாட்டை உறுதியாக வலியுறுத்துவதும் இன்று மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த கடமை.

தமிழக அரசியல் கட்சிகள் குறித்து...

தி.மு.க.

3.53 ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின் திமுக மேற்கொண்ட பொதுவான கொள்கை நிலைகள் குறித்து ஏற்கனவே குறிப்பிட்டோம்.

3.54 அடிப்படைப் பிரச்சனைகளில், திமுக மெத்தனப் போக்கையே கையாளுகிறது. அதே நேரத்தில் அணுசக்தி ஒப்பந்தம் குறித்த நிலைபாடுகள், சிங்கூர் - நந்திகிராம் பிரச்சனை குறித்த அணுகுமுறை, காவேரி, முல்லைப்பெரியாறு, பாலாறு உட்பட உள்ள நதிநீர் தாவாக்கள் குறித்த அணுகுமுறைகள் இந்தக் காலத்தில், ஆக்கப் பூர்வமானவையாக இருந்தன.

3.55 சேலம் கோட்டப் பிரச்சனையிலும், பிஜேபி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டங்களிலும் அமைச்சர்கள் நேரடியாகக் களத்தில் இறங்கியதும் அதையொட்டிய வன்முறை நடவடிக்கைகளும் திமுகவிற்கு அவப்பெயரையே ஏற்படுத்தியது.

3.56 பெருகி வரும் ஊழலும், அதிகார துஷ்பிரயோக நடவடிக்கைகளும் தி.மு. கழகத்திற்கு மேலும் பாதிப்பை உருவாக்குவதாக உள்ளன.

3.57 காங்கிரசுடன் அகில இந்திய அளவில் மிகுந்த நெருக்கத்துடன் திமுக செயல்படுகிறது; இடதுசாரிக் கட்சிகளுடன் பொதுவாக நட்புரீதியான அணுகுமுறை உள்ளது. பாமகவின் கடுமையான விமர்சனங்களை ஒட்டி, சிறிய அளவில், திருப்பித் தாக்கவும் முயலுகிறது; விடுதலை சிறுத்தைகளை நெருக்கமாக வைத்துக் கொள்கிறது; சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீடு அறிவித்துள்ளதன் மூலம், அந்தப் பகுதியினரை நெருக்கமாகக் கொண்டு வர முற்பட்டுள்ளது.

3.58 திமுக ஆதரவுத் தளத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளையும், இந்தக் காலத்தில் மேற்கொண்டு வருகிறது. மக்கள் நலத்திட்டங்களை அமலாக்குவதன் மூலமான சாதகங்கள், ஏற்கனவே குறிப்பிட்ட தவறான நடவடிக்கைகள் மூலமான பாதிப்புகள் என்ற பின்னணியில், இளைஞர் அணியின் முதல் மாநாட்டை நடத்தியதும், பெண்கள், தொழிலாளர்கள் என அணிவாரியான மாநாடுகள் நடத்தப்படும் என்ற அறிவிப்பும், இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

அ.இ.அ.தி.மு.க.

3.59 கடந்த சட்டமன்றத் தேர்தலில் மாநில ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட நிலையிலும், அ.இ.அ.தி.மு.க. தனக்கென ஒரு கணிசமான ஆதரவு தளத்தைக் கொண்டுள்ளது. தேர்தலுக்குப் பின்னர் நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென்றே கூறலாம். பிரதான எதிர்க்கட்சி என்கிற முறையில் சட்டமன்றத்தைப் பயன்படுத்திப் பணியாற்றுவதற்கு மாறாக, சட்டமன்ற நடவடிக்கைகளை முடக்கும் முறையிலேயே அதன் பணி அமைகிறது.

3.60 அதே நேரத்தில், சமீப காலமாக, பல்வேறு மக்கள் பகுதியினர் மற்றும் உள்ளூர் பிரச்சனைகளையும், கோரிக்கைகளையும் முன்வைத்து தொடர்ந்து பல இயக்கங்களை நடத்தி வருகிறது..

3.61 அகில இந்திய அரசியலில் மூன்றாவது அணியின் அங்கமாக அதிமுக தன்னை அறிவித்துக் கொண்ட போதிலும், பாஜகவுடனான உறவை வலுப்படுத்துவதே அதன் நோக்கம் என்பதை தேர்தலில் அது மேற்கொண்ட நிலைபாடு அம்பலமாக்கியது.

3.62 பா.ஜ.க.வுடனான கொள்கை ரீதியான நெருக்கம் அதிகமாகி வருகிறது. சேது சமுத்திரத் திட்டத்தை சீர்குலைக்கும். முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற வகுப்புவாத மதவெறி சக்திகள் இந்தத் திட்டத்திற்கு எதிராக நடத்தும் போராட்டங்களுக்கு முழு ஆதரவு அளிக்கிறார்கள். குஜராத் சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க.வினர் வெற்றிக்குப் பாராட்டு, மோடிக்கு வரவேற்பு என சமீப நாட்களில் இந்த நெருக்கம் அதிகமாகியுள்ளது. பா.ஜ.க.வுடன் தேர்தல் உடன்பாடு என்பதை சூசகமாக அறிவிக்கும் பேட்டிகள் வெளிவந்துள்ளன. தேர்தல் நெருங்கும் போது இது உறுதிப்படுத்தப்படும் என்றே கருத வேண்டியுள்ளது. அதிமுகவின் கடந்த ஆட்சிக்காலத்துக் கொள்கைகளை மனதில் கொண்டு தற்போதைய இந்த ஆபத்தான அணுகுமுறைகளை அம்பலப்படுத்தி, அதை எதிர்த்து முறியடிக்க நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

காங்கிரஸ்

3.63 மத்தியில் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் கட்சியாகவும், மாநில திமுக அரசின் பிரதான ஆதரவுக் கட்சியாகவும் இருக்கும் காங்கிரஸ் தொடர்ந்து கோஷ்டிகள் அடிப்படையிலேயே செயல்பட்டு வருகிறது. சமீபகாலமாக, அது வன்முறை நடவடிக்கைகளுக்கும் இட்டுச் சென்றுள்ளது. மாநில அரசில் பங்கு வேண்டுமென மாநில அளவில் வற்புறுத்திக் கொண்டே, அகில இந்தியத் தலைமையின் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்பவே செயல்படும் நிலையில் உள்ளது. காங்கிரசுக்கு சாதகமான எந்த மாற்றமும் மாநிலத்தில் ஏற்பட்டதாகக் கூற முடியாது. அணுசக்தி ஒப்பந்தம் போன்ற பிரச்சனைகளில் மாநிலத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து மார்க்சிஸ்ட் எதிர்ப்பு நிலையெடுத்துச் செயல்படுகின்றனர்.

பாமக

3.64 மத்திய ஆட்சியில் பங்கு வகித்துக் கொண்டு அதன் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்காமலேயே தமிழக மக்கள் நலனுக்காகக் குரல் கொடுக்கும் கட்சி என்ற தோற்றத்தை உருவாக்க பா.ம.க. தொடர்ந்து முயற்சித்து வருகிறது. பல நேரங்களில் மாநில அரசின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறது. 2011ல் தமிழகத்தில் திமுக - அதிமுக இல்லாத தங்களது கூட்டணி ஆட்சி என்றும் நாடாளுமன்றத்திற்கான அடுத்த தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி தொடரும் என்றும், அறிவித்துள்ளது. ஆளும் திமுக மீது ஏற்படும் அதிருப்தியை தனக்கு சாதகமாக பயன்படுத்தும் முயற்சியாகவே அவர்களது செயல்பாடு இருக்கிறது. பாமகவின் நாளேடு மற்றும் தொலைக்காட்சி அவர்களது கருத்துப் பிரச்சாரத்திற்குப் பயன்படுவதோடு பல

வடிவங்களில் சி.பி.ஐ.(எம்) எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் பிரச்சனைகளில், மாநில அரசுக்கு எதிரான விமர்சனங்களுடன், இனவாத அணுகுமுறைகள், கலாச்சாரக் காவலர்களாக மாறும் முயற்சிகள் என நம்மால் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டிய நிலைகளையும் மேற்கொள்கிறார்கள்.

பாஜக

3.65 நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களுக்குப் பின் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்த போதிலும், ஆங்காங்கு பல்வகைப் பிரச்சனைகளைக் கையிலெடுத்து பாஜக செயல்பட்டு வருகிறது மத்திய ஆட்சிக் கால அந்தஸ்தைத் தொடர்ந்து பயன்படுத்துகிறது. சங்கப் பரிவாரத்தைச் சார்ந்த பல்வகை அமைப்புகளின் பணி தொடர்கிறது. குஜராத், இமாச்சல் தேர்தல் வெற்றிகளின் பின்னணியில், மதவாத செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகள் தொடரும்.

3.66 அ.இ.தி.மு.க.வுடனான உறவுகளை வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேது சமுத்திரத் திட்டம் போன்ற பிரச்சனைகளை வகுப்புவாத வெறியூட்ட இந்த சக்திகள் முயன்று வருகின்றனர். அகில இந்திய அரசியலில் மீண்டும் தங்களை வலுப்படுத்தும் முயற்சிகளை வகுப்புவாத சக்திகள் தொடரும் நிலையில், இவற்றைத் தனிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தமிழக மக்களிடம் வலுவாக எடுத்துச் செல்ல நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். தத்துவார்த்த ரீதியாக இவர்களை எதிர் கொள்ளும் பணிகளையும் கூர்மைப்படுத்த வேண்டும்.

மதிமுக

3.67 சட்டமன்றத் தேர்தலுக்காக முகாமை மாற்றி அ.இ.அ.தி.மு.கவுடன் உறவு ஏற்படுத்திய ம.தி.மு.க தற்போது அ.இ.அ.தி.மு.கவுடன் இணைந்து செல்லும் கட்சியாகவே காட்சியளிக்கிறது. இலங்கைப் பிரச்சனை தவிர வேறு எந்தப் பிரச்சனையிலும் அதிமுகவுடன் எந்த வேறுபாடும் இல்லாமலேயே செயல்படுகிறது. இதன் ஆதரவுத் தளம் பலவீனமடைந்துள்ளது.

தலித் அமைப்புகள்

3.68 விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் செயல்பாடுகள் பழைய நிலையில் இல்லை; ஆதரவுத் தளம் பலவீனமடைந்துள்ளது. அனைத்து ஜாதியினரையும் இணைத்து செயல்படப் போவதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய மக்கள் பிரச்சனைகளையும் கையிலெடுக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலையும் எடுத்துள்ளனர்.

3.69 புதிய தமிழகத்தின் பிடிமானம் தென் மாவட்டங்களில் தளர்ந்துள்ளது. தலித் மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து, நாம் இயக்கங்களை நடத்தும்போது அதையொட்டி நமக்கு எதிரான விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். அடித்தட்டு மக்கள், குறிப்பாக அருந்ததியினர் பிரிவினரது பிரச்சனைகளை ஒட்டி நாம் தொடர்ந்து இயக்கங்களை நடத்துவதால் இந்தப் பிரிவினரது பல அமைப்புகள் நம்மை நட்பு ரீதியாக அணுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அமைப்புகள்

3.70 இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், தேசிய லீக் போன்ற அரசியல் கட்சிகளாக செயல்படும் அமைப்புகளுக்குத் தமிழக முஸ்லிம் மக்களிடையே குறிப்பிடத்தக்க செல்வாக்கு இல்லை. தமுமுக, தௌஹீத் ஜமாத் போன்ற அமைப்புகள் தொடர்ந்து செயல்படுபவையாகவும், இளைஞர்களையும் பெண்களையும் கணிசமாகத் திரட்டக்கூடிய அமைப்புகளாகவும் உள்ளன. த.மு.மு.க.வுக்கு தி.மு.க.வுடனான நெருக்கம் தொடர்கிறது. சட்டமன்றத் தேர்தல் காலத்தில் தௌஹீத் ஜமாத் அதிமுகவுடன் கொண்டிருந்த உறவில் சமீபத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

தேமுதிக

3.71 சட்டமன்றத் தேர்தலிலும் தொடர்ந்து உள்ளாட்சி தேர்தல்களிலும் தனித்து நின்று பெற்ற வெற்றிகளும் வாக்குகளும் தமிழக அரசியலில் தேமுதிகவிற்கு ஓர் பிடிமானத்தை ஏற்படுத்தியுள்ளது. இது, திமுக, அதிமுக மீது அதிருப்தி கொண்டுள்ள இளைஞர்கள், நடுத்தர வர்க்கத்தினரைத் திரட்டி, ஏற்கனவே உள்ள ரசிகர் மன்ற தளத்துடன் இணைக்கும் முயற்சியில் உள்ளது. இரு தேர்தல்களில் பெற்ற வெற்றியானது, இதர பல கட்சிகளில் உள்ளவர்களை ஈர்க்க உதவியுள்ளது. அடிப்படைப் பிரச்சனைகளில் எந்த மாற்றுக் கருத்துக்களையும் முன்வைக்காமல் தனித்து போட்டி, அதுவே கொள்கை என்று மக்களைத் திரட்ட முயன்று வருகிறது.

3.72 சமீப காலத்தில், தேர்தல் கூட்டணி பற்றியும் தே.மு.தி.க. பேசத்துவங்கியுள்ளது.

3.73 அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிய தெளிவான மாற்றுப் பார்வையில்லாமல் தமிழக மக்கள் தற்போது சந்தித்து வரும் பிரச்சனைகளுக்குத் தீர்வுக் காண இயலாது என்பதை, இந்த கட்சியின் அணியினருக்கு உணர்த்த வேண்டும்.

3.74 நடிகர் சரத்குமார் தற்போது புதிய கட்சியை துவக்கியுள்ளார். காமராஜர் ஆட்சி எனவும் பேசத் துவங்கியுள்ளார்.

3.75 திராவிடர் கழகம், நாடாளுமன்றத் தேர்தல் காலத்திலிருந்து திமுகவுடன் இணைந்தே நிற்கிறது.

இடதுசாரி ஒற்றுமை

3.76 "தற்போது நிலவும் சூழ்நிலையில் இடதுசாரி ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவது தேவையானதாக உள்ளது," என்று இடதுசாரி ஒற்றுமைக்கான வாய்ப்பு, அவசியம் குறித்து, நமது 18வது அகில இந்திய மாநாட்டின் அரசியல் - ஸ்தாபன அறிக்கை கூறியது.

3.77 தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், சிபிஐதான் நம்முடன் இணைந்து செயலாற்ற வாய்ப்புடைய இடதுசாரிக் கட்சி.

3.78 சட்டமன்றத் தேர்தலில் ஒரே அணியில் இருந்தபோதிலும் 'தளி'யில் ஏற்பட்ட பிரச்சனைகள், நமது கட்சிக்குக் கூடுதல் இடங்கள் ஒதுக்கப்பட்டது, மற்றும் மாநிலத்தில் ஒரு சில இடங்களிலுள்ள கருத்து வேறுபாடுகள் ஆகியன தேர்தல் பணிகளில் சிரமத்தை ஏற்படுத்தியது. பல பிரச்சனைகளில் "மக்களின் உணர்வோடு இணைந்து நிற்பது" என்ற பெயரில் அவர்கள் மேற்கொள்ளும் நிலை, அவர்களுடன் இணைந்த நமது செயல்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

3.79 கடந்த மூன்று ஆண்டுகளில் சி.பி.ஐ. பல பிரச்சனைகளில் தனித்தும் இயக்கங்களை நடத்தியுள்ளது. அவர்களது ஆதரவுத் தளங்களை தக்க வைத்துள்ளது. நமது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட நபர்களையெல்லாம், பொறுப்புகளைக் கொடுத்து, இணைத்துக் கொள்கின்றனர். கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைப்பு பற்றித் தொடர்ந்து பேசி வருகின்றனர். முல்லைப் பெரியாறு, சேலம் டிவிஷன், நந்திகிராமம், சிங்கூர் போன்ற பிரச்சனைகளில் - பகிரங்கமாக மார்க்சிஸ்ட் எதிர்ப்பு நிலை எடுத்ததோடு, இதர அமைப்புகளை இந்தப் பிரச்சனைகளில் - குறிப்பாக முல்லைப் பெரியாறு, சேலம் டிவிஷன் பிரச்சனைகளில் - அவர்களுடன் இணைத்து நிறுத்தவும் முன்முயற்சி எடுத்தனர். இலங்கைப் பிரச்சனையில், எல்.டி.டி.இ.யினருக்கு ஆதரவான நிலையிலேயே 'ஜனசக்தி' செய்திகளை வெளியிடுகிறது.

3.80 இடதுசாரிக் கட்சிகள் இணைந்து செயல்படுவது என்ற நோக்கோடு, நாம் எடுத்த முயற்சிகள் ஓரளவே பலன் தந்துள்ளது. ஆங்காங்கு ஏற்படும் வேறுபாடுகள் இருந்தாலும், மாநிலத்தில் இடதுசாரி ஒற்றுமையின் அவசியத்தை நாம் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். இது நமது கட்சியின் அடிப்படை நிலை என்பதை உணர்ந்து பணியாற்ற வேண்டும். அதே நேரத்தில் இடதுசாரி ஒற்றுமை வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற பார்வையோடு சி.பி.ஐ.-யும் செயல்பட முன்வரவேண்டும். இடதுசாரிக் கருத்துடைய தனிநபர்கள், அறிவுஜீவிகளுடனான நமது தொடர்புகளையும் விரிவுபடுத்த வேண்டும்.

3.81 அதிதீவிர இடதுசாரிக்குழுக்கள், அவர்களின் மார்க்சிஸ்ட் எதிர்ப்பு நிலையைத் தீவிரப்படுத்தியுள்ளன; மார்க்சிஸ்ட் எதிர்ப்பு கருத்துப் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றன. தமிழக கேரள எல்லையில் மாவோயிஸ்டு தளங்களை உருவாக்க முயல்வதாக செய்திகள் வெளிவந்துள்ளன. பல்வேறு அமைப்புகளின் பெயரால், 'இடதுசாரி' என்ற போர்வையோடு நடத்தப்படும் மார்க்சிஸ்ட் எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் நாம் எதிர் கொள்ள வேண்டும்.

தோழர்களே!

3.82 தமிழக மக்கள் சந்தித்து வரும் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, இதுகாறும் ஆட்சியாளர்கள் பின்பற்றி வந்துள்ள கொள்கைகள் உதவப்போவதில்லை என்பதை உணர்த்துவதோடு, மாற்றுக் கொள்கை குறித்த பார்வையை மக்கள் மத்தியில் உருவாக்கவும் வேண்டும்.

மார்க்சிஸ்ட் கட்சி முன்வைக்கும் மாற்றுக் கோஷங்களை,

- ✧ **தொழிலாளர்கள், ஊழியர்கள்,**
- ✧ **விவசாயிகள், கிராமப்புற உழைப்பாளிகள்,**
- ✧ **படித்த மத்தியதர வர்க்கப் பகுதியினர்,**
- ✧ **சிறு வியாபாரிகள், சிறுதொழில் உடைமையாளர்கள் ,**
- ✧ **பெண்கள், இளைய தலைமுறையினர், ஒடுக்கப்பட்ட மக்கள், தலித், சிறுபான்மையினர்,**

என பாதிப்புக்குள்ளாகும் அனைத்துப் பிரிவு மக்களிடமும் எடுத்துச் சென்று அவர்களை ஒன்று திரட்டும் பணியை வேகப்படுத்த வேண்டும்; நமது வெகுஜன அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். பழமைவாதக் கருத்துக்கள், மூடநம்பிக்கைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டும்.

3.83 பாதிப்புக்குள்ளாகியுள்ள அனைத்து மக்களுடனும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி களத்தில் இணைந்து நிற்கும் என்பதை அவர்கள் உணரும்படியாக நமது பணிகள் அமைய வேண்டும்.

3.84 பலம் பொருந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் செயல்பாடுகளும், இடதுசாரி ஒற்றுமையையும் கூட்டுப் போராட்டங்களையும் வலுப்படுத்தும்.

3.85 வகுப்புவாதத்தை எதிர்க்கின்ற, மக்கள் நலன்காக்கும் மாற்றுக் கோஷங்களை முன்வைத்துப் போராடுகின்ற ஜனநாயக சக்திகளை இந்த ஒற்றுமை ஊக்குவித்து, உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும்.

3.86 அதற்கான பணிகள் தமிழக அரசியலை அடிப்படை மாற்றங்களை நோக்கி இட்டுச் செல்லும்; புதிய பாதைக்கு வழிகோலும்.

அத்தகைய பணிகளை முன்னெடுத்துச் செல்ல உறுதியேற்போம்!

4. புதுச்சேரி யூனியன் பிரதேச நிலைமை

4.1 தமிழக அரசியலுக்கு இணக்கமாகவே புதுவைப் பிரதேச அரசியல் நிகழ்வுகள் உள்ளன. அதேசமயம் 2006 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு புதுவையில் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக ஆட்சி நடத்தி வந்தது. மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் கொள்கைகளை புதுவையில் செயல்படுத்துகின்ற ஆட்சியாகவே காங்கிரஸ் ஆட்சி அமைந்தது. காங்கிரஸ் ஆட்சியின் மக்கள் விரோதச் செயல்பாடுகளை எதிர்த்தும், உழைக்கும் மக்கள் கோரிக்கைகளை முன்வைத்தும் இயக்கங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டன. திமுக, சிபிஐ போன்ற கட்சிகளோடு கூட்டு இயக்கத்திற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் திமுக, சிபிஐ முன்வரவில்லை. அகில

இந்திய அறைகூவலுக்கேற்ப நடைபெற்ற சில இயக்கங்களில் மட்டும் சிபிஐ நம்மோடு சேர்ந்து நின்றது.

4.2 2006 சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையில் அணி அமைத்துத் தொகுதிகளை பகிர்ந்து கொண்டு திமுக தேர்தலைச் சந்தித்தது. இந்த அணியில் பாமக, சிபிஐயும் சேர்ந்து நின்றன. தமிழகம் போல் திமுகவுடன் தொகுதி உடன்பாடு கண்டு தேர்தலைச் சந்திக்கக் கடைசிவரை முயன்றோம் - திமுக ஆரம்பத்தில் அனுசரணையாகவே இருந்தது; எனினும் உடன்பாடு சாத்தியமாகவில்லை. நாம் தனித்து ஒரு தொகுதியில் (திருபுவனை) போட்டியிட்டோம். கடந்த தேர்தலை விட சிறிது கூடுதல் ஓட்டுக்களை மட்டுமே பெற முடிந்தது.

4.3 தமிழகத்தில் தனிப்பெரும்பான்மையின்றி திமுக தனித்து ஆட்சி அமைத்ததுபோல், புதுவையில் தனிப்பெரும்பான்மை கிடைக்காததால் திமுக, பாமக, சிபிஐ ஆகிய கட்சிகள் மற்றும் 3 சுயேட்சை உறுப்பினர்கள் ஆதரவுடன் காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைத்துள்ளது.

4.4 தேர்தல் வாக்குறுதிகள் சிலவற்றை அமலாக்க காங்கிரஸ் அரசு முயற்சிக்கிறது. அதேசமயம் மத்திய அரசின் தாராளமயக் கொள்கையைப் புதுவையில் அமலாக்கும் அரசாகவே உள்ளது. மக்கள் எதிர்பார்ப்புகளை, ஆக்கப்பூர்வ வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் அரசாக செயல்படுவதில்லை. புதிய தொழில்கள், வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் இல்லை. நலத்திட்டப் பயன்களை வழங்குவதில் கூடப் பாரபட்ச அணுகுமுறையே உள்ளது. விலைவாசி உயர்வு, ரேஷன் குறைபாடுகள், வருமானக்குறைவு ஆகியவற்றால் ஏழை, நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் சரிந்து வருகிறது. கிராம மக்கள் நகரம் நோக்கி இடம் பெயர்வது அதிகரித்துள்ளது. கிராமப்புற வேலை உறுதித் திட்டம் புதுவையில் இல்லை. கொலை, கொள்ளை, வழிப்பறி, பெண்கள் மீதான கொடுமை என சமூக குற்றங்கள், சமூக விரோதச் செயல்கள் பெருகி வருகிறது. இதைத் தடுக்க அரசு உறுதியாக நடவடிக்கை எடுப்பதில்லை. ஆட்சி மீது மக்களிடம் அதிருப்தி உருவாகி வருகிறது.

4.5 தேர்தல் வாக்குறுதிகளைச் செயல்படுத்த வலியுறுத்தியும், ஆட்சியின் தவறான மக்கள் விரோதச் செயல்பாடுகளை எதிர்த்தும், மக்கள் கோரிக்கைகளை முன்வைத்தும் நாம் இயக்கங்கள், போராட்டங்கள் நடத்தி வருகிறோம். உள்ளாட்சிகளுக்கு 38 ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாத நிலையில் தேர்தலை நடத்த வலியுறுத்தி நாம் பல இயக்கங்கள் நடத்தியுள்ளோம்;. உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்தோம். நீதிமன்ற உத்தரவினைத் தொடர்ந்து தேர்தல் நடத்தப்பட்டது. சட்டப் பேரவைத் தேர்தல் போல் காங்கிரஸ், திமுக, பாமக, சிபிஐ அணி தொடர்ந்தது. நாம் சில தொகுதிகளில் போட்டியிட்டு உழவர்கரை நகர சபை மேயர் தேர்தலில் மதிப்புக்குரிய வாக்குகள் பெற்றோம். அதைப்போல 2 நகர கவுன்சில் வார்டுகளிலும், ஒரு பஞ்சாயத்து கவுன்சில் வார்டிலும், ஒரு கிராமத் தலைவர் தேர்தலிலும் இரண்டாவது இடத்தைப் பெற்றோம். அகலக் கால் வைத்திருக்கக் கூடாது.

4.6 ஜிப்மர் மருத்துவமனையைத் தன்னாட்சி மருத்துவ்மனையாக மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்த்துத் தொடர் போராட்டங்கள் நடத்தி வருகிறோம். இலவச மருத்துவ சிகிச்சை தொடர்வது, மாணவர் சேர்க்கையில் புதுவைக்கான இட ஒதுக்கீடு உத்தரவாதம் செய்வது, கல்விக் கட்டணம், ஊழியர்கள் நலன் பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்த வலியுறுத்தி வருகிறோம்

4.7 அனைவருக்கும் 10 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே நிறுத்தப்பட்டது; தற்போது வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு மட்டும் அரிசி வழங்கப்படுகிறது. இதற்கு எதிரான நமது கட்சியின் தலையீடு குறிப்பிடத்தக்கதாகும்.

4.8 நிலம் - குடிமனைப்பட்டாவுக்கான இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, அருந்ததியர் மக்கள் நலன், உள்ளாட்சி நிதி ஒதுக்கீடு, கூடுதல் அதிகாரம், கல்விப் பிரச்சனை, பெண்கள் தொடர்பான பிரச்சனைகள், ஸ்தல மட்டப் பிரச்சனைகளுக்கான இயக்கங்கள் என மக்கள் பிரச்சனைகளில் தொடர்ந்து இயக்கங்கள் நடத்தப்படுகின்றன.

4.9 நமது தொடர் நடவடிக்கையால் குடிமனைப்பட்டா விநியோகம் துவங்கப்பட்டுள்ளது. அருந்ததியர் மக்களுக்கு உள் ஒதுக்கீடு குறித்துப் பரிசீலிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

4.10 மத்திய, மாநிலக்குழுக்களின் அறைகூவல்களையும், புதுவை பிரதேசக்குழு முடிவுகளையும் செயல்படுத்துவதில் முன்னேற்றம் உள்ளது. நாம் நடத்தும் இயக்கங்கள் பத்திரிகை, தொலைக்காட்சியில் இடம் பிடிக்கின்றன. எனினும் சக்தியாக நடைபெறுவதில்லை. அதேசமயம் செயல்படும் கட்சியாக உள்ளோம்.

4.11 ஆதரவுத் தளங்களை விரிவுபடுத்துவதின் மூலம் ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்கும் இயக்கங்களை உருவாக்க முடியும். மக்கள் நம்பிக்கையை மேலும் பெற முடியும்.

4.12 மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, மாநில காங்கிரஸ் அரசு ஆகியவற்றின் தவறான கொள்கைகளையும், மக்கள் விரோதச் செயல்பாடுகளையும் எதிர்த்து வலுவாக போராட வேண்டும். அதிமுகவையும், மதவெறி பாஜகவையும் மக்கள் மத்தியில் தனிமைப்படுத்தும் போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

4.13 கட்சியின் சுயேச்சையான செயல்பாட்டை, மாற்றுக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதோடு, வர்க்க - வெகுஜன அமைப்புகளை பலப்படுத்தும் நடவடிக்கையிலும் கூடுதல் கவனம் வேண்டும். சிபிஐயுடன் கூட்டாகவும் இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும். ஒத்த கருத்துள்ள பிரச்சனைகளில் திமுகவுடனும் கூட்டு இயக்கங்கள் நடத்த முயற்சிக்க வேண்டும்.

4.14 புதுச்சேரியில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 10 ஆகக் குறைந்துள்ள போதிலும் காங்கிரஸ் முதல்பெரும் கட்சியாகவே உள்ளது. திமுக 7 சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளது. செயல்பாடுகள் குறைவே. இயக்கங்கள் அதிகம் நடத்துவதில்லை. அடுத்த நிலையில் அதிமுக உள்ளது. சட்டப்பேரவையில் 3 உறுப்பினர்கள் உள்ளனர். கிராமப்புற செல்வாக்கு உள்ளது. பாமக, காங்கிரசுடன் அணிசேர்ந்து 2 சட்டப்பேரவை உறுப்பினர்களையும், நாடளுமன்றத் தேர்தலில் திமுகவுடன் சேர்ந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் பெற்றது. ஜிப்மர் மருத்துவமனையைத் தன்னாட்சியாக்கக் கூடுதல் வேகத்துடன் செயல்படுகிறது. நமக்கெதிரான பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்துவிடுகிறது. ஸ்தல மட்ட இயக்கங்கள் நடத்துவதில்லை. சிபிஐ காங்கிரசுடன் அணி சேர்ந்து ஒரு சட்டப் பேரவை உறுப்பினரையும், ஒரு நியமன உறுப்பினரையும் பெற்றுச் செயல்படுகிறது. சமீபகாலமாக மக்கள் பிரச்சனைகளில் இயக்கம் நடத்துகின்றனர். காங்கிரசிலிருந்து பிரிந்து கண்ணன் தலைமையில் உருவான புதுவை முன்னேற்ற காங்கிரஸ் சட்டப் பேரவைத் தேர்தலை அதிமுகவுடன் சேர்ந்து சந்தித்தது. 2 சட்டப்பேரவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. தற்போது வெளியிலிருந்து காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவு அளித்து வருகிறது. பாஜக சிறிய சக்தியே. எனினும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு மதவெறி கிளப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. கல்வி நிறுவனம், வழிபாட்டுத் தலம், கோவில் விழா மூலம் விஸ்தரிப்பு முயற்சிகள் எடுத்து வருகிறது. தேமுதிக், விடுதலைச் சிறுத்தைகள், மதிமுக அமைப்புகளும் உள்ள போதிலும், இவற்றின் செயல்பாடுகள் அதிகம் இல்லை.

⌘⌘⌘

5. நடைபெற்ற இயக்கங்கள் - அரசியல் பணிகள்

'கட்சியின் அரசியலையும், கொள்கைகளையும் நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கு விரிவானதொரு பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட வேண்டும். நிலம், உணவு, வேலை வாய்ப்பிற்கான நாடு தழுவிய இயக்கத்தை கட்சி துவக்க வேண்டும். கிராமப்புற மக்கள் பிரச்சனைகள் மீது இயக்கங்கள், போராட்டங்கள் உருவாக்க வேண்டும். சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்டு வரும் மக்கள் பிரிவினரின் தேவைகளுக்காகக் கட்சி போராட வேண்டும். ஸ்தல அளவிலான போராட்டங்களை வளர்த்தெடுக்க வேண்டும். இத்தகைய இயக்கங்கள், போராட்டங்கள் கட்சியின் சுயேச்சையான வலிமையை அதிகரிப்பதற்கு உதவும் - என்று அகில இந்திய 18 வது மாநாடு சுட்டிக் காட்டியது.'

நாகர்கோவிலில் நடைபெற்ற மாநில 18வது மாநாடு "ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களை வலுப்படுத்துவது; வகுப்புவாத சக்திகளின் முயற்சிகளை முறியடித்து மக்கள் ஒற்றுமையைக் காப்பது; சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், தீண்டாமை உள்ளிட்ட சமூகக் கொடுமைகளை வேரறுக்கவும் போராடுவது; மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளை எதிர்ப்பது - மாற்றுக் கொள்கைகளை மக்களிடம் கொண்டுச் செல்வது; மக்கள் விரோத அதிமுக அரசை அகற்றுவதற்கு மக்களைத் திரட்டுவது; இக்கடமைகளை நிறைவேற்ற தனியாகவும், இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளோடு இணைந்தும் போராடுவது" ஆகிய கடமைகளை நிறைவேற்ற நம்மைப் பணித்தது.

மேலும் தமிழகத்தில் கட்சியின் செல்வாக்கை அதிகப்படுத்தும் வகையில் இடதுசாரி ஜனநாயக சக்திகளை வளர்த்து, வர்க்க பலாபலத்தில் நமக்குச் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவது தற்போதைய கடமைகளில் பிரதானமானதாகும் என்றும் மாநில 18வது மாநாடு சுட்டிக் காட்டியது.

மேற்கண்டவற்றை முன்னிறுத்தியும், அவ்வப்போது முன்னுக்கு வந்த பிரச்சனைகளில் மத்தியக்குழுவின் முடிவுகளையும், வழிகாட்டுதல்களையும் மாநில அரசியல் நிகழ்வுகளோடு இணைத்தும் நாம் நமது கடமைகளை கடந்த 3 ஆண்டுகளில் தமிழகத்தில் முன்னெடுத்துச் சென்றுள்ளோம்.

இக்காலத்தில் நாம் நடத்திய இயக்கங்கள், போராட்டங்கள், தலையீடுகள் ஏராளம். அவற்றில் பிரதானமானவற்றை இங்கே முன்வைத்துள்ளோம்; பரிசீலித்துப் படிப்பினை பெறுவோம் - எதிர்கால இலக்குகளைத் தீர்மானிப்போம்!

ஏகாதிபத்திய எதிர்ப்பு

ஏகாதிபத்திய எதிர்ப்பு தினம்

5.1 மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கையை எதிர்த்தும், உலகமயமாக்கல் கொள்கையால் இந்திய மக்களுக்கும் - நாட்டின் இறையாண்மைக்கும் ஏற்படும் பாதிப்புகளை எதிர்த்தும் சுயேச்சையான அயல்துறை கொள்கையை செயல்படுத்தக் கோரியும், ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றிடவும், பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும், கியூபா - வெனிசுலாவுக்கு எதிரான அமெரிக்க சூழ்ச்சியை எதிர்த்தும், ஈரான், வடகொரியா, சிரியா, மீதான தாக்குதல் நோக்கை அம்பலப்படுத்தியும் மத்தியக்குழு அறைகூவலுக்கேற்ப ஜனவரி 2006ல் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் மாவட்டங்களில் பரவலாக நடைபெற்றன. மக்களிடம் விளக்கப் பிரசுரம் எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வியக்கம் சக்தியாக நடைபெறவில்லை.

கியூபா ஆதரவு மாநாடு

5.2 சென்னையில் 3வது ஆசிய - பசிபிக் பிராந்திய கியூபா ஆதரவு மாநாடு ஜனவரி 20,21, 2006ல் நடைபெற்றது. 15க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரநிதிகளும் 150க்கும் மேற்பட்ட இந்திய இடதுசாரி ஜனநாயகப் பிரதிநிதிகளும் பங்கேற்கும் மாநாடாக முதல்நாள் மாநாடு நடைபெற்றது. தோழர் சீத்தாராம் யெச்சூரி துவக்கி வைத்தார். சி.பி.ஐ.எம்., சி.பி.ஐ. முன்னின்று நடத்திய இம்மாநாட்டில் திமுக, காங்கிரஸ், பாமக, மதிமுக, பார்வர்டு பிளாக், ஆர்.எஸ்.பி., தலைவர்களையும், ஆதரவுப் பிரமுகர்களையும் பங்கேற்கச் செய்தோம். ஏகாதிபத்திய எதிர்ப்பு - கியூபா ஆதரவுக் கருத்துக்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்டன.

5.3 ஜனவரி 21 நிறைவு நாள் - பொது நிகழ்ச்சி ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. திறந்தவெளி கலை நிகழ்ச்சிகள் மக்களை ஈர்த்தன. உள்ளரங்க இசை நிகழ்ச்சி சிறப்பு சேர்த்தது. தோழர் பிரகாஷ்காரத், திமுக தலைவர் மு. கருணாநிதி, தோழர் டி. ராஜா, கியூபா நாட்டு பிரதிநிதி, சிபிஐஎம், சிபிஐ மாநில தலைவர்கள் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்றனர். வடசென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளுவர் மாவட்டத் தோழர்கள் நிறைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தோழர் பிரகாஷ் காரத் உரையும், திமுக தலைவர் கவிதை வடிவில் தனது ஆதரவை கியூபாவுக்குத் தெரிவித்ததும் அனைவரையும் ஈர்த்தது. எழுச்சியாய் நடைபெற்ற மாநாட்டுச் செய்திகள் பத்திரிகை - தொலைக்காட்சிகளில் இடம் பெற்றதால் ஓரளவு மக்களிடம் சென்றன.

ஜார்ஜ் புஷ் இந்திய வருகை எதிர்ப்பு இயக்கம்

5.4 உலக அமைதிக்கும், வளரும் நாடுகளின் சுயாதிபத்தியத்திற்கும் அச்சுறுத்தலாகச் செயல்படும் ஏகாதிபத்திய அமெரிக்காவின் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்னும் இடதுசாரி கட்சிகளின் முடிவை தமிழகத்தில் எடுத்து செல்லும் வகையில் மார்ச் 2, 2006 அன்று மாவட்டத் தலைநகர் மற்றும் முக்கிய மையங்களில் "அமெரிக்க புஷ்ஷே இந்திய மண்ணை விட்டு வெளியேறு" எனக் கண்டனப் பேரணிகளும்; ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. வர்க்க, வெகுஜன அமைப்புகளையும் உள்ளடக்கி 'புஷ் வருகை எதிர்ப்புக்குழு' மேடை அமைத்து செயல்பட்டதால் இவ்வியக்கம் சக்தியாக, மக்கள் பங்கேற்புடன், நடைபெற்றது. சிபிஐஎம், சிபிஐ மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் மாநிலத் தலைவர்கள் பங்கேற்ற சென்னை கண்டனப் பேரணி எழுச்சியாய் அமைந்தது.

பாலஸ்தீன மக்களுக்கு நிதியுதவி

5.5 பாலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் (பிப்.2006) வெற்றிபெற்று அமைக்கப்பட்ட ஹமாஸ் இயக்கத்தின் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்குடன் இஸ்ரேலும், அமெரிக்காவும் பாலஸ்தீன நிர்வாகத்திற்குச் சேர வேண்டிய மாதாந்திர வரி மற்றும் கலால் வருவாயை (சுமார் 5 கோடி டாலார்) நிறுத்தி வைப்பது, சர்வதேச உதவிகளைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் பாலஸ்தீன மக்கள் வாழ்க்கைக்குக் கடும் நெருக்கடி ஏற்பட்டது. பள்ளிகள், மருத்துவமனைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டது. சுகாதாரம், வடிகால் வசதிகள் சிதைந்தன. அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. இந்திய அரசு பாலஸ்தீனிய மக்களுக்கு உதவவோ, இஸ்ரேல் - அமெரிக்காவைக் கண்டிக்கவோ முன்வரவில்லை.

5.6 இந்நிலையில் தாயகம் காக்கப் போரிடும் பாலஸ்தீனிய மக்களுக்கு நிதி திரட்டி அனுப்பும் கட்சியின் மத்தியக்குழு முடிவினைத் தொடர்ந்து, உடனடியாகக் கட்சி அணிகளிடம் நிதி வசூல் செய்து ரூ. 2,10,262 மத்தியக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. தீக்கதிரில் வெளிவந்த நிதி வேண்டுகோளைப் பார்த்து சில இஸ்லாமிய, கிறித்துவ நண்பர்கள் நேரடியாக மாநில மையத்திற்குப் பணம் அனுப்பியது சிறப்புக்குரியதாகும்.

நிமிட்ஸ் போர்க்கப்பல் வருகை எதிர்ப்பு இயக்கம்

5.7 ஈராக்கில் பல்லாயிரம் மக்களைக் கொன்று குவிக்கப் பயன்படுத்தப்பட்ட அமெரிக்க அணுஆயுத விமானந்தாங்கிப் போர்க்கப்பலை சென்னை துறைமுகத்தில் நிறுத்தவும், அமெரிக்க ராணுவத்தினர் ஓய்வெடுக்கவும் மத்திய அரசு அனுமதித்தது. இதைக் கண்டித்தும், நிமிட்ஸ்

கப்பலை இந்தியக் கடல் எல்லைக்குள் அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தியும் சிபிஐஎம் - சிபிஐ சார்பில் சென்னைத் துறைமுக வாயிலில் சுமார் 2000 பேர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மத்திய தர அரங்கில் பணிபுரியும் ஊழியர் அமைப்புகளின் சார்பிலும் நிமிட்ஸ் கப்பல் வருகை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டங்களிலும் கண்டன இயக்கங்கள் நடந்துள்ளன.

இந்திய அமெரிக்கக் கடற்படைக் கூட்டுப் பயிற்சி எதிர்ப்பும் – அணுசக்தி ஒப்பந்த எதிர்ப்பும்

5.8 அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் இந்தியக் கப்பற்படையும் இணைந்து கூட்டு ராணுவப் பயிற்சி விசாகப்பட்டினம் கடற்கரையில் 2007 பிப். 5 துவங்கி 9 வரை நடைபெற்றது. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தப் பிரச்சனையும் இக்காலத்தில் முன்வந்தது. இந்தியாவை அமெரிக்கக் கூட்டாளியாக மாற்ற முனையும் நடவடிக்கையின் பகுதியாக நடைபெற்றக் கடற்படைக் கூட்டுப் பயிற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், மக்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைக் கிளறிவிடும் வகையிலும் செப். 4 முதல் 8 வரை கொல்கத்தா - சென்னை ஆகிய இரு முனைகளிலிருந்து விசாகப்பட்டினம் நோக்கிப் பிரச்சாரப் பயணம் நடத்திட இடதுசாரி கட்சிகள் முடிவு செய்தன. செப்டம்பர் 4, 2007 அன்று பிரச்சாரப் பயணக்குழுவின் தொடக்க நாள் பொதுக்கூட்டம் சுமார் 3000 பேர் பங்கேற்புடன் சென்னையில் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை வடசென்னை - தென்சென்னை மாவட்டக்குழுக்கள் செய்தன; எனினும் திரட்டுதல் சக்திக்கேற்ப அமையவில்லை. தோழர்கள் பிரகாஷ்காரத், டி. ராஜா, தேவவிரதபிஸ்வாஸ், அபானிராய் மற்றும் மாநிலத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர். மாவட்டங்களிலும் கண்டன இயக்கங்கள், கூட்டங்கள் நடைபெற்றன.

5.9 தோழர் பிரகாஷ்காரத் தலைமையிலான பிரச்சாரப் பயணக்குழு செப்டம்பர் 5 அன்று காலை சென்னைத் துறைமுகம் வாயிலில் உள்ள வ.உ.சி. சிதம்பரனார் சிலை முன்பிருந்து ரெட்ஹில்ஸ், கும்மிடிப்பூண்டி வழியாக விசாகப்பட்டினம் நோக்கிச் சென்றது. துறைமுக வாயிலில் நடைபெற்ற துவக்க நிகழ்ச்சியும், கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற வரவேற்புப் பொதுக்கூட்ட நிகழ்ச்சியும் எழுச்சிகரமாய் அமைந்தன. வழிநெடுகிலும் பிரச்சாரப் பயணக்குழு மக்கள் வரவேற்பைப் பெற்றது.

5.10 செப்டம்பர் 8 சென்னை - கொல்கத்தா பிரச்சாரப் பயணக்குழுக்கள் இணைந்து விசாகையில் நடத்திய ஆர்ப்பாட்ட தினத்தில் தீக்கதிர் நாளிதழ் சிறப்புக் கட்டுரைகளைத் தாங்கி வெளியிடப்பட்டது. கூடுதலாக 93,000 பிரதிகள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன.

5.11 முன்னதாக அணுசக்தி ஒப்பந்த பாதிப்புகள் மற்றும் கட்சியின் நிலைபாடு குறித்து மாநிலக்குழு துவங்கி கட்சி அணிகள் வரை ரிப்போர்ட் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆகஸ்ட் 9-15 ஒரு வார காலம் கட்சியின் சுயேச்சையான இயக்கமாக 1000 தெருமுனைக் கூட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டு பரவலாகக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. 1,25,000 பிரதிகள் 'சிறுபிரசுரம்' மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. வர்க்க, வெகுஜன அரங்கங்கள் சார்பில் சில மையங்களில் கருத்தரங்கமும் நடைபெற்றது. இவ்வியக்கங்களின் மூலம் மதச்சார்பற்ற, ஜனநாயக இயக்கங்களுக்கு அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்திட அறைகூவல் விடுக்கப்பட்டது. கூடுதலான கட்சித் தோழர்கள் பங்கேற்ற உணர்வுப்பூர்வமான இயக்கமாக இவ்வியக்கம் நடைபெற்றது. தமிழக மக்களில் ஒரு பகுதியினரிடம் நமது நிலை குறித்த புரிதலையும் ஏற்படுத்த உதவியது. பாஜக, அஇஅதிமுக ஆகிய கட்சிகளின் தவறான சந்தர்ப்பவாத நிலையை அம்பலப்படுத்தவும் இவ்வியக்கம் பயனளித்தது.

5.12 இக்காலத்தில் முன்னுக்கு வந்த பிரச்சனைகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை, சுயேச்சையாகவும், கூட்டாகவும் மக்களிடம் எடுத்துச் சென்றுள்ளோம். ஏகாதிபத்திய ஆதரவு சக்திகளை ஓரளவு அம்பலப்படுத்தியுள்ளோம். ஏகாதிபத்திய எதிர்ப்பில் தோழர்கள் பங்கேற்பு அதிகரிக்க வேண்டும். நமது ஆதரவு சக்திகளையும், உலகமய எதிர்ப்பு - யுத்த எதிர்ப்பு - ஏகாதிபத்திய எதிர்ப்பு - சக்திகளையும் ஒருங்கிணைத்து விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு மேடையை உருவாக்கிச் செயல்படுவது, இந்த எதிர்ப்பு இயக்கத்தை மேலும் வலுப்படுத்த உதவும்.

வகுப்புவாத எதிர்ப்பு

5.13 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வியுற்று மத்திய அரசிலிருந்து தூக்கி எறியப்பட்டது இந்துத்துவா மதவெறி சக்திகளுக்கு ஒரு பின்னடைவுதான். ஆனால், கடந்த 15 ஆண்டுகளில் பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வளர்ச்சியும் அதன் ஆறாண்டுக் கால ஆட்சியும், மதவெறித்

தத்துவங்களும், அமைப்புகளும், சமூகத்தின் பல்வேறு பகுதிகளில் வேரூன்ற வாய்ப்பளித்துள்ளது. இவர்களின் உண்மையான பலத்தை குறைத்து மதிப்பிடுவது தவறானமுடிவாகிவிடும் என்று 18வது கட்சிக் காங்கிரஸ் நம்மை எச்சரித்தது.

5.14 இதற்கேற்ப இக்காலத்தில் வகுப்புவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை, பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்றோமா?, எனில் போதுமான அளவுக்கு இல்லை என்றே சொல்லலாம்.

5.15 சேது சமுத்திரத் திட்டத்தை உறுதியாக நிறைவேற்றக் கோரியும், மதவெறிப் பிரச்சாரத்தை எதிர்த்தும் தி.மு.க., சி.பி.ஐ.எம். உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் சார்பில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. உச்சநீதிமன்றத் தலையீட்டைத் தொடர்ந்து அக்டோபர் 1 அன்று முழு அடைப்புக்கு பதிலாக உண்ணாவிரதப் போராட்டமாக அறிவிக்கப்பட்டது. எனினும் இப்போராட்டம் தமிழகம் முழுவதும் வெற்றிகரமாகவும், உணர்வுபூர்வமாகவும் முழுஅடைப்பாகவே மாறியது. இவ்வியக்கத்திற்கு நமது முன்முயற்சியே பிரதான காரணமாகும்.

5.16 வாலிபர் சங்கம் சார்பில் 2007 அக்டோபர் 8 - 10 வரை தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, சிவகங்கை என நான்கு முனைகளிலிருந்து சைக்கிள் பிரச்சாரம் செய்து ராமேஸ்வரத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக்கோரியும், மதவெறியை எதிர்த்தும் சக்தியாகப் பொதுக்கூட்டம் நடந்தது. சரியான நேரத்தில் இவ்வியக்கம் நடந்தது சிறப்பானதாகும்.

5.17 சேது சமுத்திரத் திட்டப் பணிகள் பாதிக்குமேல் நடந்துள்ள நிலையில் ராமர் பாலம் இடிக்கப்படுவதாக நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து மத ரீதியான திரட்டலில் தற்போது பா.ஜ.க. இறங்கியுள்ளது. தமிழகத்தில் அதிமுகவும் - பா.ஜ.க. நிலைபாட்டிற்கு அனுசரணையாகவே உள்ளது. இதை எதிர்கொள்ளும் வகையில் வலுவான பிரச்சாரத்தைக் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் சார்பில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

5.18 ஆகஸ்ட் 1, 2006 அன்று நடந்த மும்பை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மதுரை, கோவை ஆகிய நகரங்களில் பதட்டம் ஏற்பட்டது. குண்டு வைத்துள்ளதாக வாலிபர்கள் சிலர் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள் இஸ்லாமிய இளைஞர்களை அணிதிரட்டுவது தொடர்கிறது. இச்சூழலில் மதச்சார்பின்மை, மத நல்லிணக்கத்தை முன்னிறுத்தி இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகளில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்க மாவட்டக்குழுக்களுக்கு வழிகாட்டப்பட்டது. மாதிரி துண்டு பிரசுரம் தீக்கதிரில் வெளியிடப்பட்டது. இதில் மாவட்டக்குழுக்கள் ஈடுபாடு போதாது.

5.19 தென்காசியில் இந்து - முஸ்லிம் மக்களுக்கிடையே பல மாதங்களாக நீடித்த மோதலில் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நடைபெற்றது. படுகொலை செய்த சமூக விரோதிகளைக் கண்டித்தும் அமைதியை வலியுறுத்தியும் நெல்லை மாவட்டக்குழு நடவடிக்கைகள் எடுத்தது. சமூக நல்லிணக்கக் குழு உருவாக்கி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. மக்கள் ஒற்றுமையை வலியுறுத்தி மனிதச் சங்கிலி இயக்கம் நடத்தியது நல்ல முன்முயற்சியாகும்.

5.20 நாகை, தரங்கம்பாடி வட்டத்தில் இலுப்பூர், சங்கரம்பந்தல் கிராமப் பகுதியில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தின் போது மூன்று இஸ்லாமியர் கடைகள் தகர்க்கப்பட்டன. திமுக, அதிமுக போன்ற பிரதானக் கட்சிகள் தலையிடாத நிலையில் நமது கட்சி தலையிட்டு இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி தீர்வுகாணப்பட்டது. மோதல் தவிர்க்கப்பட்டு 1200 பேர் பங்கேற்ற நல்லிணக்கப் பேரணி நடைபெற்றது. இந்த நிகழ்வு இஸ்லாமிய மக்களிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, இலுப்பூரிலிருந்து 75 குடும்பங்களும், ஆயிப்பாடி கிராமத்திலிருந்து 30 குடும்பங்களும் தங்களை கட்சியின் இணைத்துக் கொள்ள முன்வந்தனர்.

5.21 கிராமங்களிலும், நகரங்களிலும், ஸ்தல அளவில் உள்ளூர் சமூகத்தை வகுப்புமயமாக்குவதுதான் பா.ஜ.க. - மதவெறி சக்திகளின் பிரதான நடவடிக்கையாக உள்ளது என்பதை ஏற்கனவே நாம் நடத்திய கோவை பட்டறை அனுபவம் உணர்த்தியது. மாவட்ட அளவில் ஸ்தூலமாக விவாதித்து முடிவெடுத்து, தொடர்ச்சியான பிரச்சாரத்தையும், மாற்றுக் கலாச்சார நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

5.22 பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் மதவெறி நடவடிக்கைகளையும், சிறுபான்மை மதவெறியையும் மத உணர்வுகளைத் தவறாகப் பயன்படுத்த முனைவதையும் நாம் தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டும். மதச்சார்பற்ற, மதநல்லிணக்கம் விரும்பும் சக்திகளைத் தொடர்ந்து ஒருங்கிணைக்க முயல வேண்டும்.

அஇஅதிமுக அரசுக்கு எதிராக...

5.23 கட்சியின் 18வது மாநில மாநாடு, மக்கள் விரோத, ஜனநாயக விரோத அடக்குமுறை அதிமுக அரசை வரும் தேர்தலில் தூக்கியெறிவது, கிளர்ச்சிப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வது என்று தீர்மானித்தது. இதற்கேற்ப நமது பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

5.24 அதிமுக அரசுக்கு எதிரான போராட்டத்தின் பகுதியாக காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் நாம் போட்டியிடாத நிலையில் திமுகவை ஆதரித்து தேர்தல் பிரச்சாரத்தை நமது மேடையிலிருந்து எடுத்துச் சென்றோம்.

5.25 உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி உள்ளிட்ட தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 4 ஊராட்சிகளில் தேர்தல் நடத்த அதிமுக அரசை வலியுறுத்தியும் மே 18 அன்று கட்சியின் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்ற உண்ணாவிரதப் போராட்டம் சென்னையில் நடைபெற்றது.

5.26 2005 மே 24 அன்று, 9 ஆண்டுகளாகியும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளில் தலைவர்களுக்கான தேர்தல் நடத்தி தலித் பிரதிநிதிகள் செயல்படுவதை உறுதிப்படுத்த வற்புறுத்தியும், தலித் மக்களை அச்சுறுத்தும் ஆதிக்க சக்திகள் மீது நடவடிக்கை கோரியும், தமிழகமெங்கும் சுமார் 500 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சி அடிப்படையில் ஒதுக்கீட்டு நடைமுறையை மேற்கண்ட பஞ்சாயத்துகளில் செயல்படுத்தக் கூடாது; அவ்வாறு சுழற்சிமுறை அனுமதிக்கப்பட்டால் தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதையும், செயல்படுவதையும் ஆதிக்க சக்திகள் தடுக்கும் போக்கு தமிழகம் முழுவதும் பரவும் அபாயம் ஏற்படும் என்பதையும் இவ்வியக்கத்தில் முன்னெடுத்துச் சென்றோம். இவ்வியக்கம் சக்தியாக நடைபெற்றது. தலித் மக்களிடம் நமது செல்வாக்கை உயர்த்தியது.

5.27 அதிமுக ஆட்சியில் வேலைநீக்கம் செய்யப்பட்ட சாலைப்பணியாளர்களுக்கு வேலையளிக்கக் கோரி மாவட்டத் தலைநகர்களில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாமும் இதில் பங்கேற்றோம்.

5.28 சிவகங்கை மாவட்டம் கண்டதேவி கிராமத்தில் தேரோட்டத்தில் 1999ல் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தும் தலித் மக்கள் தேர்வடம் பிடிக்க அனுமதிக்கப்படாத நிலையில் நீதிமன்றத் தீர்ப்பை செயல்படுத்த வலியுறுத்திக் கட்சி சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தோம். சிவகங்கை மாவட்டத்தில் மக்களைத் திரட்டி இயக்கங்கள் நடத்தினோம். இதனைத் தொடர்ந்து 'தலித் மக்கள் தேர்வடம் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்' என்று நாம் தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. எனினும் மாவட்ட நிர்வாகம் தலித் மக்களை அச்சுறுத்தியது; கிராம மக்கள் பலரைக் கைது செய்து. 26 தலித் பிரதிநிதிகளை மட்டுமே தேர்வடம் பிடிக்க வைத்துத் தேரோட்டம் நடத்தியது. இதனைத் தொடர்ந்து சிபிஐஎம் - சிபிஐ சார்பில் ஸ்தலத்தில் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது; கட்சி மரியாதை உயர்ந்தது. கட்சியின் சிவகங்கை மாவட்ட முயற்சி குறிப்பிடத்தக்கதாய் இருந்தது.

5.29 காஞ்சி மாவட்டம் கொளத்தூரில் நஞ்சை நிலத்தில் இறால் பண்ணை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்கள் போராடினர். சென்னை உயர்நீதிமன்ற ஆட்சேபணையை நிராகரித்தும், மக்கள் எதிர்ப்பை மீறியும் மாவட்ட ஆட்சித் தலைவர் பண்ணை அமைக்க அனுமதித்ததை எதிர்த்து கிராம மக்களுடன் நாமும் இணைந்து சாலை மறியல் சக்தியாய் நடைபெற்றது. காவல்துறை மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியது. தோழர் கே.பி., பெ.சண்முகம், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் இ.சங்கர் மற்றும் நூற்றுக்கணக்கில் கிராம மக்கள் கைது செய்யப்பட்டனர். இதனைக் கண்டித்து தமிழகமெங்கும் கண்டன இயக்கம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து விவசாய இயக்கம் சார்பில் இறால் பண்ணை ஒழிப்பு, சுனாமி நிவாரணம், கடலோர மக்கள் வாழ்வுரிமைப் பாதுகாப்பு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துக் கடலோர மாவட்டங்களில் பிரச்சாரமும் ஜூலை 2005ல் நாகையில் சிறப்பு மாநாடும் நடத்தப்பட்டது.

5.30 பசுந்தேயிலைக்குக் கட்டுப்படியான விலை கேட்டு உதகையில் சிறப்பு மாநாடு, சென்னைக் கோட்டை முன்பு ஆர்ப்பாட்டம், நலவாரியத்தை செயல்படுத்த வற்புறுத்தி விவசாயத் தொழிலாளர்கள் சென்னையில் மறியல், பணி நிரந்தரம் கோரி பஞ்சாலைத் தொழிலாளர்கள் மறியல், உயர்நீதிமன்ற உத்தரவால் 500க்கும் மேற்பட்ட சாயப்பட்டறை மூடப்பட்டு பல்லாயிரம் தொழிலாளிகளுக்கும், சிறு உற்பத்தியாளர்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பை எதிர்த்தும் - கழிவு நீர் சுத்திகரிப்புத் தொட்டிகள் அமைக்கும் பொறுப்பை மத்திய - மாநில அரசுகள் ஏற்க வற்புறுத்தியும் நாம் முன்னின்று அனைத்துக் கட்சிகளையும் இணைத்து திருப்பூரில் முழுஅடைப்புப் போராட்டம், நடுவர் மன்றத் தீர்ப்பின்படி காவிரியில் தண்ணீர் திறந்துவிடக் கோரிய இயக்கம் மற்றும் ஸ்தல மட்ட இயக்கங்கள் பரவலாக இக்காலத்தில் நடத்தப்பட்டன. அதிமுக அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து, வர்க்க - வெகுஜன அமைப்புகளின் சார்பிலும் இயக்கங்கள், போராட்டங்கள் நடைபெற்றன. திமுக, சிபிஐயுடன் இணைந்தும் சில இயக்கங்கள் நடைபெற்றன.

5.31 இத்தகு நிலையில் ஜூலை 2005ல் நடைபெற்ற நமது மாநிலக்குழு கீழ்க்கண்டபடி அதிமுக அரசு குறித்து நமது அணுகுமுறையைத் தீர்மானித்தது:

> *''நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு அதிமுக அரசு இழந்த செல்வாக்கையும், மக்கள் நம்பிக்கையையும் மீண்டும் பெறும் நோக்குடன் ஒன்றன் பின் ஒன்றாக பல்வேறு சலுகை அறிவிப்புகளைச் செய்தது. மக்கள் விரோத நடவடிக்கைகள் பலவற்றை திரும்பப்பெற்றது. இந்த நடவடிக்கைகள் அதிமுக மீதான அதிருப்தியை, கோபத்தை சற்று தணித்துள்ளது. ஒரு பகுதி வாக்காளர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. காஞ்சி, கும்மிடிப்பூண்டி சட்டப்பேரவை இடைத் தேர்தல் வெற்றிக்கும் உதவியுள்ளது. எனினும், வாழ்க்கை நெருக்கடி கிராமப்புற நகர்ப்புற உழைப்பாளி மக்களையும், நடுத்தர பகுதியினரையும் போராட்ட களம் நோக்கி தள்ளுவதால் அதிமுக மீதான அதிருப்தி, எதிர்ப்புணர்வை அதிகரிக்கவே செய்யும். சலுகை அறிவிப்புகள் அதிமுகவிற்கு சாதகமான பெரும் மாற்றத்தை அரசியலாக ஏற்படுத்துமென கருத இயலாது''*

5.32 சுயேச்சையான இயக்கங்களை வலுப்படுத்துவது; அரசியல் பணிகளைத் தாக்குதல் நிலையிலிருந்து முன்னெடுத்துச் செல்வது; திமுகவுடன் ஒத்தக் கருத்துள்ள மக்கள் பிரச்சனைகளில் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது; திமுகவின் மேலாதிக்க அணுகுமுறைய்ை சந்தித்துக் கொண்டே தவறான கொள்கைகளை விமர்சிப்பது; காங்கிரஸ் மற்றும் மத்திய அரசின் செயல்பாடுகளை நமது கொள்கை நிலையிலிருந்து விமர்சிப்பது; இயக்கங்கள் நடத்துவது; என்று நமது அணுகுமுறையைத் தீர்மானித்தோம். இதற்கேற்ப நமது தொடர் நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டோம். உடனடிக் கடமையாக நிலம், வேலை, உணவு கோரிக்கைகளோடு மாநில அளவிலான மக்கள் பிரச்சனைகளையும் இணைத்து ஆகஸ்டில் விரிவான பிரச்சாரம் செய்வதெனவும், செப்டம்பரில் லட்சம் பேரைத் திரட்டி மறியல் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆகஸ்ட் - செப்டம்பர் 2005 இயக்கம்

5.33 நிலம், உணவு, வேலை ஆகிய அடிப்படை வர்க்கக் கோரிக்கை முழக்கங்களுடன் விவசாயப் பிரச்சனைகள், கல்வி, வேலையின்மை, குடிநீர், சுகாதாரம், பொது விநியோகச் சிதைவுகள், ஜனநாயக இயக்கங்களுக்கு அனுமதி மறுப்பு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு குறைந்தபட்சப் பொதுசெயல் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த வற்புறுத்துவது போன்றவை இப்பிரச்சார இயக்கத்தில் முன்வைக்கப்பட்டன. கிராமப்புறங்களை மையமாகக் கொண்டும், நமக்குத் தொடர்பில்லாத புதிய கிராமங்களிலும் இந்தப் பிரச்சாரத்தைக் கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டது.

5.34 மாவட்டக்குழுக்கள் இப்பிரச்சார இயக்கத்திற்கு விரிவாக திட்டமிட்டன. 1290 பிரச்சாரக்குழுக்கள், 29,982 பேர் (இதில் பெண்கள் 2367 பேர்) சுமார் 18,000 கி.மீ, 16 லட்சத்து 24 ஆயிரம் துண்டுபிரசுரம், 31 ஆயிரம் சுவரொட்டிகள், 3 லட்சத்து 8 ஆயிரம் சிறு பிரசுரங்கள் விற்பனை (1. அதிமுக அரசின் தேர்தல் கால வேடங்கள், 2. மத்திய, அரசிடம் மக்களின் எதிர்பார்ப்புகள்) தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், சுவரெழுத்துக்கள், விளம்பரத் தட்டிகள் என இவ்வியக்கம் வெற்றிகரமாய் நடைபெற்றது.

5.35 இதனைத் தொடர்ந்து செப்டம்பரில் நடைபெற்ற மறியல் போரில் 404 மையங்களில் 94604 (பெண்கள் 32125) பேர் கைது செய்யப்பட்டனர். மறியல் பிரச்சாரத்திற்காக மேலும் 5 லட்சம் துண்டுப் பிரசரமும், 40 ஆயிரம் சுவரொட்டிகளும் மாவட்டங்களில் வெளியிட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கட்சியின் மாநில, மாவட்டத் தலைவர்கள் இவ்வியக்கத்தில் முழுமையாக பங்கேற்றுச் செயல்பட்டனர்.

5.36 'நிலம், வேலை, உணவுக்கான இயக்கம் மக்களைக் கவருமா?', எனும் தயக்கத்துடனேயே சில மாவட்டக்குழுக்கள் துவக்கத்தில் செயல்பட்டன. பின்னர் செயலாக்கத்தில் உற்சாகம் ஏற்பட்டது. பொதுமக்களிடம் நல்ல வரவேற்பையும், கட்சிக்கு செல்வாக்கையும், கட்சி அணிகளிடம் உற்சாகத்தையும் இவ்வியக்கம் ஏற்படுத்தியது. புதிய கிராமங்கள் தொடர்பும் ஏற்பட்டன. மறியல் பங்கேற்பில் கோவை மேற்கு 1756, குமரி 2475, திருவள்ளூர் 599, புதுக்கோட்டை 786, விருதுநகர் 916 என்பது மாவட்ட சக்திக்குக் குறைவானதாக இருந்தது.

5.37 தொழிற்சங்கங்கள் சார்பில் செப்டம்பர் 29, 2005 அன்று நடைபெற்ற அகில இந்தியப் பொதுவேலை நிறுத்தம் தமிழகத்திலும் சக்தியாக நடைபெற்றது. பயிர்க்கடன் ரத்து, புதிய கடன் வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அக்டோபர் 26-இல் விவசாயிகள் ஆர்ப்பாட்டம், பெண்களுக்கு 33 சத இடஒதுக்கீட்டை வலியுறுத்தி நவம்பர் 21ல் ஆர்ப்பாட்டம், மின்சாரத்துறையில் உள்ள 22,000 ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யக் கோரி வேலை நிறுத்தம் ஆகியவையும் நடைபெற்றன.

5.38 ஏழை எளிய மக்களுக்கு இலவச குடிமனைப்பட்டா மற்றும் ஸ்தல மட்டக் கோரிக்கைகளுக்கான இயக்கமும் மாவட்டங்களில் பரவலாக இக்காலத்தில் நடைபெற்றுள்ளன. புதுக்கோட்டையில் மனைப்பட்டா இல்லாத குடியிருப்புப் பகுதிகள் அகற்றப்படுவதை எதிர்த்துத் தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டு, செப்டம்பர் 2005-ல் சுமார் 5000 பேர் பங்கேற்ற குடியிருப்போர் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது.

5.39 தமிழகத்தில் 2005-ஆம் ஆண்டில் மழை, வெள்ளம், புயலால் பல லட்சம் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் கட்சி களம் இறங்கி மக்களுக்கு உதவி, நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. சென்னை வியாசர்பாடியிலும், எம்.ஜி.ஆர். நகரிலும் நிவாரணம் பெறச் சென்றவர்கள் பலர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். இதனைக் கண்டித்து மக்களைத் திரட்டி கட்சி போராடியது. தமிழக அரசிடம் ரூ. 2 லட்சம் நிதி வழங்கினோம். கூடுதலாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 10 லட்சம், கடலூர், நாகை உள்ளிட்ட மாவட்டக்குழுக்கள் மூலம் உதவிகள் செய்தோம். பல மையங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு உதவிகள் செய்யப்பட்டன.

5.40 வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு, புணர்நிர்மானப் பணிகளை வலியுறுத்தியும் அதிமுக அரசின் தவறான அணுகுமுறையை எதிர்த்தும் சிபிஎம் - சிபிஐ சார்பில் தமிழகம் தழுவிய மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

5.41 இந்நிலையில், அதிமுக அரசை எதிர்த்து மக்களைத் தயார்படுத்தும் இயக்கத்தை நடத்துவது என்று திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் சார்பில் முடிவெடுக்கப்பட்டு மாவட்டங்களில் பிரச்சாரத்திற்குத் திட்டமிடப்பட்டது. சட்டப்பேரவைத் தேர்தல் வரை கூட்டணியாக இவ்வியக்கத்தைத் தொடர்வது என்றும் திமுக தரப்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக நமக்குத் தகவல் கிடைத்தன. ஜனவரி 18 முதல் ஒருவார காலம் மட்டுமே பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக இப்பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்ல நாம் நமது அணிகளுக்கு வழிகாட்டினோம். திமுக தலைமையின் கவனத்திற்கும் கொண்டு சென்றோம். இதன் மூலம் திமுக தலைமையில் அனைத்துக் கட்சி சார்பில் கூட்டணியாகத் தேர்தல் வரை நீட்டிக்கும் திட்டத்தைப் பின்னுக்கு தள்ளினோம்.

5.42 இக்காலத்தில் மக்கள் விரோத அதிமுக அரசுக்கு எதிராக சுயேச்சையாக நாம் பல இயக்கங்களை நடத்தியுள்ளோம். தி.மு.க. உள்ளிட்ட இதர ஜனநாயக சக்திகளோடு கூட்டாகவும் சில இயக்கங்கள் நடந்துள்ளன. எனினும், ஒத்த கருத்துள்ள மக்கள் பிரச்சனைகளில் இன்னும் வலுவாக மக்களைத் திரட்டி கூட்டு இயக்கங்கள் நடத்தியிருக்க வேண்டும்.

மதுரையில் அரசியல் சிறப்பு மாநாடு

5.43 2006 சட்டப் பேரவைத் தேர்தல் குறித்தும், தேர்தலுக்குப் பின் அமையும் புதிய அரசு குறித்தும் பிப்ரவரி 6-7, 2006ல் நடைபெற்ற மாநிலக்குழு நமது நிலைபாட்டை வரையறை செய்தது. பிப். 18 அன்று மாநில அரசியல் சிறப்பு மாநாடு மதுரை தமுக்கம் அரங்கில் நடைபெற்றது. "தமிழக மக்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்" எனும் தலைப்பில் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மாநாட்டிற்குப் பின் பரவலாக மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. அன்று மாலை 10,000க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்புடன் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. மக்கள் விரோத அதிமுக அரசை தூக்கியெறிவதோடு, தமிழகத்தில் அமையவிருக்கும் புதிய அரசு கவனிக்க வேண்டிய மக்கள் பிரச்சனைகளையும் இம்மாநாடு முன்வைத்தது. தமிழக மக்கள் கவனத்தையும் திமுக உள்ளிட்ட நட்புக் கட்சிகள் கவனத்தையும் ஈர்த்தது. சிபிஐ சார்பில் மாநிலச் செயலாளர் பொதுநிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். இம்மாநாட்டினைத் தொடர்ந்து சட்டப் பேரவைத் தேர்தல் களம் நோக்கி நமது பணிகள் அமைந்தன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2006

5.44 சட்டப்பேரவைத் தேர்தலில், மக்கள் விரோத, ஜனநாயக விரோத அதிமுக ஆட்சியை அகற்றுவது. இடதுசாரிகள் பலத்தை குறிப்பாக சி.பி.ஐ.எம். சட்டப்பேரவை பலத்தை அதிகரிப்பது. ஆகிய கடமைகளை முன்நிறுத்தினோம். திமுகவுடன் தொகுதி உடன்பாடு கொண்டு திமுக கூட்டணிக் கட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது எனத் தீர்மானித்தோம். தேர்தல் முடிவுகள் தேசிய முக்கியத்துவம் பெறும் என்பதையும் கணக்கிலெடுத்துத் தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

5.45 மார்ச் மாதம் திருச்சியில் திமுக சிறப்பு மாநாடு நடத்தியது. நமது கட்சியின் மாநிலச் செயலாளர் மாநாட்டில் பங்கேற்று நிகழ்த்திய உரையில் நமது அரசியல் பிரகடனமும் மக்கள் பிரச்சனைகளும் முன்னிறுத்தப்பட்டன. பின்னர் இவற்றில் சில அம்சங்கள் திமுக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றன.

தொகுதி உடன்பாடு

5.46 திமுக தலைமையிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னதாக சி.பி.ஐ.க்கும், நமக்கும் ஒரு குறிப்பிட்ட தொகுதியைப் பெறுவதில் முரண்பாடு வரக் கூடாது என்பதற்காகக் கலந்து பேசி இணக்கம் காணப்பட்டது. அதே சமயம் கட்சி பலத்திற்கும், செல்வாக்கிற்கும் ஏற்ப திமுக தலைமையிடம் இரு கட்சிகளும் தனித்தனியே பேசித் தொகுதிகளைப் பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. திமுகவிடம் கூடுதல் தொகுதிகளை கேட்டுப் பெற வேண்டுமென அரசியல் தலைமைக்குழு நம்மைப் பணித்தது.

5.47 தொகுதிப் பகிர்வில் காங்கிரஸ், பா.ம.க.விடம் தாராளமாக நடந்து கொண்ட திமுக, இடதுசாரிக் கட்சிகளிடம் கடினமாகவே நடந்து கொண்டது. 10 தொகுதிகள் பெற்று சி.பி.ஐ. தனது உடன்பாட்டை அவசரக் கோலத்தில் முடித்தது நமக்கு ஒரு நெருக்குதலை ஏற்படுத்தியது; நமது பேரம் பேசும் சக்தியைக் குறைத்தது. நாம் கூடுதல் தொகுதிகள் பெறுவதில் உறுதியாக நின்றோம். அரசியல் தலைமைக்குழு ஆலோசனையைப் பெற்றோம். இறுதியாக 13 தொகுதிகள் பெற்று உடன்பாடு செய்து கொண்டோம்.

5.48 ஒதுக்கீட்டின்படி தொகுதிகளை அடையாளப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்பட்டன. 2001 சட்டப்பேரவை தேர்தலில் நாம் வெற்றி பெற்ற 6 தொகுதிகளுடன் திருப்பூர், திருப்பரங்குன்றம்,

நாகை, சிதம்பரம், வாசுதேவ நல்லூர், அரூர், குடியாத்தம் ஆகிய தொகுதிகளைப் பெற்றோம். தனித் தொகுதிகள் பெற வேண்டும் என்பதில் உறுதியாக நின்று 3 தொகுதிகளைப் பெற்றோம். சி.பி.ஐ. நிர்ப்பந்தத்தால் தனி தொகுதியை நாம் கேட்க முடியவில்லை. வேட்பாளர்கள் தேர்வு செய்யும் போது 3 தொகுதிகளில் பெண்களைத் தேர்வு செய்வது என்று ஆலோசிக்கப்பட்டு மாவட்டக்குழுக்கள் கருத்தறிந்து மாநிலக்குழுவில் இறுதிப்படுத்தப்பட்டது.

களத்தில் நின்ற கட்சிகள்

5.49 ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக 132 தொகுதிகள், காங்கிரஸ் 48 தொகுதிகள், பா.ம.க. 31 தொகுதிகள், சி.பி.ஐ. 10 தொகுதிகள் மற்றும் திமுகவிடம் உடன்பாடு கொண்டு சி.பி.எம். 13 தொகுதிகள் எனவும்; ஜனநாயக மக்கள் கூட்டணி சார்பில் அதிமுக 188 தொகுதிகள், மதிமுக 35 தொகுதிகள், டிபிஐ. 9 தொகுதிகள், ஜனதாதளம் (எஸ்) 1, சுயேச்சை 1 எனவும்; தே.மு.தி.க. 232 தொகுதிகளில் தனித்தும்; பா.ஜ.க., சுப்பிரமணியசாமி மற்றும் சில சாதிய அமைப்புகளோடு சேர்ந்து 225 தொகுதிகளிலும்; பி.எஸ்.பி. 164 தொகுதிகளிலும்; கார்த்திக்கின் பார்வர்டு பிளாக் 62 இடங்களிலும் போட்டியிட்டன.

தேர்தல் பிரச்சாரம்

5.50 'எதேச்சதிகாரமா? ஜனநாயகமா?' எனும் முழக்கத்துடன் மக்கள் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வுக்கான நமது ஆலோசனைகள் பிரச்சாரத்தில் முன்நிறுத்தப்பட்டன. கட்சி சார்பில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. நாம் போட்டியிட்ட 13 தொகுதிகளிலும் வலுவாக நமது பிரச்சாரம் துண்டுப் பிரசுரம், தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், நாடகம், வீடியோ, ஆடியோ மூலம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. மற்ற தொகுதிகளிலும் சுயேச்சையாகவும், தோழமைக் கட்சிகளுடன் இணைந்தும் சாத்தியமான அளவு நமது அரசியல் பிரச்சாரம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. அகில இந்தியத் தலைவர்கள் வருகை தந்து பிரச்சாரத்திற்கு உதவியது பயனளித்தது.

5.51 திமுக தேர்தல் அறிக்கையில் ரூ. 2க்கு ஒரு கிலோ அரிசி ரேஷன் கடைகளில் வழங்குவது, நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குவது, கூட்டுறவு விவசாயக் கடன்கள் ரத்து செய்வது, இலவச கலர் டி.வி. வழங்குவது, காலியாக உள்ள அரசுப் பணியிடங்களை பூர்த்தி செய்வது, வேலையில்லாக் கால நிவாரணம், ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையை ரூ. 15,000/- என உயர்த்துவது போன்ற அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. பா.ம.க., சி.பி.ஐ., காங்கிரஸ், ஆகியவையும் அதிமுக ஆட்சி காலத்து அவலங்களையும், மக்கள் பிரச்சனைகளையும் தங்களது பிரச்சாரத்தில் எடுத்துச் சென்றன.

5.52 ஜனநாயகத்திற்கான போர்க்களமாக இந்தத் தேர்தல் களம் இருந்தது. கடந்த தேர்தலைவிட இந்தத் தேர்தலில் மக்கள் பிரச்சனைகள் ஒரு விவாதப் பொருளாக இடம் பெற்றன. திமுகவின் அரிசி விலை குறைப்பு, கூட்டுறவுக் கடன் ரத்து, கலர் டி.வி., நிலம் போன்ற அறிவிப்புகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. அதே சமயம் திமுகவின் அறிவிப்புகள் நடைமுறையில் சாத்தியமில்லை என்று அதிமுக பிரச்சாரம் செய்து கொண்டே சில இலவச அறிவிப்புகளை செய்தது. மதிமுக, டி.பி.ஐ. ஆகிய கட்சிகளின் பிரச்சாரம் மக்களைக் கவரவில்லை.

5.53 இந்தத் தேர்தலில் எந்த அணிக்கும் சாதகமான அரசியல் அலை இல்லை; ஆளும் கட்சிக்கு எதிரான மனோபாவமும் பெருமளவு இல்லை. அதிமுக பணபலத்தையும், அதிகார பலத்தையும் பெருமளவு பயன்படுத்தியது. சுயஉதவிக்குழுக்களையும், இதர கட்சிகளில் உள்ள அதிருப்தியாளர்களையும் விலைபேசியது. தி.மு.க.வும் பணபலத்தைப் பயன்படுத்தியது.

5.54 திமுக - அதிமுக இரு அணிகளையும் விமர்சித்து ஒரு வாய்ப்புக் கேட்டும், மாற்று சக்தி என்றும் தேமுதிக தனது பிரச்சாரத்தை முன்வைத்தது. 15 கிலோ அரிசி இலவசம். கறவை மாடு இலவசம் போன்ற பல அறிவிப்புகளையும் செய்தது. பா.ஜ.க., பார்வர்டு பிளாக் (கார்த்திக்) ஆகிய கட்சிகள் களத்தில் நின்றபோதிலும், இவர்களது பிரச்சாரம் மக்களிடம் எடுபடவில்லை.

தேர்தல் முடிவுகள்

5.55 திமுக 96 தொகுதிகளிலும், காங்கிரஸ் 34 தொகுதிகளிலும், பா.ம.க. 18 தொகுதிகளிலும், சி.பி.எம். 9 தொகுதிகளிலும், சி.பி.ஐ. 6 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. மொத்தத்தில் 163 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

5.56 அதிமுக 61 தொகுதிகளிலும், மதிமுக 6 தொகுதிகளிலும், டி.பி.ஐ. 2 தொகுதிகளிலும் என 69 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. தே.மு.தி.க. ஒரு இடத்தில் வெற்றி பெற்றது.

5.57 தளி தொகுதியில், சிபிஐ வேட்பாளரைத் தோற்கடித்து சுயேச்சை வேட்பாளர் வெற்றிபெற்றார். இவர் நமது கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினராகவும், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவராகவும் இருந்தவர். சிபிஐ வேட்பாளருக்கு எதிராகப் போட்டியிட்டதால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

தேர்தல் பரிசீலனை

5.58 இந்த தேர்தலில் 70.8 சத வாக்கு பதிவானது. இது கடந்த 2001 சட்டமன்றத் தேர்தலைவிட 11.7 சதவிகிதம் கூடுதலாகும். நாம் முன்வைத்த முக்கியத் தேர்தல் கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சி அகற்றப்பட்டுள்ளது. திமுக ஆட்சி தோழமைக் கட்சிகள் ஆதரவோடு அமைக்கப்பட்டுள்ளது. நமது சட்டமன்ற பலமும், ஒட்டுமொத்தமாக இடதுசாரிகள் பலமும் அதிகரித்துள்ளது.

5.59 அதே சமயம் திமுக தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெறவில்லை. கூட்டணி பலமும், ஏழை - எளிய மக்களைக் குறிவைத்து அறிவிக்கப்பட்ட இலவச அறிவிப்புகளும், தலைவர்களின் பிரச்சார பலமும் அணியின் வெற்றிக்கு உதவியுள்ளன. 44.75 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளது.

5.60 அதிமுகவின் அறிவிப்புகளும், பிரச்சாரமும் கடும் போட்டியை ஏற்படுத்தியது. அதிமுக அணி 40.52 சதவிகித வாக்குகளையும், 69 இடங்களையும் பெற்று வலுவான எதிர் அணியாக உள்ளது. குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் அது பல இடங்களில் தோல்வியைத் தழுவியுள்ளது.

5.61 2004 பாராளுமன்றத் தேர்தலில் திமுக அணிக்குக் கிடைத்த வாக்குகளில் 12.2 சதவிகிதம். தற்போது குறைந்துள்ளன. அதிமுக அணிக்கு 3.1 சதவிகிதம் வாக்கு அதிகரித்துள்ளது. அதிமுக அணியை விட திமுக அணி 4.23 சதவிகிதம், அதாவது 13.62 லட்சம் வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளன.

5.62 2004இன் அதிமுக அணியிலிருந்த பா.ஜ.க. வெளியேறியிருப்பினும், தி.மு.க. அணியிலிருந்த மதிமுக - விடுதலைச் சிறுத்தைகள் அதிமுக அணியில் சேர்ந்ததால் இவர்களின் வாக்குகளும் அதிமுக அணிக்குச் சேர்ந்துள்ளன.

5.63 தேமுதிக ஒரு இடத்தில் மட்டுமே வெற்றிபெற்றுள்ள போதிலும் 8.38 சதம் அதாவது, சுமார் 27 லட்சம் வாக்குகளைப் பெற்றது. திராவிடக் கட்சிகள் மீதான எதிர்ப்புணர்வும், மாற்று தேவை எனும் உணர்வும், இளம் வாக்காளர்களினுடைய வாக்குகளும் இந்தக் கட்சிக்கு சாதகமாக அமைந்தன. நகர்ப்புறம், கிராமப்புறம் எனும் வித்தியாசம் இன்றி இந்த வாக்குகள் இக்கட்சிக்குக் கிடைத்துள்ளன. பா.ம.க., மதிமுக, டி.பி.ஐ. ஆகிய கட்சிகளின் ஆதரவு வாக்குகளும் இக்கட்சிக்குக் கிடைத்துள்ளன.

5.64 திமுகவின் கோட்டையாகத் திகழ்ந்த சென்னை உள்ளிட்ட வடக்கு மாவட்டங்களில் தற்போது அதிமுக அணி வெற்றி பெற்றுள்ளது. இதுபோல் அதிமுக கோட்டை என இருந்த தென் மாவட்டங்களில் திமுக அணி தற்போது ஓரளவு வெற்றி பெற்றுள்ளது. மதிமுக, பா.ம.க., டி.பி.ஐ. ஆகிய கட்சிகளின் செல்வாக்குத் தளங்களிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

5.65 கார்த்திக் கட்சி போட்டியிட்ட இடங்களில் 500 முதல் 1500 வரை வாக்குகள் பெற்றது. இதனால் எந்த அணியின் வெற்றி - தோல்வியும் பாதிக்கப்படவில்லை. பா.ஜ.க. பெற்ற வாக்குகளும் (2.02 சதம்) எந்த அணியின் வெற்றி தோல்வியையும் பாதித்ததாக தெரியவில்லை. அதே சமயம் விஜயகாந்த் கட்சி பெற்றுள்ள வாக்குகள் அதிமுக - திமுக ஆகிய இரு அணிகளின் வெற்றியை பாதித்துள்ளது.

5.66 சாதி, மதம் வேட்பாளர் குறித்த சர்ச்சைகள் இந்தத் தேர்தலில் பெருமளவு இடம்பெறவில்லை; எடுபடவும் இல்லை. அதே சமயம் சிறுபான்மையினர் வாக்குகள் திமுக அணிக்குக் கூடுதலாகவும், பெண்கள் வாக்குகள் அதிமுக அணிக்குக் கூடுதலாகவும் கிடைத்துள்ளன. தலித் மக்களின் வாக்குகள் திமுக, அதிமுக, தே.மு.தி.க. ஆகிய அனைத்திற்கும் பிரிந்து கிடைத்துள்ளன. மாவட்டத்திற்கு மாவட்டம், பகுதிக்குப் பகுதி தேர்தல் முடிவுகள் மாறுபட்டுள்ளன. எந்தப் பகுதியும், சாதி - சமயமும் ஒரு குறிப்பிட்ட கட்சி அல்லது அணிக்கு சாதகமாகச் செயல்படவில்லை எனவும் தெரிகிறது.

5.67 நாம் 13 தொகுதிகளில் போட்டியிட்டு 9இல் வெற்றிபெற்றதும், பெண் வேட்பாளர்கள் 3 பேரும் வெற்றி பெற்றதும்; ஒரு பொதுத் தொகுதியில் தலித் பெண் வேட்பாளர் வெற்றி பெற்றதும், 3 தனித்தொகுதிகளில் இரண்டில் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

5.68 கடந்த தேர்தலில் நாம் வெற்றி பெற்ற சிங்காநல்லூர் தொகுதியில் 14 வாக்குகளில் வெற்றியை இழந்துள்ளோம். இத்தொகுதியில் மாநிலக்குழு அரசியலாக முடிவு செய்து வேட்பாளரை நிறுத்தியது. இது குறித்து, கோவை மேற்கு மாவட்ட மாநாட்டு அறிக்கை "சிங்காநல்லூர் தொகுதியில் நமது தோல்விக்கு நம்மிடையே வெற்றி பெறுவோம் என்ற மெத்தனப் போக்கு மேலோங்கியிருந்தது. இதன் காரணமாக வேலைகளிலும் எச்சரிக்கையின்மை காணப்பட்டது. இத்துடன் கட்சி ஸ்தாபனப் பிரச்சனைகளும் உள்ளடங்கும்" என்று குறிப்பிட்டிருந்தது.. ஒட்டுமொத்த கோவை மேற்கு மாவட்ட கட்சியே தோல்விக்கு காரணம் என்பதுபோல் பார்ப்பது சரியல்ல. தளி சட்டமன்றத்தொகுதியில் சி.பி.ஐ. வேட்பாளரை ஆதரித்துத் தேர்தல் பணிகள் செய்தோம். எனினும், இன்னும் கூடுதலாக கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

5.69 பெருமளவில் பணத்தைப் பயன்படுத்தி நடைபெற்ற இதர கட்சிகளின் தேர்தல் பணிகளுக்கு இடையே நமது தோழர்கள் பல சிரமங்களையும் தாங்கி சிறப்பாகப் பணியாற்றினர். வேறு பகுதிகளுக்குப் பொறுப்பேற்று செயல்பட்ட தலைவர்கள், தோழர்கள், மத்திய தர ஊழியர்கள் பணி குறிப்பிடத்தக்கதாய் அமைந்தது. பெண் தோழர்களின் ஸ்குவாடு பிரச்சாரமும், தெருமுனைக் கூட்டங்களும் மக்களை ஈர்த்தன. மாற்றுக் கட்சியினரும் பிரமிக்கும் வகையில் நமது கலைக்குழுக்கள் பிரச்சாரம் அமைந்தது.

5.70 முக்கியத்துவம் வாய்ந்த இந்த அரசியல் போராட்டத்தில் கூட கட்சி உறுப்பினர்களில் ஒரு பகுதி பங்கேற்கவில்லை என்பதை நாம் கவனத்தில் செய்வது அவசியமாகும்.

தேர்தல் வெற்றி விழா

5.71 தமிழக சட்டப்பேரவை தேர்தலில் நாம் முன்வைத்த அரசியல் இலக்குகள் மூன்றிலும் வெற்றி பெற்றோம். இதே காலத்தில் மேற்கு வங்கம், கேரளத்தில் நடைபெற்ற தேர்தல்களில் நமது கட்சியின் வெற்றி மகத்தானதாய் அமைந்தது. மாற்றுக் கொள்கைக்கு மக்கள் வழங்கிய தீர்ப்பாக அமைந்தது. பல தரப்பினரும் மேற்குவங்க, கேரள வெற்றியைப் பாராட்டினர். இந்த வெற்றி, கட்சி அணிகளுக்கும் உற்சாகமாக அமைந்தது. இதனடிப்படையில் 3 மாநில வெற்றியையும், நமது சாதனைகள், மாற்றுக் கொள்கை நிலைபாடுகளையும் மக்களிடம் வெற்றி விழாக் கூட்டங்கள் வாயிலாகக் கொண்டு செல்லத் தீர்மானித்து மாவட்டங்களில் பரவலாகப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. பத்திரிகைச் செய்திகள், பலதரப்பினரின் பாராட்டு, கட்சியின் கொள்கை ஆகியவற்றைத் தொகுத்து "மக்கள் தந்த மகத்தான தீர்ப்பு" என்ற தலைப்பில் சிறு பிரசுரம் வெளியிட்டோம். 3 லட்சம் பிரதிகள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன.

பொருளாதாரக் கொள்கை எதிர்ப்பும் மக்கள் கோரிக்கைக்கான இயக்கங்களும்

பெட்ரோல், டீசல் விலை உயர்வை எதிர்த்து மறியல்

5.72 2006இல் மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 5வது முறையாக பெட்ரோல், டீசல் விலைகளை உயர்த்தியது. விலை உயர்வை ரத்து செய்யக் கோரியும், மாற்று ஆலோசனைகளை முன்வைத்தும் இடதுசாரி கட்சிகள் 2006 ஜூன் 13 அன்று அகில இந்திய எதிர்ப்பு நாள் அறைகூவல்

விடுத்தன. தமிழகத்தில் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு சிபிஎம் - சிபிஐ சார்பில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. மாநிலத் தலைவர்கள், 5000 பெண்கள் உட்பட, நம் தரப்பில் 30,000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். முன்னதாக சுயேச்சையாகக் கிளை, இடைக்குழு அளவில் கண்டனச் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுர விநியோகத்துடன் பரவலாக ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. மறியலில் நமது பங்கேற்பு குறைவு. கூட்டு இயக்கங்களில் நமது சக்தியை வெளிப்படுத்தும் வகையில், நமது பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.

மக்கள் கோரிக்கை, மாற்றுக் கொள்கை முன்வைத்து பிரச்சாரம்

5.73 விலைவாசி உயர்வை எதிர்த்தும், பொது விநியோகத்தை பலப்படுத்தி விரிவுபடுத்தக் கோரியும், முறைசாராத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டம் கோரியும், கல்விக்கான மத்திய நிதி ஒதுக்கீட்டை 6 சதமாக உயர்த்தக் கோரியும், விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கேட்டும், பெண்களுக்கு 33 சதம் இடஒதுக்கீட்டை வலியுறுத்தியும், அமெரிக்காவுடனான இராணுவக் கூட்டுப் பயிற்சி மற்றும் வகுப்புவாத சக்திகளின் செயல்பாடுகளை எதிர்த்தும், நமது மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தும் இரண்டு கட்டமாகப் பிரச்சாரத்திற்குத் திட்டமிடப்பட்டது.

5.74 முதற்கட்டமாக ஜூலை 2006 இறுதியில் மாநிலமெங்கும் விரிவான பிரச்சாரம் நடத்தப்பட்டது. மாநில, மாவட்டத் தலைவர்கள் இப்பிரச்சாரத்தில் பங்கேற்றனர். மாநில அளவில் பட்டறை நடத்தி நாடகமும், பிரச்சாரப் பாடல்களும் தயார் செய்து மாவட்டக்குழுக்களுக்கு வழங்கப்பட்டன. பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது. ஆயிரக்கணக்கில் தெருமுனைக் கூட்டங்கள் நடந்தன. 65 லட்சம் துண்டறிக்கை விநியோகிக்கப்பட்டது. கலைக்குழுக்கள் பிரச்சாரம் நடைபெற்றது.

5.75 இரண்டாவது கட்டமாக ஆகஸ்ட் 2006இல் மூன்று அல்லது நான்கு மாவட்டங்களை இணைத்து சென்னை, விழுப்புரம், திருவாரூர், நாகர்கோவில், மதுரை, திருப்பூர், சேலம், திருச்சி மற்றும் புதுச்சேரி ஆகிய 9 மையங்களில் பொதுக்கூட்டங்கள் சுமார் ஒரு லட்சம் மக்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்டன. அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்களும், மாநிலத் தலைவர்களும் இக்கூட்ட நிகழ்வுகளில் பங்கேற்றது, விளம்பரமும் - ஊடகச் செய்திகளும் நமது அரசியலை மக்களிடம் கொண்டு செல்ல உதவியது. மற்ற கட்சிகளிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்ட இவ்வியக்கம் உதவியது. பிரச்சாரப் பயணத்தில் 15,000 கட்சித் தோழர்கள் மட்டுமே பங்கேற்றனர் என்பது கட்சி அணிகள் உணர்வின் ஊனத்தை வெளிப்படுத்துகிறது.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு

5.76 அத்தியாவசியப் பொருட்களான உணவு தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், காய்கறிகள் அனைத்தின் விலைகளும் கடுமையாக உயர்ந்தன. தமிழகத்தில் ரேஷன் கடைகளில் கிலோ ரூ. 2/- விலையில் அரிசி கிடைப்பினும் இதர அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படாததால் ஏழை எளிய மக்கள் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டனர்.

5.77 விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய - மாநில அரசுகளை வலியுறுத்தி மக்கள் மத்தியில் பிரச்சாரமும் டிச.4, 2006 அன்று தமிழகமெங்கும் நூற்றுக்கணக்கான மையங்களில் 35,000 பேர் பங்கேற்ற தர்ணா போராட்டமும் நடத்தினோம். பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கும் பொதுவிநியோகத் திட்டக் குறைபாடுகளுக்கும் ஆட்சியாளர்களின் தாராளமயப் பொருளாதாரக் கொள்கையே காரணம் என்பது மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. நமது மாற்று ஆலோசனைகளைத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் கிளைகள் மக்களிடம் கொண்டுசென்றன. மக்கள் கருத்து கட்சிக்கு சாதகமாக அமைந்தது.

5.78 தமிழகத்தில் தற்போது குடும்பத்திற்கு ரூ. 2 விலையில் 20 கிலோ அரிசி வழங்குவதற்கு மாறாக, குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் 8 கிலோ, 10 கிலோ எனக் குறைத்து வழங்கப்படுகிறது. அதே சமயம் ரேசன் அரிசிக் கடத்தப்படுகிறது. அரிசி விலை கடுமையாக உயர்ந்துள்ள நிலையில் இந்த மறைமுக ரேஷன் அரிசிக் குறைப்பு மக்கள் மத்தியில் பிரச்சனையாகி வருகிறது. இதை எதிர்த்து மக்களியக்கம் நடத்த வேண்டியுள்ளது.

பொதுவேலை நிறுத்தம்

5.79 மத்திய அரசின் மக்கள் விரோத - தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக மத்தியத் தொழிற்சங்கங்கள் சார்பில் விடுக்கப்பட்ட அறைகூவலை ஏற்று டிச.14 2006 அன்று நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் பல மாநிலங்களில் வெற்றிகரமாய் நடந்தது. தமிழகத்திலும் பல்வேறு தொழில்களிலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் வேலை நிறுத்தம் வெற்றிகரமாய் நடந்தது. வேலை நிறுத்தத்தின் போது நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 75,000 பேர் கைது செய்யப்பட்டனர். கட்சி மற்றும் இதர வர்க்க, வெகுஜன அமைப்புகளின் சார்பிலும் இவ்வியக்கத்தின் வெற்றிக்குத் தோழர்கள் உழைத்தது பலம் சேர்த்தது.

2007, பிப் 1-8, பிரச்சாரம்

5.80 டிசம்பர் 2006ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு இயக்கத்தைத் தொடர்ந்து, விலைவாசி உயர்வு, கிராமப்புற மக்களுக்கு நிவாரணம், பெண்களுக்கு 33 சத இடஒதுக்கீடு, முறைசாராத் தொழிலாளர்கள் - விவசாய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம், மற்றும் ஸ்தல மட்டக் கோரிக்கைகளை முன்வைத்து மக்களிடம் பிரச்சாரம் செய்ய மத்தியக்குழு முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து மாநிலத்தில் பிப் 1-8 வரை மாவட்டத் தலைநகரங்களில் மக்கள் பங்கேற்புடன் பொதுக்கூட்டங்கள் நடந்தன. மாநில, மாவட்டத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இடைக்குழு, கிளைகள் மட்டத்தில் தெருமுனைக் கூட்டங்கள் தட்டிபோர்டுகள், துண்டுப் பிரசுர விநியோகம் பரவலாக நடந்தன. பிப் 26ல் மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் (4300 பெண்கள்) பங்கேற்ற மறியல் இயக்கம் நடந்தது. பிப்.20 அன்று சிஐடியு மாநில மாநாட்டு முடிவின் படி 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள், தொழிலாளர்கள் பங்கேற்ற மறியல் நடந்த பின்னணியில், பிப்.26 அன்று கட்சி சார்பில் நடந்த மறியலில் கூடுதல் கவனம் செலுத்த இயலாமல் போயிற்று.

5.81 இவ்வியக்கத்தில் உணவுப் பொருட்கள் விலை உயர்வுக்கு முன்பேர வர்த்தக நடைமுறை பிரதான காரணமாக உள்ளது என்றும் அத்தியாவசியப் பொருட்கள் விஷயத்தில் முன்பேர வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதின் மூலமும், உணவு தானிய வர்த்தகத்தில் தனியாருக்குத் தடை விதிப்பதன் மூலமும் விலை உயர்வைக் கட்டுக்குள் வைக்க முடியும் என்ற நமது நிலைபாட்டை மக்களிடம் எடுத்துச் சென்றோம்; மத்திய - மாநில அரசுகளையும் வலியுறுத்தினோம். இதனைத் தொடர்ந்து மத்திய அரசு சில பொருட்களுக்கு முன்பேர வர்த்தக நடைமுறையில் கட்டுப்பாடுகளை விதிக்க நேரிட்டது, இவ்வியக்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

மத்திய - மாநில பட்ஜெட் எதிர்ப்பு இயக்கம்

5.82 2007 - 2008 மத்திய பட்ஜெட்டில் கல்வி, சுகாதாரத்திற்கு சிறிதளவு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. அதே சமயம் விலைவாசி உயர்வு, வேலையின்மை, விளை பொருட்களுக்கு கட்டுப்படியான விலை, பொதுவிநியோகம் போன்றவற்றில் எந்த நிவாரணமும் இல்லை. பெருமுதலாளிகள் மீது புதிய வரிவிதிப்பு இல்லை. நூறுநாள் வேலைத்திட்டம் 200-லிருந்து 330 எனக் கூடுதலாக 130 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டாலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு இல்லை. மாவட்ட எண்ணிக்கை 65 சதவிகிதம் உயர்ந்துள்ளது; ஆனால், நிதி ஒதுக்கீடு வெறும் ஆறு சதவிகிதம் மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது. எனவே நமது மாற்றுக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் மத்தியக்குழு முடிவின்படி மக்களிடம் எடுத்துச் சென்றோம். இதோடு, தமிழக அரசின் பட்ஜெட் குறித்த விமர்சனங்களையும், விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும், ரேசன் கடைகளில் சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், காய்கறிகள் குறைந்த விலையில் விற்பனை செய்யவும், ரேஷன் அட்டை இல்லாதவர்களுக்குப் புதிய அட்டை வழங்குவது மற்றும் அரிசி கடத்தலை தடுக்கக் கோரியும் மாவட்டங்களில் முக்கிய மையங்களில் பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலமாக இவ்வியக்கம் நடந்தது. சக்தியாகவும், பரவலாகவும் நடைபெற்றதாகக் கூற முடியாது. எனினும் இவ்வியக்கத்தைத் தொடர்ந்து தமிழக அரசு ரேஷன் கடைகளில் பருப்பு உள்ளிட்ட சில பொருட்கள் விலையை சிறிது குறைத்து விற்பனை செய்ய உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

5.83 2006 டிசம்பர் மற்றும் 2007 பிப்ரவரி இயக்கங்களின்போது அதே பிரச்சனைகளை முன்வைத்து இருவார காலப் பிரச்சார இயக்கம் நடத்திடவும், பிரச்சாரத்தின் இறுதியில் சக்தியான மறியல் போராட்டம் நடத்திடவும் தீர்மானித்துச் செயல்பட்டோம். பிரசுரம் ஒன்று 2 லட்சம் பிரதிகள் வெளியிட்டு மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. துண்டுப் பிரசுர வினியோகம், தெருமுனைக் கூட்டங்கள் பரவலாக நடைபெற்றன. கூடுதலான கட்சித் தோழர்கள் பங்கேற்புடன் இவ்வியக்கம் நடைபெற்றது. பிரச்சார இயக்கத்தின் வீச்சு ஓரளவு ஆகஸ்ட் 28 மறியல் போராட்டத்தில் பிரதிபலித்தது. 319 மையங்களில் 19,808 பெண்கள் உட்பட 55,811 பேர் மறியலில் பங்கேற்றுக் கைது செய்யப்பட்டனர். எனினும், செப்டம்பர் 2005 மறியல் பங்கேற்பைவிட (94,604) இது குறைவேயாகும்.

5.84 இக்காலத்தில் ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளை எதிர்த்தும், மக்கள் கோரிக்கைகளை முன்வைத்தும், குறிப்பிடத்தக்க இயக்கங்கள் நடைபெற்றுள்ளன; மாற்றுக் கொள்கைகள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன. செப்டம்பர் 2005 மறியல் போராட்டத்தில் உச்சபட்சமாக 94,000 பேர் பங்கேற்றது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதே சமயம் மற்ற இயக்கங்களில் நமது திரட்டல் நமது பலத்திற்கு மிகக் குறைவாகவே இருந்தது. இவ்வியக்கங்களில் சிறு பகுதி பொதுமக்களும் பங்கேற்றுள்ளனர். அடையாளப்பூர்வ இயக்கங்கள் அரசியலில் உரிய தாக்கத்தை ஏற்படுத்த உதவாது; ஆட்சியாளர்களை நிர்பந்திக்கவும் பயன்தராது. எனவே, விரிவான பிரச்சாரம் செய்வது, விரிவான பகுதி மக்களைத் திரட்டுவது ஆகியவற்றின் முக்கியத்துவம் கட்சி முழுவதும் உணர்த்தப்பட வேண்டும்.

5.85 மக்கள் வாழ்க்கையைக் கடுமையாகப் பாதித்துள்ள பிரச்சனைகள் மேலும் கூர்மையாகத் தொடர்கின்றன. எனவே இவற்றின் மீதான திட்டமிட்ட இயக்கங்கள், போராட்டங்களை வலுவாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

நிலம் – குடிமனைப் பட்டா இயக்கம்

5.86 நிலம், வேலை, உணவுக்கான இயக்கமும், மத்திய மாநில அரசுகளின் தவறான பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்தும் - மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தும் தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டு வந்த பின்னணியில் நிலம் சார்ந்த பல பிரச்சனைகள் முன்வந்தன.

5.87 காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம் சிறுதாவூர் கிராமத்தில் 20 தலித் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட விவசாய நிலம் ஜெயலலிதா - சசிகலா பினாமிகளால் போலி பத்திரப்பதிவு - பட்டா மாற்றம் செய்யப்பட்டது. நிலத்திலிருந்து அம்மக்கள் வெளியேற்றப்பட்டு மோசடியாக அபகரிக்கப்பட்டுள்ளது. நிலமிழந்த மக்களுக்கு நிலத்தைப் பெற்றுத் தருவதற்கு ஓராண்டுக் காலமாகப் பல நடவடிக்கைகளை எடுத்தும் பயனளிக்காத நிலையில் நேரடி நடவடிக்கையாக ஜூலை 22, 2006 அன்று நில மீட்புப் போராட்டம் நடைபெற்றது. சிறுதாவூர் கிராம மக்களுடன் கட்சி, வி.ச. தலைவர்களும், தோழர்களுமாக 500க்கும் மேற்பட்டோர் நிலத்தில் இறங்கினர். போலீஸ் தள்ளு முள்ளுக்கிடையே 50 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது. தலித் மக்களுக்கு முறையாக நிலத்தை உறுதி செய்திடவும், ஆக்கிரமிப்பு மோசடி செய்தவர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கக் கோரியும் தமிழக முதல்வரிடம் மனு கொடுக்கப்பட்டது. மனுவை ஏற்று, தமிழக அரசு ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து விசாரணை நடந்து வருகிறது.

5.88 தி.மு.க. சட்டப் பேரவைத் தேர்தலின் போது 55 லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவோம் என்றது. ஆட்சிக்கு வந்த பின் 55 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் தமிழகத்தில் கிடையாது என்றும் 1.75 லட்சம் ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது என்றும் சட்டமன்றத்தில் கூறி தரிசு நில விநியோகத்தை சர்ச்சைக்குள்ளாக்கியது. தேர்தல் வாக்குறுதியிலிருந்து திமுக பின்வாங்கும் நிலை வெளிப்பட்டது. முன்னதாக ஏரி, குளம் மற்றும் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி பகுதியில் விவசாயிகளுக்குத் தெரியாமலேயே 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் போலி ஆவணங்கள் தயார் செய்து விற்பனை செய்யப்பட்டுள்ள செய்தியும் வெளிவந்தது.

5.89 இத்தகு சூழலில் நிலம், குடிமனைப் பட்டாவுக்கான கோரிக்கைகள், நில ஆக்கிரமிப்புகள் - மோசடிகள் எதிர்ப்பு எங்கெல்லாம் முன்வருகிறதோ அங்கெல்லாம் தலையிடுவது, மக்களைத் திரட்டிப் போராடுவது எனக் கட்சி அணிகளுக்கு வழிகாட்டப்பட்டது. சென்னையில் 2006 ஆகஸ்ட் 17 அன்று நில உரிமை கோரும் மாநில சிறப்பு மாநாடு வி.ச., வி.தொ.ச., சார்பில் நடைபெற்றது. மாநாடு குறித்து அனைத்து மாவட்டங்களிலும் விளம்பரம், பிரச்சாரம் செய்யப்பட்டது. மாவட்டங்களிலிருந்து 2000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடு சிறப்பாக, எழுச்சியாக நடந்தது. நிலம், குடிமனைப் பட்டா சார்ந்த கோரிக்கைகள முன்வைத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5.90 செப்.11 முதல் 17 வரை ஒரு வார காலம் வி.ச. வி.தொ.ச.வை முன்னிறுத்தி இப்பிரச்சாரம் கிராமங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. நகரங்களில் கட்சி இப்பிரச்சாரத்தை நடத்தியது. கட்சி முழுவதும் இவ்வியக்கத்தில் முடுக்கிவிடப்பட்டது. இதர வர்க்க - வெகுஜன அமைப்புகளும் பங்கேற்றன. பல லட்சம் துண்டுப் பிரசுரங்கள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. குடிமனைப் பட்டா நிலம் கோரும் படிவங்கள் மக்களிடம் வழங்கப்பட்டன. செப். 11 முதல் ஒரு வார காலம் குழுக்கள்அமைத்து இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட, வட்டார பகுதிப் பேரவைகள் நடத்தப்பட்டுத் தோழர்கள் களமிறக்கப்பட்டனர். பிரச்சாரத்தில் பங்கேற்று மக்களைச் சந்தித்து திரும்பிய தோழர்கள் உத்வேகம் அடைந்தனர்.

5.91 செப். 21 ஆர்ப்பாட்டத்திற்கு மக்களைத் திரட்டும் பணிகள் முனைப்பாக நடந்து வந்த நிலையில், முதற்கட்டமாக தரிசு நில விநியோகம் செய்யப் போவதாக 17.09.2006 அன்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு இவ்வியக்கத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாக அமைந்தது.

5.92 2006 செப். 21 ஆர்ப்பாட்டம் சக்தியாகவும், எழுச்சியாகவும் நடைபெற்றது. இரண்டு லட்சம் பெண்கள் உட்பட ஐந்து லட்சம் மக்கள் பங்கேற்றனர். சுமார் 20 லட்சம் மனுக்கள் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டன. புதுச்சேரி பிரதேசத்திலும் இவ்வியக்கம் சக்தியாக நடைபெற்றது. நாம் நடத்திய இயக்கங்களிலேயே இவ்வியக்கம் முத்தாய்ப்பானதாக அமைந்தது.

5.93 இவ்வியக்கத்தைத் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கும் மேல் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி வசித்து வரும் ஏழை மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கான வழிமுறைகளைக் கொண்ட அரசாணையைத் தமிழக அரசு பிறப்பித்தது. ஆண், பெண் இருவர் பெயரிலும் கூட்டுப் பட்டா வழங்கப்படவேண்டுமென்ற நமது கோரிக்கையும் ஏற்கப்பட்டு, பெண்ணைப் பிரதானப்படுத்திப் பட்டா வழங்க அரசு முன் வந்துள்ளது.

5.94 இவ்வியக்கத்தில் திமுகவையோ, தமிழக அரசையோ, இதர கட்சிகளையோ விமர்சிப்பதை நாம் பிரதான நோக்கமாக முன்வைக்கவில்லை. அதே சமயம் நிலஉரிமை, மனைப்பட்டா, நிலமோசடிகள் ஆகியவற்றுடன் நமது அரசியலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இதன் மூலம் இதர அரசியல் அமைப்பைச் சேர்ந்த ஏழை எளிய மக்களையும் இவ்வியக்கத்தில் பங்கேற்கச் செய்ய முடிந்தது.

5.95 மேற்கண்ட இயக்கங்களைத் தொடர்ந்து தமிழக அரசு 1.33 லட்சம் ஏக்கர் நிலமும், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட குடிமனைப்பட்டாக்களும் வழங்கியுள்ளது. சென்னையில், விமான நிலைய விரிவாக்கத்திற்குக் குடியிருப்புப் பகுதி நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் கூடாது என்று மக்களோடு இணைந்து கட்சியின் தென்சென்னை மாவட்டக்குழு பல இயக்கங்களை நடத்தியதைத் தொடர்ந்து சென்னை, அனகாபுத்தூர், பொழிச்சலூர் பகுதிகளில் விமான நிலைய விரிவாக்கம் கைவிடப்பட்டுள்ளது. இது நமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

5.96 அதே சமயம், நிலம், மனைப்பட்டா வழங்குவதில் முறைகேடுகளும் குளறுபடிகளும் உள்ளன. அரசாணை விதிகளைக்காட்டி நிலம், மனைப்பட்டா வழங்க இயலாது என்று அதிகாரிகள் தடை ஏற்படுத்துகிறார்கள். நீலகிரியில் தனிச்சட்டம் காரணமாக அங்கு நிலம் வழங்கும் நடவடிக்கை நடைபெறவில்லை. நகர்ப்புறங்களில் 'பெல்ட் ஏரியா' பகுதியில் மனைப்பட்டா வழங்கத் தடை உள்ளது. பட்டா கேட்டு விண்ணப்பிக்க 6 மாத கால அவகாசம் போதுமானதல்ல; காலத்தை நீட்டிக்க வேண்டியுள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். முதலமைச்சரை நேரில் சந்திக்கும் போதும் நிலம் - மனைப்பட்டா வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், குறைபாடுகளைக் களைந்திடவும் வலியுறுத்தினோம். வட்டார அளவில் தொடர்ச்சியாக

மக்களைத் திரட்டி கட்சியின் சார்பிலும், வர்க்க - வெகுஜன அமைப்புகள் சார்பிலும் இயக்கங்கள் நடைபெற்றன.

5.97 இந்நிலையில் 2007 ஆகஸ்ட் 6 அன்று மனைப்பட்டா வழங்குவதைத் துரிதப்படுத்த வலியுறுத்தி வருவாய்த்துறை அலுவலகங்களில் குடியேறும் போராட்டம் நடத்த வி.ச., வி.தொ.ச., இயக்கத்தின் சார்பில் தீர்மானிக்கப்பட்டது. இவ்வியக்கத்திற்கான தயாரிப்புகள் நடந்து வந்த பின்னணியில் தமிழக அரசு பட்டா வழங்குவதை துரிதப்படுத்துவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று வாக்குறுதியளித்த நிலையில் ஆகஸ்ட் 6 அன்று குடியேறும் போராட்ட வடிவம் ஆர்ப்பாட்ட வடிவமாக மாற்றப்பட்டு சக்தியாக நடைபெற்றது. போராட்ட வடிவம் மாற்றப்பட்டது குறித்து சில மாவட்டங்களில் மாறுபட்ட கருத்துக்கள் முன்வந்தன. பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வந்தநிலையில் குடியேறும் போராட்ட வடிவத்தை ஆர்ப்பாட்டமாக மாற்றி நடத்தியதுதான் சரியான முடிவாகும்.

5.98 வலுவான நமது தலையீடுகள், இயக்கங்கள், போராட்டங்களின் விளைவாகப் பட்டா கேட்டு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் மேலும் 6 மாதம் நீட்டிக்கப்பட்டது. 2008ல் மேலும் 3 லட்சம் பேருக்குப் பட்டா வழங்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. இலவசப் பட்டாவுக்கான வருமான வரம்பு கிராமங்களில் ரூ. 30,000, நகரங்களில் ரூ. 50,000 என்பது நீக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் 3 சென்ட் என்பது 4 சென்ட் எனவும், நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் 2 சென்ட் என்பது 2.50 சென்ட் எனவும், மாநகராட்சிகளில் 1.50 சென்ட் என்பது 2 சென்ட் எனவும் அளவைக் கூடுதலாக்கி இலவச மனைப்பட்டா வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.99 இவை நமது இயக்கத்திற்கும், போராடிய மக்களுக்கும் கிடைத்துள்ள வெற்றியாகும். அதேசமயம், வாக்குறுதி அடிப்படையில் நிலம், குடிமனைப்பட்டா வழங்குவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வரவில்லை; தொடர்ந்து தயக்கம் காட்டியே வருகிறது. பேச்சுவார்த்தைக்கு அரசை நிர்ப்பந்திக்கும் இயக்கங்களுக்குத் திட்டமிட வேண்டும்.

5.100 ‘இரண்டு ஏக்கர் நிலம் இல்லாவிட்டாலும் கையளவு நிலம் கொடுப்போம்’ என்று சொல்லி ‘2 ஏக்கர் நில வினியோகம்’ என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக கைவிட முனைகிறது. எனவே தொய்வின்றியும், தொடர்ச்சியாகவும் பல்வேறு வடிவங்களிலும் சக்தியாக மக்களைத் திரட்டிப் போராடுவது அவசியமான ஒன்றாகியுள்ளது. தீவிரமான போராட்ட நடவடிக்கைகளுக்கும் திட்டமிட வேண்டியுள்ளது. மனைப்பட்டா வழங்க அரசாணையில் தடையாக உள்ள சரத்துக்களை நீக்கவும், தேவைப்படும் நிலங்களை வகை மாற்றம் செய்து பட்டா வழங்கவும், அரசை வலியுறுத்த வேண்டும். கிராம அளவில், ஸ்தல அளவில் பட்டா கோரும் மக்கள் குழுக்கள், நிலம் கோரும் விவசாயிகள் குழுக்கள் அமைத்துச் செயல்பட வேண்டும். நில ஆக்கிரமிப்புகள், மோசடிகளை அடையாளம் கண்டு, கையகப்படுத்தி ஏழை மக்களுக்கு வழங்க அரசை வற்புறுத்த வேண்டும்.

5.101 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் - குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் பிரச்சனை, நீர்நிலை - நீர்ப்பிடிப்புப் பகுதிகள் எனும் பெயரால் பல்லாண்டு வசித்து வரும் ஏழை மக்கள் குடியிருப்புகளை அகற்றும் பிரச்சனை ஆகியவை தற்போது முன்வந்துள்ளன. திண்டுக்கல்லில் வீட்டுவசதி வாரியத்திடம் வீடுகளை வாங்கிய மக்கள் மீது தோராய விலை மற்றும் பலமுனை வட்டி நிர்ணயித்துப் பெரும் தொகையைக் கட்ட மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட போது அதை எதிர்த்துத் தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டு சிறப்பு மாநாடும் நடத்தப்பட்டுள்ளது. இந்த இயக்கங்களையும் பாதிக்கப்படும் மக்களைத் திரட்டி முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

5.102 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகப் பெரிய அளவு நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. இதனால் ஏழை - எளிய மக்கள், விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் நிலை ஏற்படுகிறது. வரைமுறை ஏதுமின்றி, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நிலம் வழங்குவது விவசாய உற்பத்தியை பாதிக்கும். ஒதுக்கப்படும் நிலத்தில் 25 சதவிகிதத்தை தொழில் நிறுவனப் பயன்பாட்டிற்கும், 75 சதவிகிதத்தை இதர வகையிலும் பயன்படுத்தும் நிலை தற்போது உள்ளது. இது ரியல் எஸ்டேட் கொள்ளைக்கே வழிவகுக்கும் என்பதால், ஒதுக்கப்பட்ட நிலத்தில் 50 சதம் தொழில்கள் அமைப்பதற்கும், 25 சதம் கட்டமைப்பு வசதிகளுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற விதி உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கட்சி வலியுறுத்தி வருகிறது. விளை நிலங்கள் கையகப்படுத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

விவசாயிகள் ஒப்புதலின்றி நிலம் கையகப்படுத்துதல் கூடாது. நிலங்களிலிருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு பொருத்தமான இழப்பீடு, மறுவாழ்வு நடவடிக்கை, விவசாயத் தொழிலாளர்களுக்கான மாற்றுத் திட்டங்கள் ஆகியவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமிழகத்தில் இக்காலத்தில் 20க்கும் மேற்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சுமார் 5000 ஏக்கரில் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏராளமான மண்டலங்கள் அனுமதிக்கப்படும் நிலையும் உள்ளது. எனவே, சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்த பிரச்சனைகளிலும் நாம் தலையிட வேண்டும்.

5.103 மேற்கண்ட பணிகளை, போராட்டங்களை நடத்தும் போதே கிளர்ச்சியில் ஈடுபடும் மக்களை அரசியல் மற்றும் ஸ்தாபனப்படுத்தும் நடவடிக்கைகளையும் இணைத்து முன்னெடுத்துச் செல்வது நமது கடமையாகும்.

தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக...

5.104 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகத் தலையிடுவதிலும் இயக்கங்கள் நடத்துவதிலும், தலித் மக்களிடையே செல்வதிலும், குறிப்பாக அருந்ததியர் மக்களைத் திரட்டுவதிலும் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். நாகை மாவட்டம் சீர்காழியில் சாதி அடக்கு முறை ஒழிப்பு மாநாட்டையும், திருச்சி மாவட்டம் லால்குடியில் தலித் மக்களுக்கு நிலப்பட்டா கோரும் மாநாட்டையும், மணப்பாறையில் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டையும் நடத்தினோம். இவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். கட்சியின் அகில இந்திய மையம் டெல்லியில் நடத்திய தலித் மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து 42 பிரதிநிதிகள் பங்கேற்றனர். இம்மாநாட்டுத் தீர்மானம் பல்லாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு தமிழகத்தில் விநியோகிக்கப்பட்டது.

ஆய்வுகள்

5.105 தீண்டாமைக் கொடுமைகள் மற்றும் வடிவங்கள் பற்றி அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வுகள் நடத்த முடிவு செய்தோம். இதன்படி, விருதுநகர், திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தஞ்சை, விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, பெரம்பலூர், கோவை, ஈரோடு, திருப்பூர், நாகை, கிருஷ்ணகிரி, சேலம் மதுரை மாநகர், திருவள்ளூர், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் 1863 கிராமங்களில் ஆய்வுகள் நடந்தன. இதர மாவட்டங்கள் ஆய்வு நடத்தவில்லை. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வித்தியாசமான சாதிய ஒடுக்குமுறைகளும் தீண்டாமைக் கொடுமைகளும் இருப்பது இந்த ஆய்வுகள் மூலம் வெளி வந்தன. இவை மாவட்ட வாரியாகத் தொகுக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனுவாக அளிக்கப்பட்டு, பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் அம்பலப்படுத்தப்பட்டன. அரசு நிர்வாகம் தீண்டாமை இல்லையெனப் பல மாவட்டங்களில் மறுத்து வந்த நிலையில் இந்த முயற்சிகள் அதனை மறுத்துக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் அமைந்தன.

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகள்

5.106 ஆய்வுகளின் அடிப்படையில் விருதுநகர், திண்டுக்கல், விழுப்புரம், ஈரோடு, புதுக்கோட்டை, திருவண்ணாமலை, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரட்டைக்குவளை முறை ஒழிப்பு, தலித்துகளுக்கு முடிவெட்ட வைத்தல், துணிகளுக்கு இஸ்திரி போடவைத்தல், பொதுக்குழாய்களில் தண்ணீர் எடுக்க வைத்தல், உயர் சாதியினர் தெருக்களில் சைக்கிளில் செல்ல வைத்தல், ஆலயப்பிரவேசம் போன்ற வடிவங்களில் இப்போராட்டங்கள் நடந்தன. இந்த இயக்கங்களில் அந்தந்தப் பகுதி தலித் மக்களை ஓரளவு பங்கு பெற வைத்துள்ளோம். ஆனால் கட்சி அணிகளின் பங்கேற்பு திருப்திகரமாக இருந்ததாக கூற முடியாது புதுக்கோட்டை, திருவண்ணாமலை, பெரம்பலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் சாதிய சக்திகளின் கடும் எதிர்ப்பையும், அதிகாரவர்க்கத்தின் ஒரு தலைப்பட்சமான போக்கையும் வலுவாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தீண்டாமை ஒழிப்புக்காக நாம் வலுவான தலையீடுகளைச் செய்ததால் கடந்த 3 ஆண்டுகளில் 14 கிராமங்களில் ஒட்டு மொத்த தலித்

மக்களும் நமது தலைமையில் அணி திரண்டுள்ளதாகவும் 20க்கு மேற்பட்ட கிராமங்களில் புதிய கட்சிக் கிளைகளும் வெகுஜன அமைப்புகளும் உருவாகியுள்ளதாகவும் புதுக்கோட்டை மாவட்ட அறிக்கை கூறுகிறது. இதைப் போல வலுவான விஸ்தரிப்புகள் விருதுநகர், விழுப்புரம், திண்டுக்கல் மற்றும் சில மாவட்டங்களிலும் உண்டு.

5.107 மாதர் சங்கம், விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளா சங்கம், வாலிபர் சங்கம், மாணவர் சங்கம் ஆகியவையும் தீண்டாமை ஒழிப்பு மற்றும் தலித் மக்கள் பிரச்சனைகளில் சில தலையீடுகளைச் செய்துள்ளன. இத்தகைய தலையீட்டை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

ஆலய நுழைவு

5.108 தலித்துக்கள் ஆலயத்திற்குள் நுழையவும், வழிபாடு நடத்தவும் உரிமை மறுக்கப்படுகின்ற சில பொதுக்கோவில்களையும் அறநிலையத்துறை கோவில்களையும் தேர்வு செய்து தலித் மக்களைத் திரட்டி, ஆலய நுழைவுப் போராட்டம் நடத்த முடிவெடுத்தோம். இதனை திருவண்ணாமலை (தாமரைப்பாக்கம்) திண்டுக்கல் (ஆய்க்குடி) விருதுநகர் (பாவாலி) ஆகிய மாவட்டங்களில் மட்டுமே நடத்த முடிந்தது. இக்கிராமங்களில் உள்ள தலித் மக்கள், பெண்கள், இளைஞர்கள் பங்கேற்றனர். பரவலான பத்திரிகைச் செய்திகளும் தொலைக்காட்சி செய்திகளும் வெளிவந்தன. இதர தலித் அமைப்புகளின் மத்தியில் பிரதிபலிப்புகளை உருவாக்கியது.

பாப்பாபட்டி கீரிப்பட்டி

5.109 பத்தாண்டுகளாக தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்டு ஆதிக்க சக்திகளின் எதிர்ப்பால் தேர்ந்தெடுக்கப்பட்டத் தலித் தலைவர்கள் செயல்பட முடியாத பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் தலித்துகளின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதில் நமது கட்சி வலுவாகக் கவனம் செலுத்தியது. சுழற்சி அடிப்படையில் இவ்வூராட்சிகளை மாற்றாமல் மீண்டும் தலித்துகளுக்கே ஒதுக்க வேண்டும் என நமது கட்சி வலியுறுத்தியபோது தமிழகஅரசு மறுத்ததால் மாநிலச் செயலாளர் தலைமையில் மதுரையில் உண்ணாவிரதப் போராட்டம் அறிவித்தோம். சட்டசபையிலும் வலுவாகக் குரல் எழுப்பினோம். அதன் பிறகே இவ்வூராட்சிகளுக்கு சுழற்சி முறை கைவிடப்பட்டது. மதுரை புறநகர் மாவட்டக்குழு ஜனநாயகபூர்வமாகத் தேர்தல் நடைபெற வலுவான முயற்சிகள் - பிரச்சாரத்தை மேற்கொண்டது. இப்பின்னணியில் இந்த 4 ஊராட்சிகளிலும் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. தலித் தலைவர்கள் பொறுப்பேற்றுச் செயல்படுகின்றனர். இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் நாம் வகித்த பாத்திரம் தலித் மக்களிடையே நமது செல்வாக்கை உயர்த்தியுள்ளது. வெற்றி பெற்ற உள்ளாட்சித் தலைவர்களுக்குக் கட்சி சார்பாகப் பாராட்டு விழா நடத்தினோம். இக்கிராமங்களில் இக்காலத்தில் 7 கட்சிக் கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. விச, விதொச உறுப்பினர் பதிவும் பரவலாக நடந்துள்ளது. இப்பிரச்சனையில் நமது தலையீடுகளைப் பிரதானப்படுத்தி 'இது வேறு இதிகாசம்' என்ற குறும்படம் எழுத்தாளர் சங்கத்தால் வெளியிடப்பட்டது.

வன்கொடுமைக்கு எதிரான தலையீடுகள்

5.110 இக்காலத்தில் தலித் மக்கள் மீது ஆதிக்க சக்திகளின் வன்கொடுமைத் தாக்குதல்கள், காவல்துறையின் அத்துமீறல்கள் ஆகியவற்றிற்கு எதிராக திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை புறநகர், சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை, நாகை, திருவாரூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், கடலூர் ஆகிய மாவட்டங்களில் தலையீடுகளும் இயக்கங்களும் நடந்துள்ளன. குறிப்பாக, நெல்லை மாவட்டம் நக்கலமுத்தன்பட்டி, மருதன்வாழ்வு ஆகிய ஊராட்சித் தலைவர்கள் தங்கள் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றியதற்காக ஆதிக்க சக்திகளால் படுகொலை செய்யப்பட்டனர். நெல்லை, விருதுநகர் மாவட்டங்களில் கண்டன இயக்கங்கள் நடந்தன. திண்டுக்கல், புதுக்கோட்டை, விருதுநகர் போன்ற மாவட்டங்களில் தலித் பஞ்சாயத்துத் தலைவர் அல்லது தலித் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பெண் பிரதிநிதிகள் தாக்கப்பட்டபோது அல்லது அவமானப்படுத்தப்பட்ட போது கண்டன இயக்கங்களை நடத்தியுள்ளோம். இந்நடவடிக்கைகளால் தலித் மக்களிடம் நமது செல்வாக்கு உயர்ந்தது. புதிய தொடர்புகளும் கிடைத்துள்ளன.

அருந்ததியர் பிரச்சனைகளில் தலையீடு

5.111 தலித் மக்களில் மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாக அருந்ததிய மக்கள் உள்ளனர். இவர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள் பற்றி திண்டுக்கல், விருதுநகர், நெல்லை, பாண்டிச்சேரி, சென்னை மாநகர் ஆகிய மாவட்டங்களில் தனி ஆய்வுகள் நடத்தினோம். மலம் அள்ளுவது உள்பட இழிவான தொழில்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. இவர்களில் கல்வியறிவு பெற்றவர்கள், அரசு வேலைவாய்ப்பு பெற்றவர்கள் மிக மிகக் குறைவு. எனவே இம்மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் உள் ஒதுக்கீடு, மலம் அள்ளும் பணியை ஒழித்துத் துப்புரவுப்பணியை நவீனப்படுத்துவது, மாற்று வேலைவாய்ப்பு மற்றும் மறுவாழ்வு அளிப்பது உள்பட சமூக - பொருளாதார - வாழ்வுரிமைப் பிரச்சனைகளில் வலுவான கவனம் செலுத்தித் திரட்டுவது என முடிவு செய்தோம்.

5.112 விருதுநகர் (4000 பேர்), திண்டுக்கல் (5000), நெல்லை (4000), சேலம் சங்ககிரி (2000), ராமநாதபுரம் சாயல்குடி (2000), புதுச்சேரி (500) ஆகிய மாவட்டங்களில் அருந்ததிய சமூகப் பொருளாதார வாழ்வுரிமை மாநாடுகள் எழுச்சியுடன் நடைபெற்றன. 12.06.07ல் சென்னை கோட்டை நோக்கிய பேரணியில் 20000 அருந்ததியர் மக்களைத் திரட்டி அம்மக்களிடையே பெரும் எழுச்சியை உருவாக்கினோம். இதனையொட்டி, தமிழக முதல்வருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து தூய்மைப்பணியாளர் நலவாரியம் உடனடியாக அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தில் நமது தோழர்கள் இருவரும், நமது வற்புறுத்தலின் பேரில் அருந்ததிய அமைப்பின் பிரதிநிதி ஒருவரும் இணைக்கப்பட்டனர். அருந்ததியருக்கு உள்ஒதுக்கீடு வழங்குவதை ஆய்வு செய்யக் குழு அமைக்க ஒப்புக் கொண்டதும், தமிழ்நாடு முழுவதுமுள்ள வெட்டியான்களை மயான ஊழியர் என மரியாதையான முறையில் பெயர் மாற்றம் செய்து அரசு ஊழியராக்க ஏற்றுக் கொண்டதும், சென்னை மாநகரில் 178 பேருக்கு அத்தகைய உத்தரவு உடனடியாக வழங்கியதும், செருப்புத் தைக்கும் தொழிலாளர்களைத் தோல் தொழிலாளர் நல வாரியத்துடன் இணைக்க ஏற்றுக் கொண்டதும், ஒண்டி வீரன் உள்ளிட்ட விடுதலைப் போராளிகளுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்ப ஏற்றுக் கொண்டதும் இதன் இதர முக்கிய வெற்றிகளாக அமைந்தன. புதுச்சேரி அரசும் நம்முடைய கட்சித்தலைமையுடன் பேச்சு வார்த்தை நடத்தி உள்ஒதுக்கீடு உள்பட பல கோரிக்கைகளை ஒரு கால வரையறையுடன் தீர்வு காண ஏற்றுக் கொண்டது இந்த இயக்கத்திற்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகும்.

5.113 அரசு ஏற்றுக் கொண்ட அம்சங்களை அமல்படுத்த வலியுறுத்தி 26.07.07 அன்று 94 இடங்களில் தர்ணாக்கள் நடந்தன. தொடர்ந்து 02.11.07ல் 13 மாவட்டங்களில் 39 இடங்களில் மறியல் நடைபெற்று 7,500 பேர் கைதாயினர். இப்போராட்டங்களில் கணிசமான அருந்ததிய மக்கள் கலந்து கொண்டனர்.

5.114 நாம் நடத்திய இத்தகைய தொடர் இயக்கங்கள் காரணமாக அருந்ததியர் மக்கள் முன்னெப்போதும் இல்லாத அளவில் சமூகநீதிப் போராட்டப் பொது அரங்கில் முன்னுக்கு வந்துள்ளனர். பெரும்பாலான அருந்ததியர்அமைப்புகள் நம்முடன் இணைந்து செயல்பட முன் வந்துள்ளன. பல தலித் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் நம்மை சாதகமான முறையில் அணுகத் தொடங்கியுள்ளன. இதன் தலைவர்கள் பொதுமேடைகளில் நமது கட்சியைப் பாராட்டிப் பேசி வருகின்றனர். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் உள்ஒதுக்கீடு கோரிக்கையையும் மார்க்சிஸ்ட் கட்சியையும் விமர்சித்துப் பேசி வருகிறார். இதற்கு அருந்ததிய மக்களும் அதன் அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. நாமும் பத்திரிக்கைகள் மூலம் நமது நிலைப்பாட்டை விளக்கி பதிலளித்து வருகிறோம். இந்த விவாதங்கள் அருந்ததியர் மக்களிடையே நம்பிக்கையையும் நம்முடன் நல்ல நெருக்கத்தையும் உருவாக்கியுள்ளன. இம்மக்களிடையே நமக்கு வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர் பதிவும், கட்சிகிளைகளும் உருவாகி இருப்பதாக மாவட்ட மாநாட்டு அறிக்கைகளும் விவாதங்களும் தெரிவிக்கின்றன.

5.115 நம்மை நெருங்கி வரும் புதிய மக்கள் திரளான அருந்ததியர் மக்களை நமது வெகுஜன அமைப்புகளில் மேலும் வலுவாகத் திரட்டவும், அவர்களை அரசியல் படுத்தி நமது தலைமையில் திரட்டவும், கவனமும் திட்டமிடுதலும் தேவை. இவர்களது பொருளாதார பிரச்சனைகளையும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள ஸ்தலப் பிரச்சனைகளையும் கையிலெடுத்துப் போராட வேண்டும்.

5.116 சென்னை 2007 ஜூன் 12 அன்று நடைபெற்ற அருந்ததியர் கோரிக்கைப் பேரணியில் பங்கேற்றுத் திரும்புகையில், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த அருந்ததிய இளம் மாணவர் பூபதிராஜா கடலில் குளித்தபோது, அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு அகால மரணமடைந்தார். வறியநிலையிலிருந்த அவரது குடும்ப பாதுகாப்பிற்கு உதவிடும் வகையில் நிதி திரட்டி ரூபாய் இரண்டு லட்சத்தை அக்குடும்பத்திற்கு வழங்கினோம்.

மலைவாழ் மக்கள் பிரச்சனைகள்

5.117 நமது வலியுறுத்தலால் மத்திய அரசு நிறைவேற்றியுள்ள பழங்குடியினர், மலைவாழ்மக்கள் நில உரிமைச் சட்டத்தை அமலாக்க நமது கட்சியும் விவசாயிகள் சங்கமும் சில முயற்சிகளை எடுத்துள்ளன. பிரச்சார இயக்கம், ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. பழங்குடி - மலைவாழ் மக்கள் கட்சி உறுப்பினர் சிறப்புப் பேரவை கூட்டம் நாமக்கல்லில் நடத்தினோம். மலைவாழ் மக்களை நிலங்களிலிருந்து வெளியேற்ற அரசு நிர்வாகமும் வனத்துறையும் காண்ட்ராக்டர்களும் முயற்சிகள் மேற்கொள்ளும் நிலையில் இவர்களின் நில உரிமையைப் பாதுகாக்க நாம் வலுவாகத் தலையிட வேண்டியுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் அரசு அலுவலகத்தின் முன்பு பழங்குடி மக்களைத் திரட்டி நடத்திய இயக்கத்தின் காரணமாக அவ்வட்டாரப் பழங்குடி மக்களுக்கு சாதிச்சான்றிதழ் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது. வாச்சாத்தியில் 15 ஆண்டுகள் தொடர்ந்து வழக்கு நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்துள்ளோம். அதேபோன்று குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை கிடைத்திட தொடர்ந்து குற்றவியல் வழக்கினை நடத்தி வருகிறோம்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணி

5.118 தலித் மக்களிடையே பரவலாகவும், குறிப்பாக அருந்ததியர் மக்களிடையேயும், நமது தலையீடுகளை வலுப்படுத்தி அவர்களைத் திரட்டுவதில் முன்னேற்றம் கண்டுவரும் சூழலில் இப்பணியை விரிவுபடுத்தவும் நமது கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளை வலுவாக இப்பணிகளில் ஈடுபடுத்தவும் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி என்ற வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பை ஆகஸ்ட் 16ல் மதுரையில் உருவாக்கினோம். இதில் 50க்கும் மேற்பட்ட வெகுஜன அமைப்புகளும் தலித் மற்றும் அருந்ததியர் அமைப்புகளும் இணைந்தன.

5.119 இம்முன்னணிக்கு திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கையில் மாவட்ட அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களிலும் படிப்படியாக உருவாக்க வேண்டும். தலித் மக்கள் மீதான வன்கொடுமைகளைக் கண்டித்து இம்முன்னணி சார்பில் திருப்பரங்குன்றம், விருதுநகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. திருநெல்வேலியில் 600 பேரும் காரைக்குடியில் 850பேரும் பங்கேற்ற தீண்டாமை ஒழிப்பு சிறப்பு மாநாடுகள் நடைபெற்றன.

5.120 தீண்டாமை ஒழிப்பையும் தலித் மக்களின் பிரச்சனைகளையும் வலுவாக எடுத்துச் செல்வதற்கான பரந்த வெகுஜன மேடையாக தீண்டாமை ஒழிப்பு முன்னணியை செயல்படுத்த வேண்டியுள்ளது.

பயிற்சி – பிரசுரங்கள்

5.121 தீண்டாமை ஒழிப்பு, தலித் மக்கள் பிரச்சனையில் ஈரோடு தவிர மேற்கு மாவட்டங்களிலும் இதர பல மாவட்டங்களிலும் இயக்கங்களோ, நேரடி நடவடிக்கைகளோ இல்லை என்பதும் நடைபெற்ற இடங்களிலும் கட்சி அணிகளிடையே ஆங்காங்கு தயக்கமும், இதர பகுதி மக்களின் ஆதரவை இழந்து விடுவோம் என்ற கருத்தோட்டமும் இருந்தது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

5.122 2005ம் ஆண்டு விழுப்புரம், கோவை, தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய 4 மையங்களில் இடைக்கமிட்டி உறுப்பினர்கள் - கிளைச் செயலாளர்களுக்கான தீண்டாமை ஒழிப்பு பயிற்சிப் பட்டறை நடத்தினோம். அருந்ததியர் மக்களின் பிரச்சனைகளுக்கான இயக்கங்களுக்குத் திட்டமிட்டபோது மே 2007 ல் திருப்பூர், விருதுநகர், சென்னை ஆகிய இடங்களில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் பங்கேற்ற சிறப்புப் பேரவைக் கூட்டங்கள் நடத்தினோம். தீக்கதிரில் தீண்டாமை ஒழிப்பு, அருந்ததியர் பிரச்சனை குறித்துப் பல கட்டுரைகள் வெளியிட்டோம். '**தீண்டாமை**

ஒழிப்புப் போரில் மார்க்சிஸ்டுகள்' மற்றும் 'நாங்கள் வருகிறோம்' சிறு பிரசுரங்களை வெளியிட்டோம்.

5.123 இப்பிரச்சனையில் நமது கட்சி அணிகளிடையே சரியான புரிதலை உருவாக்கவும் தலையீடுகளை பலப்படுத்தவும் வலுவான முயற்சிகள் தொடர வேண்டும்.

தலித் பழங்குடியினர் உபகுழு

5.124 தலித் பழங்குடியினர் மாநில உபகுழு அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பல மாவட்டங்களில மாவட்ட உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் முறையாகச் செயல்படுவதையும், அமைக்கப்படாத இதர மாவட்டங்களில் உபகுழு அமைத்துச் செயல்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

முன்னெடுத்துச் செல்வோம்

5.125 தமிழ்நாட்டில் தீண்டாமைக் கொடுமைகள் பரவலாக கிராமங்களிலும் ஓரளவு நகரங்களிலும் நிலவுகின்றன. தலித்துக்களில் மிகக்கணிசமானவர்கள் உழைப்பாளிகள்; சாதிய ஒடுக்குமுறை என்பது வர்க்க ஒடுக்குமுறையும் சமூக ஒடுக்குமுறையும் இணைந்ததுதான் என நமது கட்சி அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி வருகிறது. நிலப்பிரபுத்துவம் தகர்க்கப்படுவதும் கிராமப்புற ஏழைகளுக்கு நிலம் வழங்குவதும் - கிராமப்புறங்களில் ஜனநாயக சூழலை பலப்படுத்துவதற்கும் சாதியமைப்பின் அஸ்திவாரத்தை தகர்ப்பதற்கும் முன் தேவை என்பதை மறந்து விடக் கூடாது. இவை நீண்ட காலப்பணி என்ற போதிலும் நமது வலுவான தொடர்ச்சியான கவனம் தேவை.

5.126 இப்பின்னணியில் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக வலுவான போராட்டத்தை நடத்துவதும், நிலம், கூலி உள்ளிட்ட பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களைபலப்படுத்துவதும், இவற்றை ஒன்றோடொன்றாக இணைப்பதும் முக்கிய கடமையாகும். அருந்ததியர் மக்களைத் திரட்டுவதிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

5.127 தலித் மக்களிடையே ஏராளமான தலித் அமைப்புகள் செயல்படுகின்றன. விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் போன்ற அமைப்புகள் தலித் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயக்கம் நடத்துவதில்லை என்ற கருத்து பலப்பட்டு வருகிறது. மறுபுறம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏராளமான தொண்டு நிறுவனங்கள், கிறிஸ்தவ மிஷனரிகள், தலித் மக்களிடையே செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சில தொண்டு நிறுவனங்கள் தவிர மற்றவை வெளிநாட்டு நிறுவனங்களின நிதி ஆதரவோடு செயல்படுவதோடு, இடது சாரி இயக்கங்களின் வளர்ச்சியையோ தலையீட்டையோ விரும்புவதில்லை. இத்தயை சூழ்நிலைகளைக் கணக்கிலெடுத்து தலித் மக்களிடையே நமது பணியைப் பன்மடங்கு பலப்படுத்த வேண்டும்.

சிறுபான்மையினர் நல உரிமைக்கான நடவடிக்கைகள்

5.128 18வது அகில இந்திய மாநாடு சிறுபான்மை மக்களின் நலன்களுக்காகவும், உரிமைகளுக்காவும் கட்சி முன்முயற்சி எடுக்க வேண்டுமென்று வழிகாட்டியது. முன்னதாக நடைபெற்ற தமிழ் மாநில மாநாட்டிலும் சிறுபான்மையினரின் உரிமைகள் மீது கட்சி கவனம் செலுத்தி அவர்களை அணி திரட்ட வேண்டுமென்று தீர்மானித்தது. மாநில அளவில் உபகுழு அமைக்கப்பட்டு செயல்படுகிறது. மாவட்டங்களில் மதவழி சிறுபான்மையினரின், குறிப்பாக இஸ்லாமிய மக்கள் பிரச்சனைகள் மீது கவனம் செலுத்தவும், அவர்களைத் திரட்டவும் மாவட்ட செயற்குழுவில் இந்தப் பணிகளுக்கென்று ஒரு தோழரைப் பொறுப்பாக்கிட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

5.129 மேலும், கட்சியில் உள்ள முஸ்லிம் தோழர்கள் கூட்டம் நடத்திப் புரிதலை உருவாக்கி, முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்து சமூக ரீதியாக அவர்களுக்குள்ள பிரச்சனைகளை அறிந்திடவும், அவற்றின் தீர்வுக்கு வழிகாணவும், கலந்துரையாடல் கூட்டங்களை நடத்துவது; முஸ்லிம் பெண்களிடம் ஏற்பட்டு வரும் விழிப்புணர்வை வலுப்படுத்த மாதர்சங்கம் மூலம் தொடர்புக்கு முயற்சிப்பது, என மாவட்டங்களில் பணிகளைத் துவக்கிட வழிகாட்டப் பட்டது.

5.130 ஆனால் இந்தப் பணிகளில் மாவட்டக்குழுக்கள் விரைந்து முனைப்புக் காட்டவில்லை; மந்த கதியில்தான் நடந்தது. சில மாவட்டக்குழுக்கள் முஸ்லிம் பிரமுகர்களையும், முஸ்லிம் கட்சித் தோழர்களையும் திரட்டிக் கலந்துரையாடல் கூட்ட ஏற்பாடுகளைச் செய்தன. கன்னியாகுமரி, நெல்லை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்கள் இதில் கவனம் செலுத்தின; தொடர்புகளும் ஏற்பட்டன.

5.131 இதனிடையே முஸ்லிம் மக்களுக்கான பிரச்சனைகளை ஆய்வு செய்திட மத்திய அரசு அமைத்த "சச்சார்குழு" பரிந்துரைகள் வந்த நிலையில் கட்சியின் மத்தியக்குழு முஸ்லிம்களைப் பங்கேற்கச் செய்யும் வகையில் சிறப்பு கருத்தரங்கை மார்ச் 2007ல் டெல்லியில் நடத்தியது. அந்த கருத்தரங்கில் தமிழ்நாட்டிலிருந்து 10 கட்சித் தோழர்கள் (பெரும்பாலும் முஸ்லிம்கள்) கலந்து கொண்டார்கள். முஸ்லிம் மக்களின் கவனத்தை இக்கருத்தரங்கு நாடு தழுவிய அளவில் ஈர்த்தது. டெல்லி கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைத் தமிழாக்கம் செய்து தமிழகத்தில் நமக்குத் தொடர்புள்ள பகுதிகளில் முஸ்லிம் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. தமிழில் பிரசுரமும் வெளியிடப்பட்டது.

5.132 பல மாவட்டக்குழுக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி முஸ்லிம் மக்கள் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தன. முஸ்லிம் ஆண்களும், பெண்களும் சில கூட்டங்களில் முன்னூறு, நானூறு என - திரண்டனர். இந்தக் கூட்டங்களில் சச்சார்குழு பரிந்துரைகள் மற்றும் சிறுபான்மையினர் பற்றிய கட்சியின் கொள்கைகளும் விளக்கப்பட்டன. முஸ்லிம்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றிய சச்சார்குழுவின் பரிந்துரைகள் அவர்களை வெகுவாகச் சிந்திக்கச் செய்தன.

5.133 மாதர் சங்கம் சார்பில் முஸ்லிம் பெண்களைத் திரட்டி திருச்சியிலும், கட்சி சார்பில் சச்சார்குழு பரிந்துரைகள் குறித்து முஸ்லிம் ஆண் - பெண் இருவரையும் திரட்டி தேனியிலும் சிறப்பு மாநாடுகள் நடத்தப்பட்டன. இதில் தோழர் சுபாஷினி அலி கலந்து கொண்டார். முஸ்லிம் பெண்களின் வாழ்நிலை பற்றியும், சச்சார்குழுவின் பரிந்துரைகள் பற்றியும் விளக்கப்பட்டன. இது முஸ்லிம் மக்களை ஈர்த்தது. இக்கூட்டங்கள் சிறப்பாக அமைந்தன.

5.134 இதனைத் தொடர்ந்து, சென்னை காமராஜர் அரங்கில் மாநில அளவிலான சிறப்பு கருத்தரங்கம் 30.07.07 அன்று கட்சி சார்பில் நடத்தப்பட்டது. முன்னதாக பல மாவட்டங்களில் சிறப்பு தயாரிப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் பெண்கள் பங்கேற்பு உற்சாகமாக இருந்தது. சிறப்புக் கருத்தரங்கில் நம் கட்சிக்கு அப்பாற்பட்ட முஸ்லிம்கள், ஆண்கள், பெண்கள் என 2000 பேர் திரண்டனர். அரங்கம் நிரம்பி வெளியிலும் மக்கள் நின்று கேட்டனர். கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் முகமது சலீம் அவர்களின் துவக்கவுரை மிகச் சிறப்பாகஅமைந்தது. மூத்த வழக்கறிஞர் அபிபுல்லா பாஷா, சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எஸ். சாதிக், கவிக்கோ அப்துல் ரஹ்மான் சிறப்புரை நிகழ்த்தினர். மாநாடு வெற்றிகரமாக அமைந்தது. மாவட்டக்குழுக்களின் முயற்சியும் பாராட்டத்தகுந்தது. இந்த மாநாட்டிற்குப் பிறகும், சில மாவட்டங்களில் சச்சார்குழு பரிந்துரைகள், கோரிக்கைகள் விளக்கக் கூட்டங்கள் நடைபெற்றன. முஸ்லிம் மக்கள் பங்கேற்பு கூடுதலாகவே இருந்தது. இதுபோன்று முஸ்லிம் மக்கள் தொடர்புக்கான கூட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

5.135 மேற்கண்ட நமது தலையீடுகள், முயற்சிகள் முஸ்லிம் மக்களிடம் கட்சி மீதான மதிப்பை உயர்த்தியுள்ளது.

5.136 முஸ்லிம்களின் வாழ்வுரிமைக்காகப் போராடுவதுடன், அமைப்பு ரீதியாக அவர்களைத் திரட்டுவதும் முக்கியமான பணியாகும். கட்சியில் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. இதுவரை இவர்கள்பால் நாம் கவனம் செலுத்தாமல் இருந்தது ஒரு குறைபாடாகும்.

5.137 இவர்களில் பெரும்பாலோர் சிறு தொழில்களில் ஈடுபட்டு வருவதால், அந்த சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு வங்கிக் கடனுதவி மற்றும் தயாரிக்கும் பொருட்களுக்கு வர்த்தகச் சந்தைகள் ஏற்பாடு போன்றவற்றுக்கும் இயக்கம் நடத்த வேண்டும்.

5.138 முஸ்லிம் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில், அடிப்படை வசதிகள் செய்துதரக் கோருவது கல்வியில் அவர்கள் பின்தங்கியிருப்பதால், குடியிருப்புப் பகுதிகளில் இரவுப் பள்ளி - டியூஷன் மையம் நடத்திட உதவி செய்வது, முஸ்லிம் மாணவர்கள், இளைஞர்கள், பெண்களை நமது வெகுஜன அமைப்புகளில் சேர்க்க முயற்சிப்பது, முஸ்லிம் மக்கள் கூடுதலாக உள்ள பீடி, தோல் பதனிடுதல், சிறுகடை, சாலையோர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களை தொழிற்சங்க ரீதியாக அணிதிரட்டுவது போன்ற நடவடிக்கைகளை நாமாகத் திட்டமிட்டு முன்முயற்சி எடுக்க வேண்டும்.

5.139 இவற்றை ஒருபுறம் நடத்திக் கொண்டே, சிறப்பு நிதி ஒதுக்கீடு மற்றும் சச்சார்குழு பரிந்துரைகளை விரைந்து அமலாக்கிட அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவும் அதற்காக முஸ்லிம் மக்களைத் திரட்டவும் வேண்டும்.

5.140 முஸ்லிம்கள் மத்தியில் மார்க்சிஸ்டுகள் மத நல்லிணக்க, மதச்சார்பற்ற கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளவர்கள் என்ற கருத்து வளர்ந்துள்ளது. இந்தச் சாதகமான சூழ்நிலையை நாம் கவனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஜனநாயக இயக்கங்களில் இவர்களைப் பங்கேற்கச் செய்திட வேண்டும்.

5.141 இதுவரை முஸ்லிம்களைத் திரட்டிக் கலந்துரையாடல்கள் நடத்தாத இடங்களில் மாவட்டக்குழுக்கள் கவனம் செலுத்தி அதற்கான ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். ஆர்வம் உள்ளவர்களைக் கண்டறிந்து கட்சிக்குள் கொண்டு வர வேண்டும். ஆதரவாளர் குழுக்கள் அமைத்துப் பயிற்சியளிக்க வேண்டும்.

5.142 சிறுபான்மையினருக்கும், மற்ற பெரும்பான்மை மக்களுக்கு இருப்பது போல சம உரிமையும், சம அந்தஸ்தும் உத்தரவாதப்படுத்துகின்ற போதுதான் ஜனநாயகம் செழுமை பெறும். எனவே, சிறுபான்மையினரைத் திரட்டுவது என்பது நம்முடைய அரசியல் கடமைகளில் முக்கியமான ஒன்று என்ற பார்வையோடும், அக்கறையோடும் கட்சி அணிகள் செயல்பட வேண்டும்.

5.143 முஸ்லிம் மக்களைத் திரட்டுவதைப் போல் சிறுபான்மை கிறித்துவ மக்களைத் திரட்டும் பணியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

5.144 மத அடிப்படைவாதிகளின் பிடியில் சிக்காமல் ஜனநாயக அரசியல் இயக்கங்களில் இம்மக்களைத் திரட்டிட மாவட்டக்குழுக்கள் தொடர் நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். அனைத்து மாவட்டக்குழுவிலும், செயற்குழு உறுப்பினர் ஒருவரைப் பொறுப்பாக்கி தொடர்ச்சியான செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டும்.

பெண்கள் நலன், உரிமை தொடர்பான தலையீடுகள்

5.145 பெண்களைத் திரட்டுவதும், அரசியல் உணர்வூட்டுவதும், கட்சிக்குள் கொண்டு வருவதும் நமது அரசியல் கடமை என மத்தியக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு ஒரு புறம் சமூகத்திலும், மறுபுறம் கட்சிக்குள்ளும் அணுகுமுறை மேம்படுவதற்கான இருமுனை முயற்சிகள் தேவைப்படுவதை பெண்கள் தொடர்பான கட்சி ஆவணம் முன்வைக்கிறது.

5.146 தற்போதைய தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகள், வேலை வாய்ப்பற்ற வளர்ச்சியை உருவாக்கும்போது பெண்களும் அதில் பாதிக்கப்படுகிறார்கள். வேலை செய்யும் பெண்கள் பெரும்பாலும் சுரண்டல் மிகுந்த, சட்டப் பாதுகாப்பற்ற பணிகளில் தள்ளப்படுகிறார்கள். ஒரு பகுதி நகர்ப்புற படித்த இளம் பெண்களுக்கு கணினி உள்ளிட்ட தகவல் தொழில் நுட்பத் துறையில் வாய்ப்பு ஏற்பட்டுள்ள போதிலும், ஆணாதிக்க அடக்குமுறைகள், குடும்ப வன்முறைகள், வரதட்சணைக் கொலைகள், பாலியல் தாக்குதல்கள், காட்சிப் பொருளாக்குவது என்பவை அதிகரித்துள்ளது. பெண்கள் குறித்த தவறான கண்ணோட்டம், சாதீய - மதரீதியான ஒடுக்குமுறைகள், பத்தாம் பசலி - பழமைவாத அணுகுமுறைகள் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாய் உள்ளன. இவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்புவது நமது கடமையாகும். கட்சி சார்பில் கருத்தரங்குகள், இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும். பெண்கள் பிரச்சனைகள் அரசியலில் விவாதப் பொருளாக மாற்றப்பட வேண்டும்.

5.147 கடந்த 3 ஆண்டுகளில் இந்த அம்சத்தில் நமது தலையீடு ஒரு சிறு அளவே இருந்துள்ளது. உதாரணமாக, முதலாளித்துவ நுகரியம் மற்றும் பெண்களைப் பற்றிய நிலப்பிரபுத்துவ பார்வை காரணமாக, அதிகரித்து வரும் பெண் சிசுக் கொலை, கருக் கொலைப் பிரச்சனை மீது பிரச்சாரம், சிறப்பு கருத்தரங்குகள் நடத்திட ஆலோசிக்கப்பட்டு சேலத்தில் 2007 செப்டம்பர் 19 அன்று பெண் சிசுக் கொலை - கருக்கொலை எதிர்ப்பு மண்டல மாநாடு நடைபெற்றது. சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கரூர், திண்டுக்கல் மாவட்டங்களிலிருந்து 1646 பேர் மாநாட்டில் கலந்து கொண்ட நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. பங்கேற்ற மாவட்டங்கள் தொடர் நடவடிக்கைகளுக்குத் திட்டமிட வேண்டும்.

5.148 நாடாளுமன்றம் - சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டு மசோதாவைத் தாக்கல் செய்ய மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை நிர்ப்பந்திக்க 2005 நவம்பர் 21 அன்று அகில இந்திய கோரிக்கை தினம் நடத்த மத்தியக்குழு விடுத்த அறைகூவலுக்கேற்ப மாவட்டத் தலைநகரங்களில் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெண்கள் இயக்கமாக அல்லாமல் கட்சி இயக்கமாக இவ்வியக்கம் நடத்தப்பட்ட போதிலும் மழை காரணமாக சக்தியாக நடைபெறவில்லை. இது தவிர, 2006, 2007லும் மத்தியக்குழு அறைகூவலுக்கேற்ப தமிழகத்தில் நடைபெற்ற இயக்கத்தில் இக்கோரிக்கை இணைக்கப்பட்டு பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

5.149 பெண்கள் மீதான வன்முறைப் பிரச்சனைகளில், மாவட்டக்குழுக்களின் தலையீடு முனைப்பாக இருக்க வேண்டும் என்று கடந்த மாநில மாநாடு சுட்டிக்காட்டியதில், சில மாவட்டங்களில் தவிர, பொதுவாகப் பெரிய முன்னேற்றம் இருப்பதாக கூற முடியாது.

5.150 மாநிலப் பெண்கள் ஆணையத்திற்கு சட்ட அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதைத் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டுச் சென்றுள்ளோம்; தொடர் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

5.151 33 சதவிகித இட ஒதுக்கீடு பெறவும், பெண்கள் மீதான அடக்குமுறை - ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், பெண்களின் வேலைவாய்ப்பு, அந்தஸ்து உயரவும் - சம உரிமை பெறவும் போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

5.152 வர்க்க வெகுஜன அமைப்புகளில் பெண்களைத் திரட்டுவது, தலித் - சிறுபான்மைப் பெண்கள் விஷயத்தில் சிறப்புக் கவனம் செலுத்துவது, ஜனநாயக இயக்கங்களில் பங்கேற்கச் செய்வது, அரசியல்படுத்துவது, கட்சிக்குள் கொண்டு வருவது போன்ற நடவடிக்கைகளில் முன்னேற்றம் காண வேண்டும். பெண்கள் பிரச்சனைகள் குறித்த கட்சியின் ஆவணம் அனைத்து மாவட்டங்களிலும் ரிப்போர்ட் செய்யப்பட வேண்டும். பெண் சமத்துவக் கருத்துக்கள் உள்ளடக்கிய சமூக சீர்திருத்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல்

5.153 2006 அக்டோபர் மாதம் உள்ளாட்சித் தேர்தலை மாநில அரசு நடத்தியது. தலைவர் பதவிக்கு நேரடித் தேர்தல் என்றால், தனக்குப் போதுமான பலன் கிடைக்காது என்ற நோக்கத்தில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களில் மறைமுகத் தேர்தல் நடத்துவது என்று தி.மு.க. முடிவெடுத்தது. சட்டமன்றத் தேர்தலில் திமுகவுடன் உடன்பாடு கொண்ட கட்சிகளுக்கிடையில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அதிமுக அணியில் இருந்து விலகி திமுக அணியில் சேர்ந்தது.

திமுகவுடன் தொகுதி உடன்பாடு

5.154 மாவட்ட அளவில் உள்ளாட்சி மன்றங்களின் வார்டுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு செய்துக் கொள்வதென்றும், ஊராட்சியைத் தவிர மற்ற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் பதவிக்கான தொகுதி உடன்பாட்டை மாநில அளவில் பேசி முடிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

5.155 இதற்கேற்ப மன்றத் தலைவர்கள் பதவிக்கான பேச்சுவார்த்தை மாநில அளவில் சுமுகமாக நடந்து இணக்கமான ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் பல மாவட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நம் கட்சியின் பலத்திற்கு ஏற்ப தொகுதிகளை ஒதுக்கீடு செய்யவில்லை. நம் கட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதிகளிலும் பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கட்சி சின்னத்திலும், சுயேச்சையாகவும் போட்டியிட்டு நமது வெற்றி வாய்ப்பைக் குறைத்தனர். உடன்பாட்டை திமுகவினர் மீறுகிறபோது சரி செய்ய திமுக மாநிலத் தலைமையும், மாவட்டத் தலைமையும் சக்தியாகத் தலையிடவில்லை. தேர்தல் தேதியை தோழமைக் கட்சிகளுக்கு கூடத் தெரிவிக்காமல் தனது நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு திமுக தலைமை நடந்து கொண்டது.

5.156 சென்னையில் நமது கட்சியுடன் முறையான உடன்பாடு காண திமுக தலைமை விரும்பவில்லை. அதே நேரத்தில் காங்கிரஸ், பா.ம.க. ஆகிய கட்சிகளுக்கு அவர்களுடைய பலத்திற்கு மேலாகவே தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. குமரி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியும், திமுகவும் தொகுதி உடன்பாட்டை மீறி பாஜகவுடன் சேர்ந்து நமக்கு எதிராக செயல்பட்டனர்.

5.157 சென்னை மாநகராட்சித் தேர்தலில் திட்டமிட்டு குண்டர்களைப் பயன்படுத்தி வாக்குச் சாவடிகளை கைப்பற்றி ஜனநாயக விரோதமாக திமுக நடந்து கொண்டது. வரலாறு காணாத வன்முறை என பத்திரிகைகள் விவரிக்கும் அளவுக்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. வடசென்னையில் தோழர் தேவி, தென்சென்னையில் தோழர் மணிகண்டன் உட்படப் பல தோழர்கள் தாக்கப்பட்டனர். இத்தகைய மோசடித் தேர்தலை நடத்திட மாநகராட்சி ஆணையரையும், சென்னை மாநகரக் காவல்துறை அதிகாரிகளையும், மாநிலத் தேர்தல் ஆணையரையும் திமுக பயன்படுத்திக் கொண்டது. வாக்கு எண்ணிக்கையின் போது சில இடங்களில் தனது வெற்றிக்காக அதிகாரத்தை திமுக பயன்படுத்தியது.

5.158 *13.10.2006* சென்னை மாநகராட்சித் தேர்தலின் போது நடைபெற்ற வன்முறையைக் கண்டித்து மாநில செயற்குழு சார்பாக உடனடியாக அறிக்கை விடுத்தால், *15.10.2006* அன்று நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத் தேர்தலில் பாதிப்பு உருவாகும் என்பதால் இரண்டு மாவட்டச் செயலாளர்களின் அறிக்கையோடு நிறுத்தினோம். பிறகு மாநில மையம் கூடி *15.10.2006* அன்று இரண்டாம் கட்டத் தேர்தல் முடிந்த பிறகு சென்னையில் திமுகவின் வன்முறையைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டோம். இதற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது.

5.159 புதிய நிலைமையை விவாதிப்பதற்காக மாநில செயற்குழுக் கூட்டத்தையும், மாநிலக்குழுக் கூட்டத்தையும் நடத்தினோம். மாநில செயற்குழு எடுத்த முடிவை மாநிலக்குழு அங்கீகரித்தது. மேலும், சென்னையில் நடைபெற்ற திமுகவின் வன்முறையைக் கண்டித்து இயக்கம் நடத்துவது என்றும், அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்கான தேர்தலில் தோழமைக் கட்சிகளோடு ஒத்துழைப்பது என்றும் மாநிலக்குழு முடிவு செய்தது. *26.10.2006* அன்று சென்னையில் மாநிலச் செயலாளர் கலந்து கொண்ட ஆவேசமான, வலுவான கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. *06.11.2006* அன்று மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

5.160 சென்னை மாநகராட்சித் தேர்தலில் நடந்த வன்முறையை பா.ம.க., காங்கிரஸ், சி.பி.ஐ. விமர்சிக்கவில்லை. காரணம் மோசடித் தேர்தலில் அவர்களும் பலன் அடைந்துள்ளார்கள். ஆனால், உள்ளாட்சித் தலைவர்களுக்கான தேர்தலில் திமுக-வின் அணுகுமுறையினால் திமுக கூட்டணிக் கட்சிகளுக்குள் அறிக்கை, பதிலறிக்கை என்ற சலசலப்பு ஏற்பட்டது. நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தலைவர் பதவிக்கான இடங்களிலும் திமுக போட்டியிட்டு நம்மைத் தோற்கடித்தது. சிபிஐ இந்தத் தேர்தலில் மார்க்சிஸ்ட் எதிர்ப்பு நிலையெடுத்துச் செயல்பட்டது.

5.161 இந்தத் தேர்தலில் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலைக் காட்டிலும் பணம் கோடிக்கணக்கில் செலவிடப்பட்டது. பல இடங்களில் சாதீய, ஸ்தல மட்ட உணர்வுகள் முன்னுக்கு வந்தன; போட்டி வேட்பாளர்கள் கூடுதலாக இருந்தனர். இவற்றை சமாளித்து, கடுமையான சூழலை எதிர்கொண்டு நாம் வெற்றி பெற வேண்டியிருந்தது. மாநகராட்சி வார்டுகள் *19*, நகராட்சி வார்டுகள் *77*, பேரூராட்சி வார்டுகள் *165*, மாவட்ட பஞ்சாயத்து வார்டுகள் *7*, ஒன்றிய வார்டுகள் *94*, ஊராட்சித் தலைவர்கள் *130* என வெற்றி பெற்றோம். உள்ளாட்சித் தலைவர் பதவிக்கு திமுகவுடன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி *85* இடங்கள் ஒதுக்கப்பட்டது. தேர்தலுக்குப் பின்னர் அதிக வார்டுகளில் நாம் வெற்றி பெறாத நிலையில் நமக்கு *40* இடங்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. பண பலம், அதிகார பலத்தைப் பயன்படுத்தி திமுக தங்களது கோஷ்டியினரைப் போட்டியிடச் செய்ததின் விளைவாக நாம் *16* இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. ஒப்பந்தப்படி திமுக செயல்பட்டிருந்தால் இன்னும் கூடுதலான இடங்களில் நாம் வெற்றி பெற்றிருக்க முடியும்.

நாம் வெற்றி பெற்ற விபரம்

அ. மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர்	1	-	நாகை மாவட்டம்
ஆ. நகராட்சி மன்றத் தலைவர்கள்	4	-	(கோவில்பட்டி, பழனி, சிதம்பரம், திருவொற்றியூர்)
இ. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்	4	-	45குஜிலியம்பாறை (திண்டுக்கல்) கீழையூர், கீழ்வேளூர், தலைஞாயிறு (நாகை))
ஈ. பேரூராட்சித் தலைவர்கள்	7	-	(குமரியில் 3, மதுரை 1, ஈரோடு 1, திருவாரூர் 1, கோவை 1)

5.162 இவை தவிர திண்டுக்கல் நகராட்சி, நாகை ஊராட்சி ஒன்றியம், சேலம் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல் சின்னாளப்பட்டி பேரூராட்சி, மதுரை விளாங்குடி பேரூராட்சி, தென்சென்னை பீர்க்கங்கரணை பேரூராட்சி , குமரியில் திருவட்டார் பேரூராட்சி, தாளக்குடி பேரூராட்சி ஆகியவற்றில் நமது தோழர்கள் துணைத் தலைவர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

5.163 சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின் ஆட்சி அமைத்த திமுக தேர்தல் கால வாக்குறுதிகளை செயல்படுத்த எடுத்த நடவடிக்கைமட்டுமல்லாது, அதிகார பலமும், பண பலமும், கூடுதல் வெற்றியைப் பெற உதவியுள்ளது. அதிமுகவுக்குப் பெரும் பின்னடைவு ஏற்படவில்லை. காங்கிரஸ், பாமக, திமுகவின் அரவணைப்பில் ஓரளவு வெற்றி பெற்ற சிபிஐ சில இடங்களைத் தக்க வைத்துக் கொண்டது. பாஜக தனியே நின்று தங்களைத் தக்க வைத்துக் கொண்டது. தேமுதிக பல வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது.

5.164 உள்ளாட்சி மன்றத் தேர்தல் தயாரிப்புகளை முன்கூட்டியே திட்டமிடாத குறைபாடு இருந்தது. நிதி நெருக்கடியும் இருந்தது. ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம். அதே சமயம் கடந்த காலங்களில் நாம் வெற்றி பெற்ற சில இடங்களில் நம் தோழர்களின் தவறான செயல்பாடுகள் காரணமாக இப்போது தோல்வியடைந்துள்ளோம். கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத ஸ்தாபன மீறல்களுக்காக சில இடங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. மேலும், உள்ளாட்சித் தலைவர் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தலை நாம் ஏற்றுக் கொண்டது தவறானது என்பதை அனுபவம் உணர்த்துகிறது.

5.165 சென்னை மாநகராட்சியில் தேர்தல் வன்முறை - தில்லுமுல்லுகளைத் தொடர்ந்து கண்டன இயக்கங்கள் நடத்தப்பட்டதோடு, நாம் போட்டியிட்ட எட்டு வார்டுகளுக்கு மறு தேர்தல் நடத்தக் கோரினோம். அதிமுக அனைத்து வார்டுகளுக்கும் மறுதேர்தல் கோரி நீதிமன்றம் சென்றது. நாமும் நீதி மன்றம் சென்றோம். நம் தரப்பு வாதம் கோரிக்கைக்கு வலு சேர்த்தது. 99 வட்டங்களுக்கு மறு தேர்தல் நடத்த வேண்டுமென்றும் ஒரு நீதிபதியும், இதை மற்றொரு நீதிபதி ஏற்க மறுக்கும் நிலையில் மூன்றாவது நீதிபதி தீர்ப்பளிக்க வேண்டிய நிலை உருவானது. நமது கட்சியுடன் வேறு சில கட்சிகளும் மறு தேர்தல் நடத்த வலியுறுத்தி அறிக்கைகள் விடுத்தன. பத்திரிகை, ஊடகங்களிலும் விவாதங்கள் உருவாயின. இந்தப் பின்னணியில் 2007 பிப் 18 அன்று 99 வார்டுகளில் மறு தேர்தல் நடைபெற்றது. முதலில் போட்டியிட்ட 8 வார்டுகளிலும் போட்டியிட்டு 59வது வட்டத்தில் வெற்றி பெற்றோம்.

5.166 சென்னையில் நாம் போட்டியிட்ட எட்டு வார்டுகளுக்கு மட்டும் மறுதேர்தல் கோரியது சரியல்ல. மாறாக, தேர்தல் வன்முறை தில்லு-முல்லு நடந்த அனைத்து வார்டுகளுக்கும் மறுதேர்தல் நடத்த நாம் வலியுறுத்தியிருக்க வேண்டும் என்பது படிப்பினையாகும்.

5.167 தேர்தல் வன்முறை - அராஜகங்களை எதிர்கொண்டு ஜனநாயக ரீதியாகத் தேர்தல் நடத்த வலியுறுத்தி நடைபெற்ற இயக்கங்களில் கட்சியின் வடசென்னை - தென்சென்னைத் தோழர்கள் பணி குறிப்பிடத்தக்கதாகும். மக்களிடம் நமது மரியாதை உயர்ந்தது.

5.168 நாம் வெற்றிபெற்றுள்ள தலைவர் பொறுப்பு மற்றும் வார்டுகளில் ஊழலற்ற - நேர்மையான நிர்வாகத்தை செயல்படுத்த வேண்டும். வழிகாட்ட கட்சி கமிட்டிகள் உத்தரவாதமான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரம், நிதி ஒதுக்கீடு வலியுறுத்த வேண்டும். ஸ்தல மட்டத்தில் அடிப்படை வசதிகளுக்கான கோரிக்கைகளை முன்வைத்து இயக்கம் நடத்துவதோடு, இதர கட்சிகளின் ஊழல் மற்றும் முறைகேடுகளை அம்பலப்படுத்தும்

நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். கட்சி வர்க்க - வெகுஜன அமைப்புகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கோவில்பட்டி நகராட்சி

5.169 கோவில்பட்டி நகர்மன்ற அதிமுக உறுப்பினர், கட்சியின் மாநிலக்குழு உறுப்பினரும், கோவில்பட்டி நகர் மன்றத் தலைவருமான தோழர் ஆர். மல்லிகாவை அநாகரீகமாகப் பேசியதைக் கண்டித்து மாதர் இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம், பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. மக்கள் மத்தியில் விளக்க நோட்டீஸ் பரவலாக வினியோகிக்கப்பட்டது. தூத்துக்குடி, விருதுநகர், நெல்லை, மதுரை மாநகர், மதுரை புறநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து 1300க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட தர்ணாப் போராட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபரைக் காவல்துறை கைது செய்ய நேர்ந்தது. உரிய நேரத்தில் நடத்தப்பட்ட இயக்கமாக இது அமைந்தது.

கூட்டுறவுத் தேர்தல்

5.170 கடந்த முறை இருந்த உறுப்பினர் பட்டியல்படி தேர்தல் நடத்துவது என திமுக அரசு அறிவித்தது. இதனை ஆட்சேபித்து அதிமுக, மதிமுக போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்தது. எனினும் திமுக, காங்கிரஸ், பாமக, சிபிஐ தேர்தலைச் சந்திக்க தயாராயின. நாம் தனியாகப் போட்டியிடுவது, தேவையையொட்டிப் பொருத்தமான தனிநபர்களுடன் சேர்ந்து நின்று போட்டியிடுவது, அரசியல் ரீதியான அணிசேர்க்கை அவசியமில்லை எனவும் முடிவெடுத்து வழிகாட்டினோம். தேர்தலைச் சந்தித்தோம்.

5.171 அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளையும் கைப்பற்றும் வகையில் திமுக அதிகார துஷ்பிரயோகம், முறைகேடுகள், தில்லுமுல்லுகளில் ஈடுபட்டனர். பல இடங்களில் வேட்பு மனுத் தாக்கலுக்குக் கூட மாற்றுக் கட்சியினரை அனுமதிக்கவில்லை. பல இடங்களிலும் திமுக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த நடைமுறையை நாம் வலுவாக எதிர்த்து அறிக்கை விடுத்தோம். கண்டன இயக்கங்களும் நடத்தப்பட்டன. இந்தப் பின்னணியில் அனைத்துத் தேர்தல்களையும் ரத்து செய்து திமுக அரசு அறிவிப்பு வெளியிட்டது. ஜனநாயக ரீதியிலும், முறையாகவும், உடனடியாகவும் இத்தேர்தலை நடத்த இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

5.172 நாடு முழுவதும் முதல் கட்டமாக 200 மாவட்டங்களில் 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது. தமிழகத்தில் நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் இத்திட்டம் செயலாக்கத்தின் கீழ் வந்தது. பின்னர் கூடுதலாக நெல்லை, திருவாரூர், தஞ்சை, கரூர் ஆகிய 4 மாவட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் வந்துள்ளன. ஆக 10 மாவட்டங்களில் வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

5.173 நமது கட்சியின் தொடர்ந்த வற்புறுத்தலின் விளைவாகவே இத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இது நமக்குக் கிடைத்த வெற்றியாகும். இதன் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு குறைந்தபட்ச நிவாரணம் கிடைக்கும். எனவே இத்திட்டத்தின் முறையான அமலாக்கத்திற்கு கட்சியின் வலுவான, தொடர்ச்சியான தலையீடு அவசியம் என்று மத்தியக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

5.174 திட்ட செயலாக்கம் மற்றும் விபரங்கள் குறித்து திட்டப் பணிகள் நடைபெறும் மாவட்ட ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கத் தீர்மானிக்கப்பட்டு கடலூரில், திண்டுக்கல்லில் பயிற்சி முகாம் நடத்தினோம். வி.தொ.ச., வாலிபர், மாதர் அமைப்பின் மாநில தலைவர்களும், மாவட்டத் தலைவர்களும், இவ்வரங்கங்களுக்குப் பொறுப்பான கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்களும், கட்சியின் கிராமப்புற இடைக்குழுச் செயலாளர்களும் இம்முகாமில் பயிற்சி பெற்றனர்.

5.175 மாவட்டங்களில் நமது தலையீடுகள் குறித்து மாவட்ட மாநாட்டு அறிக்கைகள் சில விபரங்களைத் தெரிவிக்கின்றன.

5.176 விழுப்புரம் மாவட்டத்தில் 20 ஒன்றியங்களில் 149 கிராமங்களைத் தேர்வு செய்து, கிராமப் பொறுப்பாளர்கள் தீர்மானிக்கப்பட்டுத் தலையீடு செய்யப்பட்டுள்ளது. நமது தலையீட்டினால் ஆரம்பத்தில் ரூ. 60ஆக இருந்த கூலி பின்னர் ரூ. 80ஆக உயர்த்தப்பட்டது. வேலைத் தளங்களில் எந்திரங்கள் பயன்படுத்தப்படுவதும் நிறுத்தப்பட்டுள்ளது.

5.177 கடலூர் மாவட்டத்தில் நமது முயற்சியினால் சில ஒன்றியங்களில் பெரும் பகுதி மக்களுக்கு 85 நாட்கள் வேலை கிடைத்துள்ளது. முறையாகக் கூலி கொடுக்கப்படாத இடங்களில் நாம் தலையிட்டு கூலி வழங்கப்பட்டுள்ளது. வேலைத் திட்டம் இல்லாத இடங்களில் நாம் போராடி வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டு கிராம மக்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

5.178 நாகை மாவட்டத்தில் நாம் சக்தியாக உள்ள இடங்களில் தினக்கூலி ரூ. 80 கொடுக்கப்படுகிறது. குறைவாக கூலி உள்ள இடங்களில் நாம் தலையிட்டு சட்டக்கூலி கிடைத்துள்ளது. இதேபோல, திருவண்ணாமலை, சிவங்கை, நெல்லை, தஞ்சை, திருவாரூர், திண்டுக்கல், கரூர் ஆகிய மாவட்டங்களிலும் நமது தலையீட்டினால் கிராம மக்களுக்கு சட்டக்கூலியும், வேலையும் கிடைத்துள்ளன.

5.179 மேற்கண்ட திட்டத்தில் நமது தலையீடுகளும், நடவடிக்கைகளும் திட்ட அமலாக்கக் குறைபாடுகள், முறைகேடுகளைக் களையவும், பயனாளிகளுக்குக் குறைந்தபட்ச வேலை மற்றும் கூலி உத்தரவாதம் கிடைக்கவும் பயனளித்துள்ளது. எனினும், நமது தலையீடுகள் மிகக் குறைவே. இத்திட்ட செயலாக்கம் உள்ள மாவட்டங்களில் ரூ. 80 சட்டக்கூலி கிடைக்கும் இடங்களில் இதர கிராமப்பணிகளுக்கு சற்றுக் கூடுதல் கூலி கொடுத்தால்தான் வேலையாள் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. வி.தொ.ச. உறுப்பினர் பதிவு அதிகரித்துள்ளது. கட்சிக்கான தொடர்புகளும் உருவாகியுள்ளன. எனவே வலுவான திட்டமிடுதலும், தலையீடும் தேவை.

5.180 கிராமப்புற வேலை உறுதித் திட்டம் முறையாக செயல்படுத்தப்படுவதற்கு கட்சி உறுப்பினர்களும், கட்சிக் கிளைகளும், வர்க்க-வெகுஜன அரங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும் என்று மத்தியக்குழு வலியுறுத்துகிறது. இத்திட்டம் குறித்து இன்சூரன்ஸ் அரங்கம் நிதி ஒதுக்கிப் பிரச்சாரப் பணிகளைச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். வேலை உறுதித் திட்ட அமலாக்கப் பணிகளில் நமது இயக்கம் மட்டுமே களத்தில் உள்ளது. முதலாளித்துவக் கட்சிகள் இதில் அக்கறை செலுத்த மாட்டார்கள். எனவே, கிராம மக்களை அணித்திரட்டுவதற்கும் நமது அரசியலைக் கொண்டுச் செல்வதற்கும் இத்திட்டப் பணிகளில் நமது தலையீடுகளை திட்டமிட்டு முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

ஸ்தல இயக்கங்கள்

5.181 விருதுநகர், கடலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருப்பூர், நெல்லை, நாமக்கல், திருவண்ணாமலை, வேலூர், புதுச்சேரி, தென்சென்னை, வடசென்னை ஆகிய மாவட்டங்களில் ஸ்தல மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்கான இயக்கங்களும், முன்வந்த ஸ்தல மட்டப் பிரச்சனைகளில் தலையீடுகளும் அதிகரித்துள்ளன.

5.182 தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆற்று மணல் கொள்ளையை எதிர்த்த இயக்கங்கள் நடந்துள்ளன. கோவை மேற்கு மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை மக்களின் குடியிருப்புகளை அப்புறப்படுத்த மாநகராட்சி எடுத்த நடவடிக்கையை எதிர்த்து ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டி நடத்தப்பட்ட இயக்கத்தைத் தொடர்ந்து மாநகர் நிர்வாகம் அப்புறப்படுத்தும் நடவடிக்கையை நிறுத்தியுள்ளது. திண்டுக்கல், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் ஆதிதிராவிட நலத்துறை கட்டிக் கொடுத்த பழுதடைந்த வீடுகளை மராமத்து செய்ய வலியுறுத்தி தலித் மக்களைத் திரட்டி நடத்தப்பட்ட முற்றுகை போராட்டத்தைத் தொடர்ந்து மராமத்துப் பணிகள் நடைபெற்றன. கொடைக்கானல் வட்டம் வில்பட்டி மற்றும் ஆறுகிராம மக்கள் மயான வசதி கேட்டுக் கிடைக்காத நிலையில், இறந்த குழந்தை சடலுத்துடன் அக்டோபர் 2007ல் கிராம மக்களைத் திரட்டி சாலை மறியல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து மயான வசதிக்காக 63 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை நல்ல தலையீடுகளாகும்.

5.183 நாகை மாவட்டத்தில் தரங்கம்பாடி புத்தூர் கிராமத்தில் 53 தலித் குடும்பங்களின் குடிசைகளை காவல்துறை பிரித்து எறிந்தது. அதை எதிர்த்த கிராம மக்கள் மீதும் கட்சித் தலைவர்கள் மீதும் காவல்துறை கடுமையான தாக்குதல்களை நடத்தி, கிராம மக்களை சிறையில் அடைத்தது. இதனைக் கண்டித்து வலுவான மறியல் போராட்டம் நடத்தியதோடு, அவர்களுக்கு மனைப்பட்டா பெற்றுத்தரும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

5.184 இதர மாவட்டங்களிலும் முன்வந்த உள்ளூர் பிரச்சனைகளுக்காகவும், ஸ்தல மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்காகவும் இயக்கங்கள் நடந்துள்ளன. எனினும், போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதை மாவட்ட மாநாட்டு அறிக்கை விபரங்கள் தெரிவிக்கின்றன. நடத்தப்பட்ட ஸ்தல இயக்கங்களும் அடையாளப்பூர்வமாகவே நடந்துள்ளன. இத்தகைய செயல்பாடு கட்சியை விரிவுபடுத்த உதவாது. எனவே இதில் ஒரு முறிப்பை ஏற்படுத்த வேண்டும். மக்கள் திரளில் பெரும்பகுதி மக்களைப் பாதிக்கும் ஸ்தல பிரச்சனைகளையும், உலகமய பாதிப்பால் ஏற்படும் உள்ளூர் பிரச்சனைகளையும் கண்டறிந்து கையிலெடுப்பது, தீர்வுகாண அப்பகுதி மக்களைத் திரட்டித் தொடர்ந்து போராடுவது, போராட்டத்தின் மூலம் மக்களின் நம்பிக்கையைப் பெறுவது - இதன் மூலமே கட்சியை விரிவுபடுத்த முடியும்.

5.185 இதற்குக் கட்சிக் கிளைகளை, உறுப்பினர்களைத் தயார் செய்யும் பணியை அனைத்து மாவட்டக்குழுக்களும் உடனடிக் கடமையாக கொள்ள வேண்டும். முன்னின்று வழிகாட்ட வேண்டும்.

முன்வந்த சில முக்கிய பிரச்சனைகள்

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சனை

5.186 கேரளத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவது குறித்து இரு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகத் தீர்வு காண உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இதுவே நமது நிலையுமாகும். முதலமைச்சர் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடந்தன; தொடர்ந்து அமைச்சர்கள் மட்டத்திலும் பேச்சுவார்த்தைகள் நடந்தன. எனினும் தீர்வு எட்டப்படவில்லை.

5.187 '142 அடியாக உயர்த்தினால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்க நேரிடும் என்பதால் நீர்மட்டத்தை உயர்த்த இயலாது; அதே சமயம் தமிழகத்தின் தண்ணீர் தேவையைப் புதிய அணை கட்டுவதின் மூலம் நிறைவேற்ற முடியும்', என்று கேரள அரசு தெரிவிக்கிறது. இதை ஏற்க இயலாது என்றும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி பழைய அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திட வேண்டுமென்றும் தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. தமிழகத்தின் அனைத்துக் கட்சிக் கூட்ட முடிவும் இதுவேயாகும்.

5.188 இந்நிலையில், இரு மாநில மக்களிடம் குரோதத்தைக் கிளறி, மோதலை உருவாக்கப் பல்வேறு சக்திகள் முயற்சித்தன. சில தீவிரவாத குழுக்களும் நம்மைத் தாக்கிப் பிரச்சாரம் செய்தது; சி.பி.ஐ. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் நம்மைத் தாக்கி அல்லது விமர்சித்துப் பிரச்சாரம் செய்தன.

5.189 தி.மு.க.வும், தமிழக அரசும் நிதானமாக நடந்து கொண்டன. தமிழக நலன், இரு மாநில மக்கள் ஒற்றுமை அடிப்படையில் நாம் அறிக்கைகள் வெளியிட்டோம். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதின் மூலமே இப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர முடியும். கட்சியின் அரசியல் தலைமைக்குழுவும் பேசித் தீர்வுகாண வழிகாட்டியுள்ளது.

5.190 இப்பிரச்சனையில் நமது நிலைபாட்டை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை யொட்டி முல்லைப் பெரியாறு நீர்ப்பாசனப் பகுதியான மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுதம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தை டிசம்பர் 2006இல் நடத்திக் கருத்தறிந்தோம்; நமது நிலையையும், தெளிவுபடுத்தினோம். தொடர்ந்து தீக்கதிரில் விளக்கக் கட்டுரை வெளியிட்டோம். சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு பொதுக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், மூலமும் நமது நிலைபாடு மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது.

5.191 பிரச்சனை இன்னும் தீர்வு காணப்படாமல் உள்ளது. தற்போது டிசம்பர் 2007இல் முதல்வர் மட்டப் பேச்சுவார்த்தை மீண்டும் நடந்துள்ளது. பேச்சுவார்த்தை தொடரும் நிலையில் உள்ளது. இரு மாநில மக்கள் நலன் கருதியும், பிரச்சனையின் தீவிரம் கருதியும் இரு மாநில அரசுகளும், தாமதமின்றித் தீர்வுக்கு வழிகாண நாம் வலியுறுத்துவது அவசியம்.

நெய்யாறு கால்வாய் பிரச்சனை

5.192 தமிழகத்துக்கு 40 ஆண்டுகளாகக் கிடைத்து வந்த நீர்வரத்து 2004 இல் கேரளத்தில் காங்கிரஸ் ஆட்சியின்போது நிறுத்தப்பட்டுள்ளது. குமரி மாவட்ட விளவங்கோடு பகுதி விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. குமரி மாவட்டக்குழு சார்பில் கேரள அரசிடம் முறையிடப்பட்டு மக்களைத் திரட்டிப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. 2006-இல் நமது தலைமையில் அரசு அமைந்தது. கேரள முதல்வரையும், கட்சியின் மாநிலச் செயலாளரையும் சந்தித்துப் பிரச்சனைக்குத் தீர்வுகாணக் கோரப்பட்டது. அரசியல் தலைமைக் குழு கவனத்திற்கு கொண்டு சென்றோம். உள்ளாட்சித் தேர்தலில் நமது வெற்றியை குமரி மாவட்டத்தில் சில இடங்களில் இது பாதித்தது. அரசியல் தலைமைக்குழு கேரள கட்சிக்கு வழிகாட்டியுள்ளது. மோதல் நிலை ஏற்படாமல் விரைந்து தீர்வு காண வேண்டியுள்ளது.

சேலம் ரயில்வே கோட்டம்

5.193 பாலக்காடு கோட்டத்தில் சில பகுதிகளைப் பிரித்து சேலத்தில் புதிய ரயில்வே கோட்டம் உருவாக்கப்பட்ட நிலையிலும் கேரள அரசின் அணுகுமுறையை சுட்டிக்காட்டி தமிழகத்தில் தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சிகளும் நம்மைக் கடுமையாகத் தாக்கிப் பிரச்சாரம் செய்தன; போராட்டம் நடத்தின.

5.194 இந்தப் பிரச்சனையை அரசியல் தலைமைக்குழு கவனத்திற்குக் கொண்டு சென்றோம். தற்போது சேலம் ரயில் கோட்டம் உருவாக்கப்பட்டு, பிரச்சனை முடிவுக்கு வந்துள்ளது.

தோழர் பி.ஆர். நூற்றாண்டு விழா

5.195 சிஐடியு மாநில மாநாட்டு முடிவின்படி தோழர் பி.ஆர். அவர்கள் நூற்றாண்டை முன்னிட்டு மதுரையில் அவரது சிலையினை நிறுவும் முன்முயற்சி எடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கட்சியும், சிஐடியுவும் சேர்ந்து சிலை திறப்பு விழாவினை நடத்தலாம் என்ற கட்சியின் மாநில செயற்குழு ஆலோசனையை சிஐடியுவும் ஏற்றுக் கொண்ட நிலையில், இரு அமைப்புகளின் சிறந்த தயாரிப்புப் பணிகளின் விளைவாக 2007 செப்டம்பர் 20 அன்று மதுரையில் சிலை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. சிஐடியு சார்பில் உருவாக்கப்பட்ட பி.ஆர். வெண்கலச் சிலையை தோழர் பிரகாஷ்காரத் திறந்து வைத்தார். சிபிஐ சார்பில் மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் பங்கேற்றார். தோழர் என்.வி., ஆர்.யு., கே.வி. மற்றும் மாநில, மாவட்டத் தலைவர்கள், பி.ஆர். குடும்பத்தினர், தொழிலாளிகள், தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடு, சிலை உருவாக்கம் ஆகியவற்றில் மதுரை மாவட்ட சி.ஐ.டி.யு. பணி குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆண்டு முழுவதும் தோழர் பி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னெடுத்துச் செல்லவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- மாவட்டங்களில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தி. பி.ஆர். பங்களிப்புகளையும், தியாகத்தையும் நமது அணிகளுக்கு எடுத்துச் செல்வது.
- 2008 ஆண்டுக்கான தீக்கதிர் மற்றும் தொழிற்சங்க அமைப்புகள் வெளியிடும் காலண்டர்களை தோழர். பி.ஆர். உருவப்படம் தாங்கி வெளியிடச் செய்வது.
- பி.ஆர். பிறந்த வேப்பத்தூர் கிராமத்தில் அவரது இல்லத்தில் நினைவு நூலகம் ஏற்படுத்த தஞ்சை மாவட்டக்குழு சார்பில் ஏற்பாடுகள் செய்வது.
- நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சியை சென்னையில் சிறப்பாக நடத்துவது.

எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி புனர் நிர்மாணப் பணிகள்

5.196 சுனாமி பாதிப்பு பகுதிகளில் நமது நிவாரணப் பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. தமிழகத்திலும், கட்சியின் மத்தியக்குழு, மேற்குவங்க மாநிலக்குழு சார்பாகவும் வசூலான நிதியைப் பயன்படுத்தி நாகை, கடலூர், குமரி, காஞ்சிபுரம், புதுச்சேரி மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பயன்தரும் வகையில் சமுதாயக் கூடம், பள்ளிக் கட்டிடம், நூலகம் போன்றவை அமைத்துத் தருவது என்று முடிவு செய்தோம். இதனைத் தொடர்ந்து நாகையில் தோழர்கள் பீமன்பாசு, என்.வி., கலந்து கொண்டு பள்ளிக் கட்டிடப் பணித் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. சமுதாயக் கூடமும் அமைத்துத் தரப்பட்டுள்ளது. கடலூரில் சமுதாயக் கூடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. காஞ்சி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் இடம் ஒதுக்கித் தந்துள்ளது. சமுதாயக் கூடம் அமைக்கும் பணி துவக்க வேண்டியுள்ளது. புதுச்சேரியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கான பயிற்சி மற்றும் கருத்துக்கருவூல மையம் ஒன்று அமைத்துச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பணிகள் துவங்கப்பட வேண்டும். சுனாமி புனர் நிர்மாணப் பணிகளில் சி.ஐ.டி.யு. மற்றும் இன்சூரன்ஸ் அரங்கம் பல லட்சம் நிதி உதவி செய்தது சிறப்புக்குரியதாகும்.

நந்திகிராம் பிரச்சினை

5.197 மேற்குவங்கம், நந்திகிராம் சம்பவங்களை அரசியலாக நமக்கு எதிராகப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், முதலாளித்துவ கட்சிகள் மக்களிடம் எடுத்துச் சென்றன. கட்சி அணிகளிடமும் கேள்விகள் எழுந்தன. இந்நிலையில் நடந்த உண்மைகளைக் கட்சி அணிகளிடம் விளக்கினோம். கட்சிக் கடிதம் வெளியிட்டும் விபரங்களைக் கிளைகளுக்கு எடுத்துச் சென்றோம். தொடர்ந்து மக்களுக்கு விபரங்களைத் தெரிவிக்கும் வகையிலும், நம்மீது வாரி இறைக்கப்படும் அவதூறுகளை அம்பலப்படுத்தும் வகையிலும் நடந்த உண்மைகளை விளக்கி தமிழகம் முழுவதும் *1246* தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. *6* லட்சம் துண்டு பிரசுரங்களும், *14000* சுவரொட்டிகளும் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. *2,08,500* சிறுபிரசுரம் 'ஊடகங்கள் மறைக்கும் உண்மைகள்' மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. சுமார் *7* லட்சம் மக்களைச் சந்தித்து உண்மைச் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டன. நமது பொதுக் கூட்டங்களில், தீக்கதிர் மற்றும் பத்திரிகைகளில் உண்மைச் செய்திகள் கொண்டு செல்லப்படுகின்றன. சிபிஐ நம்மை விமர்சித்தது. திமுக மட்டுமே நிதானமாக நடந்து கொண்டது.

தன்னார்வத் தொண்டு அமைப்புகள் குறித்து

5.198 தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஏராளமான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்தும், மத்திய - மாநில அரசுகளிடமிருந்தும் மற்றும் பல தொழில் நிறுவனங்களிலிருந்தும் நிதி பெற்று கல்வி, சுகாதாரம், மனித உரிமை, கலாச்சாரம், குழந்தைத் தொழிலாளர்- வறுமை ஒழிப்பு, சிறுசேமிப்புக் குழுக்கள் துவக்கி இயக்குதல் போன்று பல பணிகளைச் செய்து வருகின்றன. இதில், அந்நிய நிதிப்பெறும் சில தொண்டு நிறுவனங்கள் உண்மையான சேவை அமைப்புகளல்ல - நிதியைப் பெறுவதற்காகவே செயல்படும் அமைப்புகளாக உள்ளன. சில தொண்டு நிறுவனங்கள் உண்மையாகச் செயல்படுகின்றன. குறிப்பாக சுயஉதவிக்குழுக்களில் பெரும்பகுதி தமிழகத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலைமையில்தான் இயங்கி வருகின்றன. பொதுவாகத் தொண்டு நிறுவனங்கள் செய்யும் பல பணிகள் மக்கள் மத்தியில் போராட்ட உணர்வை உருவாக்குவதற்கு மாறாக, சேவை மூலம் மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றன. இருப்பினும், சேவை மூலமும் பல பணிகளை இன்றையச் சூழலில் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டியுள்ளது. எனவே, தொண்டு நிறுவனங்களில் உண்மையான மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அமைப்புகள் எவை?, மக்கள் நலன்சாராத சுயநலத்திற்காக செயல்படும் அமைப்புகள் எவை?, என்பதைக் கண்டறிந்து, இதற்கேற்ற அணுகுமுறையைக் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய அவசியமுள்ளது. கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளில் அரசு சாரா அமைப்புகள், குறிப்பாக அறிவியல் இயக்கம் போன்ற அமைப்புகள், செய்து வரும் பணி முக்கியமானது. இத்தகைய பணி வெற்றிபெறுவதற்கு நாம் உதவி

செய்வதோடு, எதிர்காலத்தில் மாநிலத்தில் உள்ள தொண்டு நிறுவனங்கள் பற்றி ஆய்வு செய்து நாம் பொருத்தமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

வர்க்க - வெகுஜன அமைப்பு மாநாடுகள்

- மாணவர் சங்க மாநில மாநாடு 2005 ஜூலை 29-31ல் நெல்லையில் நடந்தது. பேரணியில் 3500 மாணவர்கள் பங்கேற்பு.
- மாதர் சங்க மாநில மாநாடு 2005 ஆகஸ்ட் 6-8ல் திருச்சியில் நடந்தது. பேரணியில் 7000 பெண்கள் பங்கேற்பு.
- வாலிபர் சங்க வெள்ளி விழா மாநில மாநாடு 2005 ஆகஸ்ட் 26-28ல் விருதுநகரில் நடந்தது. பேரணி, பொதுக்கூட்டத்தில் 17,000 பேர் பங்கேற்பு.
- சிஐடியு மாநில மாநாடு 2006 டிசம்பர் 17-20ல் திருப்பூரில் நடைபெற்றது. பேரணி - பொதுக்கூட்டத்தில் 50,000 பேர் பங்கேற்பு.
- விவசாய சங்க மாநில மாநாடு 2006 ஜனவரி 5-7ல் தஞ்சாவூரில் நடைபெற்றது. பேரணி - பொதுக்கூட்டத்தில் 10,000 பேர் பங்கேற்பு.
- வி.தொ.ச. மாநில மாநாடு 2007 ஜனவரி 6-8ல் நாகையில் நடைபெற்றது. பேரணி - பொதுக்கூட்டத்தில் 7,000 பேர் பங்கேற்பு.
- வாலிபர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு 2007 மே 7-11ல் சென்னையில் நடைபெற்றது. பேரணி - பொதுக்கூட்டத்தில் 44,000 பேர் பங்கேற்பு.

இதரவை

5.199 இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை இன்னும் தீர்வுகாணப்படாத நிலை தொடர்கிறது. இப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வே நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஆனால் எல்டிடி.இ.ஆதரவு சக்திகள் கண்டன இயக்கங்கள் நடத்தி தமிழகத்தில் இன வெறியைக் கிளறும் அரசியல் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றன. சமீபத்தில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற குமரி மாவட்ட மீனவர்கள் 9 பேரில் 5 பேர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர், 4 பேர் பிணைக் கைதிகளாக சிறை வைக்கப்பட்டனர். இதனைக் கண்டித்தும் சிறைவைக்கப்பட்டவர்களை விடுவிக்க வலியுறுத்தியும் நமது கட்சியின் முன்முயற்சியால் குமரி மாவட்டத்தில் 'முழுஅடைப்புப் போராட்டம்' நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இப்பிரச்சனையில் தமிழீழ ஆதரவு சக்திகளின் தவறான பிரச்சாரம் அம்பலப்பட்டது.

5.200 தினகரன் நாளிதழ் நடத்திய கருத்துக்கணிப்பு முடிவை பத்திரிகையில் வெளியிடப்பட்டதை எதிர்த்து மதுரையில் மு.க. அழகிரி மற்றும் திமுகவினர் தினகரன் பத்திரிகை அலுவலகத்திற்கு தீ வைத்து நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தோம். நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரையில் உடனடியாகப் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். இது மாநில அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

5.201 மேலும், ஜனநாயக உரிமைகளுக்கு மறுப்பு, காவல்துறை அத்துமீறல்கள், ஏழை எளிய மக்கள் மீதான தாக்குதல்கள், அரசின் நிர்வாகத்திலும், உள்ளாட்சி நிர்வாகத்திலும் நடைபெறும் ஊழல், லஞ்ச லாவண்யம், காண்ட்ராக்ட் கொள்ளை, மணல் கொள்ளை, கோக் - பெப்சி நிலத்தடி நீர் கொள்ளை, சில்லரை வர்த்தகத்தில் ரிலையன்ஸ், வால்மார்ட் மற்றும் நிறுவனங்கள் நுழைவு ஆகியவற்றை எதிர்த்து மாவட்ட அளவில் பல்வேறு இயக்கங்கள் நடைபெற்றுள்ளன.

கடந்த மூன்றாண்டுகளில்

- கட்சியின் அரசியலையும், மாற்றுக் கொள்கைகளையும் பரவலான மக்களிடம் எடுத்துச் சென்றுள்ளோம்.
- ஏகாதிபத்திய எதிர்ப்பு, தாராளமயக் கொள்கை எதிர்ப்பு போன்ற இயக்கங்களில் கடந்த காலத்தை விடக் கூடுதலான மக்களைத் திரட்டியுள்ளோம். அதே சமயம், வகுப்புவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் நமது கவனம் குறைவு. தொடர்ச்சியான கவனம் அவசியம்.

- நிலம், வேலை, உணவுக்கான இயக்கத்தை வலுவாக நடத்தியுள்ளோம். குறிப்பாக, நிலம், மனைப்பட்டாவுக்கான இயக்கத்தை மக்கள் இயக்கமாக நடத்தியுள்ளோம். இதில் சில வெற்றிகளும், ஸ்தாபன தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன. மேலும் தீவிரமான போராட்டங்களுக்குத் திட்டமிட வேண்டும்.

- மத்திய - மாநில அரசுகளின் தவறான கொள்கைகளை எதிர்த்த இயக்கங்களும் மத்திய அரசின் குறைந்தபட்ச திட்டத்தை செயல்படுத்த நிர்ப்பந்திக்கும் இயக்கங்களும் நடத்தப்பட்டுள்ளன. நமது மாற்றுக் கொள்கைகளும் ஓரளவு மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

- அதிமுக அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவதிலும், திமுக அரசு அமைவதிலும் நமது பங்களிப்பைச் செய்துள்ளோம். நமது சட்டமன்ற பலம் உயர்ந்துள்ளது. எனினும், உள்ளாட்சிகளில் நமது பிரதிநிதித்துவம் அதிகப்படவில்லை.

- ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வுரிமைப் போராட்டத்தில் சம அந்தஸ்து, சம உரிமைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளோம். தலித் மற்றும் அருந்ததியர் மக்களிடம் நமது செல்வாக்கு உயர்ந்துள்ளது. பெண்கள் நலன், சிறுபான்மையினர் நலன் ஆகியவற்றில் நமது தலையீடுகள் போதாது; எனினும், நமது பணிகளைத் துவக்கியுள்ளோம். நாம் நடத்தும் மறியல் போன்ற இயக்கங்களில் பெண்கள் பங்கேற்பு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

- வர்க்க - வெகுஜன அமைப்புகளின் சார்பிலான இயங்கங்கள், போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

- ஸ்தல மக்கள் பிரச்சனைகளுக்கான இயக்கங்கள், கிராமப்புற வேலை உறுதித் திட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றில் நமது தலையீடுகள் உள்ளன. வலுவான தொடர்ச்சியான தலையீடுகளை உறுதிப்படுத்த வேண்டும்.

- இத்தகைய நடவடிக்கைகளால் இக்காலத்தில் தமிழக மக்களிடம் ஓரளவு நெருங்கிச் செயல்பட்டுள்ளோம். கட்சியினுடைய செல்வாக்கு, மரியாதை மேலும் உயர்ந்துள்ளது. அதேசமயம் நமக்கிருந்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தினோமா?, முழுசக்தியையும் களத்தில் இறக்கியுள்ளோமா?, என்றால் நாம் திருப்தி கொள்ள முடியாது.

- தமிழகத்தில் கட்சியின் செல்வாக்கை மேலும் அதிகப்படுத்தும் வகையில் இடதுசாரி ஜனநாயக சக்திகளை வளர்த்து, வர்க்க பலாபலத்தில் நமக்குச் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான கடமையை தொடர்ந்து முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வோம்.

- வருங்காலத்தில் மக்கள் பிரச்சனைகளில் நமது தலையீடுகளையும், இயக்கங்களையும் வலுப்படுத்த வேண்டும். நாசகரப் பொருளாதாரக் கொள்கை எதிர்ப்பு, சமூகப் பொருளாதார ஒடுக்குமுறை எதிர்ப்பு, ஜனநாயக உரிமை, நிலம், வேலை, உணவு, மனைப்பட்டா, கல்வி, சுகாதாரம் மற்றும் ஸ்தல மக்கள் பிரச்சனைகளில் மக்களைத் திரட்டி தொடர்ச்சியான, தீவிரமான இயக்கங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். கட்சி அணிகளை முழுமையாகக் களம் இறக்கி மக்களோடு இணைந்து நின்று போராட வழிகாட்ட வேண்டும். கிளர்ச்சி இயக்கங்களில் பங்கேற்கும் மக்களை அரசியல்படுத்தி, ஸ்தாபனப்படுத்துவதில் பிரத்தியேகக் கவனம் செலுத்திட வேண்டும். இதன் மூலம் கட்சியைப் புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்திட வேண்டும். கட்சி முழுமையையும் இதற்குத் தயார்படுத்திட வேண்டும்.

ooo

6. வர்க்க - வெகுஜன அரங்கங்கள்

தொழிற்சங்க அரங்கம்

6.1 கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்து, மின்சாரம் போன்ற அரசின் பொதுத்துறை தொழில்களும், நிறுவனங்களும் கடும் தாக்குதலுக்கு இலக்காயின. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் டெஸ்மா சட்டத்தின் மூலம் ஒடுக்கப்பட்டனர். தனியார் துறையைப்பற்றியோ சொல்லவே தேவையில்லை. தொழிலாளர் துறையோ, தொழிலாளர் தொடர்பான முத்தரப்புக்குழுக்களோ எதுவும் செயல்படவில்லை. இப்போது தி.மு.க. ஆட்சியில் இவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

6.2 முறைசாராத் தொழிலாளர்களுக்குப் பென்சன் போன்ற புது சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய கட்டணம், புதுப்பித்தல் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. வாரியங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் இன்னும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன; நமக்கு நிறைய கோரிக்கைகள் உள்ளன; எனினும் முறைசாரா அரங்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வரவேற்கத்தக்கவை.

6.3 மேலே சொன்ன மாற்றங்களைக்கொண்டுவருதற்கான நிர்ப்பந்தங்களை உருவாக்குவதில் நமது போராட்டங்களும், கிளர்ச்சிகளும் முக்கிய பங்காற்றியுள்ளன. ஆட்சி மாற்றமும் முக்கிய காரணமாகிறது.

6.4 இந்த ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துவதில் நமது கட்சி உறுப்பினர்கள் பிரதானமாக செயல்படுகிற தொழிற்சங்க அரங்கம் முக்கிய பங்காற்றியுள்ளது. கடந்த நாடாளுமன்றத்தேர்தலில் அண்ணா தி.மு.க., பிஜேபி அணியை தோற்கடிக்க வேண்டுமென்று சிஐடியு நேரடியாகவே தொழிலாளர்களுக்கு அரசியல் வேண்டுகோள் விடுத்தது; இதே போல கடந்த சட்டமன்றத்தேர்தலிலும் அண்ணா தி.மு.க.வின் எதேச்சதிகார ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டுமென்றும், அண்ணா தி.மு.க. அணியைத் தோற்கடிக்க வேண்டுமென்றும் நேரடியான அரசியல் அறைகூவல் விடுத்தது. சென்ற சட்டமன்றத்தேர்தலில் தொழிற்சங்கங்கள் நிதி மற்றும் உழைப்பை நல்கி சிறப்பாகப் பணியாற்றியுள்ளன. கடந்த காலங்களைவிட இதில் முன்னேற்றமுண்டு.

தொழில் நிலைமை

6.5 தமிழகத்தின் தொழில் நிலைமையில் சென்ற மாநாட்டிற்குப்பிறகு அடிப்படை மாற்றம் ஒன்றும் இல்லை. தமிழக அரசு தற்போது அறிவித்துள்ள தொழிற்கொள்கையில் புதிய மூலதனங்களை ஈர்ப்பதற்கான நோக்கத்தோடு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 20 லட்சம் பேருக்கு அடுத்த சில ஆண்டுகளில் வேலைவாய்ப்பு வரும் என்றும் உறுதி கூறப்பட்டுள்ளது. இதற்கான விபரம் இல்லை. இந்தத் தொழிற்கொள்கையில், தொழிற்சாலைக்கு நிலம் எடுப்பதற்கு நிலச்சீர்திருத்த சட்டமும், நிலத்தை மறு வகையீடு செய்கிற நடைமுறையும் கூட தளர்த்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. தொழிற்சாலைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும் என்றும் தொழிற்கொள்கை கூறுகிறது.

6.6 இந்தத் தொழிற்கொள்கையில் சிறுதொழில், சுயதொழில்கள் மற்றும் பாரம்பரியத் தொழில்கள் பற்றி ஒன்றும் இல்லை. வேலைவாய்ப்பில் பெரும்பகுதியை இந்தத்தொழில்கள் தான் நிறைவேற்றுகின்றன. கைத்தறி, விசைத்தறி,பீடி, உப்பளம், தீப்பெட்டி, பட்டாசு, தோட்டம் போன்ற பல தொழில்களும் நெருக்கடியில் இருந்து விடுபடவில்லை. டாலர் மதிப்புக்குறைவால் பனியன், ஆயத்த ஆடை உள்ளிட்ட ஏற்றுமதித்தொழில்கள் பாதித்துள்ளன. தகவல் தொழில்நுட்ப அயல்பணிகளுக்கும் பிரச்சனைகள் தோன்றியுள்ளன. தொழில்களுக்கு ஏற்படுகிற தற்காலிக நெருக்கடிகள் கூட உடனடியாகத் தொழிலாளர்களையும் அவர்களின் ஊதியம் உள்ளிட்ட உரிமைகளையும் தாக்கும் வாய்ப்பாக பயன்படுத்தப்படுகிறது.

6.7 பெரும் சலுகைகளைப்பெற்றுக்கொண்டு புதிய தொழிற்சாலைகள் கடந்த 10 ஆண்டுகளில் தோன்றியுள்ளன. சென்னையைச் சுற்றி உருவாகியுள்ள கார் கம்பெனிகளும் அவற்றின் துணைத்தொழிற்சாலைகளும் பிரதானமானவை. நோக்கியா, சாம்சங் போன்ற மின்னணுக் கருவித் தொழிற்சாலைகளும் வந்துள்ளன.

சவால்கள்

6.8 இவற்றில் உருவாகியுள்ள சுமார் ஒன்றரை லட்சம் வேலைகளில் சுமார் 25 ஆயிரம் பேர்தான் நிரந்தரப் பணியும் சுமாரான ஊதியமும் பெறுகின்றனர். ஏறத்தாழ ஒன்றேகால் லட்சம் பேர் ஒப்பந்தமுறையிலும், பயிற்சியாளர், கேசுவல் போன்ற பல பெயர்களில் தற்காலிக அடிப்படையிலுமே வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஊதியம் குறைந்தபட்சக்கூலியைவிட குறைவு. வேலைநேரமும் அதிகம். கண்ணியமான வேலை என்பது இல்லை.

6.9 இந்தப்புதிய தொழிற்சாலைகளில் வேலையின்மையின் அவலத்தைப் பயன்படுத்தி மிகக் கொடுமையான சுரண்டல் நடத்தப்படுகிறது. எந்தச்சட்டமும் மதிக்கப்படுவதும் இல்லை. அமலாவதும் இல்லை. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. தொழிற்சங்கம் வைத்த விஸ்டியான், ஆர்க்கிட் கெமிக்கல்ஸ், ஹூண்டாய், பெய்லி, தரணி சுகர்ஸ், சிஆர்ஐ பம்ப், டாஃபே போன்ற இடங்களில் மிகக்கடுமையான தாக்குதலையும், பழிவாங்கலையும் முதலாளிகள் ஏவியுள்ளனர். நூற்றுக்கணக்கான முன்னணி ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இடங்களில் இப்போதும் தொழிற்சங்கங்களை நிர்வாகம் அங்கீகரிக்கவில்லை. தொழிற்சங்க இயக்கம் கடும் சவாலை சந்தித்து முன்னேற வேண்டியுள்ளது.

தொழிற்சங்க பலம்

6.10 போக்குவரத்து, மின்சாரம், கூட்டுறவு, உள்ளாட்சி, குடிநீர் உள்ளிட்ட மாநில அரசு சார்ந்த தொழில்களில் நமது கட்சி உறுப்பினர்கள் தலைமையில் உள்ள சங்கங்கள் பலமாகச் செயல்பட்டு வருகின்றன. ரயில்வே, சென்னை, தூத்துக்குடி துறைமுகங்கள், நெய்வேலி, பிஎச்இஎல், சேலம் ஸ்டீல் உள்ளிட்ட மத்திய அரசு சார் தொழில்களில் நமது கட்சி உறுப்பினர்கள் தலைமையில் உள்ள சங்கங்கள் வலுவாகச் செயல்பட்டு வருகின்றன. கேந்திரத்தொழில்கள் மற்றும் கனரகத்தொழில்களில் நமது பலத்தை மேலும் உயர்த்த வேண்டியுள்ளது.

6.11 நமது அடிப்படை வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தை அணி திரட்டுவதற்கான பெருந்திரளமைப்பு தொழிற்சங்கந்தான். இதன் மூலம் தான் கட்சியின் தொழிலாளி வர்க்க பலத்தை நாம் உயர்த்த முடியும். இப்போது தமிழகத்தில் 4 லட்சம் பேர் நமது தலைமையிலான தொழிற்சங்கத்தில் உள்ளனர். 2009ல் இந்த உறுப்பினர் எண்ணிக்கையை 10 லட்சமாக உயர்த்த வேண்டுமென்று சிஐடியு மாநாடு முடிவு செய்துள்ளது. பஞ்சாலைகள், இன்ஜினியரிங், தோட்டத்தொழில், சர்க்கரை, சிமெண்ட் போன்ற உற்பத்தித்தொழில்களில் நமது பலம் குறைவு. இதில் பெரும் முறிப்பை செய்தாக வேண்டும்.

6.12 தட்சிண ரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் நம்முடைய பாரம்பரியமான சங்கம். 58 ஆண்டுகளாக இதற்கு அங்கீகாரம் கிடையாது. எனினும் நமது ஊழியர்கள் துணிவோடும், அர்ப்பணிப்போடும், வர்க்கப் பிடிப்போடும் தொடர்ந்து போராடி வந்தனர். சங்க அங்கீகாரத்தைத் தீர்மானிக்க ரகசிய வாக்கெடுப்பு என்ற நீதிமன்ற தீர்ப்பினால் சமீபத்தில் தேர்தல் நடந்தது. சிஐடியு இணைப்புச் சங்கமான டிஆர்இயு 30.84 சதவிகித வாக்குகளைப்பெற்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

6.13 அந்த சங்கத்தின் உறுப்பினர் வட்டத்தைத் தாண்டி நல்ல வாக்குகளைப்பெற்றுள்ளோம். இது பாராட்டத்தக்க வெற்றி.

6.14 டிஆர்இயு முன்முயற்சியால் ரயில்வேயில் பயிற்சியாளர்களாகப் பணியாற்றிய 3ஆயிரம் ஆக்ட் ஆப்ரண்டீஸ்கள் வேலையில் சேர்ந்துள்ளனர். தமிழகத்தில் 3 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

6.15 இதே போல் சென்னைத்துறைமுகத்தில் நமது தோழர்கள் உறுப்பினர் பலத்தை உயர்த்தியதால் அங்கீகாரம் பெற்றுள்ளனர். இது நல்ல முன்னேற்றம்.

6.16 மின் ஊழியர் மத்திய அமைப்பினுடைய தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் 6 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தியுள்ளோம். ஒப்பந்தத்தொழிலாளர் பிரச்சனையை முன்னுரிமைப் பிரச்சனையாக அனைத்து அரங்கங்களிலும் நாம் மேற்கொண்டாக வேண்டும்.

6.17 மருந்து விற்பனைப் பிரதிநிதிகள் சங்கம் மக்கள் பிரச்சனைகளில் போராடும் அமைப்பாகத் திகழுகிறது. மற்றவர்களுக்கு முன்னுதாரணமான அமைப்பாகவும் உள்ளது.

மத்திய தர ஊழியர் மத்தியில்

6.18 பிஎஸ்என்எல் எம்ப்ளாயீஸ் யூனியன் தொலைத்தொடர்புத்துறையில் நமது தோழர்கள் தலைமையேற்று நடத்தும் சங்கமாகும். இந்த சங்கம் கடந்த மூன்றுமுறை நடந்த தேர்தல்களிலும் மேலும் மேலும் கூடுதல் வாக்குகள் பெற்று அனைத்திந்திய அளவில் வெற்றி பெற்றுள்ளது.

6.19 இந்தச் சங்கத்தின் தனி உறுப்பினர் பலமும் மொத்த ஊழியர்களில் 50சத அளவிற்கு அதிகரித்துள்ளது. இது நல்ல சாதனையாகும். அரசின் தவறான கொள்கைகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாக போராடும் அமைப்பு இது.

6.20 இன்சூரன்ஸ் அரங்கில் நமது தோழர்கள் தலைமையில் உள்ள அமைப்பு வலுவாக உள்ளது. தனிப்பெரும் சங்கமாகத் திகழ்கிறது. இந்தச்சங்கமும் அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் மட்டுமல்லாமல் நாட்டை பாதிக்கிற அனைத்து விஷயங்களிலும் மக்களுக்காக இயக்கம் நடத்துகிற பாரம்பரியம் மிக்க சங்கமாகும்.

6.21 வங்கித்துறையில் நமது தோழர்கள் தலைமையில் உள்ள கூட்டமைப்பு செயல்படுகிறது. இதன் பலம் அதிகரிக்க வேண்டியுள்ளது. தனியார்மய எதிர்ப்பு உட்பட அரசின் தவறான கொள்கைகளை எதிர்த்து இயக்கம் நடத்தப்படுகிறது.

விரிவாக்கத்திட்டம்

6.22 ஒவ்வொரு தொழிலிலும், அல்லது தொழிற்சாலையிலும் குறைந்தது 30 சதவிகித தொழிலாளர்களை நமது தொழிற்சங்க அமைப்பிற்குள் கொண்டு வர வேண்டும் என்று சிஐடியு மாநாடு இலக்கு நிர்ணயித்துள்ளது.

6.23 முறைசாராத் தொழில்களில் 70 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். இவர்களில் வீடுசார் தொழில்களில் பல லட்சக்கணக்கான பெண்கள் உள்ளனர். இவர்களின் ஒருநாள் சராசரி வருமானம் ரூ.30க்கும் குறைவு. முறைசாராத் தொழில்களில் உள்ள தொழிலாளர்களைத் திரட்டுவதற்கு, அவர்கள் இருக்கும் இடந்தேடி வீடுவீடாக, வீதி வீதியாகச் செல்வதற்கான மிகப்பரந்த வேலை ஏற்பாடும் ஊழியர்களும் வேண்டும்.

6.24 புதிய ஊழியர்களைப் போடுவதற்கு தொழிற்சங்க மாவட்டக்குழுக்களின் நிதிப்பற்றாக்குறை தடையாக உள்ளது. இருப்பவர்களைக்கொண்டு வழக்கமான வேலைகளைச் செய்வது என்கிற செயல் முறை மாற்றப்பட்டு தொடர்ந்த விரிவாக்கத்திற்கான திட்டமிடலையும் அமுலாக்கத்தையும் உறுதிப்படுத்த வேண்டும்.

6.25 புதிய ஊழியர் தேவைக்காகப் போக்குவரத்து அரங்கத் தோழர்கள் சிஐடியு மாநாட்டிலேயே 6 லட்சம் ரூபாய் வழங்குவதாக அறிவித்தனர். மின்சாரம், பிஎச்இஎல் போன்ற சங்கங்களும் சேர்ந்து இதுவரை 8 லட்சம் ருபாய் சேர்ந்துள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் 50 புதிய ஊழியர்கள் முறைசாராத் தொழிலாளர்களை திரட்டும் முழுநேரத் தொழிற்சங்கப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது பாராட்டத்தக்க நல்ல முன்முயற்சியாகும்.

6.26 அடுத்த மூன்றாண்டுகளில் நாம் தொழில் வாரியாக சங்கத்தில் திரட்ட வேண்டிய இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகச் செயல்பாடு

6.27 தொழிற்சங்கத்தில் ஜனநாயகச் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டுப்பேரவைகள், கூட்டங்கள், எழுத்துபூர்வமான அறிக்கை வைத்து விவாதம், அவசியப்பட்டால் நிர்வாகிகள் தேர்விற்குத் தேர்தல், வங்கிக்கணக்கு, வரவுசெலவுகளைக் குறிப்பிட்ட இடைவெளியில் சமர்ப்பித்தல் போன்றவற்றில் முறிப்பை உண்டாக்கத் தனிக்கவனம் எடுக்கப்பட்டு வருகிறது.

6.28 வரவு-செலவுப் பராமரிப்பு குறித்தும், ஆவணப்பராமரிப்பு குறித்தும், தொழிற்சங்கப் பதிவுச்சட்டம், சங்கவிதி முறைகள் குறித்தும் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டுள்ளது. மேலும் நேர நிர்வாகம், தலைமைப்பண்பு குறித்தும் தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. இதனால் நல்ல முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. 34 சிஐடியு மாவட்டக்குழுக்களும் அமைப்பாகவும், தொடர்ச்சியாகவும் செயல்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாவட்டக்குழுக்களில் பெண் தோழர்கள் திட்டமிட்டு இணைக்கப்பட்டுள்ளனர். தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளாகவும் பெண்கள் இருப்பதை உறுதிப்படுத்தி வருகிறோம்.

6.29 பெண் தொழிலாளர்களைத்திரட்டுவது என்பது தொழிற்சங்க இயக்கத்தின் முன்னுரிமைக் கடமைகளில் ஒன்று என மத்திய கமிட்டி ஆவணம் வரையறுத்துள்ளது. தமிழ்நாட்டில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் மூலம் பிரத்தியேக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. *33* மாவட்டங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. நூற்றுக்கணக்கான பெண் தொழிற்சங்க ஊழியர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். புதிதாக எடுக்கிற முழுநேர அலவலன்ஸ் ஊழியர்களில் அதிகம் பேர் பெண் ஊழியர்களாக இருக்குமாறு கவனஞ்செலுத்தப்படுகிறது. சிஐடியுவில் மூன்றில் ஒரு பங்கு (சுமார் 1லட்சம்) உறுப்பினர்கள் பெண்களாகும்.

6.30 கடந்த ஆகஸ்ட் *8* அன்று நடத்தப்பட்ட முறைசாராத் தொழிலாளர்களின் மறியலில் தமிழகத்தில் *70*ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். இதில் *20* ஆயிரம் பேர் பெண்கள் என்பது பெருமிதங்கொள்ளத்தக்கது.

6.31 மத்தியக்கமிட்டியின் தொழிற்சங்க ஆவணம் வேலையில்லா இளைஞர்களைத்திரட்டுவதை முன்னுரிமைக் கடமையாகக் கூறுகிறது. இதில் நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். இப்போது சி.சி.ஏ.யு. (Campaign Committee Against Unemployment - CCAU) என்ற அமைப்பைப் புனரமைத்துள்ளோம். இதைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

6.32 மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விவசாய இயக்க வளர்ச்சிக்காகத் தமிழகத்தில் ஆண்டுதோறும் நிதி வழங்குகிறோம். கடந்த ஆண்டில் ரூ.*2* லட்சத்து *39* ஆயிரம் வி.ச. நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

6.33 தமிழகத்தில் விவசாயி தொழிலாளி ஒருங்கிணைப்பு என்ற வகையில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நடத்தப்பட்ட நடைப்பயணத்தைத்தொடர்ந்து விவசாயக் கூலித் தொழிலாளர் போராட்டத்தின் வீரத்தியாகிகளான வெண்மணிப் போராளிகளுக்கு நினைவுச் சின்னத்தை தொழிலாளி வர்க்கம் கம்பீரமாக எழுப்ப வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. கருங்கற்களால் எழுப்பப்படுகிற அந்த நினைவாலயத்தில் ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்தும் பள்ளிக்கான ஏற்பாடும் இருக்கும். நமது போராட்டங்களையும் தியாகங்களையும் எடுத்துக்கூறும் ஏற்பாடுகளும் அங்கே இருக்கும்.

6.34 இந்த நினைவாலயத்திற்காக ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டும் வேலையில் தமிழகத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கட்டுமானப்பணிகளும் வேகமாக நடந்து வருகின்றன.

6.35 சிஐடியுவின் பன்முகப் பணிகள் அதிகரித்துள்ளன. ரத்ததானம், மருத்துவ முகாம், குடும்ப விழாக்கள் போன்றவற்றிக்கு உற்சாகம் தரப்படுகிறது. இதில் முன்னேற்றம் உள்ளது. தொழிலாளர் கல்வி அறக்கட்டளை மூலம் சென்னை அயனாவரத்தில் அரசு உதவி பெற்ற ஒரு உயர்நிலைப் பள்ளிக் கூடத்தை வாங்குவதற்கான ஏற்பாடுகள் முடிந்துள்ளன. சுனாமி நிதி மூலமும், பிரான்ஸ் தொழிற்சங்கமான சி.ஜி.டி. நிதி மூலமும் நாகப்பட்டினத்தில் பாலிடெக்னிக் நிறுவுவதற்கான முயற்சி நடந்து வருகிறது. ஓட்டுனர் பயிற்சிப்பள்ளிகள் தொடங்குவதற்குப் போக்குவரத்து ஊழியர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது. ஏற்காட்டில் தொழிலாளர்கள் தங்கும் சுற்றுலாத்

தேவைக்காகவும், வகுப்புகள் நடத்தும் ஏற்பாட்டிற்காகவும் கட்டிடம் எழுப்ப ஒரு மனை வாங்கப்பட்டுள்ளது. வால்பாறையில் தியாகிகள் நினைவிடத்திற்கும் தோட்டத்தொழிலாளர் சங்கத்திற்குமாக ஒரு மனை வாங்கப்பட்டுள்ளது.

6.36 பிரான்ஸ் தேசத்தின் சி.ஜி.டி. தொழிற்சங்க உதவி மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 800 சைக்கிள்களும் 400தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

6.37 சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களுக்கு ஐ.எல்.ஓ. துணையுடன் தையற் பயிற்சி, காலணி தயாரிக்கும் பயிற்சி, கணினி பயிற்சி போன்றவை தரப்பட்டுள்ளன.

6.38 ஐ.எல்.ஓ. துணையோடு மதுரை திருமங்கலத்தில் சுய உதவிக்குழுக்கள் அமைத்து அவர்கள் ஆடு வளர்ப்பில் ஈடுபடுவதற்கான கடனுதவியும் செய்யப்பட்டது. இதைப்போல் வேறுபல திட்டங்களுக்காகவும் முயற்சித்து வருகிறோம்.

இதழ்கள்

6.39 சிஐடியு செய்தி 12 ஆயிரம் பிரதிகளும், போக்குவரத்துத் தொழிலாளி 23,500 பிரதிகளும், மின்கதிர் 6 ஆயிரம் பிரதிகளும், தொழிலரசு 5 ஆயிரம் பிரதிகளும், கூட்டுறவுக் குரல் 3 ஆயிரம் பிரதிகளும், டி.என்.எம்.எஸ்.ஆர்.ஏ. செய்தி 3500 பிரதிகளும், மின்சார ஓய்வுபெற்றோர் அமைப்பின் சார்பில் ஒளிக்கதிர் 2 ஆயிரம் பிரதிகள் என்ற வகையில் நமது இதழ்கள் வெளியாகின்றன.

6.40 மேலும் வங்கி ஊழியர், அரசு ஊழியர், ஆசிரியர் அமைப்புகள், சத்துணவு, தபால், தொலைத்தொடர்பு ஊழியர்கள் தனித்தனி மாத இதழ்களை வெளியிடுகின்றனர். இன்சூரன்ஸ் ஊழியர்கள் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒவ்வொரு மாத இதழை வெளியிட்டு வருகின்றனர்.

தோழர்.பி.ஆர். நூற்றாண்டு

6.41 தோழர்.பி.ஆர். நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதற்கான தீர்மானத்தை சிஐடியு மாநாடு நிறைவேற்றியது. தோழர்.பி.ஆர். அவர்களுக்கு மதுரையில் சிலை நிறுவும் ஏற்பாட்டை சிஐடியு மதுரை மாநகரக்கமிட்டி மிகச்சிறப்பாகச் செய்து முடித்தது.

6.42 ஓராண்டு முழுவதும் 1000 கூட்டங்கள் மற்றும் பிரசுர வெளியீடுகள் மூலம் பி.ஆர். அவர்களின் அரும்பணிகளையும் நமது அடிப்படைக் கொள்கைகளையும் எடுத்துச்செல்வதற்கான முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்தாபனம்

6.43 டி.யு. சப் கமிட்டி மூன்று முறை கூடி கொள்கைப் பிரச்சனைகளில் தலையீடு செய்துள்ளது. இது போதுமானதல்ல.

6.44 தொழிலாளிகள் மத்தியில் கட்சி அமைக்கும் அடிப்படைப் பணி கட்சியின் மாவட்டக்குழுக்கள் மற்றும் மாவட்ட சப் கமிட்டிகள் மூலமே பிரதானமாக நிறைவேற்ற முடியும்.

6.45 இதே போல் மாநிலத் தொழிற்சங்க அமைப்புகளின் மாநில பிராக்ஷன்கள் அந்தப் பணியை நிறைவேற்றுகின்றன.

6.46 மாநில டி.யு. சப் கமிட்டி நல்ல அரசியல் பிரசுரங்கள் கொண்டு வரவும், தொழிற்சங்க வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்களை உருவாக்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

6.47 தொழிலாளர்களைத்திரட்டும் பணியில் தொழிற்சங்க ஊழியர்களுக்குக் கட்சி அமைப்புகள் உதவிகள்ளயும் உந்துதலையும் நீடிக்க வேண்டும். தொழிற்சங்கத்தில் உள்ள கட்சி உறுப்பினர்கள் மூலம் கட்சி ஸ்தாபனத்தை பலப்படுத்தும் வேலையைத் தனியாகவும் நேர்த்தியாகவும் செய்ய வேண்டும்.

6.48 தொழிற்சங்க அரங்கக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் காணப்படும் பொருளாதார வாதம் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணித்தொழிற்சங்க ஊழியர்களின் அரசியல் உணர்வை

வளர்ப்பதற்குத் தடையாக உள்ளது. இதிலும் நாம் முறிப்பை உண்டாக்கியாக வேண்டும்.

6.49 தொழிற்சங்க அரங்கப் பணிகள் பற்றிய மத்தியக்குழு ஆவணமும், வெகுஜன அரங்கம் குறித்த அணுகுமுறை பற்றிய ஆவணமும் சுட்டிக்காட்டியுள்ள பலவீனங்களையும், அவற்றைக் களைவதற்கான வழிகாட்டுதல்களையும் நாம் மனதில் கொண்டு செயலாற்றுவது அவசியம்.

6.50 குறிப்பாக,

- வெகுஜன அமைப்பு என்ற முறையில் தொழிற்சங்கங்களின் சுயேச்சையான செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவது.
- கட்சிக்கு அப்பாற்பட்ட தொழிலாளர்களைப் பெருமளவில் திரட்டுவதற்கு உகந்த வகையில் ஜனநாயகச் செயல்பாட்டை ஊக்குவித்தல்.
- தொழிற்சங்கத்தின் கொள்கை முடிவுகளைத் தொழிற்சங்க கமிட்டிகள், தொழிலாளர்களின் ஒப்புதலோடு, எடுப்பதை உறுதி செய்வதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்வது.
- தொழிற்சங்கங்களில் பெண் தொழிலாளர்கள் ஆர்வமுடன் ஈடுபடுவதை உற்சாகப்படுத்துவது.
- தொழிற்சங்கத் தலைவர்களும், ஊழியர்களும் கம்யூனிஸ்ட் நெறிமுறைகளைத் தங்கள் செயல்முறைகளில் கடைப்பிடிக்கச் செய்வது.
- லஞ்ச லாவண்யம், தொழிற்சங்க நிதியைத் தவறாகப் பயன்படுத்துவது போன்ற தீங்கான போக்குகளை முற்றாக அகற்றுவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்வது.

ஆகிய வழிகாட்டுதல்களைத் தொழிற்சங்க அரங்கத் தோழர்கள் கறாராகப் பின்பற்றுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் அரங்கம்

6.51 தமிழக விவசாயம் முன்னெப்போதுமில்லாத கடுமையான நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டுள்ளது. குறிப்பாக உலகமய - தாராளமயக் கொள்கைகள் அமுலாக்கப்பட்டு வரும் கடந்த 15 ஆண்டுகளில் விவசாயிகள் - விவசாயத் தொழிலாளர் நிலைமை மேலும் பல மடங்கு மோசமடைந்துள்ளது.

6.52 இடுபொருட்களின் விலை உயர்வு, விளைபொருட்களின் விலைகள் தாறுமாறான வீழ்ச்சி, வேளாண் பொருட்களின் தாராள இறக்குமதி பெருமளவு ஏழை - நடுத்தர விவசாயிகளுக்கு சாகுபடி கடன் கிடைக்காதது, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இழப்புகள், கிராமப்புற வேலை வாய்ப்பு சுருங்குவது போன்ற காரணங்களால் கிராமப்புற நெருக்கடியும் - வறுமையும் அதிகரித்து வருகின்றன. மத்திய - மாநில அரசுகளின் விவசாயக் கொள்கையும், நடவடிக்கைகளும் நிலைமையை மேலும், மேலும் மோசமாக்கி வருகின்றன.

6.53 இக்காரணங்களால், ஏழை நடுத்தர விவசாயிகள் தங்களது நிலங்களை விற்பது அதிகரித்து வருகிறது. வியாபாரிகள், தொழிலதிபர்கள், காண்டிராக்டர்கள், லேவாதேவிக்காரர்கள் போன்ற வசதிப்படைத்தவர்கள் இவர்களது நிலங்களை வாங்கி குவித்து வருகின்றனர். குறிப்பாக சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர், நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், போன்ற மாவட்டங்களில் இத்தகைய நிலக்குவியல் அதிகரித்துள்ளன. இதர மாவட்டங்களிலும் இந்நிலை வளர்ந்து வருகிறது. லட்சக்கணக்கான விவசாயிகள் நிலமற்றவர்களாக மாறுவதும் மறுபக்கம் நிலக்குவியல் ஏற்படுவதும் புதிய நிலைமையாகும்.

6.54 கடந்த மாநாட்டின் போது இருந்த அதிமுக அரசின் விவசாய விரோத கொள்கைகளை எதிர்த்த போராட்டங்களை நடத்தினோம். கடன் தள்ளுபடி, விளை பொருட்களுக்கு நியாயமான விலை உட்பட பல அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தனியாகவும் - தி.மு.க. விவசாய அணி உட்பட பல்வேறு விவசாய அமைப்புகளுடன் கூட்டு போராட்டமும் நடைபெற்றன.

6.55 தற்போது தி.மு.க. ஆட்சி விவசாயக் கடன்களை ரத்து செய்துள்ளது; நிலம் வழங்கும் திட்டத்தின் மூலம் இதுவரை 1,16,508 குடும்பத்துக்கு 1,33,688 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இதில் சரிபாதிக்கு மேல் பட்டா நிலத்தை மேம்படுத்தி நில உடமையாளருக்கே கொடுத்ததாகும். அரசு புறம்போக்கு நிலத்தில் சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகளுக்கும், பெருந்தனக்காரர்களின் ஆக்கிரமிப்பில் உள்ள அரசு தரிசு நிலங்களைக் கையகப்படுத்தி நிலமற்றவர்களுக்கு வழங்குவதில் தி.மு.க. அரசு தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறி வருகிறது. 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் என்பதே கேள்விக்குறியாகி விட்டது.

6.56 சில நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், தி.மு.க. மத்திய அரசின் உலகமய - தாராளமய அடிப்படையிலான விவசாயக் கொள்கையையே தமிழ்நாட்டில் அமலாக்கி வருகிறது. ஒப்பந்த சாகுபடி முறையினை, அமலாக்குவது - விவசாய உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் பன்னாட்டு - உள்நாட்டு கம்பெனிகளை ஊக்கப்படுத்தும் கொள்கையினை தீவிரப்படுத்தி வருகிறது. இத்தகைய கொள்கைகள் ஏற்கனவே சீரழிந்து வரும் ஏழை - நடுத்தர கிராம மக்களின் வாழ்கையை முற்றாக சிதைந்து விடும்.

நடைபெற்ற இயக்கங்கள்

6.57 விவசாய விளை பொருட்களுக்கு விலைகோருவது, அரசு கொள்முதல், சாகுபடிக்கு கடன் வழங்குவது உள்ளிட்ட பல பிரச்சனைகள் மீது தொடர்ச்சியான இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. முந்திரி, ஏலக்காய், தேங்காய், தேயிலை, வெங்காயம், மக்காச்சோளம், மரவள்ளி, பருத்தி, மிளகாய் போன்ற விளைப்பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்த போது ஸ்தலஅளவில் போராட்டங்கள் நடைபெற்றது. நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ 1000 வழங்கக் கோரி மாநிலம் முழுவதும் அனைத்து சங்க மறியல் போராட்டம் நடைபெற்றது. இதன்விளைவாக ரூ.50 ஊக்கத்தொகை வழங்குவதாக தமிழக அரசு அறிவித்தது. புதிய சாகுபடிக்கு கடன், பாசன பிரச்சனைகள், பயிர் அழிவுக்கு நட்டஈடு, வெள்ள நிவாரணம் மற்றும் ஏராளமான ஸ்தலப் பிரச்சனைகள் மீது இயக்கங்கள் நடைபெற்றுள்ளன.

6.58 கரும்புக்குக் கட்டுப்படியான விலை நிர்ணயம் மற்றும் அரைக்கப்படாத கரும்பினை ஆலையின் அரவைக் காலத்தை நீடித்து அரைத்திட வேண்டும்; பால் கொள்முதல் விலை உயர்வு கோரிக்கை; தென்னை, தேயிலை உட்பட பயிர்வாரியான பிரச்சினைகள்; ஆகியவை மீது இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

6.59 பழங்குடி மக்களின் பிரச்சனைகளுக்கான இயக்கங்கள் மற்றும் வாச்சாத்தி வழக்குப் பிரச்சனையின் தொடர் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

6.60 2007 பிப்ரவரி 3,4 தேதிகளில் மலைவாழ் மக்கள் சங்க முன்னணி ஊழியர்களுக்கான மாநில வகுப்பு நடைபெற்றது. இதில் 67 பேர் பங்கேற்றனர். 2007 ஜூலை 29, 20 ஆகிய தேதிகளில் மலைவாழ் மக்கள் சங்க கட்சி ஊழியர்களுக்கான வகுப்பு நடைபெற்றது. இதில் 120 பேர் பங்கேற்றனர்.

நிலத்துக்கான போராட்டம்

6.61 சிவகங்கை, திருவள்ளூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, கிருஷ்ணகிரி, விருதுநகர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நிலமோசடிக்கு எதிராகவும், நிலப்பட்டா கோரியும், குத்தகை விவசாயிகளை வெளியேற்றுவதை எதிர்த்தும் பல தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

6.62 வகுப்பு- வி.ச முன்னணி ஊழியர்களுக்கான மூன்றுநாள் வகுப்பு 2007 ஜூலை 21, 22, 23 ஆகிய தேதிகளில் சிதம்பரத்தில் நடைபெற்றது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. சில மாவட்டப் பயிற்சி முகாம்களும் நடைபெற்றுள்ளன. இன்றைய புதிய நிலைமைகளையும், கடமைகளையும் பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்திட அனைத்து மட்டங்களிலும் தொடர்ச்சியான வகுப்புகளை நடத்திட வேண்டும்.

ஸ்தாபனம்

6.63 விவசாயிகள் சங்க மாநிலக்குழு சராசரி 2 1/2 மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. தனியான மாநில நிர்வாகிகள் கூட்டம் நடத்துவதில் மேலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

6.64 இணைப்பு சங்கங்களாக கரும்பு, மலை, பால் சங்கங்கள் செயல்படுகின்றன. தென்னை விவசாயிகளுக்கு தனி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

6.65 முப்பத்தி இரண்டு மாவட்டக் குழுக்கள் - 254 இடைக்குழுக்கள் உள்ளன. மாவட்டக் குழுக்கள் செயல்பாட்டில் ஏற்ற இறக்கம் இருந்தபோதிலும் முன்னேற்றம் உள்ளது. மாவட்டங்களில் முழுநேர ஊழியர்கள் பாண்டி, தர்மபுரி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைத் தவிர இதர மாவட்டங்களில் தீர்மானிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட மையத்திலிருந்து கிராமங்கள் வரை சென்று செயல்பட வேண்டிய இவர்கள் இச்சங்க வேலைகளுக்குக் கூடுதல் நேரம் ஒதுக்குவதில் பிரச்சனைகள் உள்ளன.

6.66 வி.ச - விதொச மையத்தோழர்கள் இணைந்த மாவட்ட மையம் செயல்பட்டு வருகிறது. மையக் கூட்டங்கள் நடத்துவதிலும், மையத்தில் திட்டமிட்டுப் பணிகளை ஆற்றுவதிலும், நிர்வாகிகளை செயல்பட வைப்பதிலும் குறைபாடுகள் நீடிக்கின்றன. நிர்வாகிகள் சிலர் தொடர்ந்து செயல்படாமல் உள்ளனர். இந்நிலைமைகளில் மாறுதல் ஏற்படுத்திட வேண்டும். இடைக்குழுக்கள் செயல்பாடுகளில் பெரும் தொய்வு உள்ளது. பொருத்தமான நிர்வாகிகள் தீர்மானிக்கப்படவில்லை.

6.67 இம்மூன்று ஆண்டுகளில் விச உறுப்பினர் பதிவில் சில மாவட்டங்களில் விதொச தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நடத்தப்பட்ட இயக்கங்கள் பல்வேறு தரப்பு விவசாயிகளையும் ஈர்ப்பதாக இருந்துள்ளன. பதிவில் முன்னேற்றம் இருந்தபோதிலும் நமக்குள்ள வாய்ப்பு முழுவதையும் ஸ்தாபனமாக்கிட இயலவில்லை. குறிப்பிட்ட காலவரையறைக்குள் பதிவு இயக்கத்தை முடிப்பதிலும் சிரமம் ஏற்படுகிறது.

6.68 சந்தா பதிவு செய்த கிராமங்களில் கிளைகள் அமைக்கப்படுவது குறைவு. சந்தா பதிவுக்குப் பின்னர் அம்மக்களிடம் தொடர்பு கொள்வதும் அரிதாகவே உள்ளது. சந்தா பதிவு செய்த கிராமங்களுக்கு சலுகை மற்றும் நிவாரணம் பெற்றுத்தருவதில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. சந்தா பதிவு செய்த கிராமங்களை மையமாக கொண்டு செயல்பாட்டினை உருவாக்கிட வேண்டும். உறுப்பினர்களோடு தொடர்பு - அவர்களை ஸ்தாபனப்படுத்துவது உள்ளிட்ட பணிகளே இம்மக்களை நம்மிடம் தக்க வைத்திட உதவி செய்யும்.

6.69 மாவட்டம் - இடைக்குழு செயல்பாட்டிற்கு நிதியின்மை பெரும் பிரச்சனையாக உள்ளது. அரங்க செயல்பாட்டிற்கு நிதிவசூல் செய்வது குறித்த ஸ்தாபனப் பிரச்சனைகளும் உண்டு.

விவசாயத் தொழிலாளர் அரங்கம்

6.70 வறட்சி, வெள்ளம், சாகுபடி பரப்பு குறைந்துவருவது பணப்பயிர் சாகுபடி, வேளாண்மையில் இயந்திரங்கள் அதிகம் பயன்படுத்துவது போன்றவற்றால் கிராமப்புற வேலைவாய்ப்பு குறைந்து ஆண்டுக்கு 60 முதல் 70 நாட்கள் கூட விவசாய வேலை கிடைக்காத நிலைமை உள்ளது. பெண்களுக்கு ரூ25 முதல் ரூ50 வரை மட்டுமே கூலி வழங்கப்படுகிறது. நிரந்த வேலை கிடைக்காததாலும், குறைவான வருமானம் கிடைப்பதாலும், விவசாயத் தொழிலாளர்களும்; ஏழை, சிறு விவசாயிகளும் வேலைத் தேடி நகரங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும், கட்டுமானம், முறைசாரா தொழில்களுக்கும் இடம் பெயர்ந்து செல்லும் நிலைமை அதிகரித்துள்ளது; மறுபக்கம் வேளாண் தொழிலுக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்கிற நிலையும் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் கிடைக்கும் வேலைகளில் கூலி உயர்வு கிடைக்க சில முயற்சிகள் எடுக்கப்பட்டு கூலி உயர்வும் பெற்றுள்ளோம்.

6.71 இருப்பினும் கூலி உயர்வுக்காக வலுவான போராட்டங்களை நடத்த இயலவில்லை. பெண்கள் கூலியை உயர்த்துவதிலும், ரேகா (REGA) மூலம் ஏற்படும் கூலி உயர்வும் இதர வேலைக்கான கூலிகளை உயர்த்துவதிலும் புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம்

6.72 இத்திட்டம் 2006 பிப்ரவரி முதல் நாகை, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களிலும் பின்னர் திருவாரூர், தஞ்சை, கரூர், நெல்லை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மொத்தம் 10 மாவட்டங்களில் அமலாக்கப்பட்டு வருகிறது.2008 ஏப்ரல் முதல் சென்னை நீங்கலாக 30 மாவட்டங்களிலும் அமலாக்கப்பட உள்ளது.

6.73 சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் வி.ச., வி.தொ.ச., மாதர், வாலிபர், சி.ஐ.டி.யூ. ஆகிய நிர்வாகிகளைக் கொண்ட ஒருங்கிணைப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. வி.தொ.ச. மாவட்ட நிர்வாகியை கன்வீனராக கொண்டு இக்குழு செயல்படுத்தப்படுகிறது.

6.74 இத்திட்டம் அமலாக்கப்படும் 10 மாவட்டங்களில் உள்ள மொத்தம் 5190 ஊராட்சிகளில் நம்மால் 5 முதல் 10 சதமான ஊராட்சிகளில் மட்டுமே தலையிட முடிந்துள்ளது. தலையிட்டுள்ள இடங்களில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. ஆண் - பெண் இருவருக்கும் - குறிப்பாக முதன் முறையாக பெண்களுக்கு ரூ. 80 கூலி பெற்றுத்தர முடிந்துள்ளது. இதற்காகப் பல கட்ட ஆர்ப்பாட்டம், முற்றுகை உள்ளிட்ட போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. இத்திட்டத்தில் ஈடுபடுபவர்களில் 80 சதம் பேர் பெண்கள். கிராமங்களை விட்டுப் புலம் பெயர்வது இத்திட்டத்தின் மூலம் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இதர வேலைகளிலும் கூலியை உயர்த்திட இத்திட்டம் பயன்பட்டுள்ளது.

6.75 நமது தலையீட்டால் புதிய இடங்களுக்கு நமது அமைப்பை விஸ்தரிக்க முடிந்துள்ளது. புதிய தொடர்புகள் கிடைத்துள்ளன. இந்தாண்டு வி.தொ.ச. உறுப்பினர் சேர்ப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதற்கு இத்திட்டத்தில் நமது தலையீடு முக்கிய காரணமாகும்.

6.76 கிராமப்புற இயக்கத்தில் முறிப்பை ஏற்படுத்த இத்திட்டத்தில் பிரதான கவனம் செலுத்திட வேண்டும். இதற்கென தனியான ஊழியர்கள் தீர்மானிப்பது அவசியமானதாகும்.

சமூக பாதுகாப்பு திட்டம்

6.77 அதிமுக அரசால் முடக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத்தை செயல்படுத்தக்கோரி 2002 முதல் தொடர்ச்சியாகப் பல போராட்டங்கள் தனியாகவும், சிபிஐ - விதொச வுடன் சேர்ந்தும் நடத்தப்பட்டன.

6.78 அ.தி.மு.க பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த பிறகு உழவர் பாதுகாப்புத் திட்டம் என அறிவித்தது. இது முழுக்க அதிகாரிகளால் நடத்தப்படும் திட்டம் என்பதால் வாரியம் அமைக்க வேண்டுமென்று போராடினோம். தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம் 2006-ஐ 22.12.2006-இல் அமலுக்குக் கொண்டு வந்தது. இது நமது தொடர்ச்சியான போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி. இச்சட்டத்தைப் பயன்படுத்தத் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்கள் விவசாயத் தொழிலாளர்கள், சிறு குறு விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களைத் திரட்டவும் அதிக வாய்ப்புள்ளது.

6.79 புதுச்சேரியில் விவசாயத் தொழிலாளர் நலவாரியம் அமைக்க வேண்டுமென்ற நமது தொடர்ச்சியான வற்புறுத்தலின் விளைவாக 2005 மார்ச் பட்ஜெட் கூட்டத்தொடரில் 'நலச்சங்கம்' அமைக்கப்போவதாக அறிவிப்பு வெளியானது.

விதொச – ஸ்தாபனம்

6.80 விவசாயத் தொழிலாளர் சங்க ஸ்தாபனம் சென்ற மாநாட்டின் போது இருந்ததைவிட ஸ்தாபன அளவிலும், செயல்பாட்டிலும் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. 2003 -04இல் உறுப்பினர் பதிவு-2,26,930; 2006-07இல் உறுப்பினர் பதிவு - 4,35,748. இது சுமார் 105 சதம் உயர்வாகும். ஒரு சில மாவட்டங்களில் பதிவுக்குக் கூடுதலாக உறுப்பினர் கணக்கை முடித்திருக்கும் குறைபாட்டைக் களைய வேண்டும். மாவட்டக்குழுக்கள் 20லிருந்து 26 ஆக உயர்ந்துள்ளன.

இடைக்குழுக்கள் 127லிருந்து 163ஆகக் கூடியுள்ளன. இடைக்குழுக்களின் செயல்பாட்டில் பெரும் முன்னேற்றம் காணவேண்டும்.

6.81 இந்த 26 மாவட்டங்களில் 3,478 கிராமங்களில் உறுப்பினர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் 30 சதம் கிராமங்களில்தான் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கிளைகளையும் தொடர்ச்சியாக செயல்படுத்த முடியாத நிலைமை உள்ளது. பதிவு செய்த கிராமங்கள் அனைத்திலும் கிளைகள் அமைக்கவும், தொடர்ந்து செயல்படுத்தவும் வேண்டும்.

6.82 2007 ஆகஸ்ட் 13, 14 ஆகிய தேதிகளில் தேனி மாவட்டம் வைகை அணையில் மாநில வகுப்பு நடைபெற்றது. இதில் 18 பெண்கள் 197 மாவட்டக்குழு நிர்வாகிகள் மற்றும் இடைக்குழு நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

6.83 கட்சி மாநிலக்குழு 2007 ஒராண்டு வேலைத் திட்டத்தில் விதொசவை முன்னுரிமை அமைப்பாக அறிவித்தது. இதையடுத்து சில மாவட்டங்களில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதை தொடர்ந்து நிறைவேற்றிடவில்லை. எதிர்வரும் காலங்களில் கூடுதல் கவனம் கொடுத்து இந்த முன்னுரிமை பணியை நிறைவேற்ற வேண்டும்.

வி.ச - வி.தொ.ச கூட்டு இயக்கங்கள்

6.84 நிலப்பிரச்சனைகள், வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட சில பிரச்சனைகளில் வி.ச, வி.தொ.ச சங்கங்கள் இணைந்து போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. நாம் நடத்திய இயக்கங்களில் மிக முக்கியமானது குடிமனைப்பட்டாவுக்கான போராட்டங்களாகும். சுமார் 25 லட்சம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்கள் பல்வேறு வகையான புறம்போக்குகளில் வசித்து வருகின்றனர். மக்களிடம் ஈர்ப்புள்ள இப்பிரச்சனையில் வி.ச, விதொச சார்பில் தொடர்ச்சியான இயக்கங்கள் நடைபெற்றுள்ளன.

6.85 அதிமுக ஆட்சியின் போது 2005 செப்டம்பர் 6 அன்று மனைப்பட்டா கோரி வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இதில் பங்கேற்றனர். அதிமுக அரசு மனைப்பட்டா வழங்குவதற்கு சிறப்பு நிதியாக ரூ.50 கோடி ஒதுக்கியதுடன் நகராட்சி, மாநகராட்சிகளில் மனைப்பட்டா வழங்குவதற்காக இருந்த எல்லைத் தடையினை குறைத்து உத்தரவிட்டது. எனினும் நிலைமையில் முன்னேற்றமில்லாததால் 2006 பிப்ரவரி 25 அன்று மாநிலம் முழுவதும் சாலை மறியல் போராட்டத்தில் 217 மையங்களில் சுமார் 1.25 லட்சம் பங்கேற்றனர். 33,000 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் சரிபாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள்.

6.86 தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர், தரிசு நில விநியோகம், குடிமனைப்பட்டா பிரச்சனையை இணைத்து வலுமிக்க இயக்கம் நடத்திட திட்டமிடப்பட்டது. இதற்கென 17.08.2006 அன்று சென்னையில் நில உரிமை கோரும் மாநாடு நடத்தப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலிருந்து 2200 பேர் பங்கேற்றனர். செப்டம்பர் 21 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மனு கொடுத்து ஆர்ப்பாட்டம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. முன்னதாக ஒருவார காலம் சைக்கிள் பிரச்சாரத்துக்கும் அறைகூவல் விடப்பட்டது. திட்டமிட்டவாறு சைக்கிள் பிரச்சாரம், பல நூறு கிராமங்களில் கிராம கூட்டங்கள் நடைபெற்றன. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 5.16 லட்சம் பேர் பங்கேற்றனர். இருபது லட்சம் மனுக்கள் ஆட்சியாளரிடம் அளிக்கப்பட்டன. நமது அமைப்புகளுக்கு அப்பாற்பட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவு பங்கேற்றனர். அரசும் மனைப்பட்டா வழங்கிட அரசாணைகளை வெளியிட்டது.

6.87 இதனைத் தொடர்ந்து ஏற்கனவே மனு கொடுத்த அனைவருக்கும் மனைப்பட்டா வழங்கிட வற்புறுத்தி 2007 ஆகஸ்ட் 6ஆம் தேதி அரசு அலுவலகங்களில் குடியேறும் போராட்டம் நடத்திட அறைகூவல் விடப்பட்டு விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 3 லட்சம் பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதையும் - நம்மோடு பேச்சுவார்த்தை நடத்தி பட்டா பிரச்சனைக்கு சுமூக தீர்வு காண உள்ளதாக தமிழக அரசு அறிவித்ததையொட்டி குடியேறும் போராட்டம் ஆர்ப்பாட்டமாக மாற்றி நடத்தப்பட்டது. இதில் சுமார் 1 லட்சம் பேர் பங்கேற்றனர்.

6.88 இதுமட்டுமின்றி கிராம - வட்ட அளவிலும் ஏராளமான போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதர வெகுஜன அமைப்புகளின் சார்பிலும் பட்டாவுக்கான இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

6.89 வீட்டுமனைப்பட்டாவுக்காக நாம் நடத்திய இயக்கங்கள் அனைத்துப் பகுதி மக்கள் மத்தியில் நல்லத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசும் வீட்டுமனைப்பட்டா வழங்கிட நிபந்தனைகளை தளர்த்தி அரசாணைகள் வெளியிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பின்னர் இலவசப் பட்டா வழங்குவதற்கான வருமான வரம்பினை ரத்து செய்து உத்தரவிட்டது. பலருக்கு மனைப்பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. நமது சங்கம் முன்முயற்சி மேற்கொண்ட பல கிராமங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

6.90 இருப்பினும் வீட்டுமனைப் பிரச்சனை கிராம - நகர மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனையாக நீடித்துக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் வீட்டுமனைப்பட்டா தொடர்புடைய பிரச்சனைகளில் முழுகவனம் செலுத்தி இயக்கம் நடத்தும் அதே நேரத்தில் அம்மக்களை ஸ்தாபன ரீதியாக திரட்டுவதில் கவனம் செலுத்திட வேண்டும்.

6.91 ***அமரர் பி.எஸ்.ஆர் நூற்றாண்டு விழா*** - விவசாய இயக்க ஸ்தாபகத் தலைவர் தோழர் பி.எஸ்.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாவட்டங்களில் இதனையொட்டிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. சிறப்புமலர் வெளியிடப்பட்டது. திருத்துறைப்பூண்டியில் 10.4.2007 அன்று சிலைதிறப்பு விழா நடைபெற்றது. 4000க்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

6.92 தீண்டாமைக்கொடுமைக்கு எதிரான ஒருசில இயக்கங்கள் நடந்திருந்த போதிலும், போதுமான தலையீடு இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

6.93 விவசாய இயக்க வளர்ச்சிக்காகத் தொழிலாளர்களிடம் வசூல் செய்து சி.ஐ.டி.யு. விவசாய இயக்க நிதியைத் தொடர்ந்து அளித்து வருகிறது. விவசாய அரங்கப் பணிகளை முன்னெடுத்துச் செல்லவும், மாநில மையப் பணிகளை நிறைவேற்றவும் இது பேருதவியாக அமைந்துள்ளது.

6.94 "விவசாயிகள் - விவசாயத்தொழிலாளர்கள் அரங்க பணிகள் பற்றிய பரிசீலனையும் - கடமைகளும்" என்ற மத்தியக்குழுவின் ஆவணத்தைத் தமிழகத்தில் இதுவரை அமலாக்காதது சரியானதல்ல. அமலாக்குவதற்கான குறிப்பு உபகுழுவிலும், மாநில செயற்குழுவிலும் விவாதிக்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கட்சியின் அகில இந்திய மாநாட்டுக்குப் பின்னர் இதைத் துரிதமாக அமலாக்க வேண்டும்.

6.95 கடந்த மூன்றாண்டுகளில் 12 முறை உபகுழு கூடி விவாதித்துள்ளது. விவசாயிகள்-தொழிலாளர்கள் அவ்வப்போதும் எழும் பிரச்சனைகள் மீது நமது அணுகுமுறை விவாதித்து உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் விவசாயிகள் - விவசாயத்தொழிலாளர்கள் மத்தியில் நமது கட்சியின் அரசியல் நிலைபாடுகளை விளக்குவது - அவர்களைக் கட்சிக்கு நெருக்கமாக கொண்டுவருவதற்கான உத்திகள் குறித்து விவாதிக்கப்படாத குறைபாடுகள் உள்ளன. மாவட்டங்களில் அமைக்கப்பட்ட உபகுழுக்கள் தொடர்ந்து கூடுவதிலும், பிரச்சனைகள் பற்றி விவாதிப்பதிலும் தேக்க நிலை உள்ளது.

மாநில மையம்

6.96 தோழர்கள் கே.பி, ஜி.வீ, கே.எம், பி.எஸ், அரசு, ஜிமணி ஆகியோர் மாநில மையத்திலிருந்து பணியாற்றுகிறார்கள். மாநில மையக் கூட்டம் சராசரி 15 நாட்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. முன்னுக்குவரும் விவசாயிகள் - விவசாயத்தொழிலாளர்கள் பிரச்சனைகள் மீது தலையிட்டு இயக்கம் நடத்துவது உள்ளிட்ட பல பிரச்சனைகள் கூட்டாக விவாதித்து தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் மையத்தில் தொடர்ந்து யாராவது ஒரு மையத் தோழர் இருக்க வேண்டுமென்பதில் குறைபாடுள்ளது. விவசாய சங்கத்தில் கே.பி, கே.எம், பி.எஸ் ஆகிய மூவரும் பணியாற்றுகின்றனர். விதொச மாநில மையத்திலிருந்து ஜி.வீ, அரசு, ஜிமணி ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

6.97 இன்றைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முன்னுரிமை மாவட்டங்களையும், தாலுக்காக்களையும் தேர்வு செய்து கவனிக்க வேண்டும். மாநில மாவட்ட மையத்தோழர்கள்

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் ஊன்றி செயல்பட வேண்டும். மாநில மையத்தில் உள்ள தோழர்களுக்கு தலா மூன்று மாவட்டங்களை பொறுப்பாக்கி கவனிக்க வேண்டும். இதர மாவட்டங்களுக்கு இரண்டு சங்க நிர்வாகிகளை பொறுப்பாக்கி கவனித்திட வேண்டும். முன்னுரிமை மாவட்டங்களை தவிர இதர மாவட்டங்களில் சில தாலுக்காக்களை மட்டும் தேர்வு செய்து கவனம் செலுத்திட வேண்டும். மாவட்டங்களில் இரண்டு சங்கத்துக்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஊழியர்கள் முன்னுரிமை பணியாக இவ்வரங்க பணிகளை கவனிக்கும் வகையில் அவர்களுக்கு வேலை பிரிவினை செய்திட வேண்டும். கட்சி பணிகளை ஒட்டியே இவர்களது அரங்கப்பணி இருக்கும் என்ற நிலைமையை மாற்றிட வேண்டும். படிப்படியாக மாவட்ட மையங்களில் பணியாற்றும் முழுநேர ஊழியர்களுக்கு இந்த அரங்கத்தின் மூலம் அலவன்ஸ் வழங்கிடும் நிலைமையினை உருவாக்கிட வேண்டும்.

மாதர் அரங்கம்

6.98 உலகமயக் கொள்கைகளின் தாக்கம் பல்வேறு பரிமாணங்களில் பெண்களை பாதிக்கின்றது. கண்ணியமான வேலை வாய்ப்பின்மை, வன்முறை மற்றும் பல சிக்கல்கள் இக்கால கட்டத்தில் முன்னுக்கு வந்துள்ளன.

6.99 சென்ற மாநில மாநாட்டில், மாதர் அரங்க எதிர்காலக் கடமைகளாக, கீழ்க்கண்டவை வரையறுக்கப்பட்டிருந்தன:

- நகர்ப்புற, கிராமப்புற உழைப்பாளி பெண்களின் வர்க்கப் பிரச்சினைகளில் சுயேச்சையாகவும், வர்க்க - வெகுஜன அமைப்புகளுடனும் இணைந்து கூட்டாகவும் தலையீடு செய்வதில் மேலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.
- தீண்டாமை பிரச்னைகள் மீதான இயக்கம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். வகுப்புவாத கருத்துக்களுக்கு எதிராக கலாச்சார நடவடிக்கைகள் தொடர வேண்டும். இந்துத்துவாவின் பாதகமான விளைவுகளை அம்பலப்படுத்த வேண்டும். முஸ்லீம் பெண்களை ஸ்தாபனப்படுத்துவதிலும், அவர்கள் சந்திக்கும் தனிநபர் சட்டப் பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகளில் தலையீடு செய்வதிலும் கவனமாக முயற்சிகள் தேவை.
- சமத்துவம், பாலியல் பலாத்கார பிரச்சனைகள், வரதட்சணை கொடுமைகள், பெண் சிசுக் கொலை, கள்ளச்சாராயம் உள்படபெண்களின் அன்றாட பிரச்சனைகளில் நமது தலையீடுகளை அதிகப்படுத்துவது.
- சுய உதவிக் குழுக்களை கூடுதலாக அமைப்பதும், மற்ற குழுக்களுடன் தொடர்பை வலுப்படுத்துவதும் அத்தியாவசியமானதாகும்.
- அனைத்து உறுப்பினர்களையும் கிளைகளாக்க கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இடைக் கமிட்டிகளுக்கு கிளைகளை நடத்த பயிற்சியளிக்க வேண்டும்.
- பெண்கள் மத்தியில் கட்சியின் நேரடி நடவடிக்கைகளை பலப்படுத்துவதிலும், பெண்களை கட்சிக்குள் கொண்டு வருவதிலும் அவர்களுக்கு பயிற்சி அளித்து செயல்பாட்டை பலப்படுத்துவதிலும் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவது.

இந்த வழிகாட்டுதலின் அடிப்படையில், கடந்த 3 ஆண்டுகளில் பல முக்கிய பணிகள் நடைபெற்றுள்ளன.

பிரச்சனைகளில் தலையீடு

6.100 பெண்கள் அனைவரும் ஒரே மட்டத்தில் இல்லை; சாதி, வர்க்கம், சிறுபான்மை என்று பல பிரிவுகள், அதனால் விளைகிற ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. எனவே பகுதிவாரியாகப் பிரச்சனைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது கடந்த 10 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது பற்றிய பார்வையை மாவட்டக் குழுக்களுக்கு உருவாக்க முடிந்துள்ளது. முன்னேற்றமும் உண்டு.

தலித் பெண்கள்

6.101 தலித் பிரச்சனையைப் பொறுத்த வரையில், 2006ல், தர்மபுரி அரூரில் தலித் பெண்கள் மாநாடு, ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. தேர்தல் நடக்காத கொட்டக்கச்சியேந்தலுக்கு விருதுநகர் மாவட்ட மையம் சென்று பேசி, இரு தரப்பினர் மத்தியிலும் பதிவு போட்டு கிளை அமைத்தது குறிப்பிடத்தக்கது. நாகை, விழுப்புரம் - தலித் பெண் பஞ்சாயத்துத் தலைவர்கள் சிறப்புக் கூட்டமும், வடசென்னையில் குடிசைப் பகுதி கோரிக்கை மாநாடும் நடந்துள்ளன. நாகை தரங்கம்பாடி புத்தூர் கிராமத்தில் தலித் மக்கள் மீது காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து இயக்கமும், நிவாரண உதவிகளும் செய்யப்பட்டன. 8 மையங்களில் நடந்த இடைக்கமிட்டிக்கான வகுப்பில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஒரு பாடமாக வைக்கப் பட்டது. 2007ல் புதுக்கோட்டையில், பொன்னமராவதி தாலுகாவில் ஆய்வு நடத்தப் பட்டது. கட்சியின் அருந்ததியர் வாழ்வுரிமை பேரணி தயாரிப்பின் ஒரு பகுதியாக, வடசென்னை, திண்டுக்கல், கோவை மாவட்டக் குழுக்கள் அருந்ததியர் பகுதிகளுடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ளனர். தலித் பெண்களை ஸ்தாபனமாக்குவதில் முன்னேற்றம் உண்டு. ஆனால் தீண்டாமையை எதிர்த்த நேரடி நடவடிக்கை என்ற முறையில் தலையீடுகள் அமையவில்லை என்பதை விமர்சனமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் பெண்கள்

6.102 முஸ்லிம் பெண்கள் மத்தியிலான பணியில் தற்போது நல்ல முன்னேற்றம் உள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் சச்சார் கமிட்டி அறிக்கையின் பின்னணியில் ஏராளமான பேரவைக் கூட்டங்கள் நடந்து, நல்ல தொடர்பு கிடைத்துள்ளது; சச்சார் கமிட்டி குறித்து 16000 துண்டு பிரசுரம் போடப்பட்டுள்ளது. 5000த்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்களை சந்தித்துள்ளோம். மகளிர் சிந்தனை, முஸ்லிம் பெண்கள் சிறப்பிதழாக வெளிவந்தது. முஸ்லிம் பகுதியில் கோவை மாவட்டக் குழுவின் சார்பாக மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. அகில இந்தியத் தலைவர் சுபாஷினி அலி பங்கேற்ற ஒரு மாநாடு திருச்சியில் நடைபெற்றது. பொதுவாக முஸ்லிம் அமைப்புகள், ஜமாத் உட்பட நமது முயற்சியைப் பாராட்டியுள்ளனர். கணிசமான முஸ்லிம் பெண்கள் ஸ்தாபனமாக்கப்பட்டுள்ளனர்.

சுய உதவிக் குழுக்கள்

6.103 திருப்பூர், தென்சென்னை, காஞ்சி மாவட்டங்கள் சுய உதவிக் குழுக்களை அதிகப் படுத்தியுள்ளன.

6.104 கோரிக்கை மாநாடு 500க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்புடன் விருதுநகர், சேலம், திருப்பூர், தென் சென்னை, நாகை மாவட்டங்களில் நடந்தது. தர்மபுரி, திருவாரூர் திட்டமிட வேண்டும். திண்டுக்கல், பாண்டி, கிருஷ்ணகிரி, நாகையில் கடனுதவிக்கான இயக்கம் நடத்தப்பட்டது. பல மாவட்டங்கள் உறுப்பினர் பதிவுக்கும், இயக்கங்களுக்கும் மற்ற சுய உதவிக் குழுக்களை அணுகுவது முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆனால் இன்னும் வெகுதூரம் போக வேண்டியிருக்கிறது.

6.105 உழைப்பாளிப் பெண்களின் வர்க்கப் பிரச்சனையில் மீனவப் பெண்கள் சிறப்பு மாநாடு ராமேஸ்வரம், கடலூரிலும், பேரவைகள் நாகை, வடசென்னையிலும் சிறப்பாக நடத்தப்பட்டன. ராமேஸ்வரத்தில் தொடர் நடவடிக்கையாக ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. விருதுநகர் சிவகாசியில் பட்டாசுத் தொழிலாளர் பிரச்சனை குறித்து, பிருந்தா கராத் கலந்து கொண்ட உயிர்ப் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. சுமங்கலித் திட்டச் சுரண்டலை எதிர்த்து வாலிபர் சங்கத்துடன் சேர்ந்து, சில மாவட்டங்களில் 2007 டிசம்பர் 10ல் பிரச்சாரம் நடத்தப்பட்டது. 4 மாவட்டங்களில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவில் இடம் பெற்றிருக்கிறோம். பொதுவாக, பெண்களை நல வாரியத்தில் சேர்ந்து நிவாரணம் வாங்கிக் கொடுக்கும் பணியிலும் பல மாவட்டக் குழுக்கள் ஈடுபடுகின்றன. சம ஊதிய அரசு கமிட்டியில் இடம் பெற்றுள்ளோம்.

6.106 விவசாயப் பெண்கள் பிரச்சனையில், நாகை, விழுப்புரம், கடலூர், மதுரை புறநகரில் பெண் விவசாயிகள் கூட்டம் நடத்தப்பட்டது. திருவாரூர் மாவட்டம் புளிச்சகாடியில் அறுவடை இயந்திரத்தை எதிர்த்த போராட்டத்தில் மாதர் சங்கம் குறிப்பிடத்தக்க பங்காற்றியது. நாகை பிரிஞ்சி மூளையில் போராடிக் கூலி உயர்வு பெறப்பட்டது. 100 நாள் வேலைத் திட்டம் குறித்து பரவலான பேரவைகள், கையெழுத்து இயக்கங்கள், மனு கொடுத்தல் மற்றும் ஸ்தல அளவில் குறைந்தபட்ச கூலி உள்ளிட்ட தலையீடுகள் நடந்துள்ளன. 2005 அக்.17 வறுமை ஒழிப்பு தினத்தில், 6 மாவட்டங்களும் இக்கோரிக்கையை மையப்படுத்தி சிறப்பாக இயக்கம் நடத்தின. 2007ல் அகில இந்திய ஆராய்ச்சி மைய உதவியுடன் நாகை, விழுப்புரத்தில் செய்யப்பட்ட ஆய்வு பயனளிப்பதாக இருந்தது. சிவகங்கையின் நான்கு வேலைத் தலங்களில் அகில இந்திய உப தலைவர் பிருந்தா பார்வையிட்டு கலெக்டருடன் பேசினார். ஆனால், தேவைக்கும், சக்திக்கும் தகுந்த அளவில் நமது தலையீடு இல்லை.

சட்ட மையம்

6.107 சட்ட மையத்தின் பல்வேறு வகுப்புகள் நடத்தப்பட்டன. 3 பொதுநல வழக்குகள் போடப்பட்டன. மகளிர் காவல் நிலைய ஆய்வு செய்யப்பட்டது: ஆனால் இயக்கமாக்கப்படவில்லை.

6.108 வழக்குகளை இயக்கமாக்குவதில் சில மாவட்டங்களில் முயற்சியுண்டு (விருதுநகர், சிவகங்கை, கடலூர், தென் சென்னை). பொதுவாக அதில் உள்ள பலவீனம் இப்போதும் தொடர்கிறது. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்ட அடிப்படையில் மாநில சட்ட மையம், சேவை அமைப்பாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

6.109 மார்ச் 2, 2006, ஜார்ஜ் புஷ் இந்தியா வந்த போது நடந்த கூட்டு கண்டன இயக்கத்தில் 8 மாவட்ட பங்கேற்பு இருந்தது; பிறகு மதுரையில் நடந்த உலக சமூக மாமன்றத்திலும் நமது முக்கிய பங்களிப்பு செய்யப்பட்டது. பெப்ஸி, கோக் எதிர்ப்பு இயக்கம் 6 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. 2007 மார்ச்-8, ஏகாதிபத்திய எதிர்ப்பையும் மையமாக வைத்து அறைகூவல் விடப்பட்டது. நிமிட்ஸ் போர் கப்பல் சென்னை துறைமுகத்துக்கு வந்த போதும், அணு சக்தி ஒப்பந்த எதிர்ப்புப் பிரச்சாரம் நடந்த போதும், வடசென்னை மாவட்டக்குழு தனியாக துண்டுப் பிரசுரம் போட்டு, பெண்களைத் திரட்டியது. அக்டோபர் 9 சேகுவேரா நினைவு தினத்தன்று தனியாகவும், மாணவர் சங்கத்துடன் இணைந்தும் இயக்கம் நடத்தப்பட்டது.

வகுப்புவாத எதிர்ப்பு

6.110 தமிழகத்தைப் பொறுத்த வரை, வகுப்புவாத எதிர்ப்பு என்பது, மத நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளாக எடுக்கப்பட்டன. 2006, 2007 பொங்கல் விழாக்கள் மதச்சார்பற்ற விழாக்களாக நடத்தப் பட்டன. 2005, 2006, 2007ல், குமரி, விருதுநகர், கிருஷ்ணகிரி, மதுரை மாநகர், சேலம், வடசென்னை, நெல்லை, புதுக்கோட்டை மாவட்டங்கள் பண்டிகைகளின் போது சில முயற்சிகளை எடுத்துள்ளன. திருச்சியில், கடந்த 2 ஆண்டுகளாக பெண்களுக்கான இஃப்தார் விருந்து நடத்தப் பட்டது. 33 சதவிகித இடஒதுக்கீடு குறித்து பிஜேபியைக் கண்டித்து இயக்கம் நடத்திய போது, அதன் வகுப்புவாதத் தன்மை விமர்சித்துப் பேசப்பட்டது. இவையெல்லாம் நடந்திருந்தாலும், கோவை, திருப்பூர், குமரி போன்ற வகுப்புவாத சக்திகள் வலுவாக இருக்கக் கூடிய மாவட்டங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்கிற விமர்சனம் கவனத்தில் எடுக்கப்பட வில்லை.

வாழ்வுரிமைப் பிரச்னைகள்

6.111 உணவுக்காக ரேஷன் குறித்த இயக்கங்கள் ஏராளமாக ஸ்தல அளவில் நடந்துள்ளன. 2005, டிசம்பர் 1-ல் மாநில அறைகூவல் விடுக்கப் பட்டது. ஆனால் 5 மாவட்டங்களில் மட்டுமே நடைமுறையானது. 2007ல் விலைவாசி எதிர்ப்பு இயக்கம் மாநில அறைகூவலாக அளிக்கப்பட்டு, பரவலாக நடைபெற்றது.

6.112 குடிநீருக்கான இயக்கமும் பரவலாக ஸ்தல அளவில் நடைபெற்றுள்ளது. நெல்லை கங்கை கொண்டான் கோக் தொழிற்சாலையை எதிர்த்து நடந்த கூட்டுப் போராட்டத்தில் மாதர் சங்க பங்களிப்பு முக்கியமானது. ஆனால் மாதர் சங்கம் தனியாக நடத்திய இயக்கத்தில் திரட்டல் குறைவாகவே இருந்தது. பட்டாவுக்கான இயக்கம் 2006 செப்.21ல் விவசாய சங்கத்துடன் இணைந்தும், அதற்குப் பின் தனியாக ஒரு சில (திண்டுக்கல், சேலம், நாகை, தென்சென்னை, திருவாரூர் கடலூர்) மாவட்டங்களிலும் சிறப்பாக நடந்தது.

6.113 இவை தவிர, ஏழைப் பெண்கள் மற்றும் தனிப் பெண்கள் பிரச்சனையில் முதியோர், விதவை ஓய்வூதியம் பிரச்சனையை மையப்படுத்தி பல இயக்கங்கள் நடந்துள்ளன. ரேஷன் கோரிக்கையுடன் இதையும் இணைத்து 2007 ஜூலை 24, செப்.12 மாநில அறைகூவல்கள் விடப்பட்டன. சட்டமன்றத்திலும் பேசப்பட்டு சில வாக்குறுதிகள் பெறப்பட்டன. அவற்றை அரசாணையாக்கக் கோரி மேலும் பல இயக்கங்கள் நடந்துள்ளன. மற்றொரு முக்கிய பிரச்னையான மருத்துவமனை சீர்கேடுகளும் பரவலாக மாவட்டங்களில் எடுக்கப்பட்டன. 2007, ஏப்ரல்-7 மாநில அறைகூவலாக விடப்பட்டுப் பல மாவட்டங்களில் இயக்கங்கள் நடந்தன.

6.114 சுனாமி நிவாரணப் பணிகள் என்கிற அடிப்படையில், நாகை மாவட்டத்துக்கு 25 தையல் இயந்திரங்கள் வழங்கினோம். தென் சென்னையில் கடற்கரையில் சிறு வியாபாரிப் பெண்களுக்கு உதவினோம். மற்ற சில மாவட்டங்களுக்கும் 1 லட்சம் ரூபாய் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடலோர மாவட்டங்கள் பலவற்றில் கிளைகள் அமைத்து, உறுப்பினர் பதிவு நடத்தப்பட்டுள்ளது. வடசென்னை சுனாமி நகரில் மீனவப் பெண்கள் மத்தியில் சிறுநீரக மோசடி நடந்த போது உண்மை அறியும் குழுவாகச் சென்றோம். வெள்ள நிவாரணத்தின் போது வடசென்னைப் பகுதியில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த குடும்பங்களில் 7 பெண்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டது.

6.115 சித்தாந்த ரீதியான தலையீட்டை வலுப்படுத்துவதற்காக, மகளிர் சிந்தனையில் அவ்வப்போது கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. வெள்ளி விழா பிரச்சாரத்தில் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் பரவலாகக் கொண்டு போகப்பட்டன. ஏராளமான கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. சமூக சீர்திருத்த வாதிகளின் நினைவிடங்கள் வழியாகப் பிரச்சார இயக்கம் கொண்டு சொல்லப்பட்டது. வரதட்சணை எதிர்ப்பு மாநாடுகள் வாயிலாகவும் (திருப்பூர், மதுரை மாநகர்), பெண் கருக்கொலை எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலமாகவும் (சேலம், தர்மபுரி) சித்தாந்த ரீதியான தலையீடு செய்துள்ளோம். அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் உடைக் கட்டுப்பாடு கொண்டுவந்தபோது SFI-யுடன் இணைந்து உடனடி கூட்டம் நடத்தப் பட்டது. குஷ்பு பிரச்னையில், கருத்துரிமைக்காக அறிக்கை ஒன்றை வெளியிட்டதோடு, மற்ற அமைப்புகளுடன் கூட்டாக இயக்கம் நடத்தினோம். விருதுநகரில் எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து கருத்தரங்கு நடத்தப்பட்டது. பல்வேறு வகுப்புகள் மூலமாகவும், பிரசுரங்கள் மூலமாகவும் நமது ஊழியர்களுக்கு சித்தாந்த ரீதியான பயிற்சி அளித்துள்ளோம்.

வன்முறைப் பிரச்சனைகள்

6.116 பெண்களைக் காதலித்து, கர்ப்பமாக்கி, கைவிடும் வழக்குகள், இணையதளம், மொபைல் போனைப் பயன்படுத்திச் செய்யப்படும் குற்றங்கள் உள்ளிட்ட பொதுவாக, ஏராளமான பிரச்சனைகள் எடுக்கப்பட்டுள்ளன. நடவடிக்கை எடுக்கவும் முடிந்துள்ளது. நாம் தலையீடு செய்த வழக்குகள் சிலவற்றில் நியாயமான தீர்ப்புகள் இக்காலக் கட்டத்தில் வந்துள்ளன.

6.117 நமது தலையீட்டின் காரணமாக, சினிமாத் துறையில், பாலியல் துன்புறுத்தல் தடுப்பு கமிட்டி உருவாக்கப்பட்டு, மாதர் சங்கப் பிரதிநிதிகளும் இணைக்கப்பட்டுள்ளனர். இதே போன்று நிறுவனங்களில் அமைக்கப்பட்ட கமிட்டிகளில் இடம் பெற்றுள்ளோம். மதுரை புறநகரில் பெண் சிசுக் கொலை வழக்கில் தலையிட்டு, குற்றவாளிகளைக் கைது செய்ய வைத்தோம். அரவாணிகள் பிரச்சனைகள் மீதான புரிதலை உருவாக்கிக் கொள்ள ஒரு முயற்சி செய்யப்பட்டுள்ளது.

6.118 நமது ஊழியர்களில் சூசைமேரி மீதான தாக்குதல், தேவி, பாலபாரதி, மல்லிகா, ரேணுகாவை அதிகாரி/கவுன்சிலர்கள் அவதூறு செய்தது போன்ற விஷயங்களில் உடனுக்குடன் தலையீடு செய்தோம்.

6.119 தமிழகத்தில் ஆழமாக உள்ள பெண் சிசு கருக் கொலை பிரச்சனையில் தேனி மாநிலக்குழு கூட்டத்திலும், புதுச்சேரி ஆசிரியர்களுக்கான வகுப்பிலும் தடுப்புச் சட்டம் குறித்து கற்றுத் தரப்பட்டது. வேலூரில் நடந்த மாநில சிறப்பு மாநாட்டில் தனி அறிக்கை வைக்கப் பட்டது. சேலம், தர்மபுரியில் மற்ற தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து பிரச்சாரம் செய்யப்பட்டது. தர்மபுரி, ஈரோடு, சேலத்தில், ஸ்கேன் மையங்களில் நடந்த அதிரடி சோதனையில் பங்கு பெற்றோம்.

6.120 மாநில மகளிர் ஆணையத்துக்கு சட்ட அந்தஸ்து கோரி 10 ஆண்டுகளாகப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டும் இதுவரை நடக்கவில்லை. திமுக அரசு வந்த பின், கமிட்டி தலைவராக இந்திரகுமாரி தேர்வு செய்யப்பட்ட போது, எதிர்ப்பு தெரிவித்த ஒரே பெண்கள் அமைப்பு நாம் தான். இதைத் தொடர்ந்து உடனடியாக அவர் நீக்கப்பட்டார். ஆனாலும் சட்ட அந்தஸ்து கோரிக்கையை நிறைவேற்ற அரசியல் நிர்ப்பந்தம் தேவைப்படுகிறது.

கூட்டு இயக்கம்

6.121 2005 செப்.29 மறியல் NPMO சார்பில் நடந்த போது, நமது பெண்கள் 11000 பேர் கலந்து கொண்டு கைதானார்கள். 2006 செப்.21 இயக்கம் வி.ச./வி.தொ.ச. உடன் நடத்தப்பட்டது மார்ச் 8,2006 சென்னை, மதுரையை மையப்படுத்தி, பெண்கள் அமைப்புகளுடன் கூட்டாக, நடத்தப்பட்டது. அச்சமயம் தேர்தலை ஒட்டி பெண்களுக்கான கோரிக்கை சாசனம் வெளியிடப்பட்டது. 100 நாள் வேலை பிரச்சனையில், NFIW- வுடன் கூட்டுக் கருத்தரங்கு நடந்தது. குமரி மாவட்ட கூட்டுக் குழுவில் கிறித்துவ அமைப்புகள் மட்டுமே இடம் பெற்றிருப்பதால், இதர மதச்சார்பற்ற பெண்கள் அமைப்புகள்/ தன்னார்வ அமைப்புகளை இணைப்பது அவசியம் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

6.122 கே.பி.ஜே. அறக்கட்டளை சார்பில் - குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஸ்தாபனம்

6.123 மாநில மையம் முறையாகக் கூடுகிறது. மாநிலச் செயற்குழு கூடுவது அதிகரித்துள்ளது. மாநிலக்குழு குறிப்பிட்ட காலத்தில் கூடுகிறது. மாநிலக்குழுவில் 7 இளம் பெண்களை சிறப்பு அழைப்பாளராக இணைத்தது நல்ல முயற்சி.

6.124 மாநில அளவில் மட்டுமல்லாமல் மாவட்ட வாரியான ஓராண்டுத் திட்டம் போடுவதில் முன்னேற்றம் உண்டு. சராசரியாக கிட்டத்தட்ட 29 மாவட்டங்கள் ஓராண்டு திட்டம் போட்டுள்ளன. அதன்படி நடப்பதில் ஓரளவு முன்னேற்றம் உள்ளது. மாநில ஓராண்டு திட்டம் 6 மாதங்களுக்கொரு முறை பரிசீலிக்கப்படுகிறது. மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் பணிகள் எழுத்து மூலமாகப் பெறப்பட்டு 2006, 2007ல் வருடம் 2 முறை பரிசீலனை செய்யப்பட்டது. இக்கால கட்டத்தில் 3 செயற்குழு உறுப்பினர்கள் பல்வேறு காரணங்களுக்காகச் செயல்படவில்லை. அவர்களது கடிதங்கள் ஏற்கப்பட்டு, விடுவிக்கப்பட்டுள்ளனர்.

6.125 கடந்த மாநாட்டின் போது 8 ஊழியர்களுக்கு, மாதர் சங்க மையத்திலிருந்து பகுதி நேர அலவன்ஸ் கொடுக்கப்பட்டது, தற்போது 16 ஆக உயர்ந்துள்ளது.

6.126 மாவட்டக் குழுக்கள் கூடுவது பரவாயில்லை. ஆனால் வருகை திருப்திகரமாக இருப்பதாகக் கூற முடியாது. பல மாவட்டங்களில், முன்னணி ஊழியர்களிடம் கருத்தொற்றுமை - கூட்டு செயல்பாட்டைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. இடைக்கமிட்டி செயல்பாடுகளில் பெரும் அபிவிருத்தி தேவைப்படுகிறது. கமிட்டிகளில் வருகை என்பது, அமைப்பின் ஜனநாயகச் செயல்பாட்டுடன் தொடர்புடையது. இடைக் கமிட்டிகளை பலப்படுத்தும் அடிப்படையில், 2006, 2007ல் வகுப்புகள், பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

6.127 கடந்த 3 ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட புதிய கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுப் பேரவை நடத்தும் முயற்சியும், கிளை நிர்வாகிகளுக்கான ஸ்தாபன வகுப்புக்கான முயற்சியும் ஆங்காங்கே எடுக்கப்படுகின்றன. கிளைச் செயலாளர் கூட்டங்கள் நடப்பதில்லை.

6.128 உறுப்பினர் பதிவு வருடா வருடம் அதிகரித்தாலும், முன்னேற்றம் போதாது. நமது நடவடிக்கைகளுக்கும், செல்வாக்குக்கும் பதிவுக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதாகத் தொடர்ந்து மாதர் சங்க அகில இந்திய மாநாடு விமர்சிக்கிறது. 2007க்கான 7 லட்சம் இலக்கில், இதுவரை 5 லட்சம் வரை தான் பதிவாகியுள்ளது. இதர அரங்கங்களில் உள்ள பெண்களை உறுப்பினராக்க ஊக்கப்படுத்த வேண்டும் என்கிற வழிகாட்டுதல் பொதுவாக நிறைவேறவில்லை.

6.129 மாநிலம் முழுவதும் மையப்படுத்தி இயக்கம் நடத்துவது இக்கால கட்டத்தில் நடைபெறவில்லை. மாவட்ட அளவில் பெண்களைத் திரட்டுவதிலும் ஒரு முறிப்பை ஏற்படுத்த முடியவில்லை. நிதி நிலைமை மாவட்டங்களில் கவலைக்கிடமாகவே தொடர்கிறது. மாநில அளவில் ஓரளவு பரவாயில்லை.

6.130 குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம், மாதர் இயக்கத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, வெள்ளி விழாவை ஒட்டி 3 கையேடுகள் போன்ற பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. மகளிர் சிந்தனை உள்ளடக்கம், விற்பனையில் மேம்பாடு உண்டு. 4 தலைப்புகளில் வகுப்பெடுக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

பிராக்ஷன் செயல்பாடு

6.131 மாதர் அரங்க பிராக்ஷன் முறையாகக் கூட்டப்பட்டு, அரசியல் ரிப்போர்ட் செய்யப்படுகிறது. கட்சியின் மத்தியக் குழு / மாநிலக் குழு முடிவுகளை மாதர் அரங்கில் செயல்படுத்துவது பற்றியும் விவாதிக்கப் படுகிறது.

6.132 பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் பெண் பேச்சாளர்களுக்கு 3 மையங்களில் பயற்சியளிக்கப்பட்டு, பல மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களது பேச்சு, பொதுவாகப் பாராட்டும்படியாக அமைந்தது. ஜனநாயக விரோத அதிமுக அரசு, அகற்றப்பட வேண்டும் என்கிற முடிவின் படி, ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. குறிப்பாக சுய உதவிக் குழு பெண்களிடம் மட்டும் 1,50,000 துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

6.133 தேர்தல்களின் போது, நமது முன்முயற்சியில் இதர பெண்கள்அமைப்புகளையும் இணைத்து பெண்களுக்கான கோரிக்கை சாசனம் உருவாக்கப்பட்டு, அனைத்துக் கட்சிகளுக்கும் அனுப்பப்பட்டது. வகுப்புவாத பிஜேபி மற்றும் அதிமுக தவிர்த்து, மற்ற கட்சிப் பிரதிநிதிகளை அழைத்துக் கூட்டம் நடத்தப்பட்டது.

6.134 கட்சியின் இடைக் கமிட்டி, மாவட்டக் கமிட்டியிலுள்ள பெண்களின் தர உயர்வுக்காக, 2007ல் 3 மையங்களில் 4 தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன. பங்கேற்பு சுமார் 50 சதவிகிதம்தான். மாவட்டக் கமிட்டிகள் முழுமையாக கவனம் செலுத்தியிருந்தால், இந்த பலவீனத்தைக் களைந்திருக்க முடியும்.

6.135 பிராக்ஷன் செயல்பாட்டினைப் பலப்படுத்த, திருப்பூரில் மாதர் அரங்க பிராக்ஷன் கன்வீனர்கள் கூட்டமும், சமீபத்தில் சாத்தூரில் பிராக்ஷன் கன்வீனர்கள் மற்றும் மாதர் அரங்கப் பொறுப்பாளர்களின் கூட்டமும் நடத்தப்பட்டது. பங்கேற்பு சிறப்பாக இருந்தது. எழுத்துபூர்வமாக வைக்கப்பட்ட அறிக்கை மீது குழு விவாதம் நடத்தப்பட்டு, ஆலோசனைகள் இறுதியாக்கப் பட்டன.

6.136 2007ல் மாதர் அரங்கமும், கட்சியின் முன்னுரிமை அரங்கமாகத் தேர்வு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் சிறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

6.137 பெண் கரு - சிசுக் கொலையை எதிர்த்து சேலத்தில் 7 மாவட்டங்களை இணைத்து மண்டல மாநாடு, மாநிலக் கட்சி மைய வழிகாட்டுதலுடன் பாராட்டும்படியாக நடைபெற்றது. அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும், மாநில செயலாளரும் கலந்து கொண்டது, கட்சி அணிகளுக்குப் பிரச்சனையின் தீவிரத்தை உணர்த்தியது. 716 பெண் தோழர்களும், 930 ஆண் தோழர்களும், ஆக மொத்தம் 1646 பேர் கலந்து கொண்டனர்.

6.138 “பெண்கள் பிரச்சனைகள் குறித்து கட்சியின் கண்ணோட்டமும் கடமைகளும்” என்கிற மத்திய கமிட்டியின் ஆவணத்தை அடிப்படையாக வைத்து, மாநில ஆவணம் தயாரிக்கப்பட்டு,

சுமார் 11000 பிரதிகள் கட்சிக் கடிதமாக வெளியிடப் பட்டது. ஆனால், இந்த ஆவணம் குறித்த ரிப்போர்ட்டிங், வடசென்னை, தென்சென்னை, திருப்பூர், விருதுநகர், கோவை, திருச்சி, தூத்துக்குடி ஆகிய 7 மாவட்டங்களில் மட்டுமே நடந்துள்ளது.

6.139 அலவன்ஸ் பெறும் பெண் ஊழியர்களின் எண்ணிக்கை மேலும் கூடுதலாக வேண்டியுள்ளது. சென்ற மாநாட்டில் ஒரு அலவன்ஸ் ஊழியர் கூட இல்லாத பட்டியலில் காஞ்சிபுரம், ஈரோடு, நாமக்கல் நீடிக்கின்றன.

6.140 இந்த அரங்கில் கட்சி கட்டும் பணியில் தொடர் முன்னேற்றம் உள்ளது. கடந்த மாநாட்டின் போது, கட்சி உறுப்பினர்களில் பெண்கள் 11.5 சதமாக இருந்தது, 2007ல் 13.3 சதமாக உயர்ந்துள்ளது. 28 மாவட்டங்களில் கிடைத்த தகவலின் படி, கிளைகள் எண்ணிக்கை 736. கமிட்டிகளில் பெண்கள் இடம் பெறுவதும் அதிகரித்துள்ளது. பொதுவாக இக்கால கட்டத்தில் கட்சி நடத்திய பல்வேறு இயக்கங்களில் பெண்களின் பங்கேற்பு கணிசமாக உயர்ந்துள்ளது.

எதிர்காலக் கடமைகள்

- **ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு, தலித், முஸ்லீம் பெண்களின் பிரச்னைகள் மீதான இயக்கங்கள், பெண் கருக் கொலை உள்ளிட்ட வன்முறை பிரச்னைகளில் தொடர் நடவடிக்கை, சுய உதவிக்குழுக்களை பலப்படுத்தல், வர்க்கப் பிரச்னைகள் மீது முன்முயற்சி தொடர வேண்டும்.**
- **இடைக் கமிட்டி, கிளைகள் மீது அதிக கவனம், சித்தாந்த ரீதியான தலையீட்டை வலுப்படுத்துவது உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்காலத்தில் கூடுதல் முயற்சி அவசியம்.**
- **பெண்களை பாதிக்கும் பிரச்னைகளை மையப்படுத்தி மாநில அளவிலும் மாவட்டங்களிலும் கட்சி சார்பில் இயக்கம் / பிரச்சாரம் / சிறப்பு மாநாடு திட்டமிடப்பட வேண்டும். பெண்கள் குறித்த ஆவணம், அனைத்து மாவட்டங்களிலும் ரிப்போர்ட் செய்யப்பட வேண்டும்.**
- **பெண் கட்சி உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்து, தர உயர்வை உத்தரவாதப்படுத்த வேண்டும். கட்சிக்குள் பெண்களின் வருகையைப் பெருமளவு அதிகரிக்க வேண்டும்.**

வாலிபர் அரங்கம்

6.141 நாட்டின் மக்கள் தொகையில் 15 முதல் 40 வயது வரையிலான இளைஞர்கள் 55 சதம் உள்ளனர். தமிழகத்தில் 15 முதல் 40 வரையிலான இளைஞர்களின் எண்ணிக்கை 2.88 கோடி ஆகும். இவர்களில் சோசலிச முகாமின் பின்னடைவு, உலகமய தாராளமய கொள்கைகளின் அமலாக்கம் ஆகியவற்றிற்குப் பின் பிறந்தவர்கள் 15 முதல் 25 வயது வரையுள்ள இளம் தலைமுறையினர், சுமார் 1.5 கோடிப் பேர் எந்த முதலாளித்துவ அரசியல் அமைப்பும் சென்றடையாத இளைஞர் திரளாக உள்ளனர். இவர்களை வென்றெடுப்பதை இலக்காக்கி வாலிபர் அரங்கத்தின் பணிகளைத் திட்டமிட வேண்டும்.

6.142 தமிழகத்தில், வேலை நியமனத்தடைச் சட்டம் நீக்கப்பட்டிருந்தாலும், அரசுப் பணியில் லட்சத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் பூர்த்திச் செய்யப்படவில்லை. 60 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைகேட்டு பதிவு செய்துள்ளனர். இவர்களுடன் பதிவு செய்யாதவர்கள், இதர உடலுழைப்புத் தினக்கூலி உழைப்பாளிகள் என இரண்டு கோடி இளைஞர்கள், இளம் பெண்கள் வாழ்க்கைத்தேடும் போர்க்களத்தில் உள்ளனர். இந்தப் பின்னணியில் வாலிபர் அரங்கப் பணிகளை ஆய்வு செய்து எதிர்கால செயல்பாட்டை முன்னெடுத்துச் செல்வது நமது கடமையாகும்.

இயக்கங்கள்

6.143 2005, செப். 22 அன்று டி.ஒய்.எப்.ஐ. சார்பில் நெல்லை கங்கை கொண்டானில் நடந்த மறியல் குறிப்பிடத்தக்கது. 1071 பேர் கலந்து கொண்டனர். தொடர்ந்து 2006லும் திருச்செந்தூர், தென்காசி, விருதுநகர் ஆகிய முனைகளில் இருந்து வேன் பிரச்சாரம் நெல்லையை நோக்கி நடைபெற்றது.

6.144 தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கையில் வாலிபர் அரங்கம் சார்பில் 2005, செப். 17இல் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் 125 பேர் பங்கேற்று நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டமும், 2006, செப். 6 அன்று சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் தமிழ்மொழி தீண்டாமைக்கு எதிராக 1500 பேர் பங்கேற்று நடைபெற்ற இயக்கமும் குறிப்பிடத்தக்கவை. கட்சியின் சார்பில் அக் 2007இல் நடந்த ஆலய நுழைவு இயக்கத்திலும், இளைஞர்கள் அதிகம் பங்கேற்றனர்.

6.145 கடந்த கால அதிமுக ஆட்சி பின்பற்றிய வேலை நியமனத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற வைத்ததும், தற்போதைய திமுக ஆட்சி 12 ஆண்டுகள் நிறுத்தப்பட்டிருந்த வேலையில்லாக் கால நிவாரணம் வழங்க இசைந்ததும், நமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். 2006, பிப். 13 மறியல் போராட்டமும், அதில் சுமார் 18 ஆயிரம் பேர் பங்கேற்றதும், 2005, 2006 மார்ச் 23 பகத்சிங் நினைவு தினத்தில் வேலையில்லா இளைஞர்களின் எழுச்சி நாள் இயக்கமும் 2006 சட்டமன்றத் தேர்தலில் விவாதப் பொருளாக, வேலை என்ற கோரிக்கை மாறுவதற்கு உதவி செய்தது.

6.145 2007, ஆக. 12 அன்று தமிழகத்தில் முதல் முறையாக சுமங்கலித் திட்டம் என்ற 'கேம்ப் கூலி' முறையை எதிர்த்துப் பிரச்சாரம், சிறப்பு மாநாடு ஆகிய பணிகளில் வாலிபர் அரங்கம் ஈடுபட்டது.

6.146 கல்விக் கடன் வழங்குவதில் உள்ள நிபந்தனைகளைத் தளர்த்த வலியுறுத்தி 66 இடங்களில், 2007 ஜூனில் வாலிபர் அரங்கம் தேசிய வங்கிகளுக்கு முன்பு போராட்டம் நடத்தியது. திருவள்ளூர், ஈரோடு, கோவை, திருப்பூர், சேலம் உள்ளிட்ட பல நகரங்களில், போராட்டத்திற்குப் பின் கடன் கொடுக்க வங்கி நிர்வாகம் சம்மதித்தது.

சேதுக் கால்வாய்த் திட்டம் - இயக்கம்

6.147 சேது சமுத்திரத் கால்வாய்த் திட்டத்தை முடக்குவதற்கான முயற்சிகள் தலைதூக்கிய நிலையில் வாலிபர் அரங்கம் மேற்கொண்ட 2007 அக்டோபர் 8 முதல் 10 வரை தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, சிவகங்கை ஆகிய நான்கு முனை சைக்கிள் பிரச்சாரமும், ராமேஸ்வரத்தில் நடந்த பொதுக் கூட்டமும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து கடலோர மாவட்டங்களான திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட இயக்கம் மக்களிடம் வரவேற்பைப் பெற்றதாக அமைந்தது. இத்திட்டத்தைச் செயல்படுத்த வலியுறுத்தி நெல்லையில் உண்ணாவிரத இயக்கம் நடைபெற்றது.

6.148 சுனாமி தாக்கிய 13 மாவட்டங்களில், பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திய கடலூர், நாகை, குமரி மாவட்டங்களில் வாலிபர் அரங்க ஊழியர்கள் ஒரு மாத காலம், பாதித்த பகுதிகளை சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டனர். ஆர்.எஸ்.எஸ்., தமுமுக போன்ற அமைப்புகள் ஒரு புறம் தீவிரம் காட்டிய சூழலில் வாலிபர் அரங்க ஊழியர்களின் பங்களிப்பு மிகமுக்கியமானதாக அமைந்தது.

6.149 அரசு மருத்துவமனை சீர்கேடுகளைக் கண்டித்து பல்வேறு போராட்டங்களை நடத்திய நமது வாலிபர் அரங்கம், திருப்பூர், கோவை, திருவள்ளூர், ராஜபாளையம், சமயநல்லூர் உள்ளிட்ட நகரங்களில் நடத்திய உழைப்பு தானப் பணிகள் மக்களின் பாராட்டைப் பெற்றது. உழைப்பு தான நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாநில அரசு, திருப்பூர், கோவை அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தது. பள்ளி மற்றும் அரசு மாணவர் விடுதிகளைச் சீரமைக்கும் பணிகளும் திருப்பூர், நாகர்கோவில் நகரங்களில் நடைபெற்றுள்ளது.

அகில இந்திய மாநாடு

6.150 வாலிபர் அரங்கத்தின் 8ஆவது அகில இந்திய மாநாடு சென்னையில் மே 7 முதல் 11 வரை நடைபெற்றது. ஐந்து மாதகாலம் வரவேற்புக் குழு அமைப்பதில் துவங்கி இறுதி வரை திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றும் நல்ல பலன் தருவதாக அமைந்தது. சுவரெழுத்து, விளம்பரம், பிரச்சாரம், பேரணிக்கு திரட்டல் என அனைத்துப் பணிகளும் சிறப்பாக நடைபெற்றன.

6.151 நிதி வசூலுக்காக வீடு வீடாகச் செல்கிற வசூல் இயக்கம் அனைத்து மாவட்டத்திலும் சிறப்பாக நடந்தது. 2000 வசூல் குழுக்கள் திட்டமிடப்பட்டு 1500 குழுக்கள் அமைக்கப்பட்டன. 1375 குழுக்கள் செயல்பட்டன. இதன் மூலம் சுமார் ரூ. 64 லட்சம் வசூல் நடந்தது. இதுவொரு நல்ல முயற்சியாகும்.

6.152 பேரணி இளைஞர்களின் சங்கமமாக அமைந்தது. 44 ஆயிரம் பேர் திரண்டனர். இதுவே, வாலிபர் அரங்கத்தின் உயர்ந்தபட்சத் திரட்டுதல் ஆகும். குறிப்பாக சென்னையைச் சுற்றிய 9 மாவட்டங்களில் 29 ஆயிரம் இளைஞர்களைத் திரட்டியதும், வெண்சீருடையில் சுமார் 2500 இளைஞர்களும் இளம்பெண்களும் திரட்டப்பட்டதும், அணிவகுப்பின் சிறப்பம்சம்.

6.153 மாநாட்டுச் செலவிற்காக ரூ. 44 லட்சம் திரட்டத் திட்டமிடப்பட்டதில் ரூ. 41 லட்சம் வசூலானது. மத்தியதர வர்க்கத்தினர் நிதியில் பெரும் உதவியைச் செய்தது பாராட்டுக்குரியது.

ஸ்தாபனம்

6.154 கடந்த மாநாட்டிற்குப் பிறகு உறுப்பினர் எண்ணிக்கையில் உயர்வு உள்ளது. இது மிகக் குறைவான உயர்வே ஆகும். தற்போது 8 லட்சம். பல மாவட்டங்களில் கட்சிக்கு ஸ்தல கிளைகள் செயல்பட்டும் வாலிபர் சங்கக் கிளைகள் உருவாக்கப்படுவதில்லை. இந்த நடைமுறை தொடர்ந்தால் கட்சி வளர்ச்சியைப் பாதிக்கும்.

6.155 கட்சி வலுவாக உள்ள குமரி, மதுரை நகர், மதுரை புறநகர், நாகை, திருவாரூர், திண்டுக்கல், கோவை மேற்கு, சேலம், நாமக்கல், நெல்லை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்துவதின் மூலம் மாவட்ட பிராக்ஷன் செயல்பாடுகளை பலப்படுத்தி வாலிபர் அமைப்பையும் விரிவுப்படுத்த முடியும். கட்சிக்குப் புதிய இளைஞர்களைக் கூடுதலாக வென்றெடுக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்த முடியும். பல மாவட்டங்களில் வாலிபர் அரங்கமே இல்லாத இடைக்குழுக்கள், ஸ்தலக் கட்சிக் கிளைகள் உள்ளன. இந்தக் குறைபாட்டை உடனடியாகச் சரி செய்ய வேண்டும்.

6.156 வாலிபர் அரங்கத்தின் இயக்கங்களில் இளைஞர்களைத் திரட்டுவதில் பலவீனம் தொடர்கிறது. முன்னணி ஊழியர் பற்றாக்குறை, நிதிநெருக்கடி போன்றவை இருப்பினும் இக்குறைபாடுகளைக் களைந்து திரட்டுதலை அதிகப்படுத்துவது அவசியம்.

6.157 கட்சியின் 18ஆவது காங்கிரஸ் முடிந்த பிறகு, 2006ஆம் ஆண்டிற்கான ஓராண்டு திட்டம் குறித்த ஆலோசனையின் போது, வாலிபர் அரங்கம் முன்னுரிமை அரங்கமாகத் தீர்மானிக்கப்பட்டது. இரண்டு தேர்தல்கள் காராணமாகத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. கட்சியின் மாநிலக் குழு, 2006 ஜன 5 அன்று இத்திட்ட நிறைவேற்றத்திற்காக, கட்சியின் மாவட்டச் செயலாளர், பொறுப்பாளர் மற்றும் மாநில பிராக்ஷன் உறுப்பினர்களுக்கான கூட்டத்தை நடத்தி விவாதித்தது.

6.158 14 நகராட்சிகள், 36 ஊராட்சி ஒன்றியங்கள், 200 பஞ்சாயத்துகள் முன்னுரிமைப் பகுதியாக தீர்மானிக்கப்பட்டது. தொடர் கண்காணிப்பும், வழிகாட்டுதலும், ஊழியர்களை உத்தரவாதப்படுத்துதலும் இல்லாத காரணத்தினால் முன்னுரிமைப் பகுதிகளில் முன்னேற்றம் ஏற்படவில்ல. தொடர் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

6.159 மாற்று ஏற்பாடு இல்லாமலேயே, வாலிபர் அரங்க ஊழியர்கள் இதர அரங்கம் அல்லது கட்சிப் பணிக்கு மாற்றப்படுவது வாலிபர் அரங்கத்தில் பாதிப்புகளை உருவாக்குகிறது.

6.160 இவ்வரங்கிற்கு முழுநேர மற்றும் பகுதி நேர ஊழியர்கள் மிக அவசியம். தஞ்சை, நாகை, பெரம்பலூர், கரூர், வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் முழுநேர ஊழியர்கள் இல்லை. மாநில மைய ஊழியர்கள் 3 பேர் உள்பட மாநிலத்தில் 37 பேர் மட்டுமே ஊழியர்களாக உள்ளனர். இந்த எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும். ஓராண்டுத் திட்டக் காலத்தில் கோவை மேற்கு, கிழக்கு, வடசென்னை மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட பகுதிநேர ஊழியர்கள் வேலைத் தன்மையில் மாற்றத்தை உருவாக்கவில்லை.

6.161 வாலிபர் அரங்கத் தோழர்களுக்கு அரசியல் ஸ்தாபனக் கல்வியைப் பயிற்றுவிப்பது அவசியம். அரசியல் படுத்திட பிராக்ஷன் உறுப்பினர்களுக்கான 2 நாள் பயிற்சி முகாம் 2 மண்டலமாக பழனி மற்றும் வானூர் ஆகிய நகரங்களிலும், டிஒய்.எப்.ஐ. இடைக்கமிட்டி உறுப்பினர்களுக்கான 2 நாள் முகாம் 4 மண்டலங்களாகவும் பிரித்து நடத்தப்பட்டது. இதில் 156 மற்றும் 568 ஊழியர்கள் பங்கெடுத்தனர். 2008 துவக்கத்தில் 4 நாட்கள் 200 ஊழியர்களைத் தீர்மானித்துப் பயிற்சி முகாம் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

6.162 சுய கல்வியை வளர்க்கும் விதமாக இக்காலத்தில் பாரதி புத்தகாலயத்துடன் இணைந்து 20 வகையான சிறு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. பகத்சிங் பிரசுரம் 25 ஆயிரம் விற்கப்பட்டது. சவுத் விஷன் நிறுவனத்துடன் இணைந்து 6 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. டிஒய்.எப்.ஐ. மாநிலக் குழு சார்பில் 5 பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

6.163 டிஒய்.எப்.ஐ.இன் மாத வெளியீடான இளைஞர் முழக்கம் தொடர்ந்து வெளிவருகிறது. 8 ஆயிரம் முதல் 8 ஆயிரத்து 500 விற்பனை ஆகிறது. கோவை, திருப்பூர், வடசென்னை, திருவள்ளூர், சேலம், விருதுநகர், அறந்தாங்கி ஆகிய பகுதிகள் சீரிய முயற்சி மேற்கொள்கின்றன. மற்றவர்களும் பங்களிப்பு செய்தால் எண்ணிக்கையை உயர்த்த முடியும்.

6.164 ரத்ததானம், விளையாட்டுக் கழகம், இரவுப் பள்ளி போன்ற அமைப்புகளை டிஒய்.எப்.ஐ. செயல்படுத்தி வருகிறது. ஆண்டுக்குச் சுமார் 10000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ரத்ததானம் செய்கின்றனர். கோவை, திருப்பூர், சென்னை, புதுக்கோட்டை, மதுரை, குமரி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் தொடர்ந்து அரசு மருத்துவ மனைகளால் பாராட்டப்படுகின்றன. இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இளைஞர்களிடையே இன்னும் நெருக்கமாகச் செல்ல இப்பணிகள் உதவும்.

6.165 விளையாட்டுக் கழகத்தின் சார்பில் மதுரையில் 2006 ஜூலையில் மாநிலத் தடகளப் போட்டி நடத்தப்பட்டது. கபடி, வாலிபால் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவது இன்றைய காலத்தில் பேருதவி செய்யும். இரவுப் பள்ளி 250 வரையிலும் உயர்ந்து பின் குறைந்துள்ளது. பண்பாட்டு ரீதியில் அடுத்த தலைமுறையை வளர்த்தெடுக்க உதவும் ஆயுதம் என்பதைக் கணக்கில் கொண்டு பணியாற்றுவது அவசியம்.

- **வேலை, கல்வி, சுகாதாரம் ஆகிய அடிப்படை கோரிக்கைகள் மீதும்**
- **ஊழல், லஞ்ச லாவண்யம், பொதுவினியோக குறைபாடுகள், சமூகக் குற்றங்கள், பெண்கள் மீதான வன்முறை ஆகியவற்றிற்கு எதிராகவும்,**
- **தீண்டாமை, சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் தீவிர போராட்டங்களை நடத்துவதும்**
- **இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்கும் இளைஞர்களை அரசியல்படுத்திக், கட்சி கட்டும் பணியைத் தீவிரப்படுத்துவதும்,**

எதிர்காலத்தில் வாலிபர் அரங்கத்தில் முனைப்புடன் மேற்கொள்ளவேண்டிய கடமைகளாகும்.

மாணவர் அரங்கம்

6.166 இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு இணக்கமான கொள்கையை மத்திய அரசு கல்வித்துறையில் அமல்படுத்தி வருகிறது. கல்வி தரும் பொறுப்பிலிருந்து அரசு விலகிச் செல்கிறது. கடந்த பத்தாண்டுகளில் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளும் தனியார் துறையிலேயே நடைபெற்றுள்ளன. இதன் காரணமாக வசதி வாய்ப்புள்ள ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே தரமான கல்வி பெறும் சூழல் உருவாகி உள்ளது.

6.167 மத்திய அரசு கடைப்பிடித்துவரும் கல்விக் கொள்கையை மாநில அரசு எந்தவிதமான விமர்சனமும் இன்றி அமல்படுத்தி வருகிறது. அதேநேரத்தில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல், புதிய அரசு கல்வி நிலையங்கள் திறக்கப் போவதாக அறிவிப்புகள், கல்லூரி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தியும் வருகிறது.

6.168 ஆனால், கல்வித்துறையை ஜனநாயகப்படுத்துவது, கல்வியைப் பரவலாக்குவது போன்றவற்றில் மாநில அரசு அக்கறையற்று உள்ளது.

நடைபெற்ற இயக்கங்கள்

6.169 மாணவர் சங்க மத்திய நிர்வாகக் குழு அறைகூவலுக்கு இணங்க ஆக. 24, 2005ல் நடைபெற்ற அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் தமிழகத்தில் சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அன்னியப் பல்கலைக் கழகங்களை அனுமதிப்பதை எதிர்த்தும் போராட்டம் நடைபெற்றுள்ளது.

6.170 கல்வி வியாபாரமயமாக்கலுக்குத் துணை நிற்கும் வகையில், உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை எதிர்த்து மாணவர் சங்கம் சார்பில் பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் பங்கேற்புடன் மாநில முழுவதும் கண்டன இயக்கங்கள் நடத்தப்பட்டன. நீதிமன்றத் தீர்ப்புகளின் பாதிப்புகளை எடுத்துரைக்கும் வகையில் தோழர் ஜி. ராமகிருஷ்ணன் எழுதிய 'உயர்கல்வியும் - உச்சநீதிமன்ற தீர்ப்பும்' என்ற சிறு பிரசுரம் வெளியிடப்பட்டது.

6.171 தனியார் கல்வி நிலையங்களின் பணக்கொள்ளை, தரமற்ற கல்வி, ஜனநாயகமற்ற சூழல் போன்றவற்றுக்கு எதிராக இக்காலத்தில் மாணவர் சங்கம் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளது. பல கல்வி நிலையப் பிரச்சனைகளில் நேரடியாக ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளோம். நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் ஏ.ஐ.சி.டி.இ அங்கீகாரம் இல்லாமல் பொறியியல் படிப்புகள் நடத்துவதை எதிர்த்து சத்தியபாமா, எஸ்.ஆர்.எம். உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இம்மாணவர்களுக்கு ஆதரவாக இயக்கங்கள் நடத்தப்பட்டன. உயர்நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்பட்டது.

6.172 சென்னை சட்டகல்லூரியில் 562 இடங்களை 160ஆகக் குறைத்ததை எதிர்த்து சட்டப் பல்கலைக்கழக முற்றுகை, தலைமைச் செயலகம் முற்றுகை உள்ளிட்ட பலகட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக குறைக்கப்பட்ட இடங்களில் மாணவர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

6.173 சட்ட மாணவர்களுக்கான சிறப்பு மாநாடுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறன. அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் மாணவர் சங்கக் கிளை உள்ளது. சட்ட மாணவர்களின் கோரிக்கைகளை முன்வைத்துக் கையெழுத்து பிரச்சாரம், கல்வி நிலைய அளவிலான போராட்டம், கோட்டை நோக்கிப் பேரணி போன்ற இயக்கங்கள் நடத்தப்பட்டன. மாணவர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்று அமல்படுத்தி வருகிறது. பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வந்த செங்கல்ப்பட்டு கல்லூரி நமது போராட்டத்தின் காரணமாக அரசு சட்டக் கல்லூரியாக மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

6.174 தமிழகத்தில் தற்போது 60 அரசுக் கலை, அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இக்கல்வி நிலையங்களில் தான் நமது மாணவர் அமைப்பும் பலமாக உள்ளது.

6.175 அதிமுக ஆட்சியில் அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களோடு இணைக்கும் முடிவை போராட்டம் நடத்தித் திரும்பப் பெற வைத்துள்ளோம். அதுபோல சுயநிதிப் பாடப்பிரிவுகளைப் பொதுப் பாடப்பிரிவாக்கப் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றுள்ளோம்.

6.176 அரசுக் கல்லூரி மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் கேட்டு வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. உடனடியாக அரசும் இலவச பஸ் பாஸ் வழங்கியது. மாணவர் பேரவைத் தேர்தல் கேட்டுப் பல்கலைக்கழகங்களில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. நமது போராட்டத்தின் விளைவாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலையில் மாணவர் பேரவைத் தேர்தல் நடத்த உத்தரவு இடப்பட்டு, நமது தோழர்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளனர்.

6.177 பொறியியல் மற்றும் மருத்துவத் துறைகளில் தனியார் கல்லூரிகளின் பல்வேறு பிரச்சனைகளில் போராட்டங்களும், நீதிமன்ற வழக்குகளும் மாணவர் சங்கத்தின் சார்பில் தொடரப்பட்டன.

6.178 நெல்லை பி.எஸ்.என். கல்லூரி, திருவள்ளூர் தீன்தயாள் கல்லூரி, காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கல்லூரி போன்ற பொறியியல் கல்லூரிகளின் முறையற்ற மாணவர் சேர்க்கை மற்றும் அங்கீகாரமற்ற படிப்புகளில் மாணவர்களை சேர்த்ததை எதிர்த்த தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு, இக்கல்லூரி மாணவர்களுக்கு மாற்றுக் கல்லூரிகளில் இடம் வாங்கித் தரப்பட்டது. இப்பொறியியல் கல்லூரி மாணவர்களில் 67 பேர் தற்போது கட்சி உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

6.179 மருத்துவக் கல்லூரிகளில் ராமன் கமிட்டி நிர்ணயித்த கட்டணத்தைவிடக் கூடுதலாகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்கக் கோரியும், கூடுதலாக வசூலித்த கட்டணங்களைத் திரும்பத் தரக்கோரியும் மாணவர் சங்கம் சார்பில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இவ்வழக்கில் கூடுதலாக வசூலிக்கும் கட்டணத்திற்குத் தடை விதித்தும், வசூலித்தக் கட்டணத்தை திரும்பத்தரவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

6.180 மாநில அளவில் பொறியியல் மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கம் ஒருமுறை நடத்தப்பட்டது.

6.181 சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்படும் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களே அரசுக் கல்விநிலையங்களிலும், அரசு நல விடுதிகளில் தங்கியும் பயில்கின்றனர். எனவே இம்மாணவர்களை அணிதிரட்டுவதை நமது முன்னுரிமைக் கடமையாக கருதி, அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பிரச்சனைகளில் மாணவர் சங்கம் திட்டமிட்ட முறையில் தலையிட்டு வந்துள்ளது. இரண்டு வருடங்களாக மாநில சிறப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. சிவகங்கையில் நடைபெற்ற விடுதி மாணவர் பேரணியில் தோழர் என். வரதராஜன் பங்கேற்று உரையாற்றினார். விடுதி மாணவர்களின் கோரிக்கையை அரசுக்கு நமது கட்சி சார்பில் எடுத்துச் சென்றதும், முதல்வர் வருகிற பட்ஜெட்டில் பரிசீலிக்கப்படுமென வாக்குறுதி அளித்ததும் மாணவர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

6.182 மாணவிகளை அமைப்பில் அணிதிரட்டவும், அரசியல்படுத்தவும் ஆண்டுதோறும் சிறப்பு மாநாடுகள் நடத்தப்படுகின்றன. மாணவிகளின் கல்விப் பிரச்சனைகள் மற்றும் ஈவ்டீசிங் உள்ளிட்ட பிரச்சனைகளை முன்வைத்து இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. மாணவிகளை ஊழியர்களாக வளர்த்தெடுக்க இன்னும் போதுமான கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

6.183 பள்ளிகளில் தேர்வு முறையில் மாற்றம் கொண்டு வருவதற்கான ஆலோசனை உருவாக்க சிறப்பு ஆய்வரங்கம் நடத்தப்பட்டு மாணவர் சங்கத்தின் ஆலோசனைகள் அரசின் முன்வைக்கப்பட்டன.

6.184 பள்ளிகளில் மாணவர்களை ஆசிரியர்கள் உடல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் சித்ரவதை செய்ய வாய்ப்பு அளிக்கும் சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரி வகுப்பறை வன்முறைகள் சிறப்பு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் மாணவர் சங்கக் கோரிக்கைக்கு ஆதரவாக நமது ஆசிரியர் அமைப்புகள் பேசியதும், தீர்மானங்கள் வெளியிட்டதும் பாராட்டுக்குரிய அம்சமாகும். மாணவர்களை ஆசிரியர்கள் அடிப்பதற்கு வாய்ப்பளிக்கும் சட்டத்தைத் தமிழக அரசு திரும்பப் பெற்றுள்ளது.

6.185 தமிழகத்தில் பள்ளிகளில் சமச்சீர் கல்விமுறை கொண்டுவர வேண்டுமென மாணவர் சங்கம் பல ஆண்டுகளாகப் போராடி வந்தது. தி.மு.க தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டபடி சமச்சீர் கல்வி கொண்டு வருவதற்கு ஆலோசனைகளை உருவாக்க முனைவர் முத்துக்குமரன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இக்குழுவிடம் மாணவர் சங்கம் சார்பில் ஆலோசனைகள் கொடுக்கப்பட்டன.

6.186 அரசியல் கட்சிகள் மற்றும் மாணவர் அமைப்பின் வற்புறுத்தலுக்கு இணங்க முத்துக்குமரன் கமிட்டியின் அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் சாதக, பாதக அம்சங்களை விளக்கி மாணவர் சங்கம் சார்பில் கருத்தரங்கம் நடத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. சமச்சீர் கல்வி தமிழக அரசியலில் முக்கிய கோரிக்கையாக உருவெடுத்துள்ள சூழலில், கட்சியின் சார்பிலும் இயக்கம் நடத்தவேண்டியுள்ளது.

பொது இயக்கங்கள்

6.187 புஷ்ஷின் இந்திய வருகையை எதிர்த்தும், ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல், 123 ஒப்பந்தம் போன்ற பிரச்சனைகளுக்காகவும் இயக்கங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களைப் பங்கெடுக்க வைப்பதில் பலவீனம் உள்ளது.

6.188 சாதி ரீதியாக மாணவர்களை இழிவுபடுத்துவது உள்ளிட்ட சமூகப் பிரச்சனைகளில் மாணவர் சங்கத்தின் தலையீடு அதிகரிக்க வேண்டியுள்ளது. வெண்மணி தினத்தை முன்னிட்டு

சிறப்புக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. தோழர் பி.எஸ். தனுஷ்கோடியின் வாழ்க்கை வரலாறு "ஒரு பண்ணை அடிமையின் விடுதலைப் போராட்டம்" என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிடப்பட்டு 4000 பிரதிகள் விற்கப்பட்டன.

6.189 சட்டமன்றத் தேர்தலின்போது அ.தி.மு.க அரசின் மாணவர் மற்றும் கல்வி விரோதச் செயல்பாடுகளை முழுமையாகத் தொகுத்து அதிமுக அரசின் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

6.190 இடஒதுக்கீட்டுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவை எதிர்த்து நீதிமன்றங்கள் முன்பு போராட்டம் நடத்தப்பட்டது.

பன்முக நடவடிக்கைகள்

6.191 எம்.எஸ். பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கான சங்காரம் 07 என்ற கலை இலக்கியப் போட்டிகள் 3 மையங்களில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 36 கல்லூரிகளிலிருந்து 2000 மாணவர்கள் பங்கேற்றனர். மாவட்ட அளவில் கலை நிகழ்ச்சிகள் தென்சென்னை, பாண்டி போன்ற இடங்களில் நடத்தப்பட்டன.

6.192 உயர்கல்விக்-கு வழிகாட்டும் வாட் நெக்ஸ்ட் புத்தகம் வருடந்தோறும் வெளியிடப்படுகிறது. தேர்வுக்கான வழிகாட்டும் மையங்களும் சில மாவட்டங்களில் நடத்தப்படுகின்றன. மாணவர் சங்க நிகழ்ச்சிகளில் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் 50க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மாணவர் சங்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல்படுத்துதல்

6.193 மாணவர் சங்கத்திற்கு வரும் தோழர்களை அரசியல்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் முயற்சியாக, 2005 டிசம்பரில் 5 நாட்கள் மதுரையிலும், 2007 ஜூன் மாதம் 7 நாட்கள் நெல்லையிலும், கட்சி உறுப்பினர்களுக்கான மாநில அளவிலான பயிற்சி முகாம்களும் நடைபெற்று உள்ளன.

6.194 மண்டல அளவில் கல்லூரி மாணவர்களுக்கு மாணவர் சங்கம் சார்பில் பயிற்சி முகாம்களும், மாவட்ட அளவில் சுமார் 20 25 இடங்களில் பள்ளி மாணவர்களுக்கான பயிற்சி முகாம்கள் நடைபெற்று உள்ளன.

ஆசிரியர் - மாணவர் உறவு

6.195 கல்விநிலையங்களில் உள்ள ஜனநாயகமற்ற தன்மையின் விளைவாக ஆசிரியர் மாணவர் உறவில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

6.196 கல்விப் பிரச்சனைகளில் தலையீடு, செயல்பாடு குறித்து ஆலோசனை உருவாக்க நமது ஆசிரியர் அமைப்புகளும், மாணவர் அமைப்பும் இணைந்த ஃப்ராக்ஷன் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கடந்த காலங்களோடு ஒப்பிடும்போது மாணவர் ஆசிரியர் அமைப்புகளிடையேயான உறவுகளில் முன்னேற்றம் காணப்படுகிறது.

உறுப்பினர் பதிவு

6.197 உறுப்பினர் பதிவில் சிறு முன்னேற்றம் இருப்பினும், மாணவர் சங்கம் நடத்திய பல்வேறு இயக்கங்களை பிரதிபலிக்கும் வகையில் உறுப்பினர் பதிவை அதிகரிக்க இயலவில்லை.

6.198 பள்ளிகளில் மட்டும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தனியார் கல்வி நிலையங்கள், பல்கலைக்கழக மையங்களில் சென்னை பல்கலைக் கழகம், திருச்சி பாரதிதாசன், நெல்லை எம்.எஸ். பல்கலைக் கழகங்களில் மாணவர் சங்கச் செயல்பாடு உள்ளது. மற்ற பல்கலைக் கழகங்களிலும் நமது பணிகளை விரிவுபடுத்தவேண்டும்.

6.199 சில மாவட்டங்களில் பதிவுப் பணியில் தொடர் முன்னேற்றம் இல்லாமல் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. இதைக் களைந்து தொடர் ஸ்தாபன செயல்பாட்டை உறுதிப்படுத்த கட்சி மாவட்டக்குழுக்கள் உதவி செய்ய வேண்டும்.

6.200 வடசென்னை, தென்சென்னை, கடலூர், தஞ்சை, திருச்சி, மதுரை புறநகர், நெல்லை, குமரி, கோவை, சேலம், புதுச்சேரி போன்ற மாவட்டங்களில்தான் மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் கல்வி பயின்று வருகின்றனர். இம்மாவட்டங்களில் மாணவர் சங்கச் செயல்பாடுகள் இருந்தபோதிலும் இன்றைய தேவைக்குத் தகுந்தவாறு பதிவுப் பணியிலும், இயக்கங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

ஸ்தாபனம்

6.201 மாணவர் அரங்கம் முன்னுரிமை அரங்கமாகத் தீர்மானிக்கப்பட்டு ஓராண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டாலும், அதை அமல்படுத்தப் போதிய முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை.

6.202 மாநில மையத்தில் 3 தோழர்களும், தற்போது கூடுதலாக ஒரு தோழரும் செயல்பட்டு வருகின்றனர். மையத் தோழர்களின் கூட்டுச் செயல்பாடு அதிகரித்துள்ளது.

6.203 மாணவர் அரங்கில் செயல்படும் தோழர்களை ஊழியர்களாக வளர்த்தெடுப்பதற்கு ஒரு சரியான ஊழியர் கொள்கை வகுக்க வேண்டியுள்ளது.

6.204 ஆந்திர மாநிலத்தில் மாநில மையத்தில் 14 தோழர்களும், மாநிலம் முழுவதும் 120 தோழர்களும் முழுநேர ஊழியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

6.205 நமது மாநில மையத்தில் ஊழியர் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு முழு நேர ஊழியர் மற்றும் மாநகர மாவட்டங்களில் கூடுதலாக இரண்டு பகுதி நேர ஊழியர்களையும் உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.

6.206 கடந்த காலங்களில் ஸ்தாபன அமைப்பு இல்லாமல் அல்லது தொடர்பு விட்டுப்போன மாவட்டங்களான காஞ்சிபுரம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, சிவகங்கை, நாமக்கல் போன்ற இடங்களில் தற்போது ஸ்தாபன அமைப்பு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. குமரி, நெல்லை, விருதுநகர், தேனி, மதுரை நகர், மதுரை புறநகர், சேலம், தஞ்சை, திருவாரூர், திருச்சி போன்ற மாவட்டங்களில் மட்டும்தான் முழுநேர ஊழியர்கள் உள்ளனர். முழுநேர ஊழியராகச் செயல்பட்டவர் வேறு அரங்கத்திற்கு மாறியதும், மாற்றாக முழுநேர ஊழியர்களை உருவாக்க இயலாமையும் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.

கட்சி கட்டும் பணி

6.207 14 தோழர்கள் கொண்ட மாநில பிராக்ஷன் செயல்பட்டு வருகிறது. பிராக்ஷன் கூட்டங்களில் கட்சி கட்டும் பணி குறித்துப் பேசப்படுகிறது. நடைமுறைப்படுத்துவதில் பலவீனம் தொடர்கிறது.

6.208 'மாணவர் சங்கம் - கொள்கை இலக்குகள்' என்ற ஆவணத்தை மத்தியக்குழு உருவாக்கியுள்ளது. இந்த ஆவணத்தைத் தமிழகத்தில் கட்சி அணிகள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

6.209 வடசென்னை, தென்சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், பாண்டி, தஞ்சை, திருவாரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை புறநகர், மதுரை நகர், விருதுநகர், நெல்லை, தூத்துக்குடி, குமரி, கோவை, திருப்பூர், சேலம் மாவட்டங்களில் பிராக்ஷன் உள்ளது. மாவட்ட பிராக்ஷன் கூட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்துவது, ஊழியர்களை வளர்த்தெடுப்பது போன்றவற்றில் கட்சி மாவட்டக் குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

6.210 மாணவர் சங்கத்தின் கிளை முதல் மாநிலக்குழு வரை உள்ள கமிட்டி உறுப்பினர்களைக் கட்சி உறுப்பினர்களாக்குவது, மாணவர் அரங்கத்தில் பணியாற்றும் மாணவ, மாணவிகளை

அவர்களது படிப்பு முடிந்தபின், வேறு அரங்கப் பணியில் பயன்படுத்துவது, கட்சி உறுப்பினர்களாகத் தொடர வைப்பது போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

எழுத்தாளர் அரங்கம்

6.211 கடந்த மூன்றாண்டு காலத்தில் த.மு.எ.ச புதிய தளங்களில் அடியெடுத்து வைத்துள்ளது. அதன் செயல்பாடு மேலும் பன்முகத் தன்மை கொண்டதாக வலுவடைந்துள்ளது ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கான மாற்றுப் பண்பாட்டை முன்வைத்தல், துடிப்பான படைப்பாக்கம் என்ற களங்களில் அதன் செயல்பாடு குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது.

6.212 நமது எழுத்தாளர்கள் தொடர்ந்து படைப்பாக்கப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். சிறுகதைகள், கவிதைகள் தொடர்ந்து வெளிவருகின்றன. எனினும், நாவல் படைப்பு அரிதாகவே உள்ளது. இதை ஊக்குவிக்கும் வகையில் விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் அணையில் நாவல் சந்திப்பு எனும் புதுமையான நிகழ்வு நடத்தப்பட்டது. சிறந்த படைப்பிலக்கியங்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்குவது தொடர்கிறது. ஏற்கெனவே உள்ள ஆறு பரிசுத் திட்டங்களோடு இப்போது சு.சமுத்திரம் நினைவுப் பரிசுத்திட்டமும் சேர்ந்துள்ளது.

6.213 சமூகம், அரசியல், வரலாறு, தத்துவம் சார்ந்த நூல்கள் இந்தக் காலத்தில் நம்மவர்களால் அதிகம் எழுதப்பட்டுள்ளன; உடனடிப் பிரச்சனைகள் குறித்தும் படைப்புகள் வெளிவந்துள்ளன.

6.214 இந்த காலத்தில் த.மு.எ.ச அடி எடுத்து வைத்துள்ள ஒரு புதிய துறை குறும்பட இயக்கம். இதற்காக சென்னையில் ஒரு முகாமும், மதுரையில் ஒரு விழாவும் நடத்தப்பட்டன. அடுத்தடுத்து குறும்படங்கள் வெளிவந்து பார்வையாளர்களை ஈர்த்துள்ளன.

6.215 இன்னொரு புதிய துறை நாட்டுப்புறவியல். இதற்காக பாளையங்கோட்டையிலும், புதுச்சேரியிலும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இவை தந்த உத்வேகத்தால் ஊர் வரலாறு எழுதுதல் உள்ளிட்ட நாட்டுப்புற வாழ்வியல்பால் நமது எழுத்தாளர்கள் - கலைஞர்கள் கவனத்தைத் திருப்பியுள்ளார்கள். நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான கோரிக்கை சங்கமம் சென்னையில் நடத்தப்பட்டது. இதன் விளைவாக அவர்களுக்கான நல வாரியத்தை அரசு அமைத்தது மட்டுமல்லாது, அதில் த.மு.எ.ச.விற்கும் பிரதிநிதித்தும் கிடைத்தது.

6.216 தமிழகப் பண்பாட்டு வெளிக்கு த.மு.எ.ச. தந்த கொடையான கலை இரவு, இடையில் ஏற்பட்டுள்ள தொய்வைக் கடந்து மீண்டும் புத்தெழுச்சியுடன் பல நகரங்களிலும் நடைபெறத் துவங்கியுள்ளது. த.மு.எ.சவின் கலைக்குழுக்கள் பலவும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. புதிய இசைப் பாடல்களை உருவாக்க ஒகேனக்கலில் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. சென்னை அரசு ஓவியக் கல்லூரியுடன் இணைந்து நமது ஓவியர்களுக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. நமது கலைஞர்களும் பேச்சாளர்களும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இடம் பெற்று வருகிறார்கள். எனினும் புதிய கலை ஆக்கங்கள் மற்றும் புதிய பேச்சாளர்களுக்கான முயற்சிகள் வலுவாகத் தொடர வேண்டியுள்ளது.

6.217 நமது முன்னோர்கள் சிலரின் நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாடியதன் மூலம் தமிழகப் பண்பாட்டு வெளியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. தோழர் கே.முத்தையா நினைவு இலக்கியச் சொற்பொழிவு ஆண்டுதோறும் நடந்து வருகிறது. தோழர் சுந்தர்வனின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு புதுக்கோட்டையில் சிறப்பாக நடத்தப்பட்டது.

முற்போக்கான மாற்றுப் பண்பாடு

6.218 தமிழைச் செம்மொழியாக மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி த.மு.எ.ச. டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. நமது எழுத்தாளர்களுக்கு சங்க இலக்கியத்தில் ஈடுபாட்டை உருவாக்க திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராமியப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையோடு இணைந்து இரு நாள் முகாம் நடத்தப்பட்டது; இதைத் தொடர்ந்து மதுரையில் 10 நாள் முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாம்களின் மைய நோக்கம் சங்க இலக்கியத்தை இளம் படைப்பாளிகளுக்கு அறிமுகப்படுத்துவதே என்றாலும், அதை மார்க்சிய நோக்கில் எப்படி அணுகுவது, படைப்பிலக்கிய ஆற்றலை வளர்த்துக் கொள்ள அதை எப்படிப் பயன்படுத்துவது

என்பது பற்றி நமது சார்பாக தனித்து ஒவ்வொரு நாளும் எடுத்துரைக்கப்பட்டது. பள்ளிப்பாட நூலிலிருந்து முற்போக்கான பகுதிகள் நீக்கப்பட்டதை எதிர்த்துக் குரல் கொடுத்ததுடன், அவற்றை மீண்டும் சேர்க்க வைப்பதில் முக்கிய பங்குவகித்தோம்.

6.219 பாப்பாபட்டி, கீரிப்பட்டி தேர்தல், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு, சேது சமுத்திரத் திட்டம் போன்ற பிரச்சனைகளில் த.மு.எ.ச. தலையீடு இருந்துள்ளது. எனினும் மதவெறி எதிர்ப்பு இயக்கம் போதுமானதல்ல; சிறுபான்மையோர் பிரச்சனைகள் இன்னும் வலுவாக எடுத்துச் செல்லப் பட்டிருக்க வேண்டும்.

6.220 இந்தக்காலத்தில் த.மு.எ.ச.வின் பணிகள் புதிய துறைகளில் விரிவடைந்துள்ளன. பல மாவட்டங்களிலும் நிகழ்வுகள் பல நடந்து, 2007ம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை பத்தாயிரத்தை கடந்துள்ளது. எனினும், த.மு.எ.சவிற்கு வெளியே இன்னும் எத்தனையோ படைப்பாளிகள், கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களையும் ஈர்க்கும் வகையில் நமது பணிகள் விரிவடைய வேண்டியுள்ளது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

6.221 2005ல் திருவண்ணாமலையில் த.மு.எ.சவின் மாநில மாநாடு சிறப்பாக நடைபெற்றது. முந்தைய மாநாடுகளை விட விவாதத்திலும் ஸ்தாபன ஒற்றுமையிலும் முன்னேற்றம் கண்ட மாநாடாக இது இருந்தது. த.மு.எ.சவின் மாநிலக் குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் மாநில செயற்குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையும் முறையாகக் கூடியுள்ளது. இவற்றில் வருகையும் விவாதத் தரமும் பலப்பட்டுள்ளது.

பிராக்ஷன் பணிகள்

6.222 எழுத்தாளர் அரங்க மாநில பிராக்ஷன் எட்டு முறை கூடியுள்ளது. இதில் ஒன்று, விரிவடைந்த கூட்டமாகும். இந்தக் கூட்டங்களில் அவ்வப்போது எழும் அமைப்பு ரீதியான மற்றும் தனிநபர் சார்ந்த பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட்டது. நம்மவர்கள். எழுதியுள்ள நூல் அல்லது தந்துள்ள பேட்டியில் தவறான கருத்துக்கள் இருக்கும் போது அவை சுட்டிக்காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டது. கட்சி ஸ்தாபன விதிமுறை மீறல் இருந்த பொழுது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே நேரத்தில், நம்மவர்களின் சிறந்த படைப்பாக்கங்களை, தனித்திறமைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

6.223 கலாச்சார அரங்கத்திற்கு அகில இந்திய பிராக்ஷன் உள்ளது. இதில் தமிழகத்தின் சார்பில் அருணன், ச.தமிழ்ச்செல்வன் இடம் பெற்றுள்ளனர். இதன் சார்பில் வெளியிடப்பட்ட புல்லட்டின் ஒன்றை நாம் விநியோகித்துள்ளோம்.

6.224 2006 ஆகஸ்டில் தஞ்சையில் மாநில அளவிலான அரசியல் வகுப்பு நடத்தப்பட்டது.

6.225 கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கான கலை ஆக்க உருவாக்கத்தில் நமது எழுத்தாளர்கள்; முக்கிய பங்காற்றினர். பண்பாடு பற்றி கட்சியின் கண்ணோட்டத்தை தெளிவாக்கும் ஓர் ஆவணத்தைத் தயாரிக்கும் பணியை பிராக்ஷன் துவக்கியுள்ளது. இதனை விரைந்து முடிக்க வேண்டியுள்ளது.

6.226 த.மு.எ.சவிற்கான மாவட்ட பிராக்ஷன்கள் பல மாவட்டங்களில் உள்ளன. இவை இல்லாத - ஆனால் வாய்ப்புள்ள - மாவட்டங்களில் இவற்றை உருவாக்குவதும் இருப்பவற்றை முறையாக இயக்குவதும் மாவட்ட அளவில் இந்த அரங்கப்பணிகளை வலுவாகவும், நேர்த்தியாகவும் எடுத்து செல்ல உதவும். கட்சித்தோழர் ஒருவர் இதன் பணிகளில் முழுமையாக ஈடுபடும்படி வேலைப் பிரிவினை இருந்தால் இந்த அரங்கப்பணிகளை மேலும் வலுவாக கொண்டு செல்ல முடியும்.

6.227 அரசியலுக்கும் கலை இலக்கியத்திற்கும் உள்ள நெருங்கிய உறவைத் தமிழகத்தில் வலுவாகக் காணமுடிகிறது. கலை இலக்கியம் உள்ளிட்ட பண்பாட்டுத் துறைகளில் வருங்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இந்த அரங்கில் கட்சியை வளர்க்கக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

கலை அரங்கம்

6.228 மாநிலத்தில் 12 தோழர்கள் உள்ள கலை அரங்க உபகுழு இக்காலத்தில் செயல்பட்டுள்ளது. 13 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. தேர்தல்கள் மற்றும் முக்கியமான பிரச்சார, இயக்கங்களின் போது பயிலரங்குகள் நடத்தப்பட்டு, பாடல் ஒலிநாடா மற்றும் குறும்படங்கள் வெளியிடப்பட்டன.

6.229 2006ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்காக "மறக்க முடியுமா " என்ற தலைப்பில் ஒலிநாடா, நாடகம், குறும்படம் ஆகியவை வெளியிடப்பட்டன. இந்தப் பிரச்சார சாதனங்கள் தேர்தலில் சிறப்பான பங்கை வகித்தன. பொதுமக்களிடம் வரவேற்பைப் பெற்றன. நட்புக் கட்சிகள் போட்டியிட்ட இடங்களிலும் விரும்பி பயன்படுத்தினர். தேர்தல் பிரச்சாரத்தில் நமது கலைக்குழுக்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

6.230 கட்சிக் காங்கிரஸ் பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக 3 தினங்கள் பாடல்கள் பயிலரங்கமும், 5 தினங்கள் நாடகப் பயிலரங்கமும் நடத்தப்பட்டன. 3 தினங்கள் குறும்படப் பயிலரங்கு திருப்பூரில் நடத்தப்பட்டது. 67 பாடல்களும், 1 நாடகமும் உருவாக்கப்பட்டன. குறும்படங்களுக்கான கருப்பொருள்கள் இறுதிப்படுத்தப்பட்டு, படப்பிடிப்பு துவங்கவுள்ளது. 2007 டிசம்பர் 15,16,17 தேதிகளில் திண்டுக்கலில் கட்சியின் சார்பில் மாநிலக் கலை விழா, 12 இசைக்குழுக்கள், 13 நாடக்குழுக்கள், 4 ஆட்டக்குழுக்கள், 3 கிராமியக் கலைக்குழுக்கள், 300க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று மிகச் சிறப்பாக நடந்துள்ளது.

6.231 இவற்றில் எட்டு நாடகங்களைத் தேர்ந்தெடுத்து, கூடுதல் பயிற்சி கொடுத்தும், பாடல்களில் அரசியல் அம்சங்களைச் சரிசெய்தும், 10 பாடல்களை ஒலிநாடாவில் கொண்டு வந்தும் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தவுள்ளோம்.

6.232 இந்த முயற்சிகளில் கலைக்குழுக்களுக்கு மாவட்டக்குழுக்கள் நிதி உதவிகள் செய்து வருகின்றன. மேலும் கலைக்குழுக்களை அவ்வப்போது கூட்டி அரசியல் ரிப்போர்ட் செய்யவும், அவற்றின் ஒருங்கிணைப்பை பலப்படுத்தவும் மாவட்டக்குழுக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

6.233 மாநில, மாவட்ட அளவில் எழுத்தாளர் அரங்கத் தோழர்கள் கலை அரங்கப் பணிகளுக்கு உதவி வருவதையும் மேலும் பலப்படுத்த வேண்டியுள்ளது.

6.234 கட்சியின் அரசியல் பிரச்சாரத்தையே முழுநேர பணியாகக் கொண்ட குழுக்கள், நிகழ்ச்சிகள் போதிய அளவு கிடைக்காத காலங்களில் கடும் சிரமங்களை சந்திக்கின்றன. இந்த நெருக்கடியை தாக்குப்பிடிக்க முடியாமல் அல்லது அரசியல் பலவீனங்கள் காரணமாக நமது மேடைகளில் பயிற்சி பெற்று திறமைகளை வளர்த்துக் கொண்ட கலைஞர்கள் சிலர், பிற அமைப்புகள் - குறிப்பாக தொண்டு நிறுவனங்கள் - பின்னால் சென்று விடும் போக்கு குறித்து மாநிலக்குழு விவாதிக்க வேண்டியுள்ளது.

6.235 முழுநேர அரசியல் பிரச்சாரக் கலைக்குழுக்களைப் பாதுகாத்துக்கொண்டே அமெச்சூர் குழுக்களை அதிகமாக உருவாக்குவதில் மாவட்டக்குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கலைத்திறன் படைத்த தோழர்களை கண்டறிந்து குழுக்களாக இணைத்து, போதிய உதவிகளை செய்வதன் மூலமே குழுக்களை உருவாக்க முடியும். கிளர்ச்சிப் பிரச்சாரத்தில் கலை வடிவங்களுக்கு கூடுதல் ஈர்ப்பு உள்ளது என்பதுடன் இணைத்து இந்தப் பணி பார்க்கப்பட வேண்டும். கலைக்குழுவினர் செய்யும் பணிகள் கட்சிப்பணிகள், அரசியல் பணிகள் என அங்கீகரிக்கப்பட வேண்டும். கட்சிக்கும் கலைக்குழுக்களுக்கும் இடையிலான உறவை பலப்படுத்த வேண்டியுள்ளது.

வழக்கறிஞர் அரங்கம்

6.236 கட்சியின் 18வது மாநில மாநாட்டிற்குப் பிறகு வழக்கறிஞர் அரங்கத்தில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்பொழுது சுமார் 272 வழக்கறிஞர்கள் கட்சி உறுப்பினர்களாக உள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கட்சி வழக்கறிஞர்கள் உள்ளனர். வடசென்னை மாவட்டத்தில் மட்டும் வழக்கறிஞர்கள் இடைக்கமிட்டி செயல்பட்டு வருகிறது. மதுரை மாநகரிலும், குமரியிலும் மாவட்ட

பிராக்ஷன் செயல்பட்டு வருகிறது. மொத்தம் 17 மாவட்டங்களில் (மதுரை, குமரி, வடசென்னை உட்பட) வழக்கறிஞர் கட்சிக் கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

6.237 வழக்கறிஞர் மாநில பிராக்ஷனில் 11 உறுப்பினர்கள் உள்ளனர். பிராக்ஷன் கூட்டத்திற்கு வருகை சராசரியாக 90 சதவிகிதம் உள்ளது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாநில பிராக்ஷன் கூடுகிறது. பிராக்ஷன் உறுப்பினர்களின் அரசியல் தரமும், ஈடுபாடும் அதிகரிக்க வேண்டும்.

6.238 2005ஆம் ஆண்டு அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் உறுப்பினர் பதிவு நடைபெறவில்லை. 2006ஆம் ஆண்டு 4361 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டனர். அ.இ.வ.சங்கத்தின் 7வது மாநில மாநாடு சென்னையில் நவம்பர் 11-12, 2006 இல் நடைபெற்றது. இந்த ஆண்டு உறுப்பினர் பதிவு இறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், மேற்சொன்ன எண்ணிக்கையை அடைய வாய்ப்புள்ளது. சென்ற ஆண்டு 9 மாவட்டங்களில் உறுப்பினர் பதிவு நடைபெறவில்லை. இந்த ஆண்டில் 31 மாவட்டங்களிலும் உறுப்பினர் பதிவு நடைபெற்றுள்ளது. 12 மாவட்டங்களில் அ.இ.வ.ச. உயிரோட்டத்துடன் செயல்படுகிறது. இளம் வழக்கறிஞர்களுக்கான மாநில அளவிலான கோரிக்கை மாநாடு 2006 செப்டம்பர் 16 அன்று சேலத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டில் 750 வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்; இதன் மூலம் வழக்கறிஞர்கள் மத்தியில் நம் செல்வாக்கு வளர்ந்துள்ளது.

6.239 அகில இந்திய அளவில் உறுப்பினர் பதிவில் நம் மாநிலம் 3வது இடத்தில் உள்ளது. “Popular Jurist” பத்திரிகையின் ஆயுள் சந்தாவைப் பொறுத்தவரை தமிழகம் முதலிடத்திலும் (34 சந்தாக்கள்), ஆண்டு சந்தாவைப் பொறுத்தவரை இரண்டாவது (291) இடத்திலும் உள்ளது.

6.240 வழக்கறிஞர் மத்தியில் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதோடு, கட்சியைக் கட்டும் பணிகளிலும் எதிர்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

OOO

7. கட்சி ஸ்தாபனம்

நமது கட்சியின் 18-வது காங்கிரஸ் மற்றும் மாநில மாநாடு கீழ்க்கண்டக் ஸ்தாபன கடமைகளைத் தீர்மானித்தன.

- கட்சி வளர்ச்சிக்கு சாதகமாக உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி வேகமான வளர்ச்சிக்குத் திட்டமிட வேண்டும்.
- கட்சிக்கிளைகள், இடைக்குழுக்கள் மற்றும் அனைத்து மட்ட கமிட்டிகளின் செயல்பாட்டை மேம்படுத்த வேண்டும்.
- கோஷ்டிப் போக்கைக் களைந்து ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்சி கமிட்டிகள் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கட்சி உறுப்பினர்களின் அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன உணர்வு மட்டத்தை மேம்படுத்திட கட்சிக் கல்வி உள்ளிட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- கம்யூனிஸ்ட் நெறிமுறைகள் மீறப்படுவதை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிரான போராட்டங்களை நடத்திட வேண்டும்.
- இளம் தோழர்களை கட்சியின் அனைத்து மட்டத்திலும் இணைப்பதோடு, அவர்களுக்குக் கடமைகளையும் தீர்மானிக்க வேண்டும்.
- அடிப்படை வர்க்கத்திலிருந்தும், பெண்கள், தலித் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகிய பகுதிகளிலிருந்தும் கட்சிக்குள் கொண்டு வருவதோடு, இவர்களில் முன்னணியில் இருப்பவர்களை ஊழியர்களாக்கவும் முயற்சிக்க வேண்டும்.
- தீக்கதிர், மார்க்சிஸ்ட் மற்றும் கட்சி வெளியீடுகளின் விற்பனையை அதிகப்படுத்துவது.

மேற்கண்ட ஸ்தாபனக் கடமைகளை நிறைவேற்றக் கட்சியின் அனைத்து மட்டங்களிலும் உள்ள கட்சி அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டன. கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட சாதகமான அம்சங்களையும், குறைபாடுகளையும் நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது. இதன் மூலமே எதிர்காலக் கடமைகளை சரியாகத் தீர்மானிக்க முடியும்.

கட்சி வளர்ச்சி

7.1 கட்சி வளர்ச்சி என்பதைக் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளதா இல்லையா என்பதை மட்டும் வைத்துப் பார்க்கக்கூடாது. கட்சி உறுப்பினர்கள் ஆற்றி வரும் அரசியல் பணி, வெகுஜன அரங்கப்பணி, தேர்தல் பணி, இயக்கப்பணி ஆகிய அனைத்து அம்சங்களையும் கணக்கில் கொண்டு கட்சி வளர்ச்சியைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. இதைத்தான் கீழ்க்கண்ட அடிப்படையில் கடந்த 18-வது காங்கிரஸ் ஸ்தாபனத் தீர்மானம் கூறுகிறது.

- கட்சி உறுப்பினர் எண்ணிக்கை உயர்வு
- எந்த அளவுக்கு மக்களை அணிதிரட்ட முடிந்துள்ளது
- தேர்தல் முடிவுகளில் வெளிப்பட்ட கட்சியின் வலிமை
- கட்சி உறுப்பினர்கள் செயல்படும் வெகுஜன அரங்கங்களின் வளர்ச்சி
- கட்சி உறுப்பினர்களின் உணர்வு மட்டம் மற்றும் அரசியல், தத்துவார்த்தப் போராட்டங்களை நடத்தும் அவர்களது திறமை

கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை

வருடம்	பி.எம்	சி.எம்	ஏ.எம்.	பி.எம் மற்றும் சி.எம்
2004	75923	18922	23151	94845
2005	80097	20513	28473	100610
2006	81862	18465	24578	100327
2007	75790	14501	17735	90291

7.2 கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை சுமார் 10000 குறைந்திருக்கிறது. கட்சி உறுப்பினர் பதிவுப் பரிசீலனையில் தாராளவாதம் கூடாது என மத்தியக்குழு வழிகாட்டியது. பதிவுப் பரிசீலனையில் ஓரளவுக்குக் கறாராக இருந்ததால் எண்ணிக்கை குறைந்திருக்கலாம். தரத்தை உயர்த்திட இந்த நடவடிக்கை சரியானது என்பதே மாநிலக்குழுவின் நிர்ணயிப்பு. 2004-ல் இருந்து 2007 வரை கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பரிசீலித்தால் கடந்த 4 ஆண்டுகளில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்பது தெளிவாகிறது. இதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு.

7.3 2004. 2005, 2006 ஆகிய மூன்று ஆண்டுகளில் பரீட்சார்த்த உறுப்பினர்களாக இருந்தவர்களைக் கட்சி உறுப்பினர்களாக உயர்த்தியிருந்தால் 2007-ஆம் ஆண்டு கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1,33,823 ஆக உயர்ந்திருக்கும்.

7.4 இதைப்போலவே துணைக்குழு உறுப்பினர்களில் பெரும்பகுதியினரை ப்ரீட்சார்த்த உறுப்பினர்களாக உயர்த்தி இருந்தால் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும்.

7.5 இத்தகைய பணி சரிவர நடைபெறாததால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பகுதி புதிய உறுப்பினர்கள் சேருவதும், பழைய உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் விடுபடுவதும் தொடருகிறது.

7.6 கிளைகளை முறையாகக் கூட்டுவது, கட்சி உறுப்பினர்களை அன்றாடப் பணிகளில் ஈடுபடுத்துவது, கட்சி உறுப்பினர்களுக்கு அரசியல் ஸ்தாபனக் கடமைகளைப் பயிற்றுவிப்பது, அவர்களின் வேலைகளை முறையாகப் பரிசீலிப்பது, கட்சிக் கல்வி அளிப்பது ஆகிய முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் கட்சி உறுப்பினர்களைத் தக்கவைப்பதோடு அதிகரிக்கவும் முடியும்.

> *"பொதுவான அரசியல் விசுவாசம் என்பதைத்தாண்டி கட்சி உறுப்பினர்கள், நமது கட்சியின் அரசியல் நடைமுறைக் கொள்கையை அமலாக்கி. மற்ற முதலாளித்துவக் கட்சிகளிடம் இருந்து பல அம்சங்களில் நாம் மாறுபட்டு உள்ளோம் என்பதோடு நாம் மட்டும்தான் ஒரு சரியான மாற்றுத்திட்டத்தை முன்வைத்துள்ளோம் என்பதை மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய அளவுக்கு கட்சி உறுப்பினர்களின் தரத்தை உயர்த்துவதன் மூலமே புதிய பகுதிகளுக்குக் கட்சியை விஸ்தரிக்க முடியும்; கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த முடியும்"*

எனக் கட்சியின் மாநில 18வது மாநாடு சரியாக சுட்டிக்காட்டியது. இக்கடமையை எதிர்க்காலத்தில் அமலாக்கிடத் திட்டமிடவேண்டியுள்ளது.

வெகுஜன அரங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை

அமைப்பு	2005	2006	2007
தொழிற்சங்கம் *	2,81,916	3,44,072	3,74,253
விவசாயிகள் சங்கம்	4,38,341	4,65,067	5,09,181
விவசாயத் தொழிலாளர் சங்கம்	2,74,447	2,80,436	4,35,804
வாலிபர் சங்கம்	7,52,631	7,79,927	8,44,040
மாணவர் சங்கம்	1,46,511	1,58,981	1,66,536
மாதர் சங்கம்	4,65,247	4,85,254	5,93,570
	23,59,093	25,13,737	29,23,384

* *(முந்திய ஆண்டு டிசம்பர் முடிவிலான எண்ணிக்கை, அடுத்த ஆண்டு தாக்கல் செய்யப்படும் படிவ அடிப்படையிலான விபரம்)*

7.7 கட்சித் தோழர்கள் தலைமையில் இயங்கி வரும் பல அலுவலக ஊழியர் அரங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை.

7.8 வெகுஜன அரங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை இக்காலத்தில் 5,64,291 அதிகரித்துள்ளது. கட்சி உறுப்பினர்கள் மற்றும் - வெகுஜன அரங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையின் விகிதாச்சாரம் 2005-ல் 1 : 23 ஆக இருந்தது, 2007-ல் 1: 32-ஆக உயர்ந்துள்ளது. 2007-ல் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை முந்தைய ஆண்டைவிட 10,000 குறைந்துள்ளதால், கட்சி உறுப்பினர் வெகுஜன உறுப்பினர் விகிதாச்சாரம் 1: 32 ஆக உயர்கிறது. 1 லட்சம் கட்சி உறுப்பினர்களுக்கு விகிதாச்சாரம் 1:27 ஆக உள்ளது.

சட்டமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகள்

7.9 சட்டமன்றத் தேர்தலில் (2006) நமது கட்சி தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., சி.பி.ஐ. ஆகிய கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கொண்டு போட்டியிட்டது. நாம் 13 தொகுதிகளில் போட்டியிட்டு 9இல் வெற்றி பெற்றிருக்கிறோம். கூட்டாகப் போட்டியிட்டதால் நமது கட்சியின் தனியான பலத்தை மதிப்பீடு செய்ய இயலாது என்றாலும் வெற்றி பெற்ற 9 தொகுதிகளிலும் நமது பலமும் சேர்ந்துதான் நமக்கு வெற்றி கிடைத்துள்ளது.

வருடம்	போட்டியிட்டது	வெற்றி	பெற்ற வாக்குகள் சதவிகிதம்
2001	8	6	1.68
2006	13	9	2.65

7.10 மற்ற கட்சிகளின் ஆதரவுடன் நாம் வெற்றி பெற்றிருந்தாலும் சட்டமன்றத் தேர்தலில் 2001 விட 2006இல் நமது வலிமை ஓரளவுக்கு அதிகரித்துள்ளது என மதிப்பீடு செய்யலாம்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்

7.11 தி.மு.க.வுடன் உடன்பாடு கண்டு போட்டியிட்டோம். இதில் பல மாவட்டங்களில் உடன்பாடு ஏற்படவில்லை. மாவட்ட ஊராட்சி கவுன்சில், ஊராட்சி ஒன்றிய கவுன்சில், நகராட்சி வார்டு, மாநகராட்சி வார்டுகளில் 2001ஐ விட 2006-ல் கூடுதலாக வெற்றி பெற்றிருக்கிறோம். ஊராட்சித் தலைவர், பேரூராட்சி வார்டுகளில் 2001ஐவிட 2006-ல் குறைந்துள்ளது. 2001ஐவிட 2006-ல் வெற்றிபெற்ற உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் கூட்டணியின் பலம் நமது வெற்றியில் பிரதிபலிக்கவில்லை.

கட்சியில் தொழிலாளர்கள்

7.12 மாநிலத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களில் தொழிலாளர்கள் எண்ணிக்கை 38 சதவிகிதமாகும். வெகுஜன அரங்கங்களில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்திற்கு அடுத்ததாக சிஐடியு சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. எனவே தொழிலாளி வர்க்கக் கட்சி என்ற அடிப்படையில் மேலும் கூடுதலான தொழிலாளர்களைக் கட்சிக்குள் கொண்டு வருவதற்குத் தொழிலாளர்கள் மத்தியில் கட்சி கட்டும் பணியை பலப்படுத்த வேண்டும்.

கட்சியில் பெண்கள்

7.13 கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் பெண்களின் சதவிகிதம் உயர்ந்துள்ளது. கடந்த மாநாட்டின்போது மொத்த உறுப்பினர்களில் பெண்கள் 11.5 சதவிகிதமாக இருந்தது, 2007-ல் 13,3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதை மேலும் உயர்த்தக்கூடிய வாய்ப்பும் உள்ளது. குமரி மாவட்டத்தில் கட்சி உறுப்பினர்களில் 26 சதவிகிதம் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியில் தலித் மக்கள்

7.14 கடந்த மூன்றாண்டுகளில் கட்சியில் தலித் மக்களை சேர்ப்பதற்கு பல மாவட்டக்குழுக்கள் நல்ல முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இப்பகுதியினர் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் 30 சதவிகிதம் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றாண்டுகளில் தீண்டாமை ஒழிப்புக்காகவும், தலித் மக்களின் பல பிரச்னைகளுக்காகவும், கட்சி எடுத்த முயற்சிகளை ஸ்தாபனமாகப் பயன்படுத்தியிருந்தால் மேலும் கூடுதலாக தலித் மக்களைக் கட்சிக்குள் கொண்டு வந்திருக்க முடியும்.

கட்சியில் சிறுபான்மையினர்

7.15 தற்பொழுது கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் கிறித்துவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் 9 சதவிகிதம் உள்ளனர். சிறுபான்மையினரை - குறிப்பாக முஸ்லிம் - மக்களைத் திரட்டுவதற்கு நாம் எடுத்து வரும் முயற்சியைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் கட்சிக்குள் சிறுபான்மை மக்களைக் கூடுதலாக வென்றெடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

கட்சியில் இளைஞர்கள்

7.16 மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் இயற்கையாகவே பல பொறுப்புகளுக்கு இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். சில மாவட்டங்களில் இளம் தோழர்கள் மாவட்டச் செயலாளர்களாகவும் பொறுப்பேற்றுள்ளார்கள் மேலும், இளம் தோழர்களைப் பயிற்றுவிப்பதற்கும், அவர்களின் வேலை, தகுதி அடிப்படையில் உயர்பொறுப்புக்குக் கொண்டு வருவதற்கும், கட்சி எல்லா மட்டத்திலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. துடிப்புள்ள இளம் தோழர்களும் அனுபவம் வாய்ந்த மூத்த தோழர்களும் இணைந்ததாகக் கட்சி அமைப்புகள் இருக்க வேண்டும்.

அறிவுஜீவிகள்

7.17 தொழிலாளி வர்க்கக் கட்சியில் உழைக்கும் மக்களைப் பிரதானமாகத் திரட்டிட வேண்டுமென்றாலும், மத்தியதரப் பகுதியினரையும், அறிவு ஜீவிகளையும் திரட்ட வேண்டியது அவசியமானது. ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள் பல முனைகளில் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரம் செய்கிற போது இதை முறியடிப்பதில் இடதுசாரி, முற்போக்குச் சிந்தனை உள்ள அறிவு ஜீவிகளுக்கு முக்கியப் பங்குண்டு. எனவே அறிவுஜீவிகளை வென்றெடுப்பதற்குக் கவனம் செலுத்திட வேண்டும்.

படிப்பினை

7.18 கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயராதது, வெகுஜன அரங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை 14.02 சதவிகிதம் உயர்வு. சட்டமன்ற, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நாம் பெற்ற வாக்குகள் சிறிதளவு உயர்வு, கடந்த மூன்றாண்டுகளில் குடிமனைப்பட்டாவுக்கான இயக்கம், வேலை-நிலம்-உணவு கோரி நடத்திய இயக்கம் போன்ற நாம் நடத்திய இயக்கங்களில் மக்கள் பங்கேற்பை ஓரளவுக்கு அதிகப்படுத்தியிருப்பது ஆகிய அம்சங்களைப் பரிசீலித்தால் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையைத் தவிர்த்து மற்ற அளவுகோல்களில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அகில இந்திய அளவிலும் மாநில அளவிலும் நாம் மேற்கொண்ட சரியான அரசியல் நிலைபாட்டினால் நமது கட்சியின் மரியாதை, செல்வாக்கு உயர்ந்த அளவுக்கு வளர்ச்சி இல்லை.

7.19 சரியான முயற்சிகளை மேற்கொண்ட சில மாவட்டங்களில் சில அம்சங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, வெகுஜன அரங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையில் தூத்துக்குடி மாவட்டம் 91 சதவிகிதம், விழுப்புரம் மாவட்டத்தில் 79 சதவிகிதம், விருதுநகர் மாவட்டத்தில் 48 சதவிகிதம், தஞ்சை மாவட்டத்தில் 39 சதவிகிதம், தென் சென்னையில்

38 சதவிகிதம், திருவாரூரில் 32 சதவிகிதம், கடலூாரில் 28 சதவிகிதம், மதுரை மாநகரில் 18 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

7.20 மேற்கண்ட விபரங்களின் மூலம் பெறும் படிப்பினை இதுதான்: எந்த மாவட்டத்தில் திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டதோ அங்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முன்னேற்றம் எற்படாத மாவட்டங்களில் இதற்கான காரணங்களைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

கட்சி உறுப்பினர்களின் தரம்

7.21 *"கட்சி உறுப்பினர்களில் கணிசமான பகுதியினரின் அரசியல், ஸ்தாபன, தத்துவார்த்த தரம் குறைவாக இருப்பதால் பல இடங்களில் கிளர்ச்சிப் பணிகள், அரசியல் வேலைகள், தத்துவார்த்த மற்றும் ஸ்தாபனப் பணிகள் சரிவர மேற்கொள்ளப்படுவதில்லை. கட்சியின் வேகமான, விரிவான வளர்ச்சிக்குத் தடைகளாக இருக்கும் பல காரணங்களில் இது ஒரு முக்கியமான காரணமாகும்"* என 18வது காங்கிரஸ் கூறுவது நமது மாநிலத்திற்கு சரியாகப் பொருந்தும்.

கட்சி உறுப்பினர்களின் தரத்தை உயர்த்திட

7.22 கட்சி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்தான் செயல்படுகிறார்கள். சில மாவட்டங்களில் செயல்படும் உறுப்பினர் எண்ணிக்கை இதற்கும் குறைவாகவே உள்ளது என மதிப்பீடு செய்திருக்கிறோம். இதில் நூறு சதவிகிதம் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும் கணிசமான கட்சி உறுப்பினர்களைச் செயல்பட வைக்க வேண்டும். இதைப் பொறுத்துத்தான் கட்சி வளர்ச்சி அமையும்.

7.23 கட்சியின் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்படும் கடமைகளையும், உரிமைகளையும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அமலாக்கிட வேண்டும்; அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும். இதன் மூலமே கட்சியின் வேகமான வளர்ச்சி என்ற முடிவை அமலாக்க முடியும்.

7.24 2007ஆம் ஆண்டு கட்சி உறுப்பினர்களின் தகுதி ஆய்வு விபரங்களைப் பரிசீலித்தால் அதில் கிடைக்கும் பல அம்சங்களில் முக்கியமான ஒன்று சுமார் 40 சதவிகிதம் உறுப்பினர்கள் 1996-க்குப் பிறகு கட்சியில் சேர்ந்தவர்களாவர். அநேகமாக இவர்கள்தான் கட்சி உறுப்பினர்களில் இளைய தலைமுறையினர். புதிதாகக் கட்சியில் சேருபவர்களில் ஒரு பகுதியினர் இன்றைய சமுதாயத்தில் நிலவும் தவறான போக்குகளையும், முதலாளித்துவக் கட்சிகளின் தவறான ஸ்தாபன நடைமுறைகளையும் சுமந்தபடியே வருகிறார்கள். இவர்களைப் பயிற்றுவித்து அரசியல் - ஸ்தாபன ரீதியில் வளர்க்கத் திட்டமிட வேண்டும்.

கட்சி கட்டும் பணி

7.25 கடந்த மூன்றாண்டுகளில் ஏராளமான இயக்கங்கள் நடத்தியிருக்கிறோம். நமது அரசியல் மரியாதை உயர்ந்திருக்கிறது. ஆனால், இது கட்சி வளர்ச்சியில் பிரதிபலிக்கவில்லை என்பது கட்சி கட்டும் பணியில் நாம் போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. ஏராளமான இயக்கப் பணிகளைச் செய்தாலும் கட்சி கட்டும் பணிக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள, பெண்கள், தலித் மக்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர், இளைஞர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரைக் கட்சிக்குள் கொண்டு வருவதற்கும், அவர்களைப் பயிற்றுவித்து ஊழியர்களாக்குவதற்கும் கட்சிக் கமிட்டிகள் கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும்.

கட்சிக் கிளைகள்

7.26 மாநிலம் முழுவதும் 10,799 கட்சிக் கிளைகள் உள்ளன. ஒரு கட்சிக் கிளையில் அதிகபட்சம் 15 உறுப்பினர்கள் தான் இருக்க வேண்டும். ஆனால் சில மாவட்டங்களில் 15 உறுப்பினர்களுக்கு மேல் உள்ளனர். அவ்வாறு இருந்தால் கிளையைப் பிரித்து புதிய கிளையை உருவாக்க வேண்டும் என்ற முடிவு அமலாக்கப்படவில்லை.

7.27 *"கிளை செயல்பாட்டில் முன்னேற்றம் இல்லாததுதான் கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களின் விஸ்தரிப்பிற்குத் தடையாக உள்ளது."* எனக் கடந்த மாநில மாநாடும், *"கட்சிக் கிளைகளின் செயலற்றத் தன்மை கட்சி வளர்ச்சிக்கான முயற்சிகளுக்குத் தடையாக உள்ளன."* என்று கட்சி காங்கிரசும் கூறியுள்ளன.

7.28 *"மாநிலத்தில் உள்ள கிளைகளில் 2005-ம் ஆண்டு பரிசீலனை அடிப்படையில் 20 சதவிகிதம் கிளைகள் வருடத்திற்கு ஆறு முறையும அதற்கு மேலும் கூடியுள்ளன. 40 சதவிகிதம் கிளைகள் மூன்று முதல் ஐந்து முறையும், 30 சதவிகிதம் கிளைகள் ஒன்று அல்லது இரண்டு முறையும் கூடியுள்ளன. 10 சதவிகிதம் கிளைகள் ஒரு முறை கூட கூடவில்லை."* என 2006ம் ஆண்டு இடைக்கால ஸ்தாபன பரிசீலனையில் கிளைச் செயல்பாடுகள் பற்றி மாநிலக்குழு மதிப்பீடு செய்துள்ளது.

7.29 கிளைச் செயல்பாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கடந்த மூன்றாண்டுகளில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளைச் செயல்பாடு பிரதானமாகக் கிளைச் செயலாளர்களின் செயல்பாட்டைப் பொறுத்தே உள்ளது. கிளைச் செயலாளர்களுக்குப் பயிற்சி அளித்திட சில மாவட்டங்களில் இவர்களுக்கென்றே பிரத்தியேகமான ஸ்தாபனப் பட்டறை நடத்தப்பட்டுள்ளன. அவ்வப்பொழுது மாவட்ட அளவில், ஒன்றிய அளவில் கிளைச் செயலாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு கிளைச் செயலாளர்களை இயக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை.

7.30 கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடத்திட வேண்டுமென சால்கீய ஸ்தாபன மாநாடு முடிவு செய்தது. சில மாவட்டங்கள் இடைக்குழு வாரியாகவும், மாவட்ட அளவிலும் கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை நடத்தி வருகின்றனர். சில மாவட்டங்களில் இத்தகைய கூட்டம் முறையாக நடைபெறுவதில்லை. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கிளைச் செயலார்கள் கூட்டத்தை முறையாக நடத்தி, கிளைச் செயல்பாட்டின் முக்கியத்துவத்தையும், எதிர்காலக் கடமைகளை அமலாக்குவது பற்றியும் பயிற்றுவிக்க வேண்டும். இதன் மூலம் கிளைகளைச் செயல்படவைக்க முடியும். உதாரணமாக, கிளைகளை இயங்கவைப்பதில் கட்சியின் நெல்லை மாவட்டக்குழு எடுத்த முன்முயற்சி குறிப்பிடத்தக்கது.

> *"கடந்த மாவட்ட மாநாட்டின் முடிவின்படி குறிப்பிட்ட நாளில் அனைத்துக் கிளைகளையும் கூட்டுவதற்கு 2005ல் வலுவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 9 முறை கிளைக் கூட்டங்களில் ரிப்போர்ட் செய்வதற்கான குறிப்புகள் மாவட்ட மையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது" - என நெல்லை மாவட்ட மாநாட்டு அறிக்கை கூறுகிறது.*

7.31 கிராமங்களில், நகரங்களில், வார்டுகளில் செயல்படும் கிளைகளும் தொழில் வளாகங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கிடும் கிளைகளும் அங்கு நிலவும் அரசியல் சமூக சூழலை உள்வாங்கி நமது அரசியல் நிலைபாட்டின் அடிப்படையில் இயக்கங்களை உருவாக்கிட வேண்டும். இத்தகைய இயக்கங்களில் முன்னணிப் பாத்திரம் வகிப்பவர்களைக் கட்சிக்குள் கொண்டு வரவேண்டும்.

7.32 இத்தகையப் பணிகளைத் திறம்பட நடத்திடக் கட்சிக் கிளைகள் சுயமாக இயங்கிட வேண்டும். 90,000 கட்சி உறுப்பினர்களை இயக்கிடும் பொறுப்பு இடைக்குழுக்கள் மற்றும் மேல் கமிட்டிகளைச் சாரும். கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் வேலைப் பிரிவினை செய்து அமலாக்கிட கிளை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

7.33 கட்சிக் கிளைகளின் செயல்பாட்டை மேம்படுத்திட, கட்சி உறுப்பினர்களின் தரத்தை உயர்த்திட, கீழ்க்கண்ட அம்சங்களைக் கறாராக அமலாக்கிட வேண்டும்.

1. மாதம் ஒரு முறை கட்சிக் கிளை கூட வேண்டும்.
2. கட்சி உறுப்பினர்கள் கட்சி முடிவு செய்யும் இயக்கங்களில் பங்கேற்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.
3. கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஏதாவதொரு வெகுஜன அமைப்பில் பணியாற்ற வேண்டும் என்பதை அமலாக்கிட வேண்டும்.
4. கட்சி உறுப்பினர்களில் போதிய வருமானம் உள்ளவர்கள் தீக்கதிர் வாங்க வேண்டும்.

5. கட்சி உறுப்பினர்கள் தவறாமல் லெவி செலுத்துவதைக் கிளை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

6. கட்சி உறுப்பினர்களுக்குக் கட்சிக்கல்வி அளிப்பதோடு. அவர்களது வேலைகளை பரிசீலனை செய்து செழுமைப்படுத்திட வேண்டும்.

இடைக்குழுக்கள்

7.34 மாநிலத்தில் பிரதேச மற்றும் அரங்க இடைக்குழுக்கள் மொத்தம் 430 உள்ளன. கட்சியின் மாநிலக்குழுவும், வெகுஜன அரங்கங்களின் மாநிலக்குழுக்களும் எடுக்கும் முடிவுகள் எல்லாவற்றையும் அமலாக்க வேண்டிய பொறுப்பில் இடைக்குழுக்கள் உள்ளன. இக்குழுக்களின் செயல்பாட்டைப் பலப்படுத்த வேண்டுமென ஒவ்வொரு மாநில மாநாடும் வலியுறுத்தியுள்ளது.

7.35 "பெரும்பாலான மாவட்டங்களில் இடைக்கமிட்டி கூட்டங்களுக்கான உறுப்பினர்கள் வருகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இடைக்கமிட்டி உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரங்க, கட்சி, கிளைப் பொறுப்புகளைப் பெரும்பாலான உறுப்பினர்கள் நிறைவேற்றும் நிலையில் இல்லை. இதனால் இடைக்கமிட்டிகளின் வழிகாட்டுதலில் செயல்பட வேண்டிய கிளைகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்படவில்லை", என 18வது மாநில மாநாடு இடைக்குழுக்கள் செயல்பாடு குறித்து மதிப்பீடு செய்தது.

7.36 கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சியின் மாநிலக்குழுவும், மாவட்டக்குழுக்களும் இடைக்குழுக்களை பலப்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டன.

7.37 இடைக்குழு உறுப்பினர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் வகுப்புகள் நடத்தப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

7.38 இடைக்குழுக் கூட்டங்களில் அதனுடைய செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளை மேல் கமிட்டி தோழர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

7.39 இடைக்குழுச் செயல்பாட்டில் செயலாளரின் பாத்திரம் முக்கியம் என்பதால் அவர்களுக்கு மாநிலத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஸ்தாபனப் பட்டறை நடத்திப் பயிற்சி அளிக்கப்பட்டது.

7.40 கட்சியின் மத்தியக்குழு, மாநிலக்குழு முடிவுகளை இடைக்குழு உறுப்பினர்களுக்கு விளக்கிட அவ்வப்பொழுது இடைக்குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் பேரவை நடத்தப்பட்டுள்ளது.

7.41 ஓராண்டு ஸ்தாபனப் பரிசீலனையில் இடைக்குழு செயல்பாடு பரிசீலிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ள குறைபாட்டைப் போக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டன.

7.42 கட்சி அணிகளுக்கு இடைக்குழுச் செயல்பாட்டின் முக்கியத்துவத்தை ஓரளவுக்கு உணர்த்தியுள்ளோம்.

7.43 மேற்கண்ட அம்சங்கள் உள்ளிட்டுப் பல முயற்சிகளை மாநிலக்குழு எடுத்துள்ளது. நிதி வசூல், ஸ்தல இயக்கம் நடத்துவது, வெகுஜன அரங்க வளர்ச்சியில் கவனம் செலுத்துவது, கட்சிக் கல்வி அளிப்பது போன்று பல அம்சங்களில் மாவட்டங்களில் இடைக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் பெரும்பாலான இடைக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

7.44 உதாரணமாக, "இடைக்குழு மற்றும் மையக் கூட்டங்கள் நடத்தி இயக்கங்களுக்கு திட்டமிடுவதில் வளர்ச்சி உள்ளது. மத்திய, மாநிலக்குழு முடிவுகளை அனைத்து இடைக்கமிட்டிகளிலும் சக்திக்கேற்ப அமலாகியுள்ளன. குடிமனைப்பட்டா, ஸ்தல மட்ட பிரச்சனைகள் உட்பட மக்கள் கோரிக்கைகளுக்கான இயக்கங்கள் ஆங்காங்கே நடத்தப்பட்டன. இருப்பினும் இடைக்குழு உறுப்பினர்கள் செயல்பாட்டினை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. கட்சிக் கிளை கூட்டங்களை நடத்தவும், ரிப்போர்ட் செய்வதற்கும் அரசியல், ஸ்தாபன ரீதியில் பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது." என்று கோவை மேற்கு மாவட்ட அறிக்கை குறிப்பிடுகிறது.

7.45 மையச் செயல்பாடு, இடைக்குழு கூடுவது, இயக்கங்களைத் திட்டமிட்டு நடத்துவது, மாநிலக்குழு மற்றும் மாவட்டக்குழு முடிவுகளை அமலாக்குவது, ஸ்தல இயக்கம் நடத்துவது. கிளைகளை இயக்குவது, தீக்கதிர் விற்பனை, நிதியளிப்பு போன்ற பணிகளில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் கீழ்க்கண்ட குறைபாடுகள் தொடருகின்றன:

- மையம் அமைக்கப்பட்டிருப்பினும் பல மாவட்டங்களில் இடைக்குழு செயலாளரே வேலைகளை சுமக்கும் நிலை உள்ளது.
- ஓரளவுக்கு பலமுள்ள இடைக்குழுக்களின் செயலாளர்கள் முழுநேர ஊழியர்களாக இருக்க வேண்டும் என்று கடந்த மாநில மாநாடு முடிவெடுத்திருந்தாலும் இன்னும் சில மாவட்டங்களில் இம்முடிவு அமலாக்கப்படவில்லை. கூட்டுத் தலைமையை உருவாக்குவதில் முன்னேற்றம் இல்லை.
- இடைக்குழுக்களில் செயலாளர் அல்லாத மற்றொரு இடைக்குழு உறுப்பினர் வரவு - செலவுக் கணக்கைப் பார்க்க வேண்டுமென்றும், வங்கியில் கணக்கு துவங்கி வரவு - செலவு கணக்கைப் பராமரிக்க வேண்டுமென்றும் எடுக்கப்பட்ட முடிவு பல மாவட்டங்களில் அமலாக்கப்படவில்லை.
- இடைக்குழு உறுப்பினர்களில் பெரும் பகுதியினர் தங்களுக்கு அளிக்கப்பட்ட கிளை மற்றும் அரங்கப் பொறுப்புகளை சுயமாக நிறைவேற்ற இயலாதவர்களாக உள்ளனர்.
- கிளைகளில் வரும் பிரச்சனைகளைத் தீர்க்க உடனடித் தலையீடு போதுமான அளவுக்கு இல்லை.
- வெகுஜன அரங்கங்களில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இடைக்குழு உறுப்பினர்கள் முழுமையாக உள்வாங்கிக் கொள்ளாதது விஸ்தரிப்புக்குத் தடையாக உள்ளது.
- ஒரு சிலரே வேலைகளை சுமப்பதால் சலிப்புற்று, இருக்கின்ற ஸ்தாபனத்தை நடத்திச் சென்றால் போதுமென்ற நிலை உள்ளது.
- இடைக்கமிட்டி மாநாடுகளில் உறுப்பினர் மற்றும் செயலாளர் பொறுப்புக்குத் தேவை ஏற்படுகிறபோது தேர்தல் நடத்துவது ஜனநாயகமுறை. ஆனால் போட்டியில் வெற்றி பெற்றவர்கள், தோல்வியுற்றவர்கள் என்ற நிலை உருவாகி, கோஷ்டியாகி அன்றாட வேலைகள் பாதிக்கின்றன.

7.46 கட்சியின் வெகுஜன அரங்கங்களுடைய அரசியல் - ஸ்தாபன முடிவுகள் இடைக்கமிட்டிகள் மூலமாகத்தான் அமலாகின்றன. நாம் நடத்திய பல இயக்கங்கள் இடைக்கமிட்டிகளின் பாத்திரம் இல்லாமல் அமலாகி இருக்க முடியாது. எனினும் இன்று நிலவும் பல குறைபாடுகளைக் களைவதன் மூலமே கட்சியையும், வெகுஜன அமைப்புகளையும் விஸ்தரிக்க முடியும்.

மாவட்டக்குழுக்களின் செயல்பாடு

7.47 மாநிலத்தில் 34 மாவட்டக்குழுக்கள் உள்ளன. எல்லா மாவட்டக்குழுக்களும் இடைக்கால ஸ்தாபனப் பரிசீலனையை மேற்கொண்டன. மாநிலக்குழுவும் இடைக்கால ஸ்தாபனப் பரிசீலனையில் மாவட்டக்குழுக்கள், மாவட்ட செயற்குழுக்கள் செயல்பாடு பற்றிப் பரிசீலனை செய்தது. கடந்த மாநில மாநாடு தீர்மானித்த அரசியல் - ஸ்தாபனக் கடமைகளை அமலாக்கிட மாவட்டக்குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டன.

7.48 *“அரசியல் - ஸ்தாபனப் பொறுப்புகளை நிறைவேற்றுவது, வெகுஜன அரங்கங்களுக்கு வழிகாட்டுவது, இடைக்கமிட்டிகள், கிளைகள் செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவது, கட்சிக் கல்வி, பிரசுர விற்பனைக்குத் திட்டமிடுவது எனப் பல பணிகளைச் செய்யக்கூடிய திறமை படைத்த மாவட்டக்குழுக்களாக சில மாவட்டக்குழுக்களே செயல்படுகின்றன. பல மாவட்டக்குழுக்கள் இதில் பின்தங்கியுள்ளன.”*, என மாநில 18வது மாநாடு மாவட்டக் குழுக்களின் செயல்பாடு பற்றி மதிப்பீடு செய்தது.

7.49 மேற்கண்ட குறைபாடுகள் இருப்பினும், கடந்த மூன்று ஆண்டுகளில் பல அம்சங்களில் மாவட்டக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

7.50 மாவட்ட மையச் செயல்பாடு, குறிப்பிட்ட கால இடைவெளியில் மாவட்டக்குழு கூடுவது, மத்தியக்குழு, மாநிலக்குழு தீர்மானித்த இயக்கங்களை நடத்துவது, தீக்கதிர் விற்பனையை அதிகப்படுத்துவது, ஸ்தலக் கோரிக்கைகள் மீது இயக்கத்திற்குத் திட்டமிடுவது, மாநிலக்குழு

தீர்மானித்த குடிமனைப்பட்டா, தலித் மக்களை திரட்டுவது குறிப்பாக அருந்ததி மக்களை திரட்டுவது, சிறுபான்மை மக்களைத் திரட்டிட முயற்சிகளை மேற்கொள்வது, கட்சிக் கல்விக்குத் திட்டமிடுவது போன்ற பல அம்சங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் பல அம்சங்களில் மாவட்டக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் தேவைப்படுகிறது. கடந்த மூன்றாண்டின் அனுபவம் காட்டுவது என்ன?

7.51 ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலவும் பிரத்தியேகமான அரசியல், பொருளாதார, சமூகச் சூழல்களைப் புரிந்து அதற்கேற்றாற்போல் அரசியல், ஸ்தாபன, இயக்க வேலைகளைத் தீர்மானிக்கும் அளவுக்கு மாவட்டக்குழுக்கள் வளரவேண்டியுள்ளது. முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி இருக்கும் கிராமப்புற மாவட்டங்கள், தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள மாவட்டங்கள், தொழில் - விவசாயம் இரண்டும் உள்ள மாவட்டங்கள், சிறுபான்மை மற்றும் தலித் மக்கள் அதிகம் உள்ள மாவட்டங்கள், சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் அதிகம் உள்ள மாவட்டங்கள் என மாறுபட்ட சூழல்களைக் கொண்ட மாவட்டங்களில் நிலைமைக்கேற்றவாறு வேலைகளுக்குக் திட்டமிடும் பார்வை பல மாவட்டக்குழுக்களுக்கு இல்லை. சில மாவட்டக் குழுக்களே இத்தகைய பார்வையோடு செயல்படுகின்றன.

7.52 மாவட்டத்திற்கு மாவட்டம், ஒவ்வொரு அரசியல் கட்சியின் பலத்திலும் வேறுபட்ட நிலை இருக்கும். இவற்றைக் கணக்கில் கொண்டு மாவட்டக்குழு தலையீடு செய்ய வேண்டியுள்ளது. வேறுபட்ட அரசியல் சூழல் உள்ள மாவட்டங்களில் நிலைமைக்கேற்றவாறு நமது கட்சியின் சுயேச்சையான மற்றும் கூட்டான இயக்கங்களுக்குத் திட்டமிட வேண்டியுள்ளது.

7.53 நாம் எந்த மாவட்டத்திலும் முதன்மையான இடத்தில் இல்லையென்றாலும், மக்கள் பிரச்சனைக்ளில் தலையிடுவதில் நாம் முதன்மைக் கட்சியாக இருந்தால் நாளடைவில் மாவட்டத்தில் நாம் வலுவான சக்தியாக வளர முடியும்.

7.54 இதில் சில மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க முன் முயற்சி இருந்துள்ளது. நெல்லையில், கங்கை கொண்டானில் கோகோ கோலா நிறுவனத்திற்குத் தண்ணீர் விநியோகத்தால் ஏற்படும் பாதிப்பை எதிர்த்து நடத்திய இயக்கம்; தென் சென்னையில் விமான நிலைய விரிவாக்கத்தால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பை எதிர்த்து நடத்திய இயக்கம்; கடலூர் மாவட்டத்தில் குள்ளஞ்சாவடியில் லாக்அப் மரணத்தை எதிர்த்து உருவான மக்கள் இயக்கத்தில் மாவட்ட மையத்தின் தலையீடு, போன்று பல மாவட்டங்கள் தலையிட்டுள்ளன. மத்தியக்குழு, மாநிலக்குழு முடிவுகளை அமலாக்குவதோடு மேற்கண்ட அடிப்படையில் எல்லா மாவட்டங்களும் ஸ்தல மக்கள் பிரச்சனைகள் மீதும் தலையிட வேண்டும். அரசியல் பணி மற்றும் ஸ்தல அளவிலான பணி ஆகிய இரண்டையும் எடுத்துச் செல்கிற போது தான் மாவட்டங்களில் கட்சி வளர்ச்சியில் உள்ள தேக்கத்தை உடைக்க முடியும்.

7.55 மாவட்ட மையங்களின் செயல்பாட்டில் பல அம்சங்களில் குறைபாடுகள் நீடிக்கின்றன. சில மாவட்டங்களில் மையம் முறையாகக் கூட்டப்படவில்லை. இத்தகைய மாவட்டங்களில் செயற்குழுக்கூட்டங்களை விட மையக்கூட்டங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. மையம் என்பது செயற்குழுவுக்கு மேலான அமைப்பு அல்ல என்ற புரிதல் இன்னும் சில மாவட்டங்களில் ஏற்படவில்லை. செயற்குழு, மாவட்டக்குழுக்கூட்டங்களுக்கிடையில், அவசரப் பிரச்சனைகளில் மையம் தலையிட வேண்டுமென்ற முடிவு சில மாவட்டங்களில் அமலாகவில்லை. எனவே, மாவட்ட மையச் செயல்பாட்டில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

7.56 மாவட்ட அளவில் மாவட்டக்குழுக்கள்தான் கட்சியின் தலைமை. இருப்பினும் மாவட்டச் செயற்குழுவிற்கு முக்கிய பங்கிருக்கிறது. மாவட்டக்குழு - மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள், இடைக்கமிட்டி செயலாளராகவும், வெகுஜன அரங்கங்களில் நேரடி பொறுப்பாளராக இருப்பதும் அவசியம் என்றாலும் மாவட்டக் கட்சித் தலைமையின் ஒரு அங்கம் என்ற அடிப்படையில் இவர்கள் மாவட்ட மையக் கட்சிப் பணிகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதில் சில மாவட்டங்களில் குறைபாடு உள்ளதால், கட்சியின் மாவட்டச் செயலாளர் கூடுதலாக மாவட்ட மைய வேலைகளைச் செய்யும் நிலை உள்ளது.

7.57 மாவட்டச் செயற்குழு உறுப்பினர்களுக்குக் கூடுதலான கட்சி மையப் பணிகள் அளிக்கப்பட்டு அவர்கள் நேரடிப் பொறுப்பில் உள்ள அரங்க வேலைகளைக் கவனிக்க முடியாத

நிலையும் சில மாவட்டங்களில் உள்ளது. இதனால் போதுமான முன்முயற்சி இல்லாமல் அரங்க வேலைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன..

7.58 எல்லா மாவட்டங்களிலும் செயற்குழு - மாவட்டக்குழு உறுப்பினர்களுக்கு வேலைப் பிரிவினை செய்யப்படுகிறது. ஆனால், அளிக்கப்பட்ட பொறுப்புகளைத் தோழர்கள் சரியாக நிறைவேற்றுகிறார்களா என்ற பரிசீலனை விமர்சன ரீதியாக நடப்பதில்லை. பொறுப்பை நிறைவேற்றாத தோழர்களை விமர்சிக்கத் தயக்கம் ஒரு புறமும், விமர்சனத்திற்குள்ளாகும் தோழர்கள் விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளாத போக்கு மறுபுறமும் இருப்பது இயக்க வளர்ச்சியை பாதிக்கிறது.

7.59 விமர்சன, சுயவிமர்சன அடிப்படையில்தான் கருத்தொற்றுமை - செயல்ஒற்றுமை உருவாக்க முடியும்; கூட்டுத் தலைமையும் உருவாகும். இத்தகைய அணுகுமுறை இல்லாத காரணத்தால் பல மாவட்டங்களில், மாவட்டத் தலைமையில் ஒற்றுமையின்மை நீடிக்கிறது.

7.60 அரங்கங்களில் - இடைக்கமிட்டிகளில் - தேக்கம் இருந்தால் கண்டறிந்து, தேக்கத்தை உடைக்கப் பல மாவட்டக்குழுக்கள் போதுமான முயற்சி எடுக்காமல் இயந்திரகதியாக வேலை செய்யும் போக்கு உள்ளது.

7.61 தேக்கத்தை உடைக்க சில மாவட்டக்குழுக்கள் எடுத்த முயற்சிக்குப் பலன் கிடைத்துள்ளது. இணைப்பில் உள்ள புள்ளிவிவரங்களைப் பரிசீலித்தால் எந்தெந்த மாவட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

7.62 இடைக்கமிட்டிகளும், கிளைகளும் சுயமாக இயங்க வேண்டுமென்றாலும், கிளைச் செயல்பாட்டையும், இடைக்குழுக்கள் செயல்பாட்டையும் மேம்படுத்த பல மாவட்டக்குழுக்கள் போதுமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

7.63 மாவட்டக்குழு உறுப்பினர்கள், மாவட்டத் தலைமையாக உருவாவதில் பல மாவட்டங்களில் முன்னேற்றம் இல்லை என பல மாவட்ட மாநாட்டு அறிக்கைகள் கூறுகின்றன. மாவட்டக்குழு உறுப்பினர்களை வளர்த்தெடுக்க வேண்டிய பணி மாவட்டச் செயற்குழுக்களுக்கு முன்புள்ள முக்கிய பணியாகும்.

7.64 சில மாவட்டங்கள் இன்னும் நிதி நெருக்கடியில் உள்ளன. பல மாதங்களாக முழு நேர ஊழியர்களுக்கு மாநிலக்குழு எடுத்த முடிவின் அடிப்படையில் ஊதியம் கொடுக்காத நிலை உள்ளது. குறிப்பிட்ட காலத்தில் மக்கள் மத்தியில் நிதி வசூல் செய்து நிதி நெருக்கடியைப் போக்கிட பல மாவட்டங்கள் வெகுஜனங்கள் மத்தியில் நிதி வசூல் செய்யும் முறையை மேற்கொண்டன.

7.65 தீக்கதிர் மற்றும் புத்தக - பிரசுர விற்பனையில் மாநிலக்குழு முடிவுகளை அமலாக்குவதில் பல மாவட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் கிராமப்புற இயக்கம் பலமாக உள்ள சில மாவட்டங்களில் இதில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

7.66 "மாநிலக்குழு மாவட்டங்களுக்குத் தீர்மானித்த நிதிக் கோட்டா, பிரசுர விற்பனைத் தொகை, கட்சி உறுப்பினர் லெவி, ஈவுத் தொகை போன்றவற்றை ஒரு சில மாவட்டங்களே முறையாகச் செலுத்துகின்றன. பெரும்பாலான மாவட்டக்குழுக்கள் இதில் போதிய கவனம் செலுத்தவில்லை", என 18வது மாநில மாநாடு சுட்டிக்காட்டியது. இதில் கடந்த மூன்றாண்டுகளில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை; பழைய நிலைமையே தொடருகிறது.

7.67 சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சிமன்றத் தேர்தல், மாநில - அகில இந்திய அளவிலான கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களின் அறைகூவலுக்கு ஏற்ப இயக்கங்கள் நடத்துவது, ஸ்தாபன வேலைகள் செய்வது ஆகியவற்றில் கடந்த மூன்றாண்டுகளில் மாவட்டக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.இருப்பினும் மேற்கண்ட குறைபாடுகளைக் களைந்தால், கட்சி வலுவான சக்தியாக வளர முடியும்.

மாநில செயற்குழு - மாநிலக்குழு செயல்பாடு

7.68 நாகர்கோவிலில் நடைபெற்ற கடந்த 18வது மாநில மாநாட்டில் 80 தோழர்களை மாநிலக்குழு உறுப்பினர்களாகவும், 5 தோழர்களை சிறப்பு அழைப்பாளர்களாகவும் தேர்வு செய்தோம்.

இக்காலத்தில் மாநிலக்குழு உறுப்பினர் தோழர் என். கோவிந்தராஜ் உடல் நலம் பாதிக்கப்பட்டு மறைந்து விட்டார். கட்சிவிரோத நடவடிக்கைக்காக எம். லகுமையா கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். பி.எம்.குமார் உடல்நலம் காரணமாக மாநிலக்குழுவிலிருந்து அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க விடுவிக்கப்பட்டார்.

7.69 15 தோழர்கள் மாநிலச் செயற்குழுவாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநிலச் செயற்குழு உறுப்பினர்களின் வேலைப் பிரிவினை

1. என். வரதராஜன்	:	மாநிலச் செயலாளர்
2. டி.கே. ரெங்கராஜன்	:	மாநில மையம், மாநிலத் தொழிற்சங்க அரங்கம், அரசு ஊழியர் ஆசிரியர், ரயில்வே, கடலூர், கோவை கிழக்கு மாவட்டம், உதவி: சேலம் மாவட்டக்குழு, சட்டமன்றம் - பாராளுமன்றம்
3. தே. இலட்சுமணன்	:	மாநில மையம், சிறுபான்மை உபகுழு, மதுரை புறநகர், விருதுநகர் மாவட்ட பொறுப்பு
4. ஏ.கே. பத்மநாபன்	:	மாநில மையம், மாநிலத் தொழிற்சங்க அரங்கம், மருத்துவப் பிரதிநிதி, காப்பீடு ஊழியர், மத்திய அரசு - ஊழியர், மின் ஊழியர் , வங்கி அரங்கங்கள் மற்றும் தீக்கதிர் ஆசிரியர் குழுப் பொறுப்பு, தென்சென்னை மாவட்டப் பொறுப்பு
5. உ. வாசுகி	:	மாதர் அரங்கம், திருவள்ளூர் மாவட்டப் பொறுப்பு
6. வே. மீனாட்சி சுந்தரம்	:	மாநில மையம், மார்க்சிஸ்ட் ஆசிரியர், வடசென்னை, வேலூர் மாவட்ட பொறுப்பு, உதவி: திருவண்ணாமலை மாவட்டம்
7. ஜி. ராமகிருஷ்ணன்	:	மாநில மையம், மாநிலக் கட்சிக் கல்விப் பொறுப்பு, அறிவியல் அரங்கம், உள்ளாட்சி மன்றம், பாரதி புத்தகாலயம், கட்சி வெளியீடுகள், திருவாரூர், நாகை மாவட்டப் பொறுப்பு
8. பி. சம்பத்	:	கல்விக்குழு, தமுஎச, மாதர் அரங்கம், பி.எஸ்.என்.எல் - தபால் அரங்கம், தலித் உபகுழு, மதுரை மாநகர், திருச்சி, திண்டுக்கல் மாவட்டப் பொறுப்பு , உதவி: நெல்லை மாவட்டக்குழு
9. அ. சவுந்திரராசன்	:	மாநிலத் தொழிற்சங்க அரங்கம், போக்குவரத்து ஊழியர் அரங்கம், சேலம், மாவட்டப் பொறுப்பு, உதவி. வடசென்னை, திருவள்ளூர் மாவட்டம்
10. கே. தங்கவேல்	:	கோவை (மேற்கு), ஈரோடு, நீலகிரி, நாமக்கல் மாவட்டப் பொறுப்பு உதவி: கோவை-கிழக்கு
11. கே. பாலகிருஷ்ணன்	:	மாநில வி.ச. அரங்கம், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டப் பொறுப்பு உதவி: விழுப்புரம், தர்மபுரி
12. ப. செல்வசிங்	:	மாநில மையம், நிதிக்குழு பொறுப்பு, வாலிபர் அரங்கம், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி மாவட்டப் பொறுப்பு உதவி: வேலூர் மாவட்டம்

13. எம்.என்.எஸ். வெங்கட்டராமன் : மாணவர் அரங்கம், கலை அரங்கம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டப் பொறுப்பு

14. ஜே. ஹேமச்சந்திரன் : மாநிலத் தொழிற்சங்க அரங்கம், நெல்லை மாவட்டப் பொறுப்பு

15. என். சீனிவாசன் : தீக்கதிர் நிர்வாகப் பொறுப்பு, சிவகங்கை மாவட்டப் பொறுப்பு

மாநிலக்குழு உறுப்பினர்களின் வேலைப் பிரிவினை

எஸ். நூர்முகமது	:	குமரி மாவட்டச் செயலாளர்
வி. பழனி	:	நெல்லை மாவட்டச் செயலாளர்
பி. மோகன்	:	பாராளுமன்றப் பணிகள், மதுரை மாநகர் மாவட்டச் செயற்குழு
என். நன்மாறன்	:	சட்டமன்றப் பணிகள், கலைஅரங்கம், மதுரை மாநகர் மாவட்ட செயற்குழு
ஏ. லாசர்	:	தேனி, புதுக்கோட்டை மாவட்டப் பொறுப்பு, மதுரை புறநகர் மாவட்டச் செயற்குழு
வி. சுந்தரம்	:	மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர், மருத்துவர் அரங்கம், மாநில தணிக்கைக்குழு
பி.கே. கருப்புசாமி	:	திண்டுக்கல் மாவட்ட செயற்குழு
கே. ராஜப்பன்	:	தேனி மாவட்டச் செயலாளர்
எம். அர்ச்சுனன்	:	சிவகங்கை மாவட்டச் செயலாளர்
ஜி. ரத்தினவேல்	:	கரூர் மாவட்டப் பொறுப்பு
எஸ். ஸ்ரீதர்	:	திருச்சி மாவட்டச் செயலாளர்
ஆர்.சி. பழனிவேல்	:	தஞ்சை மாவட்டச் செயலாளர்
ஆர். ராமமூர்த்தி	:	வழக்கறிஞர் அரங்கம், விழுப்புரம் மாவட்டச் செயற்குழு
டி. முருகன்	:	புதுச்சேரி பிரதேசக்குழு
பி. சுந்தரராஜன்	:	திருவள்ளூர் மாவட்டச் செயலாளர்
கே. கிருஷ்ணன்	:	வடசென்னை மாவட்டச் செயற்குழு
டி.ஆர். புருஷோத்தமன்	:	வேலூர் மாவட்டச் செயற்குழு
எம். ராஜகோபால்	:	சேலம் மாவட்டச் செயலாளர்
கே. கருணாகரன்	:	நாமக்கல் மாவட்டச் செயற்குழு
என். வாசு	:	நீலகிரி மாவட்டச் செயற்குழு
கே.சி. கருணாகரன்	:	கோவை மேற்கு மாவட்டச் செயற்குழு
யு.கே. வெள்ளிங்கிரி	:	கோவை மேற்கு மாவட்டச் செயற்குழு
சி. கோவிந்தசாமி	:	சட்டமன்றப் பணிகள், கோவை கிழக்கு மாவட்டச் செயற்குழு
கே. பாலபாரதி	:	சட்டமன்றப் பணிகள், திண்டுக்கல் மாவட்டச் செயற்குழு
ஆர். மல்லிகா	:	தூத்துக்குடி மாவட்டச் செயற்குழு

ஆர். சிங்காரவேலு	:	தொழிற்சங்க அரங்க மாநில மையம்
எஸ். பஞ்சரத்னம்	:	மின்னரங்கம்,
பி. சண்முகம்	:	வி.ச. மாநில மையம்
		திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பு,
எஸ். திருநாவுக்கரசு	:	வி.தொ.ச. மாநில மையம், உதவி: தஞ்சை மாவட்டக்குழு
எஸ்.ஏ. பெருமாள்	:	மதுரை தீக்கதிர் பொது மேலாளர்
வி. பரமேஸ்வரன்	:	ஆசிரியர் - தீக்கதிர்
அருணன்	:	முற்போக்கு எழுத்தாளர் அரங்கம்
சு.பொ. அகத்தியலிங்கம்	:	பொறுப்பு ஆசிரியர் - தீக்கதிர் சென்னைப் பதிப்பு
ஜி. உதயகுமார்	:	மேலாளர் - சென்னை தீக்கதிர்
என். குணசேகரன்	:	தர்மபுரி, விழுப்புரம் மாவட்டப் பொறுப்பு
டி. நந்தகோபால்	:	தென்சென்னை மாவட்டச் செயலாளர்
எம். வீரபத்திரன்	:	திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர்
ஜி. ஆனந்தன்	:	விழுப்புரம் மாவட்டச் செயலாளர்
எஸ். தனசேகரன்	:	கடலூர் மாவட்டச் செயலாளர்
ஆர். ஜோதிராம்	:	மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்
பி.ஆர். நடராஜன்	:	கோவை மேற்கு மாவட்டச் செயலளார்
பி. ஜான்சிராணி	:	மாதர் அரங்க மாநில மையம்
என். அமிர்தம்	:	கோவை மேற்கு மாவட்டச் செயற்குழு
மூசா	:	கடலூர் மாவட்டச் செயற்குழு
ஏ. ஆறுமுக நயினார்	:	வங்கி அரங்கம், தணிக்கைக்குழு, மத்தியஅரசு ஊழியர் - உதவி
எம். சந்திரன்	:	போக்குவரத்து அரங்கம்
கே. காமராஜ்	:	கோவை கிழக்கு மாவட்டச் செயலாளர்
கே. முகமதுஅலி	:	வி.ச. மாநில மையம்
ஜி. மணி	:	வி.தொ.ச. மாநில மையம்
எஸ்.கே. மகேந்திரன்	:	சட்டமன்றப் பணிகள், வடசென்னை மாவட்ட செயற்குழு
பி. மாரிமுத்து	:	ஈரோடு மாவட்டச் செயலாளர்
கே. கனகராஜ்	:	தூத்துக்குடி மாவட்டச் செயலாளர், தணிக்கைக்குழு
டி.கே. சண்முகம்	:	வடசென்னை மாவட்டச் செயலாளர்
டி. ரவீந்திரன்	:	கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்
எஸ். பாலசுப்பிரமணியன்	:	விருதுநகர் மாவட்டச் செயலாளர்
வி. மாரிமுத்து	:	சட்டமன்றப் பணிகள், நாகை மாவட்டச் செயற்குழு
ஆர். கருமலையான்	:	தொழிற்சங்க அரங்கம், நெல்லை மாவட்டச் செயற்குழு
டி. ஆறுமுகம்	:	கடலூர் மாவட்டச் செயற்குழு

ஆர். சரளா	:	வடசென்னை மாவட்டச் செயற்குழு
ஆர். சந்திரா	:	மாதர் அரங்க மாநில மையம், வி.ச. அரங்கம்

7.70 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு மாநில செயற்குழு உறுப்பினர்களுக்கும், மாநிலக்குழு உறுப்பினர்களுக்கும் மேற்கண்ட அடிப்படையில் வேலைப்பிரிவினை செய்யப்பட்டது. அடுத்து நடைபெற்ற இடைக்கால ஸ்தாபனப் பரிசீலனையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாநிலச் செயற்குழு செயல்பாடு

7.71 கடந்த மூன்றாண்டுகளில் மாநில செயற்குழு 78 முறை கூடியுள்ளது. சராசரி 14 நாட்களுக்கு ஒரு முறை கூடியுள்ளது.

7.72 சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சி மன்றத் தேர்தல், சென்னை மாநகராட்சித் தேர்தலில் ஆளும் கட்சியின் வன்முறை, கூட்டுறவு சங்கத் தேர்தலில் ஆளும் கட்சியின் மோசடி (தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது), திமுக அரசின் கொள்கை முடிவுகள், மக்களைப் பாதிக்கும் நடவடிக்கைகள், அவ்வப்பொழுது மாநிலத்தில் எழும் அரசியல் சூழல் போன்ற பிரச்சனைகளில் மாநிலச் செயற்குழு நமது கட்சியின் நிலைபாட்டை உருவாக்கியுள்ளது.

7.73 கீழ்க்குறித்த விஷயங்களில் மாநிலச் செயற்குழுவின் திட்டமிடுதல், வழிகாட்டுதல், தலையீடு இருந்துள்ளது:

> *மத்தியக்குழுவின் முடிவு அடிப்படையிலான குடிமனைப்பட்டா, விலைவாசி உயர்வு போன்ற பிரச்சனைகளில் இயக்கங்கள்; மக்கள் பிரச்சனைகளில் இயக்கம்; வெகுஜன அரங்க இயக்கங்கள்; மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களில் எழும் அரசியல் ஸ்தாபன பிரச்சனைகளை தீர்த்து வைத்திட முயற்சிகள்; அன்றாடம் எழும் அரசியல் பிரச்சனைகளில் கட்சி மேற்கொள்ளும் நிலைபாடு குறித்து அடுத்து நடைபெறும் கூட்டத்தில் பரிசீலனை; மாநில செயற்குழுக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கட்சியின் மாநில மையம் மேற்கொண்ட அரசியல் ஸ்தாபன வேலைகள் பரிசீலனை; அணுசக்தி ஒப்பந்தம் போன்ற பிரச்சனையில் நமது நிலைபாட்டுக்கு ஆதரவு திரட்டிட திமுக மற்றும் பாமக ஆகிய கட்சிகளைச் சந்தித்து விவாதித்தல்; (அணுசக்தி ஒப்பந்தம் பற்றி திமுக தலைமை காங்கிரஸ் தலைமைக்கு கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது.) மக்கள் பிரச்சனைகள் பலவற்றில் மாநில அரசை அணுகித் தீர்த்து வைக்க முயற்சிகள்; தீராத பிரச்சனைகளில் இயக்கத்திற்கு திட்டமிடுதல்.*

7.74 மாவட்டங்களில் உருவான கோஷ்டிப் போக்குகளை களையவும், சட்டமன்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் உருவான கோஷ்டிப் போக்குகளையும் தவறான போக்குகளையும் களைய மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. (இது குறித்து நெறிப்படுத்தும் இயக்கம் பற்றிய தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது). மாநில செயற்குழு தலையீட்டிற்குப் பிறகும் சில மாவட்டங்களில் கோஷ்டிப்போக்கு நீடிக்கிறது. இதுபோன்ற ஸ்தாபனப் பிரச்சனைகளைத் தீர்க்க எதிர்காலத்தில் மாநிலச் செயற்குழு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

7.75 மாநிலச் செயலாளர் என்ற அடிப்படையில் பல பணிகளைக் கவனிக்க வேண்டியுள்ளதால் தோழர் என்.வி.க்கு அரங்க - மாவட்டப் பொறுப்பு அளிக்கப்படவில்லை. மற்ற அனைத்து மாநிலச் செயற்குழு உறுப்பினர்களும் மாவட்ட, அரங்கப் பொறுப்புகளை நிறைவேற்றி வருகிறார்கள். மாநிலச் செயற்குழு உறுப்பினரல்லாத மத்தியக்குழு உறுப்பினர்கள் தோழர்கள் பி. ராமச்சந்திரன், என். சங்கரய்யா, பாப்பா உமாநாத், கடந்த ஓராண்டாக தோழர் உ.ரா. வரதராசன் ஆகியோர் மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். தோழர். உ.ரா. வரதராசன் தீக்கதிர் ஆசிரியர் குழுவிற்கு உதவி வருகிறார்.

7.76 மாநிலச் செயற்குழுத் தோழர்கள் பொறுப்பாக உள்ள அரங்கம் / மாவட்டக்குழுக்களில் எழும் முக்கியமான அரசியல் ஸ்தாபன பிரச்சனைகளை மாநிலச் செயற்குழு விவாதித்து வழிகாட்டி வருகிறது.

7.77 மாநில பிராக்ஷன்கள், உபகுழுக்கள் எடுக்கும் முக்கியமான முடிவுகளை மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டி வருகிறது. எனினும் ஒவ்வொரு அரங்கம் குறித்தும் மாநிலச் செயற்குழுவில் விவாதிக்க இயலவில்லை.

7.78 விவசாய அரங்கில் கட்சியின் கடமை, மாணவர் அரங்கில் கட்சியின் கடமை, மாதர் அரங்கில் கட்சியின் கடமை மற்றும் கட்சியும் வெகுஜன அரங்கமும் என்ற நான்கு முக்கியமான ஆவணங்களை மத்தியக்குழு இக்காலத்தில் உருவாக்கியுள்ளது. மாதர் அரங்கில் நமது கடமை என்ற ஆவணத்தை மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் விவாதித்து மாநில நிலமைக்கேற்ப அமலாக்குவதற்கான ஓர் ஆவணத்தை இறுதிபடுத்தியுள்ளோம். வி.ச. அரங்கில் நமது கடமை என்ற ஆவணத்தை மாநில செயற்குழுவில் விவாதித்துள்ளோம். மாநிலக்குழுவில் இன்னும் விவாதிக்கவில்லை. மாணவர் அரங்கம் பற்றிய ஆவணத்தை சமீபத்தில்தான் மத்தியக்குழு நிறைவேற்றியுள்ளது. மாநில மாநாட்டிற்குப் பிறகு விவாதிக்க வேண்டியுள்ளது. 'கட்சியும் - வெகுஜன அரங்கமும்' என்ற ஆவணத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மத்தியக்குழு உருவாக்கியது. இன்னும் செயற்குழு விவாதிக்கவில்லை.

7.79 மாநிலச் செயற்குழுவின் சில கூட்டங்கள் ஒரு நாள் கூட்டமாகவும், பெரும்பான்மையான கூட்டங்கள் இரண்டு நாள் கூட்டமாகவும் நடந்துள்ளன. மாநில அரசியல் நிலைமை குறித்தும், கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களில் எழும் ஸ்தாபனப் பிரசச்னை குறித்தும் விவாதிப்பதில் கணிசமான நேரம் செலவாகிறது. இருப்பினும் மத்தியக்குழு ஆவணங்களை விவாதித்து மாநிலத்தின் நிலைமைக்கேற்ப அமலாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளாதது ஒரு குறைபாடே. மாநில மாநாட்டிற்குப் பிறகு இத்தகைய பணிகளுக்கு மாநிலச் செயற்குழு முக்கியத்துவம் அளித்து விவாதித்திட வேண்டும்.

7.80 மாநில செயற்குழு கூட்டுத் தலைமையாகச் செயல்படுகிறது. மாநில அளவிலான பணிகளை சில மாநிலக்குழு உறுப்பினர்கள் செய்து வந்தாலும் மாநில மையத்திலிருந்து வேலைசெய்திட மேலும் பல தோழர்களைக் கொண்டு வருவதன் மூலமே தேக்கமின்றி பல வேலைகளை மாநிலச் செயற்குழு மேற்கொள்ள முடியும்.

7.81 தீக்கதிர் விற்பனை பற்றி விவாதித்து மாநிலச் செயற்குழு வழிகாட்டியுள்ளது. தீக்கதிர் விற்பனையும் இக்காலத்தில் அதிகரித்துள்ளது.

7.82 ஏராளமான பணிகளை மேற்கொண்டுள்ள மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் அன்றாடப் பணிகளைக் கவனித்துக் கொண்டே தீக்கதிர், மார்க்சிஸ்ட் இதழ்களுக்குக் கட்டுரை எழுதிட வேண்டுமென்ற முடிவு ஓரளவுக்கே அமலாகியுள்ளது. மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் இதற்காக நேரம் ஒதுக்கிட வேண்டியுள்ளது.

7.83 கட்சி உறுப்பினர்கள் பதிவுப் பரிசீலனை குறித்து மாநிலச் செயற்குழு பரிசீலித்துள்ளது.

7.84 மாநிலக்குழுவிற்கு மாவட்டங்களில் இருந்தும் அரங்கங்களிலிருந்தும் வரும் கடிதங்களில் பலவற்றை மாநிலச் செயற்குழுவில் விவாதித்து தீர்வு காண்கிறோம். மாவட்டக்குழு அல்லது இடைக்குழுவில் விவாதிக்க வேண்டிய பிரச்சனையாக இருந்தால் கடிதங்களை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். பெரும்பாலும் கடிதங்களை உடனுக்குடன் விவாதித்து மாநிலச் செயற்குழு தீர்வு கண்டு வருகிறது.

7.85 தர்மபுரி, காஞ்சிபுரம், கடலூர், கோவை மேற்கு, மதுரை புறநகர், குமரி, வடசென்னை, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், வேலூர், திருவண்ணாமலை, நீலகிரி போன்ற மாவட்டங்களில் எழுந்த ஸ்தாபன பிரச்சனைகளைத் தீர்க்க மாநிலச் செயற்குழு தலையிட்டுள்ளது.

7.86 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கட்சி விரோத நடவடிக்கைக்காக நான்கு இடைக்கமிட்டிகள் கலைக்கப்பட்டு, அமைப்புக்குழு உருவாக்கப்பட்டது. மேலும், லகுமையா, ராமச்சந்திரன் மற்றும் சில மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களுடன் கணிசமான கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர். இதில் ஒரு பகுதியினரை மீண்டும் நமது கட்சிக்குக் கொண்டு வந்தோடு ஓரளவுக்கு கட்சியைப் பாதுகாத்து ஒழுங்குபடுத்திட மாநிலச் செயற்குழு மாவட்டக்குழுவிற்கு உதவியுள்ளது.

7.87 மாநிலச் செயற்குழு சார்பில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வரவு - செலவுக் கணக்கு மாநிலக்குழுவில் முறையாக வைக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மாநிலக்குழு வரவு செலவுக் தணிக்கை செய்யப்படுகிறது. நிதிக்குழுவாக தோழர்கள் செல்வசிங் (கன்வீனர்), என்.வி., ஜி.ஆர்., டிஎல் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

மாநில மையம்

7.88 தோழர்கள் என்.வி., டி.கே.ஆர்., ஏ.கே.பி., ஜி.ஆர்., டி.எல், வி.எம்.எஸ், செல்வசிங் ஆகியோர் கொண்ட மாநில மையம் உருவாக்கப்பட்டது. மாநில மையக்கூட்டம் சராசரி நான்கு நாட்களுக்கு ஒருமுறை நடந்துள்ளது. மையத்தில் உள்ள மாநிலச் செயற்குழுத் தோழர்கள் அன்றாடம் கூடி முன்னுக்கு வரும் அரசியல் ஸ்தாபனப் பிரச்சனைகள் குறித்து விவாதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7.89 தேவையின் அடிப்படையில் அரசியல் பிரச்சனைகளில் செயற்குழு சார்பில் அறிக்கை வெளியிடப்படும். சில பிரச்சனைகளில் மாவட்டங்களுக்கு மையம் வழிகாட்டி வருகிறது. சில அவசரப் பிரச்சனைகளில் மாநில அளவிலான இயக்கங்களுக்கும் மையம் முடிவு செய்து அறிவித்து வருகிறது.

7.90 முக்கியமான பிரச்சனையாக இருந்தால் விரிவடைந்த மையக்கூட்டம் நடத்தி அதில் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய கூட்டங்களில் சென்னையில் உள்ள கே.பி., வாசுகி, ஏ.எஸ்., போன்ற மாநிலச் செயற்குழு தோழர்களும் கலந்து கொள்வார்கள்.

7.91 மாநிலச் செயற்குழுக் கூட்டங்களுக்கு இடையில் வருகிற மைய வேலைகளை மாநில மையத் தோழர்கள் செய்து வருகின்றனர். மாநிலச் செயற்குழு மற்றும் மாநிலக்குழுக் கூட்டங்களுக்கான தயாரிப்புகளையும் மாநில மையத் தோழர்கள் செய்து வருகின்றனர்.

7.92 தோழர்கள் ஏ. ஆறுமுகநயினார், என். குணசேகரன், ஆர். கோவிந்தராஜன், என்.எல்.ஸ்ரீதரன் ஆகியோர் மாநில மையப் பணிகளுக்கு உதவி செய்து வருகின்றனர்.

7.93 அவ்வப்பொழுது எழும் அரசியல் பிரச்சனைகள் பற்றி அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் பணியை மையம் செய்து வருகிறது. மாவட்டங்களிலிருந்தும், அரங்கங்களிலிருந்தும் வரும் கடிதங்கள், புகார்கள் குறித்து அவசரமான பிரச்சனையாக இருந்தால் மையம் தலையிடுகிறது. மத்தியக்குழுவிற்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகள், பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழுக்கான செய்திக் கட்டுரைகள் அனுப்பப்பட்டு வந்தாலும், மாநிலத்தில் நிலவும் அரசியல் நிலைமை குறித்து பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழுக்கு முறையான கட்டுரை அனுப்ப இயலவில்லை.

மாநிலக்குழு செயல்பாடு

7.94 மாநிலக்குழு கடந்த மூன்றாண்டுகளில் 21 முறை கூடியுள்ளது. மாநிலக்குழு அல்லாத மாவட்டச் செயலாளர்கள் மாநிலக்குழு கூட்டங்களுக்குச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்படுகின்றனர்.

7.95 மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் மூன்று முறை நடைபெற்றுள்ளது.

7.96 சட்டமன்ற, உள்ளாட்சிமன்றத் தேர்தலில் தொகுதி உடன்பாடு மாநிலக்குழுவில் இறுதிப்படுத்தப்பட்டது.

7.97 தி.மு.க. அரசின் ஓராண்டு ஆட்சிப் பற்றி மாநிலக்குழு பரிசீலித்தது. கட்சியின் இடைக்கால ஸ்தாபனப் பரிசீலனையையும் மாநிலக்குழு மேற்கொண்டது. இந்த இரண்டு கூட்டங்களிலும் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் தோழர் பிரகாஷ் காரத் கலந்து கொண்டார்.

7.98 மாநிலத்தில் நிலவும் அரசியல் நிலை குறித்தும் தி.மு.க அரசு பற்றிய நமது அணுகுமுறை குறித்தும் மாநிலக்குழுக் கூட்டங்களில் விவாதித்து இறுதிப்படுத்தி அமலாக்கி வருகிறோம்.

7.99 மத்தியக்குழு அறைகூவல்களுக்கு ஏற்பவும், மக்கள் பிரச்சனைகள் மீதும் இயக்கங்களுக்கு மாநிலக்குழுத் திட்டமிட்டுள்ளது.

7.100 சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சிமன்றத் தேர்தல் குறித்து மாநிலக்குழு பரிசீலித்தது. சில மாவட்டங்களில் ஸ்தாபன முடிவை மீறிய தோழர்கள் மீது மாநிலக்குழு ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொண்டது.

7.101 மாநிலக்குழுக் கூட்டத்தில் கிராமப்புற உள்ளாட்சி குறித்துப் பேராசிரியர் பழனிதுரை விளக்க உரை அளித்திட ஏற்பாடு செய்தோம்.

7.102 பெரும்பாலான மாநிலக்குழுக் கூட்டங்கள் மூன்று நாள் கூட்டமாகவும் மற்றவை இரண்டு நாள் கூட்டமாகவும் நடத்தப்பட்டது. சில ஒரு நாள் கூட்டங்களும் நடந்ததுண்டு.

7.103 வெகுஜன அரங்கங்கள் நடத்த வேண்டிய சில முக்கிய இயக்கங்கள், பணிகள் பற்றி மாநிலக்குழு விவாதித்து இறுதிப்படுத்தியுள்ளது.

7.104 கட்சி உறுப்பினர்கள் பதிவுப் பரிசீலனை, மாதர் அரங்கத்தில் கட்சியின் கடமை ஆகியவை குறித்து மாநிலக்குழு விவாதித்து இறுதிப்படுத்தியது.

7.105 மாநிலக்குழு உறுப்பினர்கள் தாங்கள் பணியாற்றும் மாவட்டங்களில் மாவட்டக்குழுவில் கூட்டுத் தலைமையை உருவாக்குவதற்கும், தவறானப் போக்குகளைக் களைவதற்கும் முன்னுதாரணமாகத் திகழ்வதோடு, முன்முயற்சியும் எடுக்க வேண்டும்.

7.106 ஒரு பகுதி மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்டக் கட்சிப்பணி மற்றும் அரங்கப்பணிகளை ஆற்றிக் கொண்டே மாநில அளவிலான கிளர்ச்சிப் பிரச்சாரத்திற்கும் உதவி செய்து வருகிறார்கள். தொடர்ந்து நடத்த வேண்டிய கிளர்ச்சிப் பிரச்சாரம் மற்றும் பல மாநில அளவிலான பணிகளுக்கு மாநிலக்குழு உறுப்பினர்கள் நேரத்தை ஒதுக்கிடும் அளவுக்கு வேலைகளுக்குத் திட்டமிட வேண்டும்.

முழுநேர ஊழியர்கள்

7.107 மாநிலம் முழுவதும் 637 முழுநேர ஊழியர்களும், 332 பகுதி நேர ஊழியர்களும் உள்ளனர். இவர்களுக்கு மாநிலக்குழு தீர்மானித்துள்ள ஊதியத்தை மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் வழங்க வேண்டுமென்றும், இவர்களுடைய வேலையை முறையாகப் பரிசீலிக்க வேண்டுமென்றும் மாநில செயற்குழு முடிவு செய்து பரிசீலனைக்கான குறிப்பும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது.

7.108 மாவட்டக்குழு உறுப்பினர்களாக உள்ள முழுநேர ஊழியர்களின் வேலைகளை மாவட்டக்குழுக் கூட்டத்திலேயே பரிசீலிக்க வேண்டுமென்றும் மற்ற முழுநேர ஊழியர்களின் வேலையைத் தனியாகப் பரிசீலிக்க வேண்டுமென்றும் மாநிலச் செயற்குழு வழிகாட்டியது. சில மாவட்டங்களில் இத்தகையப் பரிசீலனை நடந்துள்ளது. ஆனால் பல மாவட்டங்களில் நடைபெறவில்லை. கட்சிப் பணியே முழுநேரப் பணி என்ற அர்ப்பணிப்போடு வரக்கூடிய தோழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அவர்களை அரசியல் ரீதியிலும், ஸ்தாபன ரீதியிலும் வளர்த்தெடுக்கும் பொறுப்பு கட்சிக்கு உள்ளது. இன்னும் சில மாவட்டங்களில் மாநிலக்குழு தீர்மானித்துள்ள ஊதியம் அளிக்கப்படவில்லை.

7.109 மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முழுநேர ஊழியர்களின் வேலையைப் பரிசீலிப்பதற்கு மாவட்டக்குழுக்கள் திட்டமிட வேண்டும். இதன் மூலமே முழுநேர ஊழியர்களின் வேலைகளில் தேக்கம் ஏற்படாமல் அவர்களை அரசியலாக வளர்த்திட முடியும்.

7.110 இன்றைய சூழலில் பன்முகப் பணிகளை எதிர்கொள்ளும் அளவிற்கு முழுநேர ஊழியர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள முன்முயற்சி எடுக்க வேண்டும். மாவட்டக்குழு இதற்கு உதவிட வேண்டும். முழுநேர ஊழியர்களுக்குப் பிரத்தியேகமான பயிற்சி அளிப்பதற்கும் மாநிலக்குழு எதிர்காலத்தில் திட்டமிட வேண்டியுள்ளது.

7.111 இன்றைய தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத, வேலைகளில் தேக்கமுற்றுள்ள, முழுநேர ஊழியர்களை விடுவிப்பது குறித்தும் மாவட்டக்குழுக்கள் பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு விடுவிக்கப்படுகின்ற தோழர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க நிலைமைக்கேற்றவாறு நிதி உதவி அளித்திடவும் மாவட்டக்குழுக்கள் திட்டமிட வேண்டும்.

நெறிப்படுத்தும் இயக்கம்

7.112 கோஷ்டிப் போக்கு, பதவி மோகம், வரவு - செலவில் முறைகேடு, கட்சி மற்றும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஆடம்பரம், சமூக - சாதிய பத்தாம்பசலித்தனமான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல் போன்ற போக்குகளைக் களைய வேண்டிய நோக்கத்தோடு நெறிப்படுத்தும் இயக்கம் நடத்திட வேண்டுமென கட்சியின் மத்தியக்குழு முடிவு செய்தது. தொடர்ந்து நெறிப்படுத்தும் இயக்கத்தை அமலாக்க வேண்டுமெனவும் மத்தியக்குழு வலியுறுத்தி வருகிறது.

7.113 நெறிப்படுத்தும் இயக்கம் பற்றி அகில இந்திய 18வது மாநாடு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

> *"கம்யூனிஸ்ட் நெறிமுறைகளை மீறும் போக்குகளுக்கு எதிரான இயக்கத்தை நடத்திட வேண்டியதன் அவசரத் தேவையை அறிக்கைகள் வலியுறுத்துகின்றன. தாராளமயமாக்கல் கொள்கைகள் தோற்றுவித்துள்ள சுற்றுச் சூழல்களும், முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் செயல்பாட்டு முறைகளும் ஒரு பகுதிக் கட்சி உறுப்பினர்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் நெறிமுறைகளுக்குப் புறம்பாக அனைத்துத் தவறான போக்குகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராக போராடுவதற்கு கட்சி உறுப்பினர்களும், கமிட்டிகளும் துணிச்சலையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டும். இத்தகைய போக்குகளுக்கு எதிரான போராட்டம் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும்."*

7.114 ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு மீறல், கோஷ்டிப் போக்கு, பதவி மோகம், வரவு - செலவில் முறைகேடு போன்ற சில அம்சங்களில் கட்சியின் மாநிலக்குழு தலையிட்டுள்ளது.

7.115 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு சில மாவட்டங்களில் உருவான கோஷ்டிப் போக்குகளைக் களைய மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கோவை மேற்கு, மதுரை புறநகர், தருமபுரி போன்ற மாவட்டங்களில் மாநில செயற்குழு தலையிட்டது. சில தோழர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

7.116 கடலூர், மதுரை புறநகர், கோவை மேற்கு ஆகிய மாவட்டங்களில் கோஷ்டிப் போக்கு ஓரளவுக்குக் களையப்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் கோஷ்டிப் போக்கு ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட மாநாட்டில் கோஷ்டிப் போக்கு இருந்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் கோஷ்டிப் போக்குகளில் ஈடுபட்ட பலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஓரளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மாவட்ட மாநாட்டையொட்டி மாநிலச் செயற்குழு தலையிட்டு எச்சரிக்கைத் தன்மையோடு இருந்ததால் மாவட்ட மாநாட்டில் கோஷ்டிப் போக்கு தடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வருங்காலத்திலும் மாநிலச் செயற்குழு தொடர்ந்து தலையிட வேண்டியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட மாநாட்டையொட்டி கோஷ்டிப் போக்கு தலை தூக்கியதால் மாவட்ட மாநாட்டை ஒத்தி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இன்னும் சில மாவட்ட மாநாடுகளில் மாவட்டக்குழு தேர்வு மற்றும் மாவட்ட ச் செயற்குழு மற்றும் மாவட்ட செயலாளர் தேர்வில் கோஷ்டிப் போக்கு இருந்ததாகக் தகவல் வந்துள்ளது.

7.117 பல மாவட்டங்களில் இடைக்குழு மாநாடுகளில் இடைக்குழு மற்றும் இடைக்குழுச் செயலாளர் தேர்வில் கோஷ்டிப் போக்கு இருந்ததாகவும் மாநில மையத்திற்குத் தகவல் வந்துள்ளது.

7.118 கோஷ்டிப் போக்கு நிலவிய மாவட்டங்களிலும், இடைக்கமிட்டிகளிலும் ஜனநாயக மத்தியத்துவ ஸ்தாபனக் கோட்பாடு எவ்வாறு மீறப்பட்டுள்ளது, இத்தவறான போக்குகளை எவ்வாறு சரி செய்வது என்று மாநிலக்குழுவும் சம்பந்தப்பட்ட மாவட்டக்குழுக்களும் மாநில மாநாட்டிற்குப் பிறகு விவாதித்துத் தேவையான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

7.119 கடந்த சட்டமன்றத் தேர்தலிலும், உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் பதவி மோகம் மோசமான பிரச்சனையாக எழுந்தது பற்றியும், கட்சி மற்றும் வெகுஜன அரங்க கமிட்டிகளில் வரவு - செலவுக் கணக்குகளில் முறைகேடுகள் நடந்துள்ளது பற்றியும் இடைக்கால ஸ்தாபனப் பரிசீலனையில் மாநிலக்குழு விவாதித்தது. இவ்வறிக்கையின் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

“கடந்த சட்டமன்றத் தேர்தலிலும், உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும் பதவி மோகம் மோசமான பிரச்சனையாக எழுந்தது. மதுரை புறநகர், வேலூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கட்சி முடிவை மீறிப் போட்டியிட்டதால் சம்பந்தப்பட்ட தோழர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. உள்ளாட்சி தேர்தலில் கட்சியின் இடைக்கமிட்டிச் செயலாளர்கள் போட்டியிடுவதைத் தவிர்க்க வேண்டுமென மாநிலக்குழு வழிகாட்டியது. எனினும் பல இடைக்கமிட்டிச் செயலாளர்கள் தேர்தலில் வேட்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இடைக்கமிட்டிப் பொறுப்பை விட ஊராட்சிமன்றத் தலைவர் போன்ற உள்ளாட்சிப் பொறுப்புக்கு வர ஆசைப்படுகிறார்கள்.

“உள்ளாட்சி மன்றத் தேர்தலில் என்றைக்கும் இல்லாத அளவுக்கு நமது வேட்பாளர்களை எதிர்த்து நமது தோழர்களே போட்டி வேட்பாளர்களாக நின்று நாம் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். கூட்டணி உடன்பாட்டை மீறி நமது தோழர்கள் போட்டி வேட்பாளர்களாகப் போட்டியிட்ட தவறான போக்கும் தலை தூக்கியுள்ளது. வேட்பாளர்களைத் தேர்வு செய்ய மாநிலக்குழு உருவாக்கிய வழிகாட்டுதல்கள் சில மாவட்டங்களில் அமலாக்கப்படவில்லை. சந்தேகத்திற்கும் குற்றச்சாட்டிற்கும் ஆளான தோழர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளனர். இட ஒதுக்கீட்டு சுழற்சி முறையில் ஒரு தொகுதி பெண் தொகுதியாக மாற்றப்பட்ட பிறகு ஏற்கனவே போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆண் தோழரின் மனைவியை, இயக்க அனுபவம் இல்லையென்றாலும், வேட்பாளராக நிறுத்தும் தவறானப் போக்கும் இருந்துள்ளது.

“கோவில்பட்டியில் நகர்மன்ற தலைவர் தேர்தலில் தோழர் மல்லிகாவுக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் வாக்களிக்கவில்லை என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உள்ளாட்சித் தேர்தலில் பல மாவட்டங்களில் ஸ்தாபன ஒழுங்கீனங்கள் நடந்துள்ளன. இவற்றையெல்லாம் கண்டறிந்து சம்பந்தப்பட்ட தோழர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. சில மாவட்டங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தவறான போக்குகளை எதிர்த்துக் கட்சி அணிகள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதோடு, கட்சி முடிவை கறாராக அமலாக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டியுள்ளது.

சில கட்சி கமிட்டிகளில் நிதி, வரவு - செலவுப் பராமரிப்பில் முறைகேடு நடந்துள்ளது கட்சிக் கவனத்திற்கு வந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் சிலர் முறைகேட்டில் ஈடுபட்டதற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தோம். பல மாவட்டங்களில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் வரவு - செலவில் தவறு செய்துள்ளதாகவும், இதுவே சில இடங்களில் நமது தோல்விக்குக் காரணமாகவும் இருந்துள்ளது.நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் நமது கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உள்ளாட்சி தலைவர்கள் நேர்மையாக செயல்படுவதை உத்தரவாதப்படுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.”

7.120 முதலாளித்துவக் கட்சிகளில் பதவிச் சண்டை நடைபெறுவதையும், தமிழகம் உள்ளிட்டு முதலாளித்துவக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஊழல் மலிந்து வருவதையும் கண்டு மக்கள் முகம் சுளிக்கும் நிலை உருவாகியுள்ளபோது நமது கட்சிக்குள் நெறிப்படுத்தும் இயக்கத்தை முன்னைவிட முனைப்பாக நடத்திட வேண்டும்.

7.121 ஏற்கனவே கட்சியின் மத்தியக்குழு தயாரித்த நெறிப்படுத்தும் இயக்கம் பற்றிய ஆவணத்தை மாநில நிலைமைக்கேற்றவாறு பல அம்சங்கள் எவ்வாறு அமலாக்கப்பட்டுள்ளது என்று பரிசீலனை செய்து சமீப ஆண்டுகளில் உருவாகியுள்ள போக்குகளையும், அனுபவத்தையும் இணைத்து இன்றுள்ள நிலைமைக்கேற்றவாறு நெறிப்படுத்தும் இயக்கம் பற்றிய மாநில ஆவணத்தைப் புதுப்பித்துக் கட்சி அணிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

உபகுழுக்கள் - பிராக்ஷன்கள் செயல்பாடு

7.122 தொழிலாளர் அரங்கம், விவசாயிகள் அரங்கம், வாலிபர், மாதர், மாணவர், அறிவியல், எழுத்தாளர், மத்தியதர அரங்கங்கள் போன்ற அரங்கங்களில் மாநில உபகுழுக்களும், பிராக்ஷன்களும் இயங்கி வருகின்றன. பிராக்ஷன்களுக்கு மாநிலச் செயற்குழு உறுப்பினர்களும், மாநிலக்குழு உறுப்பினர்களும் பொறுப்பாக இருந்து வழிகாட்டி வருகின்றனர்.

7.123 மாநில உபகுழுக்கள் - பிராக்ஷன்கள் எடுக்கும் முடிவுகளில் சில முக்கியமான பிரச்சனைகள் குறித்துக் கட்சியின் மாநிலச் செயற்குழு விவாதித்து வழிகாட்டுகிறது. அன்றாடப் பணிகள் குறித்த பல முடிவுகள் உபகுழுக்கள் - பிராக்ஷன்கள் முடிவுகளாக அரங்கங்களில் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

7.124 மத்திய தர அரங்க மாநில பிராக்ஷன்களின் பணிகளில் பொதுவாகப் பார்த்தால் கடந்த காலங்களை விட முன்னேற்றம் உள்ளது. பல்வேறு பிராக்ஷன்களில் ஆதரவாளர் சேர்ப்பு, கட்சிக் கல்வி, பத்திரிகை, பிரசுர விற்பனை, கிளைக் கூட்டங்கள், லெவி ஆகியன விவாதிக்கப்பட்டுப் பல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. கட்சி ஸ்தாபனப் பணிகள் பரிசீலனையும் நடைபெற்றுள்ளது.

7.125 மத்திய தர வர்க்கக் கிளைகளுக்கு மாவட்டக்குழுக்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். மாநில பிராக்ஷன் உறுப்பினர்களையும் இணைத்து, மாவட்டங்களில் அரங்கக் கட்சி வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

7.126 மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டத்தை நடத்துவது, கட்சிப் பணிகள் குறித்த முடிவுகளை மாவட்டக்குழுக்களுடன் இணைந்து நிறைவேற்றுவது, கட்சி விதிகள்படி முறையாக லெவி செலுத்தச் செய்வது, பத்திரிகை - பிரசுர விற்பனை எனத் தொடர்ந்து கவனம் செலுத்துவதும், கொள்கைப் பிரச்சனைகளிலும் விஸ்தரிப்புகள் குறித்தும் வெகுஜன அமைப்புகளுக்கு வழிகாட்டுவதுமான பணிகளை அரங்க பிராக்ஷன்கள் நிறைவேற்ற வேண்டும்.

7.127 கட்சிக்கும் வெகுஜன அமைப்புகளுக்கும் உள்ள உறவு குறித்தும், வெகுஜன அரங்கங்களில் அரங்கப்பணி மற்றும் கட்சி கட்டும் பணி குறித்தும் வழிகாட்டிட மத்தியக்குழு உருவாக்கி உள்ள ஆவணத்தை தமிழகத்தில் அமலாக்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாநில மாநாட்டிற்குப்பிறகு இதை முன்னுரிமைப் பணியாக நிறைவேற்றிட வேண்டும்.

உள்ளாட்சி மன்றங்கள்

7.128 கடந்த மூன்றாண்டுகளில் உள்ளாட்சி மன்ற உபகுழு 6 முறை கூடியுள்ளது. கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பும், தேர்தல் நடைபெற்ற பின்பும் மாநில உபகுழு உள்ளாட்சி மன்றங்களில் எழும் கொள்கைப் பிரச்சனைகளை விவாதித்து வழிகாட்டி வருகிறது.

7.129 கடந்த அக்டோபர் மாதம் உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிந்து கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிரதிநிதிகளுக்குப் பொதுவான சில அம்சங்களில் வழிகாட்டிட 2006 நவம்பர் 24 அன்று மதுரையில் சிறப்பு மாநாடு நடைபெற்றது.

7.130 அடுத்தக்கட்டமாக கிராமப்புற உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்குப் பயிற்சியளித்திட ஒரு நாள் பயிற்சிப் பட்டறை திருவாரூரில் 22.07.2007ல் நடைபெற்றது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்குப் பயிற்சியளித்திட 01.09.2007 அன்று திருச்சியில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

7.131 உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிந்த பிறகு நமது தலைமையில் செயல்படக் கூடிய நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை குறித்து மாநில உபகுழுவின் ஆலோசனையை மாநிலச் செயற்குழு பரிசீலித்து முக்கியமான முடிவுகளை மேற்கொண்டோம்.

7.132 ஒரு மாவட்ட ஊராட்சி, நான்கு ஊராட்சி ஒன்றியங்கள், நான்கு நகராட்சிகள், ஏழு பேரூராட்சிகளில் நட்புக் கட்சிகளின் உதவியோடு மன்றத் தலைவர் பொறுப்பிற்கு நமது தோழர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பெரும்பான்மை இல்லாமல் திமுக, காங்கிரஸ், பாமக போன்ற மன்ற உறுப்பினர்கள் ஆதரவோடு நாம் செயல்பட வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில் மற்றவர்களின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகாமல் நேர்மையாகச் செயல்பட வேண்டுமென மாநிலச் செயற்குழு வழிகாட்டியது.

7.133 கோவில்பட்டி நகர்மன்றத்தில் மற்ற கட்சிகளைச் சார்ந்த மன்ற உறுப்பினர்களின் நிர்பந்தத்திற்கு ஆளாகாமல் மக்கள் மத்தியில் பிரச்சனையை எடுத்துச் சென்று மன்றத்தை நடத்துவது மக்கள் மத்தியில் நமக்கு மரியாதையை உருவாக்கியுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில்,

நமது தலைமையில் உள்ள பேரளம் பேரூராட்சியில் மற்ற மன்ற உறுப்பினர்களின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகாமல் நேர்மையாக இருந்த ஒரேகாரணத்திற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து மன்றத் தலைவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டனர். முறைகேடுகளுக்கு இரையாகமல் நேர்மையாகச் செயல்பட்டதற்காக பதவி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து பேரளம் மக்கள் மத்தியில் கட்சியின் சார்பில் பிரச்சார இயக்கம் நடத்தினோம். நமது தலைமையில் உள்ள மற்ற மன்றங்களிலும் மற்றக் கட்சிகளின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகமலும் அதேநேரத்தில் அன்றாட மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய அளவிற்கு மன்றங்களை நடத்திட மாவட்ட ச் செயற்குழுக்கள் நமது உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு வழிகாட்டிட வேண்டும்.

7.134 அதிக அதிகாரத்திற்கும், கூடுதல் நிதி ஒதுக்கீட்டிற்கும் தொடர்ந்து நமது கட்சி குரலெழுப்பி வருகிறது. இருக்கின்ற அதிகாரத்தையும், வழங்கப்பட்ட நிதியையும் மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தக் கூடிய அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களில் உள்ள நமது பிரதிநிதிகள் அனைவரும் செயல்பட வேண்டும். இத்தகைய முறையில் சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிகள் வழிகாட்டிட வேண்டும்.

7.135 ஊராட்சி மன்றத் தலைவர், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் போன்ற நமது கட்சிப் பிரதிநிதிகளுக்கு கட்சிக் கிளைகள் வழிகாட்டிடவேண்டும். ஊராட்சி ஒன்றியக் கவுன்சில், ஊராட்சி ஒன்றிய தலைவர், பேரூராட்சித் தலைவர், நகராட்சித் தலைவர், மாநகர் மன்ற உறுப்பினர் ஆகிய பிரதிநிதிகளுக்குக் கட்சியின் இடைக்குழுக்கள் வழிகாட்டிட வேண்டும். இத்தகையப் பணி சரியாக நடைபெறுவதைக் கட்சியின் மாவட்டச் செயற்குழு உத்தரவாதப்படுத்த வேண்டும்.

7.136 உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில் அதிகாரம், நிதி ஒதுக்கீடு சம்பந்தமாகப் பரிந்துரைக்க அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவில் நமது பிரதிநிதிகள் நான்கு பேர் பங்கேற்றனர். இக்குழுவில் அதிகாரம், நிதி சம்பந்தமாக போதுமான விவாதம் நடத்தாமலேயே அறிக்கை ஒன்று முதல்வருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் உள்ள அம்சங்கள் பற்றிக் குழு உறுப்பினர்களுக்கு விளக்கப்படவில்லை. அடுத்து நடைபெறக் கூடிய சட்டமன்றக் கூட்டத்தில் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அதை நமது கட்சி பரிசீலித்து உரிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

7.137 உள்ளாட்சி மன்றங்களில் எல்லா மட்டங்களிலும் முறைகேடுகள் நடந்து வருகின்றன. இச்சூழலில் மற்ற கட்சிகளின் பிரதிநிதிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிடும் அளவிற்கு நமது பிரதிநிதிகள் செயல்பட சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிகள் உறுதியாகத் தலையிட வேண்டும்.

ஓராண்டு வேலைத் திட்டங்கள்

7.138 கட்சியின் மத்தியக்குழு முடிவுக்கிணங்க கட்சிப் பணியில் முன்னுரிமை தந்து மேற்கொள்ள வேண்டிய கடமைகளை வரையறுக்க ஓராண்டு வேலைத் திட்டத்தை 2006,2007 ஆண்டுகளுக்கு இறுதிப்படுத்தினோம்.

7.139 2006ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டம் 2005 செப்டம்பர் மாதத்திலும், 2007ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டம், 2007 ஜனவரியிலும் மாநிலக்குழுவால் வரையறுக்கப்பட்டன.

7.140 முன்னுரிமை மாவட்டங்கள் என்று சில மாவட்டங்களும், முன்னுரிமை அரங்கங்கள் என்று 2006-இல் வாலிபர் - மாணவர் அரங்கங்களையும், 2007இல் வி.தொ.ச. - மாதர் அரங்கங்களையும் தேர்வு செய்தோம். கூடவே 2007ல் முறைசாராத் தொழிலாளர்களைத் திரட்டுவதற்குக் கூடுதல் கவனம் செலுத்துவது என்றும் முடிவு செய்தோம்.

7.141 மாநில அளவிலான ஓராண்டுத் திட்டத்தைத் தொடர்ந்து மாவட்டக்குழுக்களும், மாவட்ட அளவிலான ஓராண்டு வேலைத் திட்டங்களை இறுதிப்படுத்தின.

7.142 இந்த அடிப்படையில் ஓராண்டு வேலைத் திட்டப் பணிகள் தேர்வு செய்த மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 2006ஆம் ஆண்டில் முதலில் சட்டமன்றத் தேர்தலும், அதையடுத்து உள்ளாட்சித் தேர்தலும் நாம் சந்திக்க வேண்டிய முக்கிய அரசியல் பணியாக முன்னுக்கு வந்த காரணத்தால், ஓராண்டு வேலைத் திட்டப் பணிகளை துவக்கக் கட்டத்தைத் தாண்டி முன்னெடுத்துச் செல்ல சாத்தியமற்ற சூழ்நிலை ஏற்பட்டது.

7.143 2006இன் அனுபவத்தைக் கணக்கிலெடுத்து, மாநிலக்குழு 2007ஆம் ஆண்டுக்கான ஓராண்டு வேலைத் திட்டத்தை மிகுந்த கவனத்தோடும், நுணுக்கமாகவும் இறுதிப்படுத்தியது.

7.144 சில குறிப்பிட்ட மாவட்டங்களை முன்னுரிமை மாவட்டங்கள் என்று தேர்வு செய்து, மாவட்டம் முழுமைக்கும் வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துவது, நமது அன்றாட நடைமுறை வேலைகளுக்கு மத்தியில் சாத்தியமில்லை என்பதே 2006ஆம் ஆண்டின் அனுபவம். எனவே 2007 வேலைத் திட்டத்தில் மாவட்டந்தோறும் சில இடைக்குழுக்களைப் பட்டியலிட்டு முன்னுரிமைப் பணிகளை மேற்கொள்வது என்று வரையறுத்தோம்.

7.145 அரங்கங்களைப் பொறுத்தவரை ஓராண்டு வேலைத் திட்டச் செயலாக்கத்திற்கு சம்பந்தப்பட்ட, மாநில பிராக்ஷன்கள் விவாதித்து மாநிலச் செயற்குழு வழிகாட்டுதலோடு திட்டமிடுவது என்றும் முடிவு செய்தோம்.

7.146 மாநில அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய சில முன்னுரிமைப் பணிகளையும் 2007 வேலைத் திட்டத்தின் பகுதியாகச் செயல்படுத்தினோம்.

- **நிலம், உணவு, வேலை, குடிமனைப்பட்டா உள்ளிட்ட மக்கள் பிரச்சனைகள் மீதான இயக்கங்கள், போராட்டங்களை நடத்துவது;**
- **தலித், பெண்கள், சிறுபான்மையினர் பிரச்சனைகளில் தலையீடு;**
- **கிராமப்புற வேலை உறுதித் திட்ட மாவட்டங்களில் திட்டம் முறையாகச் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுப்பது;**
- **வாலிபர் சங்க அகில இந்திய மாநாட்டை சென்னையில் சிறப்பாக நடத்துவது;**
- **தீக்கதிர் வினியோகம், விற்பனை, உள்ளடக்கம் ஆகியவற்றில் முன்னேற்றம் எட்டுவது;**

7.147 2007ஆம் ஆண்டு கட்சி உறுப்பினர் பதிவுப் பரிசீலனையை மத்தியக்குழு வழிகாட்டுதலுக்கு ஏற்ப, தாராளவாதத்திற்கு இடமளிக்காமல் மேற்கொள்வது; என்று நாம் வரையறுத்த மாநில அளவிலான பணிகளில் 2007ஆம் ஆண்டில் ஓரளவு முறிப்பை ஏற்படுத்தி முன்னெடுத்துச் செல்ல முடிந்திருக்கிறது.

7.148 எனினும், 2007ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டமும் முழுமையாக அமலாக்கப்பட்டு விட்டதாகக் கூற முடியாது. இதுபற்றிய விரிவான பரிசீலனையை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

7.149 எதிர்காலத்தில், ஓராண்டு வேலைத் திட்டத்தின் கீழ் நாம் இறுதிப்படுத்தும் முன்னுரிமைப் பணிகளைக் கறாராக மேற்கொள்வதுடன், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்டுகிற விதத்தில் ஸ்தாபன ரீதியான உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

7.150 நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நெருக்கடிகள் காரணமாக சர்வதேச - தேசிய - மாநில மட்டத்திலான அரசியல் பணிகள் தொடர்ச்சியாக நம்முன் எழுவது தவிர்க்க இயலாதது. எனவே, இந்தப் பணிகள் இடையிடையே வருவதன் காரணமாக, ஓராண்டு வேலைத் திட்டம் முடங்கி விட அனுமதிக்கலாகாது என்ற உணர்வோடு நமது முன்னுரிமைப் பணிகளைத் தடைபடாத விதத்தில் மேற்கொள்வதை உத்தரவாதப்படுத்துவது இன்றியமையாததாகும்.

7.151 இந்த வகையில் எதிர்வரும் காலங்களில் ஓராண்டு வேலைத் திட்டங்களை மாநிலக்குழு இறுதி செய்வதோடு, அவற்றை நடைமுறை வேலைகளின் குறுக்கீடுகளால் பாதிக்கப்படாத வகையில் அமலாக்குவதை உறுதி செய்ய வேண்டும்.

கட்சிக் கல்வி

7.152 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு அமைக்கப்பட்ட கட்சிக் கல்வி மாநில உபகுழு மூன்று ஆண்டுகளில் ஐந்து முறை கூடியுள்ளது. மாவட்டக் கட்சிக் கல்வி உபகுழு கன்வீனர்கள் கூட்டம் இரண்டு முறை கூட்டப்பட்டுள்ளது.

7.153 "கட்சிக் கல்வி அளிக்க எடுக்கப்பட்ட முயற்சி பெரும்பாலும் இடைக்கமிட்டி உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் அளவிலேயே நின்று விட்டது. பெரும்பாலான கட்சி உறுப்பினர்களுக்கு கட்சிக் கல்வி அளிக்க முடியவில்லை. கட்சி உறுப்பினர்களின் தரம் உயராததற்கு இதுவும் ஒரு காரணம்", எனக் கடந்த மாநில மாநாடு சுட்டிக்காட்டியது.

7.154 மாநில மாநாட்டின் மதிப்பீட்டைக் கணக்கில் கொண்டு கட்சியின் மாநிலக்குழு கட்சிக் கல்விக்குழு கீழ்க்கண்டவாறு திட்டமிட்டது.

1. கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் கட்சிக் கல்வி, 2. இடைக்குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்களுக்கு மாவட்ட அளவில் இரண்டு நாள் பயிற்சி முகாம்.3. இடைக்குழுச் செயலாளர்களுக்குப் பயிற்சி அளித்திட ஸ்தாபனப் பட்டறை. 4. முழுநேர ஊழியர்களுக்குப் பயிற்சி, 5. துணைக்குழு உறுப்பினர்களுக்கு வகுப்பு. 6. வெகுஜன அரங்கவாரியாக முன்னணி ஊழியர்களுக்குக் கட்சிக் கல்வி. 7. வகுப்பெடுக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி. 8. சுயகல்வியை ஊக்குவிப்பது, 9. மாவட்டக் கல்விக்குழுச் செயல்பாட்டை மேம்படுத்துவது.

7.155 அனைத்து மாவட்டங்களிலும் இடைக்குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்துள்ளது. கட்சித் திட்டம், கட்சி வரலாறு, நடைமுறைக் கொள்கை, கட்சி ஸ்தாபனம் ஆகிய நான்கு தலைப்புகளில் வகுப்புகள் நடந்துள்ளன. சில மாவட்டங்களில் தத்துவம், தாராளமயப் பொருளாதாரக் கொள்கை போன்ற தலைப்புகளிலும் வகுப்புகள் நடந்துள்ளன. சில மாவட்டங்களில் இடைக்குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் வகுப்பு பட்டறையாக நடந்துள்ளன. நகர்ப்புற மாவட்டங்களில் 60 - 70 சதவிகிதமும் கிராமப்புற மாவட்டங்களில் 50 - 60 சதவிகிதமும் வருகை இருந்தது. சில மாவட்டங்களில் முதல் சுற்று வகுப்பில் கலந்து கொள்ளாதவர்களுக்கு இரண்டாவது சுற்று நடத்தியிருக்கிறார்கள். இது நல்ல முயற்சி. வருகையை அதிகப்படுத்திட முயற்சிப்பதோடு, ஸ்தாபனம் தலைப்பிலான வகுப்பைப் பட்டறையாக நடத்துவது சம்பந்தப்பட்ட தோழர்களுக்குப் பயிற்சி அளிப்பதாக அமையும்.

7.156 கட்சி உறுப்பினர்களுக்கும் மேற்கண்ட நான்கு தலைப்புகளில் வகுப்பு நடத்துவது எனவும் இவற்றை மாலை நேர வகுப்புகளாக நடத்துவதென்றும் முடிவு செய்தோம். பெரும்பாலான மாவட்டங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு வகுப்பு நடத்தியிருக்கிறார்கள். வருகை நான்கில் ஒரு பகுதிதான். வருகையைக் குறைந்தபட்சம் 50 சதவிகிதமாக உயர்த்த முயற்சிப்பதோடு எதிர்காலத்தில் அனைத்து உறுப்பினர்களையும் வகுப்பில் பங்கேற்கச் செய்யத் திட்டமிட வேண்டியுள்ளது.

7.157 கோவை மேற்கு மாவட்டத்தில் மாதம் ஒருமுறை வகுப்பு எனப் பல தலைப்புகளில் மாலை நேர ஹால் கூட்டமாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். ஈரோடு, திருப்பூர் ஆகிய நகரங்களிலும் இத்தகைய கூட்டங்கள் நடைபெறுகின்றன.

7.158 இடைக்குழுச் செயலாளர்கள் 400 தோழர்களுக்கு நான்கு மண்டலங்களாகப் பிரித்து இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 380 தோழர்கள் கலந்து கொண்டனர். நான்கு மையங்களில் நடைபெற்ற பட்டறை விவாதத்தில் வந்த கருத்துக்களையும் இணைத்து 'இடைக்குழுச் செயலாளர்கள் செயல்முறை' என்ற தலைப்பில் பாடக்குறிப்பு வெளியிட்டிருக்கிறோம்.

7.159 துணைக்குழு உறுப்பினர்களுக்கு 'மார்க்சிஸ்ட் கட்சி ஒரு அறிமுகம்' என்ற தலைப்பில் பெரும்பாலான மாவட்டங்களில் வகுப்புகள் நடந்துள்ளன. வருகை மிகவும் குறைவாக இருந்துள்ளது.

7.160 வெகுஜன அரங்கங்களில் உள்ள முக்கிய ஊழியர்களுக்கு அரங்கங்களின் சார்பிலும் வெகுஜன அரங்கத்தில் உள்ள முன்னணித் தோழர்களுக்குக் கட்சியின் சார்பிலும் மாநில அளவில் வகுப்புகள் நடந்துள்ளன.

7.161 வகுப்பெடுக்கும் ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டோம். மாநில அளவில் தூத்துக்குடியில் நடைபெற்ற பயிற்சி முகாமில் 92 தோழர்கள் கலந்து கொண்டனர். 1. நடைமுறைக் கொள்கை,.2. இடது முன்னணி அரசு, 3. உலகமயமும் ஊடகமும், 4. சுற்றுப்புறச் சூழல் பற்றி, 5. வகுப்பெடுக்கும் முறை ஆகிய தலைப்புகளில் வகுப்புகள்

நடைபெற்றன. இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களில் சுமார் 50 தோழர்களை ஆசிரியர்களாகப் பயன்படுத்தி வருகிறோம். உலகமயமும் ஊடகங்களும் மற்றும் சுற்றுச் சூழல் ஆகிய இரண்டு குறிப்புகள் இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை. மாவட்ட அளவில் வகுப்பெடுக்கும் ஆசிரியர்களுக்குப் பல மாவட்டங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7.162 ஒட்டுமொத்தக் கட்சி உறுப்பினர்களில் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் 16,208 பேர்; 30 - 40 வயதுக்கு உட்பட்டவர்கள் 29,610 பேர்; இந்த எண்ணிக்கை கட்சி உறுப்பினர்களில் 50 சதவிகிதம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் கடந்த 10 ஆண்டுகளில் கட்சியில் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவருக்கும் தத்துவம், பொருளாதாரம், கட்சித் திட்டம், நடைமுறைக் கொள்கை, கட்சி வரலாறு, கட்சி ஸ்தாபனம், பெண்ணுரிமை - நமது பார்வை, ஜாதி - தோற்றம் - வளர்ச்சி பிரச்சனைகள், வகுப்புவாத அபாயம் போன்ற சமூக, பொருளாதார, அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் பயிற்சியளிக்க வேண்டும். சால்கியா கட்சி ஸ்தாபன சிறப்பு மாநாடு சுட்டிக்காட்டிய அடிப்படையில் புதியவர்களுக்கு கட்சிக் கல்வி, முதியவர்களுக்கு மறு கல்வி என்ற அடிப்படையில் கட்சிக் கல்வி அளித்து, கட்சி அணிகளின் தரத்தை உயர்த்தத் திட்டமிட வேண்டும்.

7.163 மாவட்டங்களில் கட்சிக் கல்வியின் தேவையை உணர்ந்து, கட்சி உறுப்பினர்களில் இருந்து மாவட்டக்குழு உறுப்பினர்கள் வரை அனைத்துத் தோழர்களுக்கும் கட்சிக் கல்வி ஏற்பாடு செய்ய மாவட்டக் கல்விக்குழு திட்டமிட வேண்டும். மாவட்ட கல்விக்குழு முறையாகச் செயல்பட்டால்தான் கட்சிக் கல்வி அளிக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்ற இயலும்.

பாரதி புத்தகாலயம்

7.164 கட்சிக் கல்வியில் முக்கியமானது சுயகல்வி. சுய கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு துவங்கப்பட்ட பாரதி புத்தகாலயம் இந்த மூன்றாண்டுகளில் 270 தலைப்புகளில் நூல்கள் வெளியிட்டுள்ளது. வாசகர்களில் பெரும்பகுதியினர் சிறு நூல்களைப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள். இதைக் கணக்கிலெத்து 170 தலைப்புகளில் ரூ. 5, ரூ. 10 விலையில் சிறு நூல்கள் கொண்டு வரப்பட்டன. சோவியத் பின்னடைவுக்குப் பிறகு அடிப்படை நூல்கள் வெளிவரவில்லை. தமிழ் வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள் சிலவற்றைத் தமிழில் வெளியிட்டுள்ளோம்.

7.165 வடசென்னை, தென்சென்னை, சேலம், ஈரோடு, கோவை மேற்கு, கோவை கிழக்கு, திருச்சி, மதுரை நகர், மதுரை புறநகர், நீலகிரி, விருதுநகர், திண்டுக்கல், திருவாரூர், தேனி, குமரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் புத்தக விற்பனைக்கு நிரந்தர ஏற்பாடுகள் உள்ளன. மற்ற மாவட்டங்களில் அவ்வப்பொழுது கட்சி நிகழ்ச்சிகளில் புத்தக விற்பனை செய்யப்படுகிறது. விற்பனைக்கான நிரந்தர ஏற்பாடு இல்லை.

7.166 விருதுநகர் மாவட்டத்தில் 100 மையங்களில் ஆகஸ்ட் 15 அன்று ஒரே நாளில் புத்தக விற்பனைக்கு திட்டமிட்டு 81 கிராமங்களில் ரூ. 85,000த்திற்கு புத்தக விற்பனை செய்திருக்கிறார்கள். புத்தக விற்பனையை ஒரு இயக்கமாக நடத்தியது சிறந்த முன்னுதாரணம்.

7.167 பாரதி புத்தகாலயம் வெளியிடும் ‘புதிய புத்தகம் பேசுது’ அனைத்துத் தரப்பினரின் வரவேற்பைப் பெற்றுள்ளது. குறிப்பிட்ட தலைப்புகளில் வெளியாகும் சிறப்பிதழ்களுக்கும் வரவேற்புள்ளது. விற்பனையை அதிகப்படுத்திட மாவட்டக்குழுக்கள் முயற்சிக்க வேண்டும்.

7.168 சுயகல்வி வாசிப்பை, ஊக்குவிக்க சில மாவட்டங்களில் நூலகங்கள் துவங்கி இயக்கி வருகிறார்கள். வாசிப்பை ஊக்குவிக்க வடசென்னை மாவட்டத்தில் ‘தேடல்’ என்ற பெயரில் வாரம் ஒருமுறை என ஆறு மாதங்கள் நடைபெற்றது. ‘வெளிச்சம்’ என்ற பெயரில் வாரம் ஒரு நூல் என 100 வாரங்களுக்கு மேல் நூல் அறிமுகக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நிரந்தர கட்சிப் பள்ளி - ஆய்வு மையம்

7.169 தேவைப்படுகிற போது மாநில அளவிலான வகுப்பு, பயிற்சி முகாம் நடத்தப்பட்டாலும், மாநில அளவில் பகுதிவாரியாக தொடர்ச்சியான வகுப்புகள் நடத்துவதற்கு நிரந்தர கட்சிப் பள்ளி தேவை என்பதைக் கடந்த மாநில மாநாட்டிலேயே குறிப்பிட்டிருந்தோம். கட்சியின் மாநில மையம்

செயல்படக்கூடிய சென்னை மாநகரத்தில் நிரந்தர கட்சிப் பள்ளிக்கான ஏற்பாடு செய்வதென்றும், மேலும் ஆய்வு மையம் ஒன்றைத் துவக்குவது என்றும் மாநிலச் செயற்குழு முடிவு செய்துள்ளது. மாநில மாநாட்டிற்கு பிறகு இதற்கான ஏற்பாடுகள் உடனடியாக துவங்கும்.

கட்சி ஏடுகள் – வெளியீடுகள்

தீக்கதிர் நாளிதழ்

7.170 நமது கட்சியின் மாநில 18வது மாநாட்டில் நிறைவுரையாற்றிய தோழர் பிரகாஷ் காரத் தீக்கதிர் முக்கியத்துவம், அதன் விற்பனைப் பெருக்கம் குறித்து வலியுறுத்தினார்.

7.171 தமிழ்நாட்டில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அரசியல் கட்சிகள் நாளேடுகளை நடத்தி வருவது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. நமது கட்சியின் சார்பில் கடந்த 45 ஆண்டுகளாக, தீக்கதிர் வெளியாகி வருகிறது. முரசொலி (திமுக), நமது எம்.ஜி.ஆர். (அதிமுக), ஜனசக்தி (சிபிஐ), தமிழ் ஓசை (பாமக), விடுதலை (தி.க) என்று இதர கட்சி நாளேடுகளும் வெளியாகி வருகின்றன. தொலைக்காட்சி ஊடகத் துறையிலும் அரசியல் கட்சிகள் சிறப்புக் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

7.172 ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோசலிச நாடுகளின் சாதனைகள், சர்வதேச அரங்கில் இடதுசாரித் திருப்பங்கள், உலகமயப் பொருளாதாரத்தின் நாசகர விளைவுகள் ஆகியவை குறித்த கருத்தாக்கங்களை நமது நாளிதழ் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது. தேசிய அளவிலும், தமிழ்நாட்டிலும் கட்சியின் நிலைபாட்டைத் தமிழக மக்களிடையே கொண்டு செல்வதில் தீக்கதிர் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறது.

7.173 அண்மைக் காலத்தில், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மற்றும் மாநிலத்தில் முந்திய அதிமுக - தற்போதைய திமுக ஆட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றிய கட்சியின் விமர்சனப்பூர்வமான கருத்துக்களை தீக்கதிர் எடுத்து வைத்துள்ளது.

7.174 உழைக்கும் வர்க்க அரசியலை - இடதுசாரி சக்திகளின் குரலை - முன்னெடுத்துச் செல்லும் வகையில் தீக்கதிர் பணியாற்றி வருகிறது.

7.175 தேசிய அளவிலும், மாநில அளவிலும் கட்சிக்கு எதிரான அவதூறுகளைப் பரப்புவதில் ஊடகங்கள் முன்னெப்போதையும் விடத் தற்போது வேகமாக உள்ளன. இவற்றை எதிர்கொண்டு உண்மை நிலையை நமது கட்சி அணிகளுக்கும், மக்களுக்கும் தீக்கதிர் கொண்டுச் செல்கிறது.

7.176 சட்டமன்றத் தேர்தலின் போதும், உள்ளாட்சித் தேர்தலின்போதும் தீக்கதிர் நல்ல பணியாற்றியது; பிரச்சாரத்துக்குப் பெரிதும் பயன்பட்டது. நமது ஏட்டில் வந்த பல கட்டுரைகள், தலையங்கங்கள், பிற பத்திரிகைகளால் எடுத்தாளப்பட்டன. தீக்கதிரில் வரும் கட்டுரைகள் மீதான அரசியல் விவாதம் அதிகரித்துள்ளது.

7.177 சச்சார் குழு அறிக்கை குறித்த மாநாடு, அருந்தியர் பேரணி, தமிசு நில மீட்பு போன்ற பல முக்கிய நிகழ்வுகள் குறித்த தீக்கதிர் செய்திகள்,கட்டுரைகள் நல்ல முறையில் வந்தன. பண்பாட்டுத்தளத்தில் எழுந்த பிரச்சனைகள், சேதுக் கால்வாய் திட்டத்திற்கு எதிர்ப்பு என்ற பெயரில் இந்துத்துவா ஊடுருவல் முயற்சிகள் ஆகிய்வை குறித்தும் தீக்கதிர் உடனுக்குடன் எதிர்வினை ஆற்றியது.

7.178 நமது கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்து டில்லியில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் நமது கட்சி நடத்தும் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் - நிர்வாக பொறுப்பாளர்கள் - பங்கேற்றனர். தீக்கதிரிலிருந்தும் மூன்று தோழர்கள் இதில் கலந்து கொண்டனர். அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் சீதாராம் யெச்சூரி இதில் இரு நாட்களும் பங்கேற்று வழிகாட்டினார். “செய்திகள் மூலம் நமது கருத்துக்கள்” என்ற அடிப்படையில் உள்ளடக்கத்தை மேம்படுத்துவது என்றும், உள் கட்டமைப்பில் அனைத்து நவீன ஏற்பாடுகளுக்கும் நாம் செல்ல வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இக் கூட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

7.179 தீக்கதிரின் உள்ளடக்கம் குறித்து ஆசிரியர் குழு சப்-கமிட்டியிலும், ஆசிரியர் குழுக் கூட்டங்களிலும் தொடர்ந்து விவாதிக்கப்படுகிறது. வடிவமைப்பை மேம்படுத்த மூன்று பதிப்பு

ஆசிரியர் குழுத் தோழர்கள், கணினிப்பிரிவு ஊழியர்களுக்கு சென்னையில் பயிலரங்கம் நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து வடிவமைப்பில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் குறிப்பிட்ட செய்திகள் குறிப்பிட்ட பக்கத்தில் இடம்பெறுமாறு மேலும் மேம்படுத்த வேண்டியுள்ளது.

7.180 அவ்வப்போது எழும் அரசியல், சமூக நிகழ்வுகள் குறித்துக் கட்சியின் கண்ணோட்டத்தை விளக்கும் வகையில் மாநிலத்தலைவர்கள் கட்டுரைகள் எழுதுவது அதிகரித்துள்ளது.

7.181 தீக்கதிரின் இணைப்பாக வெளிவரும் வண்ணக்கதிர் இடதுசாரி அரசியல், சமூக, கலை இலக்கியப் பார்வையை மக்களிடம் கொண்டு செல்கிறது.

7.182 கட்சியின் மாநிலத் தலைமையின் வழிகாட்டுதலுக்கு உள்ளிட்டு, தீக்கதிர் ஆசிரியர் குழு செய்தி மற்றும் கருத்துக்களை வெளியிட்டு வருகிறது. கட்சி அணிகளின் எதிர்பார்ப்புகள், தேவைகள் மற்றும் விமர்சனங்களை உள்வாங்கி தீக்கதிரின் உள்ளடக்கத்தை செழுமைப்படுத்தத் தொடர் முயற்சிகள் மேற்கொள்வது அவசியம்.

7.183 ஆசிரியர் குழுக்களில் ஊழியர் பற்றாக்குறை உள்ளது. அவ்வப்போது புதிய தோழர்களை இந்தப் பணிக்குக் கொண்டு வந்தபோதும், சமீப காலமாக ஊடகத்துறையில் வழங்கப்படும் கணிசமான ஊதியம் காரணமாக, சிலர் பிற பத்திரிகைகளுக்கு சென்றுவிட்டனர். முன்னுரிமைப் பணி என்ற அடிப்படையில் தகுதியான தோழர்களை தீக்கதிர் பணிக்கு அனுப்புவதில் மாவட்டக்குழுக்கள் கவனம் செலுத்த வேண்டும். மற்ற பணிகளுக்கான ஊழியர் எண்ணிக்கையும் மேம்படுத்தப்பட வேண்டும்.

7.184 தீக்கதிர் சென்னைப் பதிப்பில் மொத்தமுள்ள 49 ஊழியர்களில் 18 பேர் மட்டுமே கட்சி உறுப்பினர்களாக உள்ளனர். மதுரைப் பதிப்பில் உள்ள 75 ஊழியர்களில் 31 பேர் கட்சி உறுப்பினர்கள். கோவை பதிப்பில் 12 ஊழியர்களில் 6 கட்சி உறுப்பினர்கள் உள்ளனர். இந்த பதிப்புக்குப் போதுமான ஊழியர்கள் இல்லாமையால் சிரமங்கள் உள்ளன.

7.185 கட்சிப் பத்திரிகை என்ற முறையில் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட கட்சி ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதற்குப் பெரு முயற்சி செய்ய வேண்டியுள்ளது.

நிருபர்கள்

7.186 அனைத்து மாவட்டங்களிலும் நிருபர்கள் நியமிக்கப்படவேண்டும். மாவட்டத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு நிருபர் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் சில மாவட்டங்களில் இன்னமும் கூட நிருபர்கள் இல்லாத குறை களையப்பட வேண்டும். மேலும் வட்டார அளவில் நிருபர்கள் நியமிக்க வேண்டிய தேவை உள்ளது. நிருபர்கள் தீக்கதிர் பணிக்கே முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும். அவர்களை மாவட்டக்குழு அலுவலகங்களின் பகுதிநேரப் பணியாளர்களாகப் பார்க்கக்கூடாது.

7.187 நிருபர்களின் செயல்திறனை மேம்படுத்த சென்னையில் மூன்று நாட்களும், மதுரையில் இரண்டு நாட்களும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன; தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

7.188 மாவட்டக் குழுக்கள் கணினி, இணையத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மாவட்ட நிருபர்கள் தீக்கதிருக்கு உடனுக்குடன் செய்திகளை அனுப்ப இயலும். நிருபர்களுக்கு நவீன டிஜிட்டல் கேமராக்கள் போன்ற வசதிகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும்.

கோவைப் பதிப்பு

7.189 கடந்த 23.5.2007 முதல், தீக்கதிரின் மூன்றாவது பதிப்பாக, கோவைப் பதிப்பு துவங்கப்பட்டுள்ளது. நமது பொதுச் செயலாளர் தோழர் பிரகாஷ் காரத் பங்கேற்ற துவக்கவிழா சிறப்பாக நடைபெற்றது.

7.190 இப்பதிப்பு துவங்குவதற்கு முன்னால், இதற்குட்பட்ட 6 மாவட்டங்களில் இருந்த விற்பனை எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 23.5.2007 அன்று 3951 என்று இருந்த விற்பனை தற்போது 7579 ஆக உயர்ந்துள்ளது.

தீக்கதிர் விற்பனை

7.191 தீக்கதிர் விற்பனையில் கடந்த மாநாட்டிற்குப் பிறகு முன்னேற்றம் உள்ளது. கடந்த மாநாட்டின்போது 11618 ஆக இருந்த விற்பனை எண்ணிக்கை 2007 டிசம்பரில் 22306 ஆக உயர்ந்துள்ளது. மாவட்ட வாரியான விவரப் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

7.192 மாநிலக்குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு விற்பனை இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. பல மாவட்டங்களில் தீக்கதிர் சந்தா சேர்த்து அளிக்கும் சிறப்புப் பேரவைகள் நடத்தப்பட்டன. இம் முயற்சிகள் விற்பனையை உயர்த்திடப் பெரிதும் உதவின. நடைபெற்று முடிந்த சில மாவட்ட மாநாடுகளிலும் தீக்கதிர் சந்தாக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏற்பட்ட உயர்வினைத் தக்கவைப்பதிலும் சிரமங்கள் இருந்தன. சந்தாக்களைப் புதுப்பிக்க முடியாமல் விற்பனை குறைந்தது. மீண்டும் மீண்டும் தொடர் முயற்சிகளின் பலனாக சில மாவட்டங்களில் உயர்வினை ஏற்படுத்த முடிந்தது.

7.193 கோவைப் பதிப்பு வேறு ஒரு அச்சகத்தில் அச்சடிக்கப்படுவதால் அது வண்ணத்தில் வெளி வருகிறது. மதுரையில் தற்போது உள்ள அச்சு இயந்திரத்தை வண்ண அச்சு இயந்திரமாக மேம்படுத்தவும், சென்னையில் வேறு அச்சகங்களில் வண்ணத்தில் அச்சடிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அகில இந்திய மாநாட்டிற்குள் தீக்கதிரின் மூன்று பதிப்புகளையும் வண்ணத்தில் கொண்டுவர திட்டமிட்டுள்ளோம்.

7.194 மாவட்டக் குழுக்களில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஒருவர் தீக்கதிர் விற்பனைக்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும் என்பது ஓரளவு அமலாகியுள்ளது. விற்பனை உயர்வு, விநியோகப் பிரச்சனைகள், பில் தொகை மாதாமாதம் செலுத்துவது ஆகிய அனைத்திலும் தீக்கதிர் நிர்வாகம் - மாவட்டக் குழுக்கள் இணைந்து பணியாற்றிட வேண்டும்.

7.195 அன்றாடம் நமது வாசகர்களுக்கு மற்ற பத்திரிகைகளைப்போல அதிகாலையில் தீக்கதிர் கிடைக்க வேண்டும். இதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

7.196 கடைகளில் தீக்கதிர் விற்பனை செய்யப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இது வெற்றிகரமாக நடைபெறவில்லை. மாவட்டத் தலைநகர் மற்றும் முக்கிய நகரங்களில் கடைகளில் தீக்கதிர் கிடைத்திட மாவட்டக்குழுக்கள் ஆவன செய்ய வேண்டும்.

நூலகங்களில் தீக்கதிர்

7.196 அரசு நூலகங்களில் தீக்கதிர் வாங்கப்படுவதை வலியுறுத்தி நீண்டகாலமாக முயற்சித்து வந்தோம். கடந்த செப்டம்பர் மாதம் இதற்கான அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாகத் தற்போது 23 மாவட்டங்களில் 1008 நூலகங்களில் தீக்கதிர் வாங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் 10 மாவட்டங்களில் உரிய ஆணைகளைப் பெற முயற்சிகள் நடந்து வருகின்றன. புதிய பகுதிகளுக்குத் தீக்கதிர் செல்லும் நல்லதொரு வாய்ப்பு இதன்மூலம் கிடைத்துள்ளது.

இணையதளத்தில் தீக்கதிர்

7.197 தீக்கதிர் பத்திரிகை கடந்த 10.03.2006 முதல் இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. இதன்மூலம் அன்றாடம் தீக்கதிரின் முக்கியச் செய்திகள் அனைத்தையும் எங்கிருந்து வேண்டுமானாலும் கணினி வாயிலாகப் பார்க்க முடிகிறது. இதில் படங்களையும் வெளியிட முயற்சிகள் நடந்து வருகின்றன.

சிறப்பு விற்பனை

7.198 சட்டமன்றத் தேர்தல் களத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மாத காலத்திற்கு 100 பிரதிகள் சிறப்பு விற்பனையாகக் கொண்டு செல்வது என முடிவு செய்தோம். இதிலும் ஓரளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அம் மாதத்தில் அதிகபட்ச ஒருநாள் விற்பனை 31979 ஆக இருந்தது.

7.199 மேற்குவங்க இடது முன்னணி அரசின் 30 ஆண்டுகள் நிறைவைப் போற்றும் வகையில் தீக்கதிர் 5.7.2007 அன்று சிறப்பிதழ் வெளியிட்டது. மாவட்டக் குழுக்கள் கடும் முயற்சி செய்து ஒரே நாளில் 1,01,575 பிரதிகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்றன என்பது குறிப்பிடத்தக்கது.

7.200 அதேபோன்று அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் கூடாது என்ற நமது கட்சியின் நிலையை விளக்கி 8.9.2007 அன்று சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. இதுவும் 80,470 பிரதிகள் விற்பனையானது.

7.201 பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான வினா-விடை சிறப்பிதழ் 2006 ஜனவரியில் தனிப் புத்தகமாக வெளியிடப்பட்டது. தீக்கதிர் வாசகர்களுக்கு இணைப்பாகத் தரப்பட்டது. மொத்தம் 30,000 பிரதிகள் வெளியிடப்பட்டன. தொடர்ந்து இதனை 2007ல் கொண்டுவர நம்மால் இயலவில்லை. இந்த ஆண்டின் தேர்வுக்கு முன்னதாக மீண்டும் பத்தாம் வகுப்பு வினா-விடை வெளியிடப்படுகிறது.

7.202 இவைதவிர பகுதி வாரியான கோரிக்கைகளைப் பிரச்சாரம் செய்யும் வகையில் கட்சிக் குழுக்கள் கேட்டதற்கு இணங்க பல்வேறு நாட்களில் சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

13.36 இக்காலத்தில் தீக்கதிர் அச்சிட மதுரையில் புதிய அச்சு இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. மதுரையில் இருந்த அச்சு இயந்திரம் தற்போது சென்னைப் பதிப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஜாப் ஒர்க்

7.203 தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனப் புத்தகங்கள், தொலைபேசி டைரக்டரிகள், காலண்டர்கள், புத்தகங்கள் ஆகிய ஜாப் ஒர்க் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

விளம்பரம்

7.204 கடந்த ஓராண்டுக்கும் மேலாக, தமிழக அரசு விளம்பரங்கள் ஓரளவு நமக்குக் கிடைத்து வருகின்றன. மத்திய அரசின் டி.ஏ.வி.பி. விளம்பரங்களும் சிறிதளவு நமக்குக் கிடைக்கின்றன. இவற்றை அதிகப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

7.205 மேலும், வழக்கமாக நமக்குக் கிடைக்கின்ற கட்சிக் குடும்ப நிகழ்ச்சிகள் போன்ற விளம்பரங்கள் பெறுவது குறைந்துள்ளது. தீக்கதிர் நிர்வாகமும், மாவட்டக் குழுக்களும் இணைந்து இதனை சரி செய்ய வேண்டும். தொழில்மலர் போன்று சிறப்பு மலர்கள் வெளியிடப்படுகின்றன. இந்த ஏற்பாடுகளையும் மேலும் பலப்படுத்த வேண்டியுள்ளது.

பிரசுர விற்பனை

7.206 இக் காலத்தில் 32 பிரசுரங்கள் நம் கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை லட்சக்கணக்கில் மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளோம். பிரசுரங்களின் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது. இத்திசையில் நமது முயற்சிகளைக் கூடுதலாக்க வேண்டும்.

செம்மலர் - கலை இலக்கிய மாத இதழ்

7.207 தமிழகக் கலாச்சாரச் சூழலில் முதலாளித்துவப் பத்திரிகைகளும், உதிரிப் பத்திரிகைகளும் ஏராளமாய் வந்து பலவிதமான சீரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. நச்சிலக்கியங்களைத் திட்டமிட்டு பரப்பிக் கொண்டிருக்கிற சூழலில், தரமான இலக்கியத் திங்களிதழாக செம்மலர் வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

7.208 ஆனால், செம்மலரை நமது கட்சி வட்டத்தைத் தாண்டி நமது வெகுஜன அமைப்புகளிடம் விரிவாகக் கொண்டுசெல்ல முடியவில்லை. நமது எழுத்தாளர் அமைப்பு உள்ளிட்ட வெகுஜன அமைப்புகள் முயற்சித்தால் விற்பனை பெருமளவு உயர வாய்ப்புள்ளது.

